# தலைப்பாகை



திருவரசு புத்தக நிலையம்

சு. சமுத்திரம்

# தலைப்பாகை

( சிறுகதைகள் )

சு. சமுத்திரம்

திருவரசு புத்தக நிலையம்

13, தீனதயாளு தெரு,
தியாகராய நகர், சென்னை - 600 017.

முதற் பதிப்பு : டிசம்பர், 2001

விலை ரூ. 40.00

- Title : THALAIPPAAGAI
- Author : Su. Samuthiram
- Language : Tamil
- Subject : Short Stories
- Edition : First Edition,
  December, 2001
- Pages : xiv + 186 = 200

- Published by : THIRUVARASU PUTHAKA NILAYAM
  13. Deenadayalu Street,
  Thyagaraya Nagar
  Chennai - 600 017.

- Price : **Rs. 40-00**

---

Printed at : Malar Printers 044-8224803

# சமுத்திரத்துக்கு தலைப்பாகை

க.பொ. அகத்தியலிங்கம்

சிறுகதையின் இலக்கணம் எது?

விமர்சகர்கள் ஒவ்வொருவரும் ஏதேனும் ஒரு அளவுகோலை சிபாரிசு செய்கின்றனர். ஆயினும், ஒவ்வொரு சிறந்த படைப்பும் புதிய அளவுகோலுடன் பிறக்கிறது. ஏனெனில், எழுத்துப்பணி என்பது வெறுமே சொற்களின் கலவை அல்ல. மாறாக உயிர்த் துடிப்பு. ஒவ்வோர் எழுத்துக்கும் உயிர் உண்டு. அது வாசகனோடு உறவாடும், உரையாடும், அதற்கென்று சொந்த முகமும் முகவரியும் உண்டு. இவை இல்லாதவை எழுத்து அல்ல.

சமுத்திரம், எழுத்துலகில் தனிமுகத்தோடும், முகவரியோடும் திகழ்கிறவர். சலிக்காத போராளி... அணையாத சமூகக் கோபம். அதுதான் அவர் முகம். முகவரி. அவர் எதிரிகளுக்கு பிடிக்காத அம்சமும்; எனக்கு பிடித்த அம்சமும் இவைதான்.

ஒவ்வோர் எழுத்தாளனும் எதையும் சூனியத்திலிருந்து பிரசவிப்பதில்லை. மாறாக, அவன் வாழ்வில் எதிர்கொள்ளும் மனிதர்கள், சம்பவங்கள், தத்துவங்கள் என ஒவ்வொன்றையும் தனக்கே உரிய கண்ணோட்டத்தில் பார்ப்பதுதான் கலைஞனின் தனிக்குணம். கோபுரத்தின் மீது நின்று

முட்புதருக்குள் கிடக்கும் குடிசையின் அழகை லயித்து சித்திரம் தீட்டவும், அவனால் முடியும்; குடிசையில் நுழைந்து கருவேலமுட்களும், விஷப் பாம்புகளும் சூழ்ந்த அவனது வாழ்வின் கொடூரத்தை சித்தரிக்கவும் முடியும். எப்படிப் பார்க்கிறான் என்கிற கோணமே முக்கியம்.

சமுத்திரம் எப்போதுமே, பாதிக்கப்பட்டவர் மனோ நிலையில், சம்பவங்களை பார்க்கிறார்; ஒடுக்கப் பட்டவர்கள், பெண்கள், மனோநிலையில் சமூகத்தை குற்றவாளிக் கூண்டில் ஏற்றி விசாரிப்பதே, ஒரு எழுத்துத் தவமாக மேற் கொண்டுள்ளார். இதனால் "இலக்கிய மேட்டிமைக்காரர்களின்" கண்டன விமர்சனக் கணைகள் அவரை துளைத்த போதும்; தம் தவத்தை கலைக்காத காரியசித்தரே சமுத்திரம். அவரது எழுத்துக்கு இத்தொகுப்பு 'தலைப்பாகை'.

மொத்தம் 16 கதைகள். இதில் ஆறுகதைகள் அலுவலகச் சூழலில் உருவானவை. கீழே பணியாற்றும் ஊழியர்கள் யோசனைகளை கேட்பதே பெரும் பாவமாக கருதும் 'நிர்வாகிகள்'; உள்ளொன்று வைத்து வெளியொன்று பேசும் 'பலவேசங்கள்'; சின்ன எழுத்துப்பிழையில் திசைமாறும் வாழ்க்கை; ஓய்வு பெறும் கடைசி நாளில் பயிற்சிக்கு அனுப்பும் இயந்திர நடைமுறை; அடக்கி ஆள எண்ணி சமநிலை பிறழும்மனிதன்; இப்படிப் பலரின் பொய்முகங்களை சமுத்திரம், அழகாய் சித்தரிக்கிறார். எல்லோருக்கும் நல்லவராய் இருப்பவர்கூட, ஒருத்தருக்கு வில்லனாக முடியும். ஆனால் அதனை சமூகம் சீக்கிரம் புரிந்து கொள்ளுமா? இப்படி பாதிக்கப்பட்ட சுமதிக்கு சமுத்திரம், பரிவு காட்டுகிறார். மற்றவர்களுக்கு "அபத்தங்களாய்" தெறிவது, சிலருக்கு நியாயங்களாக இருக்கக்கூடும். அதுதான் வாழ்க்கை

அலுவலகங்களை தாண்டினால் சமுத்திரத்தின் பார்வையே தனி. பெண்களை எக்ஸ்ரே கண்களால் ஊடுருவும் எழுத்தாளர்களுக்கு மத்தியில், பெண்கள் பார்வையில் சம்பவங்களை பார்ப்பதும், சமூக அநீதிகளை நச்சென்று சாடுவதும், சமுத்திரத்தின் பாணி அல்லவா?

கோவலனை மன்னிக்காத கண்ணகியாக 'பாவப் பாசம்' ஊர் நாட்டாண்மையை மீறுகிற 'நாணமும் பெண்மையும்', தன்னை அவளுக்கு பிடிக்கவில்லை என்று தெரிந்ததும் அவள் நியாயத்தை அங்கீகரிக்கிற 'முதல் இல்லாத இரவு'; - என ஒவ்வொரு கதையும் ஒரு பொறி; பத்தாம் பசலி சமூகப் பார்வையை சுட்டெரிக்க ஊழித்தீயை மூட்டும்.

முத்தாய்ப்பாய் 'தலைப்பாகை'. குமரி மாவட்டத்தில் நடந்த தோள்சீலைப் போராட்டத்தின் தொடக்க அத்தியாயங்களில் ஒன்று. வரலாற்றுச் செய்தி. பெண்கள் மார்சீலை போடவும், ஆண்கள் தலைப்பாகை கட்டவும் உரிமையற்று இருந்த நேரத்தில், முத்துக்குட்டி சாமி கட்டிவிட்ட தலைப்பாகை சுயமரியாதைப்போரில், மனித உரிமைப்போரில், கட்டிய முதல் தலைப்பாகை; இந்தக் கதையை படிக்கும்போது இப்படியும் நடக்குமா என்கிற வியப்பும்; இப்படியும் வாழ்ந்தோமோ என்கிற கொதிப்பும் ஒருங்கே எழும். இந்த தலைப்பாகை சிறுகதை ஒரு நாவலாய் விரியும். விரிய வேண்டும் என்கிற விழைவினை தெரிவித்துக் கொள்கிறேன். அதன் மூலம், தம் எழுத்துக்கு இன்று தலைப்பாகை சூட்டும் அவர் மகுடம் சூடிக்கொள்வது நிச்சயம்.

சமுத்திரம் எழுத்தை பேசிக்கொண்டே இருப்பதைவிட இனி அவர் எழுத்தோடு பேசலாமே!

❋

# என்னுரை

இந்தத் தொகுப்பு உள்ளடக்கிய 16 சிறுகதைகளில், தலைப்புக் கதையான தலைப்பாகை தவிர்த்து அனைத்துமே பத்து பதினைந்து ஆண்டுகளுக்கு முன்பு எழுதப்பட்டவை. அதுவும், எழுதப்பட்ட காலத்திற்கு முன்னால், பத்தாண்டு காலத்திற்குள் நடைபெற்ற நிகழ்வுகளை, அனுபவங்களை மையமாகக் கொண்டவை. இந்த வகையில் இந்தத் தொகுப்பு, கடந்த கால மக்கள் வரலாற்றின் இலக்கிய பதிவாகும். **தலைப்பாகை**, நவீன சிறுகதை என்றாலும், அதுவும் பத்தொன்பதாம் நூற்றாண்டில் அப்போதைய திருவாங்கூர் சமஸ்தானத்தில் தாழ்த்தப்பட்ட பிற்படுத்தப்பட்ட மக்களின் அவல வாழ்க்கையை பதிவு செய்கிறது.

இந்த வகையில்தான் எனது அத்தனை சிறுகதைகளும், தமிழ் சமூகத்தின் அனைத்து பிரிவுகளின் இலக்கிய ஆவணங்களாக பதிவு செய்யப்பட்டிருப்பதாக கருதுகிறேன். இந்தத் தொகுப்பிற்கு ஒரு சிறப்பு... பதினைந்து ஆண்டுகளுக்கு முன்பு எழுதப்பட்ட கதைகள், இப்போதுதான் நூல் வடிவத்தில் அச்சேருகின்றன. ஏற்கனவே வெளியாகி உள்ள எனது இருபது சிறுகதைத் தொகுப்புகள், 1945-ஆம் ஆண்டில் இருந்து இன்றைய காலக்கட்டம் வரையான, சமூக-அரசியல்-பொருளாதார பதிவுகள்தான். இந்தத் தொகுப்பில் இடம்பெற்றுள்ள கதைகள், முன்னர் வெளியான தொகுப்புகளில் எப்படியோ விடுபட்டு போயின.

இப்படி விடுப்பட்டுபோன கதைகளை, பழைய இதழ்களில் இருந்து தேடிப்பிடித்து, அவை வேறு தொகுப்புகளில் வந்துள்ளனவா என்பதை சரிப் பார்த்து சேர்த்திருக்கிறேன். உணர்வு ரீதியாகவும், இந்தத் தொகுப்பிற்கும், இதே மாதிரியான முன்னைய தொகுப்புகளுக்கும், வித்தியாசம் உள்ளது. முன்னைய தொகுப்புகள் அந்தந்த காலக்கட்டங்களில் வெளியானதால், அவை என்னுள், ஒரு யதார்த்த உணர்வை மட்டும் ஏற்படுத்தியதே அன்றி, வரலாற்று உணர்வை ஏற்படுத்தவில்லை. ஆனால், இந்தத் தொகுப்பின் நிகழ்வுகளை பின்நோக்கி பார்க்கும்போது, நான் மெய் சிலிர்த்து போகிறேன்.

இப்போதும், எனது இலக்கிய நோக்கும், போக்கும் மாறுபடவில்லை. ஆனாலும், மொழி நடையும், கதை சொல்லித் தனமும், கட்டமைப்பும் காலத்திற்கேற்ப மாறி உள்ளன. இந்தப் பின்னணியில், இந்த பழைய கதைகளை படிக்கும்போது, என்னை நானே வியந்து கொள்கிறேன். அதே சமயம், சிறிது நிரடலாகவும் உணர்கிறேன். இதே கதைகளை, இப்போது எழுதினால், உள்ளடக்கங்கள் மாறாமல், உருவங்கள் மாறி இருக்கும்.

இந்த கதைகளில் சில மாற்றங்கள் தேவை என்று நான் நினைத்தாலும், அந்த மாற்றங்களை செய்யவில்லை. ஆங்காங்கே, பழைய கட்டிடத்திற்கு வெள்ளை அடித்ததுபோல, சில மேல் பூச்சிகளை பூசியிருக்கிறேனே தவிர கட்டிடத்தை புதுபிக்க எந்த முயற்சியும் செய்யவில்லை. அதே சமயம், இந்த கட்டிடம் பாழடைந்து போகவில்லை என்பதிலும், இதில் இன்னும் மனிதர்கள் வாழ்ந்துக் கொண்டிருக்கிறார்கள் என்பதிலும் ஒரு ஆறுதல்.

ஓரிரு ஆண்டுகளுக்கு முன்பே, இந்த பழங்கதைகளை பத்திரிகைகளில் இருந்து எடுத்து படித்தபோது, எனக்கே ஒரு ஆச்சரியம் - நான் நல்ல எழுத்தாளன்தான் என்று. பெரியவர் வல்லிக்கண்ணன் அவர்களிடம்கூட, ஒரு தடவை, இந்த வாசிப்பை சுட்டிக்காட்டி 'அண்ணாச்சி அப்போவே நான் நல்ல எழுத்தாளனாகதான் இருந்திருக்கிறேன்' என்று சொன்னபோது, அவரும் 'சந்தேகமில்லாமல் நீங்கள் நல்ல எழுத்தாளர்தான்' என்று கூறியதை நினைத்துப் பார்க்கிறேன். பொதுவாக இப்போது எனது கதைகளில் யதார்த்தமான வர்ணணைகளோ, பாத்திரங்களின் உருவப் பதிவுகளோ அதிகமாக இல்லை. இவை இரண்டும் இடம்பெற்ற இந்த பழம்பெரும் கதைகள், என்னுள் வெங்காய வாசனைபோல், ஒரு மண் வாசனையை தோற்றுவிக்கின்றன.

இப்படிக் குறிப்பிடுவதால், நான் பாமரத்தனமான கதைகள் எழுதவில்லை என்று பொருளல்ல. அப்படிப்பட்ட ஒரு சில கதைகளை படித்துவிட்டு, தலையிலேயே குட்டிக்கொண்டேன். எந்தத் தொகுப்பிலும் அவை இடம்பெறக் கூடாது என்பதிலும் முனைப்பாக இருக்கிறேன். ஆனாலும், இந்தத் தொகுப்பில் தூக்கலாக தோன்றும் உபதேசங்கள், பாமரதனமானவை அல்ல என்று தி: .மாக நம்புகிறேன்.

நாம் எந்த வாசக தளத்தை நினைத்து எழுதுகிறோமோ, அந்த தளத்திற்கேற்பதான், கருப்பொருள் ஒன்றானாலும், உருவமும், மொழிநடையும் தீர்மானிக்கப்படுகின்றன. இது, வலிந்து எழுததாத என்னை போன்ற தோழமை எழுத்தாளர்கள் கு. சின்னப்பபாரதி, டி.செல்வராஜ், பொன்னீலன், தனுஷ்கோடி ராமசாமி, மேலாண்மை பொன்னுசாமி போன்றோருக்கும் பொருந்தும். எங்களின்

இன்றைய தலைமுறை எழுத்தாளர்களான ஜனநேசன், ப. ஜீவகாருண்யன், டி.ஆர்.ராஜாமணி, தேனி சீருடையான், அல்லி உதயன், ஷாஜகான், தி.சு. வேலாயுதம் போன்றவர்கள், நாங்கள் கையாண்ட கருப்பொருளின் இயல்பு மாறாமல், அதை இன்றைய காலகட்டத்திற்கு ஏற்ப, எங்களைவிட சிறப்பாக எழுதி வருகிறார்.

தலைப்பு கதையான **தலைப்பாகை** போன்ற சிறுகதைகளை எழுதுவதற்கு கன்னியாகுமரி மாவட்டத்தில் சாமிதோப்பில் வசிக்கும் பிரபல தமிழ் அறிஞர் புலவர் பச்சையம்மால் அவர்களே முழுமுதற் காரணம். இலக்கிய பத்திரிகையான 'சதங்கை' ஆசிரியர் வனமாளிகை அவர்களுடன் திரு. பச்சையம்மாலை சந்தித்தபோது வைகுண்டர் எப்படி ஒரு ஆன்மீக போராளியாக விளங்கினார் என்பதை வரலாற்று பூர்வமாக விளக்கினார். வள்ளலாருக்கு முன்பே, ஒரு ஆன்மீக போராளியாக வாழ்ந்த வைகுண்டர் மீது எனக்கு ஒரு பிடிப்பு ஏற்பட்டது. இதனாலயே, திருவாங்கூர் சமஸ்தான பல்வேறு பிரிவு மக்களின் வாழ்க்கை முறைகளை விளக்கும் தோள்சீலை போராட்டங்கள் பற்றிய நூல்களையும், ஆங்கில பாதிரிமார்கள் எழுதிய நூல்களையும் கிட்டதட்ட கரைத்துக் குடித்துவிட்டேன். இதன் அடிப்படையில், தோள்சீலை என்று தலைப்பில் நீண்டதொரு நாவல் எழுத திட்டமிட்டு இருக்கிறேன். இதைத்தான் தோழர். அகத்தியலிங்கம் அவர்கள் கோடிகாட்டிருக்கிறார். இந்த சிறுகதைக்கு சில அரிய தகவல்களை தந்த அய்யாவழி இயக்கப் பிரமுகர் மணிபாரதி அவர்களுக்கு நன்றி கடன் பட்டுள்ளேன்.

இந்தத் தொகுப்பில் வரும் **இருவேறு கண்கள்**, நான் அறிந்த ஒரு தாயின் பாச வெளிபாட்டு உளைச்சல்கள்... இந்தத் தாய், நமது தாய்மார்களை பொதுமைப்படுத்துகிறாள். நாணமும்,

பெண்மையும் சிறிது தூக்கலான கதை. அந்தக் காலகட்டத்தில், ஒரு மணப்பெண் அப்படி நடந்திருப்பாளா என்பது சந்தேகமே. நடக்க வேண்டும் என்ற ஆசையில் நடப்பது மாதிரி யதார்த்தமாக எழுதப்பட்ட கதை.

இப்போதும், சுயமரியாதை இல்லாத சுதந்திரத்தை அடிதள மக்கள் இன்னும் அனுபவித்து வருகிறார்கள் என்பதை சொல்ல வேண்டியதில்லை. கதைக்க முடியாத கதை, இலங்கை தமிழர்களுக்காக, பதினைந்து ஆண்டுகளுக்கு முன்பு நடைபெற்ற தமிழகக் கொந்தளிப்பே ஒரு இலங்கை தமிழ் பெண்ணுக்கு ஏற்பட்ட ஆற்றுப்படுத்தலை பதிவு செய்கிறது. சென்னை, வானொலி நிலையத்தில் செய்தி ஆசிரியராக இருந்து, இந்த பாவப்பட்ட இலங்கை தமிழ்பெண்களில் ஒரு சிலருக்கு நான் தாற்காலிக வேலை வாய்ப்புகளை கொடுத்திருக்கிறேன். ஒரு தமயனிடம் சொல்லுவதைப்போல, இந்தப் பெண்கள், என்னோடு பகிர்ந்துக் கொண்ட இலங்கை கொடூரங்கள், இன்றுகூட என்னை பயமுறுத்துகின்றன.

நிர்வாகிகள், ப(லே)ல வேசம், அபத்தங்கள், முள் மேல் நடை, போக்கிடம் இல்லாத பொழுது, சொற்பிடி ஆகிய சிறுகதைகள் என்னுடைய அலுவலக அனுபவங்கள். இந்த அலுவலகங்கள் வெளியில் நின்று பார்த்தால் ஒரு கறையான் புற்றாகத் தோன்றும். ஆனால், உள்ளே நுழைந்து பார்த்தாலோ, அதற்குள் கருநாகங்களும், நச்சுப் பூச்சிகளும் இருப்பதைப் பார்க்கலாம். இவைகளால் கடிப்பட்டும், திருப்பித் தாக்கியும் அலுவலக வாசியாக செயல்பட்ட எனது அனுபவப் பகிர்வுகளே இந்தக் கதைகள். குறிப்பாக ப(லே) வேசத்தில் வரும் பலவேசம்தான், அன்றாடம் ஒரு மணிநேரம் யோகாசனம் செய்து உடலை ஓம்பிய எனக்கு ரத்த அழுத்தத்தையும், நீரழிவையும் கொடுத்தவர்.

**பாசப்பாவம், நிறைகாக்கும் கற்பு, முதல் இல்லாத இரவு** ஆகிய கதைகள், ஒரு நல்ல மனதின் உணர்வு வடிவங்களேயன்றி நடந்தவை அல்ல. ஆனாலும், நடக்கக்கூடியவை. **சேரிடம்** இப்போதும், நேர்மையான அதிகாரிகள் எதிர்நோக்கும் குடும்ப விவகாரம்தான். அலுவலகப் பணி நேர்மைக்கும், குடும்ப சுயநலத்திற்கும் இடையிலே அல்லாடும் பல அலுவலர்களை நான் பார்த்திருக்கிறேன். இவர்களை பற்றிய முக்கியமான பதிவுதான் இந்த சேரிடம்.

இந்தக் காலக்கட்டத்தில் சிறுகதைத் தொகுப்பை பெரும் பாலான பதிப்பகங்கள், கையை கடிக்கும் என்பதால் வெளியிடத் தயங்குகின்றன. ஆனால், பெரியவர் திருநாவுகரசும், அவரது அருமை மகன் ராமுவும், இந்த பழைய கதைகளையும் கொண்டுவர திட்டமிட்டது, என் மீது அவர்கள் கொண்ட அளப்பரிய அன்பிற்கும், இலக்கியத்தை வியாபார ரீதியில் அணுகாத சமூக நோக்கிற்கும் எடுத்துக்காட்டு. சிறியன சிந்தியாத பெரியவர் திருநாவுகரசு அவர்களுக்கு நன்றி கடன் பட்டுள்ளேன்.

இந்தத் தொகுப்பிற்கு முன்னுரை கொடுத்திருக்கும் தோழர். அகத்தியலிங்கம் அவர்கள் என்னுடைய நீண்டகால நண்பர். பொதுவாக எங்களை போன்ற ஒத்த கருத்துள்ளவர்களின் உறவு, சமூக அளவில் மட்டுமே நிற்கும். ஆனால், அவருக்கும், எனக்கும் உள்ள உறவு, குடும்ப அளவிலும் நிலைத்து நிற்கிறது. தீக்கதிர் பொறுப்பாசிரியரான தோழர், அகத்தியலிங்கம் இந்திய விடுதலைப் போராட்டத்தில் அதிகமாக நினைக்கப்படாத அல்லது மறக்கப்பட்ட வீரர்களைப் பற்றி **விடுதலைத் தழும்புகள்** என்ற அற்புதமான நூலை எழுதியவர். சமூக நீதியை நூல்

வடிவமாக்கியவர். பல சந்தர்பங்களில் நான் எழுத முற்படும் சிறுகதைகளில் யதார்த்த சிக்கல் வரும்போது, நான் அறிவுரை கேட்கும் ஒரு சில தோழர்களில் இவரும் ஒருவர். மிக சிறந்த முன்னுரையை கொடுத்தற்காக மட்டும் அல்லாமல் என்னைப் பற்றிய அவர் எதிர்பார்ப்புக்கு ஏற்ப நான் எழுத வேண்டும் என்றும் கங்கணம் கட்டியுள்ளேன்.

இந்த சிறுகதைகளை பிரசுரித்த அத்தனை பத்திரிகைகளுக்கும் நன்றியுடையேன். ஒரு சில பத்திரிகைகளின் பெயர்கள் தெரியவில்லை. அந்த முகமறியா பத்திரிகைகளுக்கு என் நன்றி உரித்தாகும்.

வழக்கம்போல், இந்தத் தொகுப்பிற்கு வாசகர்கள் தங்களது மேலான கருத்துகளை தெரிவிக்கும்படி கேட்டுக்கொள்கிறேன்.

– சு. சமுத்திரம்

# உள்ளடக்கம்


| | | |
|---|---|---|
| 1. | இருவேறு கண்கள் | 1 |
| 2. | சுயமரியாதை இல்லாத சுதந்திரம் | 12 |
| 3. | நாணமும் பெண்மையும்... | 22 |
| 4. | நிர்வாகிகள் | 34 |
| 5. | கதைக்க முடியாத கதை | 51 |
| 6. | தலைப்பாகை | 70 |
| 7. | சேரிடம் | 86 |
| 8. | ப(ே)ல வேசம் | 94 |
| 9. | அபத்தங்கள் | 104 |
| 10. | முள் மேல் நடை | 117 |
| 11. | போக்கிடம் இல்லாத பொழுது | 124 |
| 12. | மாப்பிள்ளைத் தேர்வு | 133 |
| 13. | பாசப் பாவம் | 142 |
| 14. | சொற்பிடி | 153 |
| 15. | நிறைகாக்கும் கற்பு | 160 |
| 16. | முதல் இல்லாத இரவு | 171 |

# இருவேறு கண்கள்

டிரைவர், அந்தக் காரின் டிக்கியைத் திறந்து, மூட்டை முடிச்சுக்களையும் ஒரு மூங்கில் கூடையையும் கீழே இறக்கிக் கொண்டிருந்தபோது, காருக்குள் இருந்த மேகநாதன், அருகேயிருந்த அம்மாவை அணைத்துப் பிடித்தபடி கீழே இறக்கிவிட்டார். பாண்டியம்மாள், முட்டிக் கால்கள் வரை சுருண்ட சேலையை சற்றே குனிந்து பாதங்கள்வரை பரப்பிவிட்டாள். பால்கனியில் சத்தம் கேட்டு, அங்கே சிரித்துக்கொண்டு நின்ற மருமகளைப் பார்த்துப் பதிலுக்குச் சிரித்துவிட்டு ஏதோ பேசப் போனாள். அதற்குள் மேகநாதன் கேட்டுவிட்டார்.

"வீடு நல்லா இருக்குதாம்மா...? நானே பிளான்போட்டு கட்டினேன். காண்ட்ராக்டர்கிட்ட விடாமல் வேலையாட்கள வைச்சுக் கட்டின வீடும்மா. வீடு எப்படிம்மா இருக்கு? நல்லா இல்லியோ?"

பாண்டியம்மாள், மகன் சொன்னதைக் காதில் வாங்கிக் கொண்டே, அந்த வீட்டை வெளியே நின்றபடியே ஒட்டு மொத்தமாகப் பார்த்துவிட்டு, மீண்டும் மகனையே பார்த்தாள். பள்ளிக்கூடத்தில் படிக்கும்போது எப்படி பேசுவானோ, அப்படிதான் இப்பவும், பேசுறான். பரீட்சை முடிவுகள் வெளியானதும், ஓடோடி வந்து தீமூட்டிக் குழல் மாதிரி கையில் சுருட்டி வைத்திருக்கும் பரீட்சைக் பேப்பர்களை அகலமாக்கியபடியே "எம்மா நான் கணக்குல தொண்ணுத்தஞ்சும்மா.. விஞ்ஞானத்துல எண்பதும்மா...' என்று இதே மகன், இதே மாதிரி கண்களை மேல்நோக்கி, விழிகள் முட்ட நிமிர்த்தி

"சீ... வாயை மூடுடி... தெருவில ஆட்கள் போறது வாரது தெரியாமல் தின்னுற பாரு... மாடு திங்கற மாதிரி."

"நான் மாடுதான்... ஹேறாலி கௌ... நீங்கள் அசல் எருமை..."

"ஏங்க உங்களத்தான். இவள் கத்தலப் பாத்தீங்களா? உங்களுக்கு நான் எவ்வளவு சொன்னாலும் காதுல ஏற மாட்டேங்குது. இந்த வலிப்புக்காரியை எப்ப டாக்டர்கிட்டக் கூட்டிட்டுப் போகப் போறீங்க...?"

"உங்களுக்குத்தான் பைத்தியம். இதோ நிக்கானே இந்த அமுதனும்தான் பைத்தியம்."

அமுதன், ஆனந்தியைப் பதிலுக்குத் திட்டலாமா அல்லது தீட்டலாமா என்று யோசித்துக் கொண்டிருந்தபோது, மேகநாதன் அம்மாவைத் தாங்கிப் பிடித்தபடியே முறையிட்டார்.

"இந்த மூணு பேரும் என்னைப் படுத்துற பாட்டை பாரும்மா... நீயாவது இவங்களுக்கு கொஞ்சம் சொல்லும்மா..."

பாண்டியம்மாள், அந்தக் குடும்பத்துச் 'சண்டையை' வேசாய் ரசித்தபடியே, மகனின் கையைப் பிடித்துக்கொண்டு, உள்ளே போனாள். அந்த வீட்டின் உட்பகுதியை சுற்றும் முற்றும் பார்த்தாள். அதற்கு மார்க்குப் போடவே தனக்கு தகுதி இல்லை என்பதுபோல மலைத்து நின்றாள். கடைந்தெடுத்த தேக்கு சோபாவில் போடப்பட்ட மெத்தை இருக்கைகளை நோக்கினாள். வெள்ளைக் கம்பிகளில் கருப்புக் கண்ணாடிகள் மறைத்த, மூன்று தட்டுக்களில் முதல் தட்டிலிருந்த டி.வி. செட்டையும், அதற்குமேல் அழகழகாய் இருந்த பொம்மைகளையும், கூரையில் பாளம் பாளமாய் சட்டம் போட்ட சதுரம் சதுரமான கண்ணாடி மினுமினுப்பையும் கண் பிசகாமல் பார்த்தாள். தரையில் போடப்பட்டிருந்த மெத்தை விரிப்பும், அதன் முகப்பில் மூன்றாகப் பிரிந்த இரும்புக் கிராதி அடைப்புக்களை மறைத்த நீலநிற கண்ணாடிக் கதவுகளையும் வாயகலப் பார்த்தாள். அவளுக்கு

பெருமை பிடிபடவில்லை. மகனின் தலையைக் கோதிவிட்டாள். இதற்குள், மேகநாதனுக்கு ஒரு டெலிபோன். அவர் ஆங்கிலத்தில் வெளுத்துக் கட்டியதை சுவைத்தாள். "சின்ன வயதிலும் இப்படித்தான். தத்துப்புத்துன்னு எல்லாரும் மூக்குல விரல் வைக்கும்படியா பேசுவான்."

இதற்குள் மூன்று பேர் வெளியிலிருந்து வருகிறார்கள். மகன், அவர்களை உள்ளே உட்காரச் சொல்கிறார். ஆனால், அவர்களோ, உட்காருவதுபோல் நாற்காலி ஓரங்களில் குனிகிறார்கள். அவரிடம் குழைந்து குழைந்து பேசுகிறார்கள். பிறகு கையெடுத்துக் கும்பிடுகிறார்கள்.

பாண்டியம்மாள், கண்ணில் நீராய் வழிந்த ஆனந்தத்தை முகமெங்கும் பரப்பி விடுகிறாள். சாதிச் சான்றிதழ் வாங்குவதற்காக கர்ணத்திடம் கால்கடுக்க நடந்து, ரெவின்யூ இன்ஸ்பெக்டரின் கால்களில் கண்போட்டு தவித்த தன் மகனை, இப்போது இந்தக் கோணத்தில் பார்த்து, அந்தத் தாய் கம்பீரப்பட்டது போல் உடம்பை நிமிர்த்துகிறாள். மேகநாதன், அவளது கவனத்தைக் கலைக்கிறார்.

"ஏம்மா... அந்த கான்வாஸ்ல... அதான் அந்த திரையில் போட்ட படம் பாரும்மா... அதில கதிர் அரிவாளோட இருக்கவன் நம்ம தம்பி மாதிரி இல்லை...?"

பாண்டியம்மாள், மேற்குச் சுவரில் தனித்துவமாய் தோன்றும், அந்தத் திரை ஓவியத்தைப் பார்க்கிறாள். நீரோடும் வாய்க்கால் வரப்போடு, ஆமணக்குச் செடிகளின் பின்னணியில், கதிர் வந்த நெற்பயிர்களின் மத்தியில் அரிவாளோடு ஒருத்தன். அழுத்தமான முண்டாசுத் தலை. லேசாய் தூக்கலான சிங்கப் பற்கள்.

"நம்ம தம்பியக் கொண்டு வந்து அதுல நிக்கவைச்சது மாதிரி இல்லம்மா...?"

பாண்டியம்மாள், பேச மறுக்கிறாள். சின்ன மகன் தாமோதரன் போலவே உள்ள அந்தப் படம், அவளுக்கு ஒரு பாடத்தை இருவேறு கோணத்தில் படித்ததுபோல் தோன்றுகிறது. ஒரே வயிற்றில் பிறந்தவர்களில் ஒருவன் காரோடும் சீரோடும் சூட்டோடும், கோட்டோடும், கால்பிடிக்க ஆளும், கைபிடிக்க சேவகனுமாய் வாழ்கிறான். அதே வயிற்றில் பிறந்த இன்னொருத்தன், கையில் தார்க் கம்போடும், உடம்பில் வெறும் பனியனோடும்...

பாண்டியம்மாள் இரண்டு கண்களும் இருவேறு காட்சிகளைப் பார்ப்பதுபோல் ஒன்றை ஒன்று இழுத்துக் கொள்கின்றன.

அவள் தடுமாறுகிறாள்.

"அய்யோ... என் கண்ணே மூத்த மகன் மேல பட்டுடும் போலிக்கே... தெய்வமே இது என்ன நினைப்பு...?"

நாற்பத்தைந்து வயது மகன், பத்து வயது குழந்தைக் குரலில் பேசுகிறார்.

"குளிச்சுட்டு பூஜைக்கு வாம்மா... உன்னை கூட்டிட்டு வந்தேன் பாரு காரு.... அது போனவாரம் வாங்கினது. இன்னைக்கு ஸ்டேஷனுக்கு டிரைவரை ஏன் கூட்டிக்கிட்டு வந்தேன், தெரியுமா? நான் ஏன் ஓட்டிட்டு வரலே தெரியுமா? உன் கையால கார்ச் சாவியை வாங்கிட்டு, அப்புறமா ஓட்டணுமுன்னு தான்... இருபது வருசத்துக்கு முன்னே ஸ்கூட்டருக்கு சாவி கொடுத்தே... ஒரு சின்ன விபத்துக்கூட நடக்கலம்மா..."

பாண்டியம்மாள், மகனைப் பார்த்து சுரத்தில்லாமல் சிரித்தாள். ஓட்டை மாட்டு வண்டியில் வயலுக்குச் செல்லும் சின்ன மகனின் நினைவு வந்துவிட்டது. அவன் வைத்திருக்கும் ஓட்டைச் சைக்கிள் உடனே நினைவில் ஓடியது. இவன் வாங்கிக் கொடுத்ததுதான். 'பாவம், ஒரு கொடியில் பிறந்த இன்னொரு பூ இன்னும் விரியாமலே சுருண்டு கிடக்குது.'

பாண்டியம்மாள், தன் தலையையே ஒரு திருப்பு திருப்பிக் கொள்கிறாள். சின்ன மகனிடம் இதுவரை காணாத கஷ்டத்தையும் நஷ்டத்தையும், பெரிய மகனின் வசதிகளே பூதக்கண்ணாடியாய், அவற்றைப் பெரிதாக்குகின்றன. அவள் திக்குமுக்காடுகிறாள். 'நான் பெத்த செல்வம் மேல நானே கண்ணு போடுறேனே' என்று நாணிக் கோணுகிறாள். மனமார கொடுக்காத கார்ச் சாவியால் அவனுக்கு எதுவும் நேர்ந்துவிடக் கூடாதே என்பதுபோல், மகனின் கையை தனது இரு கரங்களுக்குள்ளும் இருத்திக் கொள்கிறாள். அவரோ, அதே சிறுவன்போல், மூங்கில் கூடையில் உள்ள ஒன்றை எடுத்து கடித்துக்கொண்டு அலைமோதிப் பேசுகிறார்.

"எம்மா... இந்த ஏழிலைக்கிழங்க... ஒரு கடி கடிச்சிட்டு கூடவே அதிரசத்தையும் ஒரு கடி கடிச்சேன். உடனே நீ, 'நீயும் உன்னோட ருசியுமுன்னு' சிரிப்ப பாரு.... ஞாபகம் இருக்காம்மா?"

பாண்டியம்மாள், அந்த பேச்சில் சின்ன மகனை மறந்துவிட்டு, மகன் கையிலிருக்கும் ஏழிலைக்கிழங்கை வாங்கி அதன் தோலை உரித்துவிட்டு, மீண்டும் அவன் கையில் திணிக்கிறாள். அவள் உடம்பைப்போல் தோற்றம் காட்டும் சிறிது காய்ந்து போன அதிரசத்தை மகனிடம் கடிக்கக் கொடுக்கிறாள். அவள் கண்கள், அருகேயுள்ள சாப்பாட்டு மேசைமேல் விழுகின்றன. அதன்மேல், பளபளப்பில் பழுத்த ஆரஞ்சுகளும், ஆப்பிள்களும் ஒரு கலர் கூடையில் கிடக்கின்றன. நான்கைந்து தட்டுக்கள்... அவற்றில் சின்னச்சின்ன செதுப்பிடங்களில் விதவிதமான சட்டினி சாம்பார்... பன்னீர்ப்பூ மாதிரியான இட்லிகள். தட்டுக்குப் பக்கத்திலுள்ள குட்டித்தட்டில் ஒன்றில் ஆம்லெட். இன்னொன்றில் முட்டைப் பொரியல்.

பாண்டியம்மாள், கண்முன்னால் அவை படப்பட, நெஞ்சத்தின் முன்னால், பழைய சோற்றை ஊறுகாயுடன் சாப்பிடும் சின்னவன் பிள்ளைகளின் முகங்கள் தோன்றுகின்றன. எப்போதாவது, சின்னவன், சந்தைக்குப் போய்விட்டு, காராப்பூந்தி

வாங்கி வரும்போது, அந்தக் குழந்தைகள் அவன் கையை போட்டி போட்டு இழுப்பதும், மனதை இழுக்கிறது. 'அய்யோ... என் பெரிய மவன் பிள்ளைகளை நான் பாவி கண்ணு போடறனே... கண்ணு போடறனே...'

பாண்டியம்மாள், அதுவரை கேட்டறியாத மருமகளின் போர்க்குரல் கேட்டு திரும்புகிறாள். தன்னைத்தானே ஒரு சுற்று சுற்றிக் கொள்கிறாள். மருமகள், கணவனின் கழுத்தை பிடித்து இழுத்து வளைத்து, வாயிலிருக்கும் அதிரசத்தை எடுத்து எறிகிறாள். கையிலிருக்கும் ஏழ்லைக் கிழங்கை தட்டிப் பறித்து, சிறிது விலகி நின்று, அவர் கால் மேலேயே கோபமாக வீசுகிறாள். அவளை அதட்டப்போவதுபோல், உதடுகளை குதப்பிய மாமியாருக்கு, விளக்கம் சொல்கிறாள்.

"இவருக்கு ரத்தக் கொதிப்பு இருக்கு... எப்படி ஏழிலைக் கிழங்கு சாப்பிடலாம்? நீரிழவு இருக்கு... எப்படி அதிரசம் சாப்பிடலாம்? கண்டதைத் தின்கிறது. அப்புறம் கை கால் வீங்கிக் கிடக்கிறது... உங்க பிள்ளைகிட்ட கொஞ்சம் சொல்லி வையுங்க..."

மருமகள், தன்னையே ஒரு அப்பீலாக நினைத்தாலும், பாண்டியம்மாளுக்கு அவளிடம் சண்டை போடவேண்டும்போல் தோன்றுகிறது. அதற்குள், மருமகளே அவளைக் குளியறைக்குள் கூட்டிப்போகப் போனபோது, மேகநாதன், "வெந்நீர் தயாரா.... முதல்ல நான் குளிச்சிடறேன்... அப்புறம் அம்மா குளிப்பாங்க... இல்லாட்டா வெந்நீர் ஆறிடும் பாரு..." என்கிறார்.

பாண்டியம்மாள், ஆச்சரியம் தாங்க முடியாமல், மகனைப் பார்த்துக் கேட்டாள்.

"எதுக்குப்பா... சுட்டெரிக்கிற வெயிலுல வெந்நீர்ல குளிக்கப் போறே...?"

"ஓ... அதுவாம்மா... அது இருபது வருசமா நடக்கிற பெரிய கதை.. டெல்லியில நான் முதல்ல வேலையில சேர்ந்தேன் பாரு...

அப்போ உல்லன் கோட்டு வாங்கிறதுக்கு வைச்சிருந்த பணத்தில், தம்பிக்கு உடம்புக்குச் சுகமில்லேன்னு, ஐநூறு ரூபாயை அனுப்பிட்டேன் பாரு... அதனால... கொட்டுற பனியில திரிஞ்சேன். அப்புறம் படுக்கையில விழுந்தேனா... கடைசியில் என்னடான்னா... குளிரை எதிர்க்கிற சக்தியை உடம்பு இழந்திட்டுதுன்னு டாக்டர் சொன்னார். அதோட, எப்போதும் வெந்நீரைத்தான் பயன்படுத்தனுமுன்னு கண்டிப்பா சொல்லிட்டாரு... தண்ணீர்ல குளிச்சேன்னு வையுங்க... காய்ச்சல் வந்துடும். மூக்கடைச்சுடும்... காது குடையும். ஞாபகம் இருக்காம்மா...? நம்ம தம்பி கிணத்துக்குள்ள கொழிஞ்சிச் செடியை வைச்சிட்டு வருவான். நான் தலைகீழாப் பாய்ஞ்சு அதை எடுத்துட்டு வருவேன்... காலம் எப்படி உடம்ப மாத்திட்டு பாரு..."

பாண்டியம்மாள், திடுக்கிடுகிறாள். மகனையே பார்த்துக் கொண்டு நிற்கிறாள். இப்போது எங்கேயோ உள்ள சின்ன மகன் வரவில்லை. இங்கேயே நிற்கும் பெரிய மகன் சின்னப் பிள்ளையாக நிற்பதுபோல் தோன்றுகிறது. இவளுக்கும் அந்தப் நகரத்து பிள்ளையை எடுத்து இடுப்பில் வைக்கவேண்டும் என்பதுபோல் ஒரு எண்ணம்.

பூஜை முடிகிறது. அவள் கார்ச்சாவியை மகனைக் கட்டிப்பிடித்து தன்னோடு சேர்த்து ஒரு ஆட்டு ஆட்டிவிட்டு கொடுக்கிறாள். பிறகு எல்லோரும், மேசைக்கு வருகிறார்கள். மாமியாரோடு சேர்ந்து உட்கார்ந்திருக்கும் மருமகள், தனது தட்டிலும் பிள்ளைகளின் தட்டுக்களிலும் மாமியார் தட்டிலும் ஊரிலிருந்து வந்த பேயன் பழங்களை வைக்கிறாள். அதிரசத்தை போடுகிறாள். வீட்டில் சமைத்த பொங்கல்... இட்லிகள்... உருக்கிவிட்ட தங்கம் மாதிரியான கேசரி...

வெறும் கேழ்வரகு கூழைத் துளாவிக் கொண்டிருக்கும் மேகநாதன், மீண்டும் அந்த அதிரசத்தின் பக்கம் கையை நீட்டுகிறார். அவர் மனைவி, அந்தக் கை பற்றிய அதிரசத்தை

பறித்து, மகன் அமுதனிடம் கொடுக்கிறாள். அவன் அவரைப் பார்த்து அழகுக் காட்டி சிரித்தபடியே கடிக்கிறான்.

எல்லாரும் எதுவுமே நடக்காததுபோல் இயங்கிக் கொண்டிருந்தபோது, பாண்டியம்மாளால் இருக்க முடியவில்லை. மகனை கண்ணீர் மல்கப் பார்த்தபடியே, ஒரு இட்லியை ஒப்புக்கு எடுக்கிறாள். ஒரு கேசரி கவளத்தை கையில் வைத்தபடியே வாய்க்குள் போடாமல் உருட்டுகிறாள். வயிறு சரியில்லை என்று எழுகிறாள்.

மேகநாதன், அறைக்குள் போகிறார். சபாரி உடையோடு திரும்புகிறார். வரைவரையான சந்தனக்கலர். பக்கத்தில் மனைவி வந்து நிற்கிறாள். ஒரு வெள்ளைப்பட்டையை நீட்டுகிறாள். கிரிக்கெட்காரர்களின் காலில் வைத்திருப்பது மாதிரியான பட்டை. அதை கழுத்திற்கு மாட்டிக்கொண்டு, மனைவி நீட்டும் ஒவ்வொரு மருந்தையும்., ஒவ்வொரு குவளைத் தண்ணீரோடு வாய்க்குள் போட்டு, உள்ளே தள்ளிவிட்டபடியே மேகநாதன் அம்மாவுக்கு விளக்கம் அளிக்கிறார்.

"எனக்கு முதுகெலும்பு தேய்ஞ்சதுனால அடிக்கடி முதுகும் கழுத்தும் வலிக்கும். கீழே குனிஞ்சாலோ, ஸ்கூட்டர் ஓட்டினாலோ, எழுதினாலோ முதுகுப் பக்கம் பிராணனைபோறது வலி எடுக்கும். அதுக்கு இந்த கழுத்துக் கட்டு... சிலநேரம் மாரடைப் போன்னுகூட பயப்படும்படியா வலிக்கும். அப்படின்னா மாரடைப்பு எனக்கு வராதுன்னும் அர்த்தமில்லே... இதயக் குழாய்ல ஒரு ரத்தக்குழாய் அடைச்சிருக்கிறத மேலும் அடைக்காமல் இருக்கிறதுக்கு இந்த மருந்து. ரத்தக் கொதிப்பை சரிக்கட்ட இந்த சாணிநிற மருந்து. இது நீரழிவுக்கு. கோமளம்! இந்த அல்சர் மருந்து எங்கே...? கிட்டத்தட்ட இப்ப எனக்கு மாத்திரைகளே சாப்பாடும்மா... நீ வாங்கிக் கொடுப்பியே பெப்பர்மிண்ட், வேர்கடலை மிட்டாய், கூடவே வேப்பில கசாயம்... அப்படி ஆயிட்டு... ஒண்ணு குறைஞ்சா போதும். படுக்கையில விழுந்திட வேண்டியதுதான்."

மேகநாதன், சிரித்துக்கொண்டுதான் சொன்னார். புறநானூற்று போர்க்கள வீரர்போல கழுத்துப் பட்டையை அங்குமிங்குமாய் அசைத்து சரிப்படுத்திவிட்டு, "போயிட்டு வாரேம்மா..." என்றார்.

பாண்டியம்மாள், மகனையே பார்க்கிறாள். மருவி மருவி பார்க்கிறாள். இந்த மகனுக்கு சின்ன வயதில் வலிப்பு வரும்போது எப்படி துடித்தாளோ, அப்படி துடிக்கிறாள். பின்னர் கிராமத்தில் பின்னங் கொட்டை மாதிரி சதையும் எலும்பும் தனித்தனியே தெரியாமல் இறுகிப் போயிருக்கும் தனது இளைய மகனை மனதுக்குள் கொண்டு வருகிறாள். ஒருநாள் கூட, மண்டைக்குத்து, வயிற்று வலி என்று மருந்துக்குக்கூட சொல்லாத அந்த சின்ன மகன், அவளுள் ஒரு உறுத்தலை ஏற்படுத்துகிறான்.

பாண்டியம்மாள், இப்போது மனதுக்குள் வேறுவிதமாய் புலம்புகிறாள்.

"தெய்வமே... ஒரு கண்ணை நோயாயும், இன்னொரு கண்ணை நல்லாயும் வைச்சுட்டியே...? இந்த கொடியில பூத்த பெரிய பூவை வாடவச்சும், சின்னப் பூவை மலர வச்சும் வேடிக்கை காட்டுறியே.. அய்யோ... நான் பெத்த மவன்தானே சின்னவனும்... அவன்மேல என் கண்ணுபடுதே... தெய்வமே... தெய்வமே.. கோழி மிதிச்சு குஞ்சும் நோகதது, மாதிரி என் கண்ணையும் அதே மாதிரி ஆக்கு..."

மேகநாதன், இன்னொரு தடவை, "போயிட்டு வாரேம்மா" என்கிறார். நித்தியகண்டமாய் வாழும் தான் பெற்ற பிள்ளை நிறைந்த ஆயுளோடு இருக்கவேண்டும் என்று நினைத்ததுபோல், அந்தத்தாய், அப்படிப் புறப்பட்ட மகனை இழுத்து பிடித்து தோளில் சாத்திக் கொள்கிறாள்.

தினத்தந்தி பொன்விழா மலர் -1993

❖

# சுயமரியாதை இல்லாத சுதந்திரம்

அந்தப் பிள்ளையார் கோவிலுக்கும் - அதற்கு எதிரே இருந்த பூக்கடைகளுக்கும், காய்கறிக் கடைகளுக்கம் இடையே ஏதோ ஒரு பொருத்தம் இருக்க வேண்டும்... மாலை பிறந்த நேரம். அந்தக் கோவிலில் அர்ச்சகர் பூக்களை வைத்துக் கொண்டு 'ஓம் வக்ர துண்டாயா' என்றபோது, கீரைக்காரி மாரியம்மாள், தண்டங்கீரை தண்டு ஒன்றை ஒடித்துக் கொண்டிருந்தாள். அவர் 'ஓம் விகடாயநம' என்று சொல்லி, ஒரு பூவைப் போட்டபோது, பூக்காரர் ஒருவர், சும்மா 'கும்'முன்னு ஆடினார். இன்னும் சொல்லப்போனால், அவர் ஆடவில்லை. அவர் ரத்த ஓட்டத்தை நீக்கிவிட்டு, அதற்குப் பதிலாக நாடி நரம்பு எங்கும் ஓடிக் கொண்டிருந்த 'தண்ணி' அப்படி ஆட்டி விட்டது.

மாலை மயங்கி மரங்களும், மக்களும், கடைக்கண்ணிகளும் ஒரே மாதிரி ஆகாமல், பிள்ளையார் கோவில் விளக்கு வேசாய் பிரித்து வைத்தது.

மத்தியான வெயிலுக்காக சற்று தொலைவிலுள்ள தூங்குமுஞ்சி மரத்தருகே நிறுத்தி வைத்திருந்த பழ வண்டியை தள்ளிக் கொண்டு சின்னானும், அவன் மனைவி பார்வதியும், பஸ் நிலையத்திற்கு அருகே வந்தபோது, "தோ... அந்த சோமாறி நெஞ்சை பார்த்து நீட்டா உருட்டுப்பா... தத்தேரி கயிதே... இந்தண்ட வான்னா காதுல ஏறல..." என்றாள் பூக்காரி தாயம்மாள். வாய் பேசினாலும், கைகள் அவை பாட்டுக்கு சாமந்திப்பூவைக் கட்டிக் கொண்டிருந்தன. உடனே சின்னான் மனைவி, "நானுந்தான் உன்கு எத்தனைவாட்டி சொல்றது?

ஆறுவயசு பையனை அம்மணமா விட்டா எப்பிடி... டேய் சோமாறி நெஜார் பூடேண்டா...'' என்று சொன்னபடியே வாழைப் பழங்களை வண்டியில் பரப்பினாள். நிஜார் போடாத அந்தச் சிறுவனின் உடம்பைப் பார்த்ததும் பழக்கார பார்வதி எதேச்சையாக தன் கிழிந்த ஜாக்கெட்டை நைந்த புடவையால் மூடிக் கொண்டாள்.

நிஜார் போடாத அல்லது போட விரும்பாத அந்தச் சின்னப்பையன், ''நம்ம கிட்ட ராங் காட்னே கத்தியாலே கீச்சிப்புடுவேன்...'' என்று சொல்லிவிட்டு, பிறகு எல்லா மெட்ராஸ் ரவுடிகளையும்போல ஓடினான். சாலையின் பிளாட்பாரத்துக்குக் கீழே பள்ளமான ஓர் இடத்தில் செருப்புக்களை தைத்துக் கொண்டிருந்த சீனன் (அதாவது சீனிவாசன் என்ற பெயரின் சுருக்கம்) போதையில் ஆடிக் கொண்டிருந்த தாயம்மாவின் ஆம்புடையானைப் பார்த்தான். தாயம்மா, கணவனை கடிந்து கொண்டிருந்தாள்...

''இனிமே காட்டி... இந்தப் பிள்ளையாரப்பன்தான் ஒன்னைக் கேட்கணும். நான் பூவிலே சம்பாதிக்கிறத, நீ தண்ணியிலே விடுற...''

'தண்ணீக்காரர்' பதிலடி கொடுத்தார்.

''இன்னாமே... படாப் பேஜார் பண்றே... ஒனிகாவ காவங்காத்தாலே மொந்தை மொந்தையா பூ வாங்கிக்கினு வரணும். நீ ஆருகிட்டேயாவது 'பைட்டு'க்குப் போனால், நான் உதைக்கப் போணும்... சும்மா ஒரு கிளாஸ்பூட்டா இன்னாமே... ஏய், வுன்னை...''

மனைவியைப் பார்த்து நோக்கி நடந்த பூக்காரரை, சின்னான் தரதரவென்று இழுத்துக் கொண்டுபோய், ஒரு தூங்குமூஞ்சி மரத்துக்குக் கீழே புரள வைத்தான். தாயம்மாவிற்கு அருகே, பிளாட்பார சுவருக்கும் - ஒரு மரத்திற்கும் இடையே

வைக்கப்பட்டிருந்த சதுரப்பெட்டியில் ஓணான் இலைகளை, தவளை மாதிரி மடித்துக்கட்டி, அதற்குமேல் துலுக்கச் சாமந்தி, சம்பங்கி, செவ்வரளி முதலிய பூக்களை அடுக்கடுக்காக - அழகாக கட்டிக்கொண்டிருந்த ராமன், கீழே குனிந்து அதட்டினான்.

"உங்க பொழப்ப பாருங்கம்மே... இவரு என்ன புச்சாவா குடிக்காரு..."

கீழே சம்மணம் போட்டபடி பூக்கட்டிக் கொண்டிருந்த சாந்தியும், ஒரு காலை தூக்கிவைத்து, அதிலே முகம் பதித்து, ஆள் உயர மாலை ஒன்றிற்கு ரோஜாப் பூக்களால் அச்சாரம் போட்டுக் கொண்டிருந்த துலுக்கானமும், தங்கள் புருஷனை அண்ணாந்து பார்த்தார்கள். ஒருத்திக்கு இப்போதுதான் அபார்ஷன் ஆனது. இன்னொருத்திக்கு ஏழு மாதம். அவர்களின் பார்வையைப் புரிந்து கொண்ட அந்த இரண்டு பெண்டாட்டிக்கார ராமன், "மன்ஷன்னா குடிக்கத்தான் செய்வான்" என்று தன்பாட்டுக்குச் சொல்லிக்கொண்டு, எதிரே நின்ற வாடிக்கையாளரைப் பார்த்தான்.

"எத்தனை முயம் சாமி?"

"முழம் எவ்வளவு?"

"சாமந்தி அம்பது பைசா... சம்பங்கி அறுபது பைசா..."

"நேத்து முப்பது பைசாதானே..."

"இன்னிக்கு சிவராத்திரி சாமி"

"அதுக்காக இப்படி அநியாய விலையா?"

புரண்டு கொண்டிருந்த புறநானூற்று வீரனான புருஷனை பார்த்தபடியே, தாயம்மா இடைமறித்தாள்:

"எங்க பொயப்பு அப்படி சாமி! மழை வந்திட்டா அம்புட்டும் அழுகிடும்... அப்போ எங்க போய் முட்டிக்கது...?"

வாடிக்கையாளர் தயங்கிக் கொண்டிருந்தபோது, "இங்கே வா சாமி! எங்கிட்டே ரோஜாப்பூக் கீது... தாமரை கீது...

உன்னோட சட்டைக்கு இந்த ரோஜா மாட்ச்சாகும்" என்ற குரல் கேட்டது.

எல்லோரும் திரும்பிப் பார்த்தார்கள்.

தாயம்மாவின் பலகைக் கடைக்கு பத்தடி தள்ளி, ஒட்டை மேஜை ஒன்றில், வண்ண வண்ண பூக்களை வைத்தபடி கண்களை வெட்டிக் கொண்டிருந்த சரோசா ஒய்யாரமாகச் சிரித்தாள். இருபத்திரெண்டு வயதுக்காரி. வெளுத்த செவ்வரளி நிறம். சம்பங்கிப் பூவின் சாயல். சாமந்திப்பூக் குவியல் போன்ற அடர்த்தியான தலைமுடி. அவள் பார்வை தாளமாட்டாது வாடிக்கைக்காரர், ராமனை விட்டுவிட்டு, அவள் அருகே போய் நின்று, ஆண்டவனுக்காக பூ வாங்காமல், தன் சட்டைக்கு 'மேட்சாக' ரோஜாப் பூவையும், உதட்டுக்கு மேட்சாக... அவள் கன்னத்தையும் மாறி மாறிப் பார்த்தார்; பார்த்துக்கொண்டே நின்றார்.

இதற்குள் தாயம்மா, சின்னானை அர்த்தத்தோடு பார்த்தபோது, சின்னான், ராமனைப் பார்த்தான். சரோசா, அந்த வாடிக்கையாளர் சட்டையில் ஒரு ரோஜா இதழை தன் கைபட மாட்டினாள். எல்லோரும் கண்களை சிமிட்டியபடி ஆகாயத்தைப் பார்த்தார்கள்.

பொதுவாக, ராமனிடம் பூ இல்லாவிட்டால், வேண்டிய பூக்களை, தாயம்மா, ராமனிடமே கொடுத்து வாடிக்கையாளரிடம் கொடுக்கச் சொல்வாளேதவிர, ராமன் 'கிராக்கியை' கூப்பிடமாட்டாள். ராமனும் இப்படித்தான், ஒரு தடவை பூவோடு பூவாக விற்கட்டும் என்று வாழைப் பழங்களை வாங்கி வைத்திருந்தான். 'வண்டிக்கார' சின்னான், 'என்னோட சேல்ஸ் பூடும்பா' என்று சொன்னபோது, ராமன், தான் வாங்கிவந்த பழங்களைச் சின்னானிடமே கொடுத்து விட்டான். இப்படி எழுதப் படாத ஒரு தொழில் தர்மம் அங்கே நடந்து வரும்போது, இந்த சரோசா நடந்துகொள்ளும் விதம், அவர்களுக்குப் பிடிக்கவில்லை. இவ்வளவுக்கும் ஒரு மாதத்திற்கு முன்பு வந்தவள். அங்கே கடை போட்டிருந்த, செருப்புக்கடை சீனன், அவளுக்காக இடம் விட்டு,

பள்ளத்தைப் பார்த்துப் போனான். ஆனால், சரோசாவோ இப்போது எல்லோருக்கும் பள்ளம் வெட்டிக் கொண்டிருக்கிறாள். அவளைக் கண்டிக்கவும் முடியவில்லை. அவள் சேர்ந்திருக்கும் இடம் அப்படி.

ஒரு மணி காணாமல் போய்விட்டது.

லைட் இல்லாத சைக்கிளில் காக்கி யூனிபாரம் போட்ட ஒருவர் வாகவமாக வந்தார். பிளாட்பாரச் சுவரில் ஒரு கையை வைத்துக்கொண்டு, சைக்கிளை அங்குமிங்குமாக ஆட்டியபடியே கடைகண்ணிகளை நோட்டமிட்டார். ஆஜானுபாகுவான தோற்றம். சைக்கிளின் ஹாண்ட் பாரில் தொங்கிய லத்திக் கம்பு மாதிரி அமைந்த, அழுத்தம் திருத்தமான உடற்கட்டு. குத்துவது போலிருந்த மீசை. குதறுவதுபோல் இருந்த கண்கள். காய்ப்பு ஏறிய கைகள். ஆசாமிக்கு நாற்பது வயது இருக்கலாம். எல்லோரையும் ஒட்டுமொத்தமாக அதட்டினார்:

"ஏண்டா... சோமாறிங்களா... டிராபிக் இடைஞ்சலாகல...? டேய் சின்னான்! இங்கே ஏண்டா வண்டியை நிறுத்தற... ஓரம் கட்டுடா கயிதே."

சின்னானும், அவன் மனைவியும் எதுவும் பேசாமல், வாழைப்பழ வண்டியை முன்னால் நான்கு அடி நகர்த்தி, பிறகு பின்னாலும் நான்கு அடி நகர்த்தி, அதை இருந்த இடத்திலே நிறுத்திக் கொண்டிருந்தபோது -

போலீஸ்காரர், செருப்புக்கார சீனனை அதட்டினார்.

"என்னடா சீனா! குரோம்பேட்டை பாக்டரி வாச்மேன்கிட்டே திருட்டுத்தனமா தோல் வாங்கிறியாம்... மாமியார் வீடு கேட்குதா..."

"அப்படில்லாம் ஒண்ணும் கிடையாது சாமீ... வோணும்னா வந்து பாரு" என்று சொல்லியபடியே, சீனன் அத்தனை செருப்புக்களையும் எடுத்து, அவர் முகத்துக்கு எதிரே ஆட்டினார்.

போலீஸ்காரர் திருப்தி அடைந்தவராய் பிளாட்பார சுவரில் கால் வைத்தபடியே, சைக்கிளை நகர்த்தி நகர்த்தி, சரோசா பக்கம் போனார். பிறகு அவள் மேஜை மேலே ஒரு கையை ஊன்றிக் கொண்டு, அவளைப் பார்த்தார்.

சரோசா பேசவில்லை. சிரிக்கக்கூட இல்லை. ஒரு வெள்ளை ரோஜாவை எடுத்து அவர் காக்கிச் சட்டையில் வைத்தாள். அதற்குப் பிறகுதான் இருவரும் சிரித்தார்கள். என்னவெல்லாமோ 'கிசுகிசு' பேச்சுக்கள். அவள் யாரைப் பற்றியோ பேசியிருக்க வேண்டும். இல்லையென்றால், போலீஸ்காரர் அவள் பேசப்பேச, அப்படி திரும்பிப் பார்த்திருக்க மாட்டார். சிறிது நேரத்திற்குப் பிறகு, சரோசா அவசர அவசரமாக கடையை எடுத்து வைத்தாள். "கடையை கொஞ்சநேரம் பார்த்துக்கணும்" என்று எல்லோருக்கும் ஒட்டுமொத்தமாக உத்தரவு போடுவதுபோல் பேசிவிட்டு, போலீஸ்காரரின் சைக்கிளில் பின்னால் ஏறிக் கொண்டாள்.

அந்த சில்லறைக் கடைக்காரர்களின் தலைகள்போல், சைக்கிள் சக்கரங்களும் சுழன்றன... கீரைக்காரி மாரியம்மாள் கொதித்தாள்:

"இப்டியே விட்டுக்குனு போனால், அவன் எல்லாரையும் படுக்கச் சொல்வான். அவள மட்டும் கவனிக்கப்படாது, அவனையும் சேர்த்துக் கவனிக்கணும்... தட்டுக்கெட்ட மூதேவியாலே, நம்ம எல்லாருக்குமே ஆபத்து வந்திருக்கு... நேத்து பார்வதியைக் கூப்பிட்டான். நாளிக்கு துலுக்கானத்தைக் கூப்பிடுவான்... அப்பாலே சாந்தியைக் கூப்பிடுவான்... இந்த சரோசா மூதேவி பண்றதனாலே, அவன், எல்லா ஏழைப் பொம்மனாட்டியும் கூப்பிட்டா வந்திரும்னு நினைக்கான். இந்த நெனப்பை நாம மாத்திக் காட்டணும். அவன் நெஞ்சிலே கீற மஞ்சாசோத்தை எடுத்து, அவன்கிட்டயே தின்னக் கொடுக்கணும். அப்போதான் என் மனசு ஆறும்..."

பேசிய வாய்கள் மூடிக் கொண்டன... வெடித்த எரிமலை சிறிது விட்டுக் கொடுப்பதுபோல.

சைக்கிளில் சரோசாவும், போலீஸ்காரரும் திரும்பிக் கொண்டிருந்தார்கள். சரோசா, பின் இருக்கையில் இருந்து இறங்கி, காம்பவுண்ட் சுவரை லாகவமாகத் தாண்டி, மேஜைமீது பூக்களைப் பரப்பியபோது போலீஸ்காரர் அவள் கைகளை செல்லமாக வருடினார். அவள் கன்னத்தின் அருகே அவர் கை போனபோது, சரோசா தன் மோவாயால் அவர் கையைத் தட்டி விட்டாள். "சீ! அக்கம்பக்கத்துலே..." என்று செல்லமாக சிணுங்கினாள். அப்போதுதான், அவருக்கும் மற்றவர்கள் மனிதர்களாகத் தெரிந்தது.

சைக்கிளைவிட்டு இறங்கியபடியே சினனான் அருகே போனார்.

"ஏண்டா சின்னா... சீக்கிரமா வண்டியை கொண்டு போயேண்டா... டிராஃபிக்கு ஏணடா இடைஞ்சலா நிறுத்தறே? கயிதே... போக்குவரத்துக்கு இடைஞ்சலா இருக்குது... பாரு.."

"எந்தப் போக்குவரத்துக்கு சாமி...?"

"என்னடா, எதிர்க்கேள்வி போடுற? பஸ் ஸ்டாண்ட் பக்கமா வண்டி நிக்கப்படாது. வேணுமுன்னா அந்தப் பக்கமா போ... டேய் செருப்பு! கண்ணு தெரியாத நேரத்திலே என்னத்தடா தைக்கிற... ஏய் கீரை! வழியை அடைக்கிறாபோல ஏன் நெப்புற...?"

சின்னான் வண்டியோட வண்டியாய் நின்றான். சீனன் செருப்போடவே இருந்தார். கீரையம்மா, ஒரு சுண்டு விரலைகூட நீட்டவில்லை.

அந்த போலீஸ்காரருக்கு, அவர்களின் பராமுகம் தன் முகத்தை மேலும் கீழுமாய் ஆட்ட வைத்தது. பிறகு, அதுவே தன்மானம் ஆகியது. இறுதி எச்சரிக்கையாய் கேட்டார்.

"சொல்றது காதுலே விழலே... டேய், வண்டிக் கயிதே... வண்டியைத் தள்றியா, இல்லியா?"

சின்னான், இப்போது சவால் விட்டான்:

"அட சும்மா நிறுத்து சாமி... நீ யூனிபாரத்துக்கு தோதுவா நடந்துக்கினால், நாங்களும் அதுக்குத் தோதுவா நடந்துக்குவோம். நீ இன்னாடான்னா..."

போலீஸ்காரருக்கு ரத்தம் கொதித்தது. மிரட்டலோடு கத்தினார்:

"இன்னாடா, திட்டம்போட்டு பண்றீங்களா? நாளைக்குப் பார்த்துக்கலாம். இந்த இடத்துலே உங்க கடை இருந்தா நான் தொப்பியை கழட்டி வச்சுடுறேன்"

போலீஸ்காரர் எல்லா விவரங்களிலுமே அனுபவஸ்தர்... புரிந்து கொண்டார். 'இது தனியாக கவனிக்கிற சமாச்சாரமில்லே...' சரோசாவைப் பார்த்தபடியே சைக்கிளை உருட்டி, பிறகு அதில் ஏறிக் கொண்டு பெடல்களை அழுத்தினார்.

மறுநாள், மாறாட்டமாய் வந்தது.

பூக்கடைக்குப் போய்விட்டுத் திரும்பிய தாயம்மாவும், சின்னானும் ஆச்சரியப்பட்டார்கள். சரோசா, பிள்ளையார் கோவில் முகப்பில கடை போட்டிருந்தாள். தாயம்மா கண்ணைச் சிமிட்டியபடியே, "கோவில் பக்கம் கடை போடக் கூடாதுன்னு சொன்னாங்களே... இவ எப்படிப் போட்டா? ஒருவேளை, கோவில்காரன் எவனையாவது வளைச்சுப் பூட்டிருக்காளா...? எக்கேடும் கெட்டும் தத்தேரி கயிதே..." என்றாள்.

ஒவ்வொருவரும் தத்தம் வேலைகளைக் கவனிக்கத் தொடங்கினார்கள். தாயம்மா, உதிரிப் பூக்களை பிளாஸ்டிக் பேப்பரில் இருந்து விடுவித்துக் கொண்டு இருந்தாள். சின்னான் வாழைப்பழ வண்டியை முன்னால் இழுக்க, பார்வதி அதை பின்னால் இருந்து தள்ளிக் கொண்டிருந்தாள். துலுக்கானமும், சாந்தியும் ராமனோடு சண்டை போட்டுக் கொண்டிருந்தார்கள். மாரியம்மாள் தனது கீரைகளைக் அலசி இருந்தாள்...

திடீரென்று போலீஸ் வேன் வந்து நின்றது.

பல போலீஸ்காரர்கள் கீழே குதித்தார்கள். அப்படி குதித்தவர்களில் 'சரோசா இகழ்' ஆசாமியும் ஒருவர், அப்போது அவர் சரோசாவைப் பார்க்கவில்லை. அவள் யாரோ, தான் யாரோ என்பது போல் ஆகாயத்தைப் பார்த்துக் கொண்டு நின்றார். அவரோடு வந்த இதர போலீஸ்காரர்கள், ஆளுக்கு ஒரு பக்கமாக ஓடி, கீரைகளைக் கூடையோடும், பூக்களை அதன் மேஜையோடும் வேனுக்குள் திணித்தார்கள். சின்னானின் பழ வகைகளை உள்ளே தூக்கி எறிந்தார்கள். சீனனை செருப்புப் பெட்டியோடு ஏற்றினார்கள்.

தலைமை போலீஸ்காரர் அதட்டினார்.

"இங்கே கடை போடப்புடாதுன்னு எத்தனை தடவை சொல்லியும் கேட்கல. உம்... ஏறுங்க..."

தாயம்மா பொறுக்க முடியாமல் கேட்டாள். சரோசாவின் கடைப்பக்கம் கையை நீட்டியபடியே கேட்டாள்:

"அதோ, அந்தக் கடை இருக்கே சாமி?"

"எந்தக் கடை இருந்தா உனக்கென்ன? அது கோவில் பக்கத்துலே இருக்குது; இருக்கலாம். மொதல்ல நீ வண்டிலே ஏறு சட்டமா பேசறே..."

சின்னான், சரோசாவைப் முறைத்தபடியே முனங்கினான்:

"மட்டமான ஒரு விவகாரத்துக்காக சட்டம் வந்ததை நினைச்சி தாயம்மா புலம்புது சாமி... புலம்பினாலும் தப்பாப் புலம்பல"

"ஏண்டா சோமாறி... கயிதே... எதிர்த்தா பேசறே? உனக்கு ஆறு மாசம் வாங்கிக் கொடுக்கிறேன், பார்..."

சின்னானின் பிடரியில் பட்டு பட்டென்று பிரம்படி விழுந்தது. வேனிற்குள் இருந்த இன்னொரு போலீஸ்காரர், அவன் தலைமுடியைப் பிடித்து உள்ளே தூக்கிப் போட்டார். வேறொருவர், சீனனின் கையை முறுக்கியபடி அவனை வண்டிக்குள் குப்புறத் தள்ளினார்.

தாயம்மா, மாரியம்மாள், துலுக்கானம், சாந்தி ஆகிய அத்தனைபேரும் அழுகிப்போன பூக்கள்போல வேனிற்குள் எறியப்பட்டார்கள். வண்டிக்குள் இருந்த தாயம்மா, கீழே ஒன்றும் புரியாமல் விழித்துக் கொண்டிருந்த தன் மகனைப் பார்த்து "நயினா வந்ததும். விசயத்தைச் சொல்லிட்டு, இங்கேயே இரு" என்று விழியாட்டிப் பேச - சின்னான், 'பயப்படாதே' என்பதுபோல் மனைவியின் முதுகைத் தட்டிக் கொடுக்க, சீனன், தன் முகத்தில் பதிந்த போலீஸ் கீறலைப் பெருவிரலால் அழுத்த - துலுக்கானமும், சாந்தியும், ராமனை ஆளுக்கொரு பக்கமாக பார்க்க, கீரைக்காரி மாரியம்மாள், சிதறிக் கிடந்த பொருட்களையும், கோவில் முகப்பில் பட்டும் படாததும்போல் பார்த்துக் கொண்டிருந்த சரோசாவையும் வெறுமையுடன் நோக்க...

போலீஸ்வேன் புறப்பட்டது; வேக வேகமாக ஓடியது. சுதந்திரமும் சுய மரியாதையும் வேறு வேறு என்று உணராத அந்த நிஜார் போடாத சின்னப்பயல் சிறிதுநேரம் திகைத்து நின்று விட்டு, பிறகு அந்த வேனுக்குப்பின்னால் ஓடினான். அந்த போலீஸ்வேன் கிளப்பிய புழுதியோ பிள்ளையார் கோவிலை மறைத்தது.

இதயம் பேசுகிறது, 14-11-82

# நாணமும் பெண்மையும்...

ஊருக்கு சற்று வெளியே பாலத்திற்கு அருகே பெண்வீட்டார் காத்திருந்தார்கள். நள்ளிரவு நேரம். பட்டுப் புடவைகளோடும், பகட்டும் நகைகளோடும், பல பெண்கள் ஆரத்தித் தட்டோடு அமர்க்களமாகப் பேசிக்கொண்டு இருந்த போது, அந்த கல்யாண வீட்டிற்குள் இருந்த ஒரு கிழவி, 'இன்னுமா இழவு வரல...' என்று சொன்னதும்' ஒரு சில பெண்கள் அந்த அமங்கலியைத் திட்டுவதற்காக தத்தம் இடுப்புக்களில் கைகளை வைத்தபோது, கிழவியின் பேத்தி 'ஒனக்கு அறிவிருக்கா பாட்டி?... எந்தச் சமயத்துல எந்த வார்த்த பேசணுமுன்னு தெரியலியே... வயசு மட்டும் ஏறிக்கிட்டு போவுது... இதனாலதான் நாயிகிட்டயும் பேயிகிட்டயும், எச்சிக்கலகிட்டயும் இரப்பாளி கிட்டயும் பேச்சு வாங்குற' என்றாள்.

திட்டுவதற்கு முன்னாலேயே பேத்திக்காரி இப்படித் திட்டுகிறாள் என்றால், திட்டிவிட்டால் என்ன பேச்சு பேசுவாளோ என்று பயந்தவர்கள்போல், பெண்கள் பேசாமல் இருந்தார்கள். ஒரே ஒரு எமகண்ட - ராகுகால பதினெட்டு வயதுப் பஞ்சாங்கப் பெண் மட்டும், கிழவியின் அமங்கல வார்த்தையை அகற்ற நினைந்தவளாய் 'இன்னுமா மாப்பிள்ள வரல?'... என்றாள். உடனே ஆண்கள் கோஷ்டியில் இருந்த அவள் அத்தை மகன் 'இன்னா... இருக்கனே.. கண்ணு தெரியலியா'... என்றதும் எல்லோரும் சிரித்தார்கள்.

மாப்பிள்ளையின் ஊர், அய்ம்பது கிலோ மீட்டருக்கு அப்பால் இருந்தது. அங்கிருந்து மாப்பிள்ளை கோஷ்டி, தென்காசியில் இறங்கி, ஒரு காரை எடுத்துக் கொண்டு வரவேண்டும். ஏற்கனவே

அவர்கள் அமர்த்தியிருந்த மேளக்காரர்கள் பஸ்ஸில் கோணச்சத்திரத்திற்கு வந்து விட்டார்களாம். மாப்பிள்ளை காரில் வந்ததும், காருக்கு முன்னால் மேளத்தை அடித்துக் கொண்டு அவர்கள் வர வேண்டியதுதான் பாக்கி...

கிட்டத்தட்ட நூறுபேர் இருக்கும். பெண்வீட்டு தவில்காரர்கள் மேளக் கம்புகளைத் தூக்கிவைத்துக் கொண்டு தயாராக இருந்தார்கள். 'சிங்கி' அடிக்கிற பயல் கொட்டாவி விட்டுக்கொண்டே, முதுகில் கடித்த கொசுவை, சிங்கியால் அடித்தான். ஊமைக் குழல் வாசிப்பவர் கன்னத்தை உப்பிக் கொண்டிருந்தார்.

திடீரென்று, கிழவர்கள் நிமிர்ந்து பார்த்தார்கள். வாலிபர்கள் ஓடினார்கள். பெண்கள் குலவையிடுவதற்காக, நாக்குகளை உள்ளே வளத்து, இதனால் மூச்சுவிடக் கஷ்டப்பட்டுக் கொண்டிருந்தார்கள். மாப்பிள்ளை கோஷ்டி வந்து கொண்டிருந்ததே காரணம். எரியாத மின்சார விளக்குகளை, கியாஸ் விளக்குகள் ஈடுகட்டின. மாப்பிள்ளை வீட்டு நாதஸ்வரக்காரர்கள் 'ஓரம்போ' பாடலை வாசித்தார்கள். உடனே பெண்வீட்டு நாதஸ்வரக்காரர்கள் 'மாப்பிள்ளை வாரார் மாட்டு வண்டியில' என்ற பாடலை நொறுக்கித் தள்ளினார்கள்.

இரண்டு மேள கோஷ்டிகளும் சங்கமமாக, பெண் வீட்டாரின் பெரிய மனிதரான ஒரு சின்னக் கிழவர், மாப்பிள்கைக்கு மாலையிட்டு, சந்தனம் பூசினார். உடனே மாப்பிள்ளை வீட்டு மேளம், 'மாமியார்தனமாகவும்', பெண் வீட்டு மேளம், 'அடங்காப்பிடாரி மருமகள்' மாதிரியும் போட்டி போட்டுக்கொண்டு வாசித்தன. பெண்களின் குலவை, மேளச் சத்தத்தில் கேட்கவில்லை. மாப்பிள்ளை மேளம் 'மச்சானைப் பாத்திங்களா'வை அடித்தபோது, பெண்வீட்டு கோஷ்டி 'மலை வாழைத் தோப்புக்குள்ளே' என்று வாசிக்காமல், 'கட்டழகப் பாருங்கடி.... காலைப் பிடிச்சு வாருங்கடி' என்ற பாட்டை வாசித்தது.

'மாப்பிளை முடுக்கு' மேளக் கோஷ்டியும், பெண்க்கார மேளச் செட்டும், தவில்களை அடிப்பதற்குப் பதிலாக, ஒருவரை ஒருவர் அடித்துக் கொள்வார்களோ என்று சொல்லும் அளவிற்கு, மேளக் கம்பை அடிப்பதுபோல் ஓங்கி, மேளங்களை அடித்ததும், நாதஸ்வரக்காரர்கள், கழுத்தை தூக்கி, வயிறுகளை எக்கி, எதிர்த்தரப்புக் கோஷ்டியை இடிப்பது போல் வாசித்ததும், கல்யாண தரப்புகளுக்குத் தெரியவில்லை. அங்கே உள்ள அத்தனைபேரும் மாப்பிள்ளைக்கு அடுத்தபடியாக, கூட்டம் தன்னை மட்டுமே கவனிப்பதாக, ஒவ்வொருவரும் தன்னைப் பற்றி முக்கியத்துவமாக நினைத்ததே காரணம்.

'அரங்கு' வீட்டில் மேளச்சத்தத்தைக் கேட்டவுடனே, நாணத்துடன் தலை கவிழ்ந்து கொண்டிருந்த மல்லிகாவை, இதர வயதுப் பெண்கள், செல்லமாகத் தூக்கி நிறுத்தி, ஜன்னலுக்கருகே மெதுவாக தள்ளிக்கொண்டுபோய், அதன் கம்பிகளில் அவள் முகத்தை அழுத்தி, 'ஒன் ஆச மச்சான நல்லாபாரு... பார்த்தத எங்கிட்டயும் சொல்லு...' என்றாள் ஒருத்தி. 'ஏய் மாப்பிள்ளை எப்படி இருக்கார்னு எவளாவது போயி பாத்துட்டு வாங்கடி...' என்றாள் இன்னொருத்தி.

'எப்படி இருந்தா என்ன... இனும சட்டியா பானையா மாத்தறதுக்கு?' என்றாள் மற்றொருத்தி.

'இப்படித்தான் நாம ராசாத்திக்கு ஓரக்கண்ணு புருஷன் கெடச்சான்... மாப்பிள்ளையை நல்லா பாக்காம அவனோட சொத்து-பத்த பாத்ததால வந்த கோளாறு' என்று கோளாறு பிடித்த ஒருத்தி தன் அபிலாஷையை செய்தி மாதிரி சொன்னாள்.

மல்லிகா, பயந்துவிட்டாள். அவள் அண்ணிக்காரி, மாப்பிள்ளையை முன்பே பார்த்துவிட்டு, 'மாப்பிள்ளைன்னா மாப்பிள்ளை... அவன்தான் மாப்பிள்ளை... ரத்தச் சிவப்பு... சுருட்டத் தல... ஏறு நெத்தி... யார்க்கிட்டயும் சிரிச்சுப் பேசுறான்... குனிஞ்சதல நிமிறாத பையன்' என்று சொன்னதால், தனக்குள்ளேயே பூரித்துக்

கொண்டவள்தான் இந்த மல்லிகா. இருந்தாலும் 'ஓரக்கண்ணு மாப்பிள்ள' என்றதும், மல்லிகாவுக்கு அண்ணி கடைசியாகச் சொன்ன, 'குனிஞ்ச தல நிமிறாத பையன்' என்று அப்போது உடலுள்ளே பரிபூரண இன்பத்தை ஏற்படுத்திய வார்த்தை, இப்போது பயமுறுத்தியது. ஓரக்கண்ணா இருந்ததாலதான் குனிஞ்ச தல நிமிறாம இருந்திருப்பானோ... சீ... இருந்திருப்பாரோ...

தோழமைப் பெண்களின் சிரிப்பொலி, இடியொலிபோல் கேட்க, மல்லிகா, பயந்தவளாய், ஜன்னல் கம்பிகளை பாதுகாப்பைத் தேடுவதுபோல் பிடித்தபோது, ஒரு பத்து வயது சிறுமி அங்கு வந்து மூச்சிரைக்க நின்றாள். மல்லிகாவின் பெரியப்பா பேத்தி... மூச்சுவிட்டுக் கொண்டே பேச்சையும் விட்டாள்.

'மாப்பிள்ளய பாத்துட்டேன்... பாத்துட்டேன்னே...'

'எப்படி இருக்காரு பிள்ள?'

'அப்படி கேளாதடி.... ஒவ்வொண்ணா கேளு...'

'நீ மெத்தப் படிச்சவ, நீயே கேளு...'

'கேக்கதாண்டி போறேன்... ஏய்... கனகு, மாப்பிள்ளை நிறம் எப்படி?'

'சிவப்பு'

'மொகம்'

'உருண்ட'

'பல்லு'

'வரிச'

'தடியா... ஒல்லியா....'

'என்னைவிட தடி... ஒன்னவிட ஒல்லி'

'இவளமாதிரி தடியா இருந்தால்... அவ்வளவுதான்... வாசலுக்குள்ள நுழைய முடியாது.'

'மொத்தத்துல மாப்பிள்ளை எப்படி?'

சிறுமி விழித்தாள். இன்னொருத்தி கேட்டாள்.

'அழகா இருக்காரா, அசிங்கமா இருக்காரா.'

'அப்படிக் கேளாதடி... நான் கேக்கேன் பாரு... ஏய், கனகு! மாப்பிள்ளை நம் ஊர்ல யாரு மாதிரி இருக்காருடி...'

'யாரு மாதிரியும் இல்ல...'

'அப்படின்னா...'

'அழகா இருக்கார்.'

மல்லிகா தவியாய் தவித்தாள். ஒருத்திகூட, கண்ணைப் பற்றி கேக்க மாட்டாளோ?... கண் ஓரக் கண்ணாய் இருந்தால், எல்லா அழகும் அசிங்கமாத் தெரியுமே...

மல்லிகா, சிறுமியைத் தன் பக்கம் இழுத்துக்கொண்டு, அவள் காதருகே வாயை வைத்துக்கொண்டு 'அவரு கண்ணு எப்படி இருக்கு?' என்றாள். சிறுமி சத்தம்போட்டே கத்தினாள்.

'உருண்டையா... வெட்டு வெட்டுன்னு இருக்கு...'

'நீ என்னடி கேட்ட?... அவள் என்னடி சொன்னாள்?'

'கனகு... சொல்லாதடி... ஒனக்கு மிட்டாய் தருவேன்.'

'நீ மிட்டாய் குடுக்காண்டாம். சீக்கிரமா அவளுக்கு ஒரு புருஷன பெத்துக் குடு.'

'பயித்தியம்... இசகு பிசகா பேசாம பேச்சே வராது.'

'ஏமுழா சிரிக்கிய... ஒரு காலத்துல, ஒண்ணுக்குள்ள ஒண்ணு, கண்ணுக்குள்ள கண்ணா... சொத்து பிரியாம

இருக்கணுமுன்னு... பத்து வயசுப் பையனுக்கு இருபது வயசுப் பெண்ண கொடுத்திருக்காவ... தெரியுமா.'

'அது ஒங்க வம்முசம்...'

'எங்க வம்முசத்த என்னத்தழா கண்டுட்ட...'

பேசிக் கொண்டிருந்த பெண்கள், வாய்களை ஒடுக்கிக் கொண்டு, கண்களை அகல விரித்தார்கள். மாப்பிள்ளை காரில் கனகம்பீரமாக வந்து கொண்டிருந்தான். கைவிரல்களில் மோதிரங்கள்... விரல்களின் குவியலில் ஒரு செண்டுப்பூ... சபாரி பேண்ட்... கோட்... மேளதாளத்துடன் கல்யாண கோஷ்டி வாசல்முன் வந்து நின்றது.

மல்லிகா, பூரித்துப் போனாள். அவள் மனத்தில் நிழலாடிய ஒரு கற்பனை உருவம்போலவே, அவளுக்கு அவன் தோன்றினான். பி.ஏ. படித்தவன். சென்னையில் வேலையாம்...

மாப்பிள்ளை, வலது காலை வீட்டுக்குள் வைத்தபோது, உச்சஸ்தாயியில் ஒலிக்க வேண்டிய நாதஸ்வரங்கள், சாதாரண மாகவே ஒலித்தன. ஏற்கனவே போட்டி போட்டு, ஊதிக் களைத்த, நாதஸ்வரக்காரர்கள், இப்போது ஒருவருக்கொருவர் உரையாடுவதில் கவனமாக இருந்தார்களே தவிர, ஊதுவதில் அல்ல.

'மாப்பிள்ளய கூட்டிக்கிட்டு வாங்கய்யா'... என்றார் நாவிதர்.

மாப்பிள்ளை, மணவறைத் தட்டில் போடப்பட்டிருந்த இரண்டு நாற்காலிகளில் ஒன்றை நிரப்பினான்.

'சொக்கார-மாரு அலந்தரம் பண்ணுங்கய்யா' என்றார் நாவிதர்.

உடனே மாப்பிள்ளை வீட்டுப் பங்காளிகள் ஒரு தட்டில் இருந்த ஆல இலையைக் கிழித்து, இரண்டு கைகளிலும் வைத்துக் கொண்டு, மாப்பிள்ளையின் தலையைச் சுற்றி மூன்று தடவை கொண்டுபோய், பிறகு இன்னொரு பாத்திரத்தில் போட்டார்கள்.

'பொண்ண கூட்டிக்கிட்டு வாங்கய்யா' என்றார் நாவிதர்.

மல்லிகா, தலைப்பூவின் பாரம் தாங்காதவள்போல், தலை கவிழ, கண்கள் லேசாக மூடியிருக்க, நான்கைந்து பெண்கள் அவளைத் தாங்கலாக அழைத்துக் கொண்டு வந்து மணவறையில் மாப்பிள்ளையருகே உட்கார வைத்தார்கள். ஒருவர் உடம்பு, ஒருவர் உடம்புடன் பட்டபோது, இருவருமே பிரக்ஞை அற்றவர்கள் போல், அந்த உணர்வையே ஒரு பிரக்ஞையாக எடுத்துக் கொண்டவர்கள்போல், கண்களைச் சிமிட்டி, லேசாய் நெளிந்தார்கள்.

ஆமணக்குச் செடிபோன்ற பொன் நிறமும், அதற்கேற்ற உடல்வாகும் கொண்ட மல்லிகாவைப் பார்த்து, மாப்பிள்ளை வீட்டு கோஷ்டியின் இளைய தலைமுறை மகிழ்ச்சி அடைந்ததுபோல் ஒருவரை ஒருவர் பார்த்து கண் சிமிட்டியபோது, முதிய தலைமுறை, அவள் போட்டிருக்கும் 'கால் கிலோ' தங்க நகைகளைப் பார்த்து திருப்திபட்டவர்களாய், ஒருவரையொருவர் பார்த்து தலையை ஆட்டிக் கொண்டார்கள்.

'எங்க மல்லிகா... ஒங்க பையனை விட உசத்திதான்'... என்றான் ஒரு பெண்வீட்டு வம்பன்.

'எங்க பையன் பி.ஏ., ஒங்க பொண்ணு எஸ்.எஸ்.எல்.சி.' என்றாள் ஒரு பிள்ளை வீட்டு வம்பி.

'மல்லிகாவோட எஸ்.எஸ்.எல்.சி.யும்... ஒங்க பையனோட பி.ஏ.வும் ஒன்றுதான்' என்றான் இன்னொரு குறும்பன்.

'அப்படின்னா ஒங்க பொண்ணு அந்தக் காலத்துப் படிப்பா... அவ்வளவு வயசா?' என்றான் மாப்பிள்ளை வீட்டு மைனர் ஒருவன்.

'என்னடா செத்த பேச்சு பேசுறிய... அர்த்தநாரீஸ்வரர் மாதிரி அவங்க ரெண்டு பேருமே ஒண்ணுதான்" என்று அர்த்தத்துடன் பேசினார் ஒரு கிழவர்.

'ஏய்... பொண்ண... ஆற அமர பாக்கலாண்டா... இப்போ, கையில் இருக்கும் தேங்காய, தவறவிட்டுடாதடா...' என்று மாப்பிள்ளைக்கு தேங்காய் பிரக்ஞையை ஏற்படுத்தினான் ஒருவன்.

மணமகள் மல்லிகா நாண, மாப்பிள்ளை கோண, கல்யாணக் கூட்டம், திடீரென்று சிரித்தது. ஒருவர், மங்கல நாண் இருந்த தாம்பாளத் தட்டத்தை கூட்டத்திற்கிடையே கொண்டுபோக, சபையோர், தாலியைத் தொட்டுக் கும்பிட்டார்கள்.

'கெட்டி மேளம்... கெட்டி மேளம்... மாப்பிள்ள தாலி கட்டப் போறாரு...' என்றார் நாவிதர்.

'கெட்டி மேளம் அடிக்கவில்லை... மேளக்காரர்கள் வாசலுக்கருகே, அடிக்காத குறையாக பேசிக் கொண்டிருந்தவர்களையே பார்த்தார்கள். கூட்டத்தில் ஒரு பகுதி எழுந்து அங்கே குழுமியது.

பெண்ணின் ஊரைச்சேர்ந்த ஒரு வயோதிகர், வயிற்றைத் தடவிக்கொண்டிருந்தபோது, அவருக்கருகே இருந்த ஒரு மீசைக்காரர் படபடப்பாகப் பேசினார்.

'இவரு இந்த ஊரு நாட்டாம... நீங்க இப்படிப் பேசப்படாது.'

மாப்பிள்ளை கோஷ்டியின் ஒரு மானஸ்தர், கம்பீரமாகப் பதிலளித்தார்.

'நாட்டாமையாவது... காட்டாமையாவது... எங்களுக்கு எடுத்தும் பழக்கமில்லை... கொடுத்தும் பழக்கமில்லை.'

'அது ஒங்க ஊர்ல... ஆனால் எங்க ஊர்ல பொண்ணு எடுக்கவங்களுஞ் சரி... கொடுக்கவங்களுஞ் சரி... நாட்டாமைக்கு... ரெண்டே முக்கால் ரூவா... அதுதான் ரெண்டு ரூபாய் எழுபத்தஞ்சு பைசாவும்... மூணு தேங்காயும் ஒரு எலுமிச்சம் பழமும், வெத்தில பாக்கோட கப்பமா கட்டணும்.'

'முடியாத காரியம்'

'தப்பா நினைக்கப்படாது... ஒங்ககிட்ட மட்டும் இல்ல... எல்லார்கிட்டயும் இப்படி கப்பம் வாங்குறோம்...'

'கப்ப' முன்னு சொல்லாம பிச்சன்னு கேளுங்க... தாறோம்.'

'வார்த்தய அனாவசியமா விடாதிய... அப்புறம் வருத்தப்படுவிய.'

'அதத்தான் நானும் சொல்லுறேன்... எங்களுக்கு பிச்ச போட்டுத்தான் வழக்கம்... கப்பம் கட்டி பழக்கமில்ல.'

'வார்த்த தடிக்குது... நல்லா இல்ல...'

'பின்ன என்னய்யா... நாடு சுதந்திரமடஞ்சு முப்பது வருஷமாவுது. இன்னும்... கப்பம் கப்பமுன்னு பேசுனா என்னய்யா அர்த்தம்?'

'நீங்க கப்பம் கட்டாம...'

'சும்மா சொல்லும்... கல்யாணம் பண்ண முடியாதுன்னு சொல்லப்போறீரு... அவ்வளவுதானே? ஏய்... சங்கர்... எழுந்திருடா... நாம கப்பங் கட்டி கல்யாணம் பண்ணுற அளவுக்கு மானங் கெட்டவங்க இல்ல'

'ஒம்ம பையன் போயிட்டா ஒண்ணும் கெட்டுப் போயிடாது... ஆயிரம் பையங்க இருக்காங்க...'

'ஆயிரம் பையங்க என்ன, அய்யாயிரம் பையங்களுக்கு ஒரே சமயத்துல வேணுமுன்னாலும் மவராசனா பொண்ண கட்டி வையுங்க... ஏய் சங்கர்... இன்னுமாடா... பொண்ண இடிச்சிக்கிட்டு இருக்க? கீழ இறங்குல.'

மாப்பிள்ளை, சுப்பிரமணி உடம்பை நெளித்தான். பெண்ணைப் பெற்றவர், கைகளை நெறித்தார். ஊரைப் பகைக்க முடியாது. கல்யாணக் கூட்டத்தில் ஒருபகுதியினர், கப்பம் கட்டியே தீர வேண்டும் என்பதுபோல் 'எங்க ஊர்ல வாரவங்க...

கப்பம் கட்டித்தான் ஆகணும்... கட்டித்தான் ஆகணும்...' என்றார்கள். என்ன செய்யலாம்... எப்படி சமாளிக்கலாம்... பெண்ணின் அம்மா கிட்டத்தட்ட அழுதுவிட்டாள். கப்பம் கட்டுங்கள் என்று மிஞ்சவும் முடியாது, கப்பம் வாங்காதீர்கள் என்று கெஞ்சவும் முடியாது.

'ஏய் சுப்பிரமணி... இதுக்கு முன்னால நீ பொண்ண பார்த்தது இல்லியா? நம்மள அடிம மாதுரி கப்பம் கட்டச் சொல்ற ஊர்ல நமக்கென்னடா வேல...? சீ... கீழ இறங்கு'

மாப்பிள்ளைக்கு, அதற்குமேல் தாக்குப் பிடிக்க முடியவில்லை. மல்லிகாவைப் பார்த்துவிட்டு, தயங்கி எழுந்தான். மல்லிகா 'என்னைவிட்டு விட்டுப் போகாதீர்கள்' என்பதுமாதிரி அவனை பரிதாபமாகப் பார்த்தாள். அதற்குள், அவளின் கன்னப் பள்ளத்தாக்கில் அருவி நீர் பாய்ந்தது.

மாப்பிள்ளை தயங்கித் தயங்கி, மயங்கி மயங்கி மணவறையை விட்டு நகரப் போனான்.

மல்லிகா, கூட்டத்தைப் பார்த்தாள். நாட்டாண்மைக்கு கப்பம்கட்டவேண்டும் என்று வாதாடும் அந்த மீசைக்காரன், இதே இந்த மாப்பிள்ளை, தன் அண்ணன் மகளுக்குக் கிடைப்பதற்காக நடையாய் நடந்தவன்... தனக்கு வந்த ஒரு சில வரன்களைக்கூட கலைத்து விட்டவன். இப்போது சாமார்த்தியமாக வம்பை வளர்த்து, ஊராரையும் தன் பக்கம் சேர்த்துக்கொண்டு, தன் வாழ்வையே குலைக்கப் பார்க்கிறான்.

அவன் குலைக்கிறானோ, இல்லையோ, இப்போது ஊர்மானத்தில் தங்கள் மானத்தை ஐக்கியப் படுத்தியது போல், இங்கே நிற்கும் இதே இந்த மனிதர்கள், நாளைக்கு, இந்த நிகழ்ச்சியையே மறந்துவிடுவார்கள். அவள்தான், காலமெல்லாம் இதைக் கலக்கத்தோடு நினைக்க வேண்டியது வரும். அதோடு 'ராசியில்லாதவள்.... பாதி கல்யாணம் முடிஞ்சு... மீதிக் கல்யாணம் முடியாமப் போனவள்' என்று இதே இந்த வாய்கள் பேசும். இதே

பந்தலில் இன்னொரு 'திடீர்' மாப்பிள்ளையை, தன்னருகே நினைத்துப் பார்க்கவே கூச்சமாக இருக்கு. அந்த திடீர் மாப்பிள்ளையே... நாளைக்கு, தன்னை ரட்சித்தவன்போல் அலட்டிக் கொள்ளலாம். இழவுக்கு வரும் கூட்டம், என்றும் தாலி அறுப்பதில்லை. பிணத்தைத் தூக்கிப்போகிறவர்கள் பிணத்தோடு எரிவதில்லை.

ஒரு பெண்ணுக்கு, தன் எதிர்காலத்தைத் தானே நிச்சயிக்கும் தகுதியும், தைரியமும் இருக்க வேண்டும். ஒரு நாளைய ஆரவாரத்திற்காக, ஒரு பெண் தன் வாழ்க்கையை, சம்பந்தப்படாத பிறர் தீர்மானிக்க அனுமதிக்கலாகாது. ஊர்மானத்திற்காக ஒரு பெண்ணின் மானம் பிரச்னையாகக் கூடாது... அதோடு இந்தக் காலத்தில் கப்பம் என்பது ஆணவமான பேச்சு. அதற்கு இசையாத அந்த ஊர்க்காரர்களின் நடத்தை நியாயமே'. அதோட... ஒரு தடவை... மனதில் கணவனாய் நிச்சயிக்கப்பட்டவனை... பிரிவதென்பது...

இதற்குள், மாப்பிள்ளை மணமேடையில் இருந்து குதித்து, மெள்ள மெள்ளவும், பின்னர் வேக வேகமாகவும் நடந்து தனது கூட்டத்தில் சேர்ந்து கொள்ள, அந்த கூட்டமும், வீட்டைவிட்டு நகர்ந்த போது.

மல்லிகா, தான் என்ன செய்கிறோம் என்று புரியாமல், மாப்பிள்ளை மாதிரியே மணமேடையில் இருந்து குதித்து, அவனை போலவே நடந்து அந்த கூட்டத்தில் ஒருத்தியாய் சேர்ந்தாள். ஆபத்து காலத்தில் வெட்கம் ஆபத்தானது என்பதை ஏதோ ஒரு உள்ளுணர்வு தோன்றி அவள் வாய் பூட்டை உடைக்கவில்லை என்றாலும், கால் சங்கிலியை கத்திரித்து இருக்க வேண்டும்.

எல்லோரும் பிரமித்தார்கள். கூட்டம் இரண்டு பட்டது மாப்பிள்ளை கூட்டம்... பெண் கூட்டம் என்றில்லாமல், நாட்டாமை கூட்டம், நாட்டாமை எதிர்ப்புக் கூட்டம் என்று பிரிவுபட்டது. பெண் வீட்டு பங்காளிகள் இப்போது உரத்து கூரலிட்டார்கள்.

'நாட்டுக்கு சுதந்திரம் வந்தாச்சு... நாங்களும் ஓட்டு போட்டாச்சு... அப்பேர்ப்பட்ட சமீந்தாரே எங்க காதுல விழுத குறையா ஓட்டு கேட்டாச்சி... இருக்கிற சொத்த வித்து வித்து திங்கிறதும் தெத்தி பிழைக்குதுமா இருக்கிற இவரு நாட்டாமை இல்ல... ஆம போற வீடு மாதிரி... மாப்பிள்ளை! மேடையில ஏறும்...

மாப்பிள்ளை வேகமாக ஓடிப்போய் மணமேடையில், ஒட்டிக் கொண்டான். அந்த மேடை நோக்கி ஓடப் போன மல்லிகாவை, அச்சம், மடம், நாணம் போன்ற இத்தியாதிகளை கருதியோ என்னமோ, சில பெண்கள் அவளை கைதாங்கலாக பிடித்துக் கொண்டு மேடையில் ஏற்றினார்கள்.

நாவிதரின் ஆணைப்படி, மாப்பிள்ளை தாம்பாளத் தட்டில் இருந்த மாங்கல்யத்தை மல்லிகாவின் கழுத்தில் கட்டியபோது, மேளக்காரர்கள் யாரும் சொல்லாமலே வாசித்தார்கள். நாதஸ்வரங்கள் கம்பீரமாக ஒலித்தன. கூட்டத்தில் பெரும்பான்மையினர், கையிலிருந்த பிடியரிசியை எடுத்து ஆனந்தமாக வீசினார்கள். கூட்டத்தில் ஒரு பகுதி-ஒரே ஒரு சின்னஞ்சிறு பகுதிதான் கோபமாக வெளியேறியது.

அண்ணா பொங்கல் மலர் - 1980

❖

# நிர்வாகிகள்

ஆதிகேசவன், ஜாயின்ட் செகரட்டரி அந்தஸ்துள்ள அதிகாரி இல்லை. ஆகையால் அவர் அறையில் ஏ.சி. இல்லை. அதேசமயம், அவர், காமா-சோமா குட்டி அதிகாரியுமல்ல. இதனால் அந்த அறையில் வெறும் மின்விசிறிகள் மட்டும் சுழலவில்லை. ஏர்கூலரும், அவற்றோடு சேர்ந்து சத்தம் போட்டது. அவர் வயிற்றை மறைத்து, ஆசாமியை பாஸ்போர்ட் சைஸில் உருவமாகக் காட்டுவதுபோல், அரைவட்ட மேஜை பளபளத்தது. அதன்மேல இண்டர்காம், இண்டர்னல் டெலிபோன், எக்ஸ்டர்னல் டெலிபோன், பர்சனல் டெலிபோன், அவுட் கோயிங் டிரேய், இன்கமிங் டிரேய், காளான் வடிவிலான டேபிள் லைட், மத்தள வடிவிலான பென் ஸ்டாண்ட், எமர்ஜென்ஸி லைட், டேபிள் பேன், டிரான்ஸ்ஸிஸ்டர் செட், ஸ்கிருப்பிலிங் பேடு போன்ற தவிர்க்கக்கூடிய பொருட்கள் அனைத்தும் விதவிதமான நிறங்களில் மின்னின. தரையே இல்லாதது போன்ற கம்பள விரிப்பு. சுவரே இல்லாதது போன்ற வால் பேப்பர்.

இந்தப் பின்னணியில், தலையே இல்லாதவர் போல், கூட்டு இயக்குனர் ஆதிகேசவன், தலையை, கழுத்தை நோக்கி மடித்துப் போட்டு, ஒரு பைலை கொக்கு மாதிரி கண்களால் கொத்திக் கொண்டிருந்தார். அதைப் படித்தாரா பார்த்தாரா என்று சொல்லுவதற்கு இல்லை. 55 வயது மனிதர். எப்போதுமே சுழித்திருக்கும் முகம். உயர்ந்திருக்கும் புருவங்கள். சபாரி ஆடைக்குள் சலிப்படைந்த உடல்; அந்தச் சுழல் நாற்காலியில் கால்மேல் கால் போட்டு, அந்தப் பைலை, அவர் கவனித்துக் கொண்டிருந்த போது

டெலிபோன் மணி அடித்தது. எந்த டெலிபோன் அடிக்கிறது என்பதைக் கண்டறிய, பூனை கருவாட்டைப் பார்ப்பது போல, மோப்பமாகப் பார்த்துவிட்டு, ஒன்றை லபக்கென்று பிடித்துக் கொண்டார். ஆரம்பத்தில் அலட்சியமாக 'யெஸ்' என்று, எதிர்முனையில் ஏதோ ஒருவர் பிச்சைக் கேட்பது போலவும், இவர் என்ன வேண்டும் என்று பதிலுக்குக் கேட்பது போலவும், பேசினார். பிறகு அலறிப் புடைத்து எழுந்தார். தடுமாறியபடியே பேனாவை எடுத்து, ஒரு தாள்மேல் குத்தியபடியே கத்தினார். அந்தக் கத்தல் தில்லிக்கு டெலிபோன் இல்லாமல் கூட கேட்டிருக்கும்.

"எஸ்... ஸார்.... நோ ஸார்... எஸ்... எஸ்... சார்... வாட் சார்? ஈவினிங் சார்... ஓ.கே... ஸார்... அடடே... நீங்க தமிழ் ஆளா... என்ன? நீங்க டைரெக்டர் இல்லையா? பி.ஏ.வா... அதுக்கென்ன?... அவசர விவகாரமா வாராரா?... உங்க பேரு?... மிஸ்டர் ராமதுரையா? ஸார்..... என்னைப்பற்றி கொஞ்சம் நல்லா சொல்லி வைங்கோ... நான் நல்லவனாக்கும்... நான் ஒரு... ஹலோ... ஹலோ... என்ன? பறந்து வாராரா... வரட்டும்... அப்புறம் என்னைப் பற்றி..."

டெலிபோன் கட்டாகிவிட்டது. அது தானாய்க் கட்டானதா, அல்லது ஆதிகேசவனின் சுய விளம்பரம் தாங்க முடியாமல் 'பி.ஏ.' ராமதுரையே கட்டடித்து விட்டாரா என்று தெரியவில்லை. இது பற்றித் தாமும் யோசிப்பது போல், ஆதிகேசவன் நாற்காலியில் உட்காரமலேயே, காலைத் தூக்கி நின்றார்.... சே.. என்னைப் பற்றி தப்பா நினைச்சிருப்பானோ? யாசகம் கேட்டதா எண்ணியிருப்பானோ. டைரெக்டர் கிட்ட நான் காக்கான்னு அவரு காதில ஊதி என்னை இங்கே இருந்து ஊதித் தள்ளிவிடுவானோ...? முன்ன பின்ன தெரியாத இந்த ராமதுரையிடம் அப்படிக் கெஞ்சியிருக்கக் கூடாது. ஸாருன்னு சொல்லியிருக்கக்கூடாது...."

ஆதிகேசவன், தன்னை வேறுவிதமாக அடையாளப்படுத்திக் கொள்ள எண்ணி, டெலிபோனை சுழற்றிச் சுழற்றி, கடைசியில் வெற்றி பெற்றார்.

"ஹலோ... யாரு? ராமதுரையா? நான்தான்... அதான் ஆதிகேசவன்... சாயின்ட் டைரெக்டர்... அப்போ டைரெக்டர், எப்ப மெட்ராசிலேருந்து புறப்படுவார்? என்ன விஷயமா வாராரு? ஓ...கே... சொல்ல வேண்டாம்... ஆனா... நான் யாருக்கும் பயப்படத் தேவையில்லை. ஏன்னா... நான்... நெருப்புன்னா நெருப்பு... அடங்காத நெருப்பு... ஸ்ரைட் பாரவேர்டு... ஆமாம்.... இம்பார்சியல்... டிசிசிவ்... ஹலோ... ஹலோ..."

டெலிபோன், இப்போது தில்லி முனையில் மூஞ்சில் அடித்தாற்போல் வைக்கப்பட்டது, ஆதிகேசவனுக்கு நன்றாகவே உறைத்தது. அதனால் உடம்பெல்லாம் வியர்த்தது. கைகால்கள் அதிர்ந்தன. ராமதுரை பி.ஏ.தான்... "நம்ம ரேங்குக்கு ரொம்ப ரொம்ப கீழேதான்... ஆனா... ரைட்டான எடத்துல ராங்க் செய்யக்கூடிய நிலையில் இருப்பவன்... அவனை, மாமா மச்சான் மாதிரி பேரமட்டும் மொட்டையா சொல்லியிருக்கப்படாது... புது டைரெக்டர்... அவருகிட்ட என்ன சொல்லப் போறானோ... சே... அப்படி எல்லாம் சொல்ல மாட்டான்... ஏன்னா அவனும் தமிழன். அய்யய்யோ... அதனால்தான் சொல்லுவான்... தமிழனுக்குத் தமிழன் இந்த உபகாரமாவது செய்யாமல் இருப்பானா?..."

ஆதிகேசவனால், மேற்கொண்டு சிந்திக்க முடியவில்லை. அன்றிரவே வரும் டைரெக்டருக்கு ஆவன செய்யணுமே?

ஆதிகேசவன், பஸ்ஸரை அழுத்தினார். அந்தச் சத்தம் கேட்டு, 'கிளாஸ் போர்' நாராயணன், அலறி அடித்து கைகால்களை பாவலாக் காட்டினானே தவிர, அவன் கால்கள் என்னமோ, மெல்லத்தான் நகர்ந்தன.

"இந்தாப்பா, நாராயணா! உதவி இயக்குநருங்க, ஏ.ஓ.., என்ஜினியர் எல்லோரையும் என் ரூமுக்கு உடனே வரச்சொல்லு. ஓடிப்போய் சொல். ஏய்யா பாராக்குப் பார்க்கிறே... டைரெக்டர் வர்ராரு. ஓடிப் போ, ஓடிப்போ"

டைரெக்டர் என்னமோ, அந்த அலுவலக வாசலுக்குள் வந்தது போல், நினைத்த கிளாஸ்போர் நாராயணன், நிஜமாகவே ஓடினான். (நாராயண் இளைஞன், அதனால் 'இன்னில்' அறிமுகமாகிறான்) ஆதிகேசவனிடமிருந்து கழற்றிக் கொள்ளும் வகையிலும் ஓடினான். ஆனால், ஆதிகேசவன் அவனை மட்டும் நம்பவில்லை. இன்டர்னல் டெலிபோனில் எல்லோரிடமும் சொல்லிவிட்டு, அறையில் குறுக்கும் நெடுக்குமாக நடந்தார். இன்னும் அவர்கள் வரவில்லையே என்று, கதவைத்திறந்து எட்டிப் பார்த்தார். பிறகு, அவரே வெளியில் ஓடி, ஒவ்வொருவரின் அறைமுன்னால் நின்று, கிராமத்தில் துஷ்டிக்குச் சொல்வதுபோல, டைரெக்டர் வருகையைச் சொன்னார்.

எப்படியோ, அனைத்து மேனேஜ்மெண்ட் கேடர் அதிகாரிகளும் வந்து விட்டார்கள். அந்த அறையின் பாதி இடத்தை ஆக்கிரமித்த சோபா செட்டில் உட்கார்ந்தார்கள். ஆதிகேசவன், ஒரு துண்டு சோபா நாற்காலியில் சவாரி போட்டார். எதிரே இருந்த நீண்ட சோபாவில் அசிஸ்டெண்ட் டைரெக்டர் இளங்கோவும், இன்னொரு அசிஸ்டண்ட் டைரெக்டர் மைதிலியும் கலியாண ஜோடி போல் உட்கார்ந்திருந்தார்கள். இருவரும் யூனியன் சர்வீஸ் கமிஷன் மூலம் நியமனமான டைரெக்ட் ரெக்ரூட் மெண்டகள்... முஸௌரி டிரையினிங்ல ஒன்றாகச் சேர்ந்தவர்களாம். இந்த இருவரும், மற்றொரு அசிஸ்டென்ட் டைரெக்டர் அருளப்பனை இளக்காரமாகப் பார்த்தார்கள். கிளார்க்காய் சேர்ந்து இந்த ஐம்பத்தியெழுறை வயதில் அசிஸ்டென்ட் டைரெக்டரான மனிதர். ஆப்டர் ஆல் 'புரோமோட்டிவ்'.

அந்த அருளப்பனோ, இந்த இருவரையும் கோபத்தோடு பார்த்தார். 'காதலிக்கத் தெரியுது... ரூல்ஸ் ரெகுலேஷன்தான் தெரியல. தெரிஞ்சுக்கவும் விரும்பல... ஆனாலும், பயபுள்ளிக நல்லாத்தான் இருக்கு... அவனுக்கு உருளைக்கிழங்கு மாதிரி உடம்புன்னா, இவளுக்கு தக்காளி மாதிரி வடிவம்... என் காலத்துல இப்படி ஒரு சங்கதி எனக்குக் கிடைக்கலியே.'

கூட்டு இயக்குனர் ஆதிகேசவன், எல்லோரையும் கூலாகப் பார்த்துவிட்டுப் பேசினார்... ஏலம் போட்டு பேசுவது போல் தகவல் சொன்னார்...

“டைரெக்டர் வர்ராரு... இன்னிக்கு வர்ராரு... நைட்ல வர்ராரு...”

“எதுக்காக வாராராம்?”

“அதெல்லாம் கான்பிடன்சியல்”

“அதாவது உங்களுக்குத் தெரியாதுன்னு சொல்றீங்களா?”

மைதிலி, அப்படிக் கேட்டுவிட்டு சிரித்தாள். பின்னர், அந்த சிரிப்பு புன்னகையாக, இளங்கோவின் காதைக் கடித்தாள். அவனும் பதிலுக்கு கிசுகிசுத்தான. “ஒண்ணு கிடக்க ஒண்ணு பேசாதே. இந்த கிழம் பொல்லாதது. நீயும் நானும் புரோபேஷன்ல இருக்கோம். ‘இது’ ரிப்போர்ட் சரியா எழுதினால்தான், நாம பர்மெனன்ட்டாக முடியும்.”

‘புரோமோட்டிவ்’ அருளபபன், கோபத்தை அடக்க முடியாமல், வெற்றிலையைத் துப்பும் சாக்கில் வெளியே போய்விட்டு வந்தார். ‘என்ன காதல் வேண்டிக் கிடக்கு.? அதுவும் இந்தச் சமயத்தில... நான் மட்டும் மைதிலி மாதிரி பேசியிருந்தா, இந்த ஆதிகேசவன் சும்மா இருந்திருப்பாரா? தாளிச்சிருக்க மாட்டார்,? நேரடி நியமன உதவி இயக்குநர்கள் என்றால், பாஸுக்குக் கூட பயம்... பொண்ணுன்னா பொட்டப் பயலுக்குக் கூட சகிப்புத்தன்மை... சே... சே... என் சர்வீசில இப்படி ஒரு...

வெற்றிலையைத் துப்பிவிட்டு உள்ளே வந்த அருளப்பனை ஆதிகேசவன் அதட்டினார்:

“கான்பரன்ஸ்ஸுக்கு வெற்றிலையோடு வரப்படாதுன்னு எத்தனவாட்டி சொல்றது மிஸ்டர்?”

அருளப்பன், சோர்ந்து போய், பொத்தென்று உட்கார்ந்தார். 'பாஸ் பார்க்கிற பார்வையே சரியில்லையே? ஒழுங்காக ரிட்டயர்டு ஆக விடமாட்டானா? ஏன் இந்த மைதிலியும் முகத்தில் ஈ ஆடாமா இருக்கா? ... 'ஊடவா'

ஆதிகேசவன், பொதுப்படையாகப் பேசினார்.

"டைரெக்டர் புதுசு. கொஞ்சம் அதட்டலானவருன்னு கேள்வி. எங்கே ரூம் புக் பண்ணலாம்?"

"ஸ்டேட் கவர்ன்மெண்ட் சேப்பாக் கெஸ்ட் ஹவுசில் செய்யலம் ஸார்."

"துறைமுக கெஸ்ட் ஹவுஸ் ஈசி ஸார்,"

"எப்.சி.ஐ. கெஸ்ட் ஹவுசையும் பார்க்கலாம் ஸார்"

"பெல் கெஸ்ட் ஹவுசும் இருக்கு ஸார். எதுன்னு நீங்கதான் சொல்லணும் சார்."

"எல்லா கெஸ்ட் ஹவுஸையும் புக் பண்ணிடலாம். டைரெக்டருக்கு எது பிடிக்குதோ அதுல...

'டைரெக்டர் ஒவ்வொரு கெஸ்ட் ஹவுசா பர்ாக்கிறதாய் இருந்தால், அவர் தூங்க முடியாது... பொழுது விடிஞ்சுடும்"

இப்படிச் சொன்ன, என்ஜினியரை ஏகாம்பரம், பொடிப் பொடியாய் பார்த்தார். ஏதோ கெஸ்டட் என்று உள்ளே விட்டால் ரொம்பதான் பேசுறான். உடனே, கான்ட்டிராக்டர் இவரிடம் எப்படி பயப்படுகிறாரோ, அப்படி இந்த என்ஜினியர் ஆதிகேசவனிடம் பயப்பட்டார். இப்படி சொன்னதற்காக, தண்ணி இல்லாதக் காட்டுக்கு மாற்றணும்னு எழுதிவிடுவாரோ?... சே... கான்பரன்ஸிலே வாயை திறக்க கூடாதுன்னு ஏன் என் புத்திக்கு உறைக்கல...'

இந்தச் சமயத்துல நிர்வாக அதிகாரியான 'ஏ.ஓ.,' ஒரு ஆட்சேபனையைக் கிளப்பினார். அதற்காகவே பிறந்த மனிதர்போல், அவர் மோவாயும் மூக்கும் கேள்விக்குறி வடிவத்தில் இருக்கும்.

"சேப்பாக் கவர்ன்மெண்ட் கெஸ்ட் ஹவுசில தங்கணுமுன்னா, டூர் வருகிற அதிகாரி ஸ்டேட் கவர்ன்மெண்ட் செகரட்டரி அந்தஸ்துல இருக்கணும்... நம்ம டைரெக்டர், டெபுடி செகரட்டரி ரேங்தான். அவருக்கு ரூம் கிடைக்காது. அதனால முயற்சி செய்யக்கூடாது."

சின்னஞ்சிறுசுகளான அசிஸ்டெண்ட் டைரெக்டர்களைப் பார்த்து ஒருவித தாழ்வு மனப்பான்மை கொள்ளும் புரமோட்டி அருளப்பன், இந்த் நிர்வாக அதிகாரியை பார்க்கும் போதெல்லாம் தன்னைப் பற்றியே கொஞ்சம் கொண்டாட்டமாக நினைப்பவர். ரகசியமாக இரண்டு வெற்றிலையில் சுண்ணாம்பைத் தடவினார். இந்த ஏ.ஓ.வை விடப்பாடாது. ஜி.பி.எப் அப்ளிகேஷனை எவ்வளவு நாளா வச்சிக்கிட்டு இருக்கான்?

"என்ன... ஏ.ஓ.சார்? எப்போ பார்த்தாலும் அப்ஜக்ஷன்தானா? இடையில இப்படி தும்மப்படாது. கெஸ்ட் ஹவுஸ் ஆபீசருக்கு நீங்க சொல்ற ரூல் தெரியாது. அவருக்கு டெலிபோன் செய்தே சொல்லிக் கொடுப்பீங்க போலிருக்கே? அந்த பப்ளிக் டிபார்ட்மெண்டல அண்டர் செகரட்டரியா இருக்கிற ஐ.ஏ.எஸ் கனகா, நம்ம மைதிலியோட முசௌரியில... டிரயினிங் படிச்சவள்... இவங்கள அனுப்பினா, ரிசர்வேஷன் சிலிப்பை கையோட வாங்கிட்டு வந்துடுவாங்க..."

மைதிலிக்கு மகிழ்ச்சி தாங்க முடியவில்லை. இந்த ஆதிகேசவ அசடுவிடம், நல்ல பெயரு வாங்குவதற்கு ஒரு சான்ஸ். புரபேஷன். புரோமோஷனாக ஒரு வாய்ப்பு... விடப்படாது. அந்த கனகா திமிரு பிடிச்சவள்தான். ஆனாலும், கையில காலிலே விழுந்து அந்த ஐ.ஏ.எஸ். திமிருக்கு சலாம் போட்டு, அனுமதி 'சிலிப்' வாங்கி ஆகணும்.

"எஸ் ஸார்... கனகா என்னோட பெஸ்ட் பிரண்ட் ஸார்... எதெற்கெடுத்தாலும் என்கிட்டதான் சந்தேகம் கேட்பாள்... நான் போய் ரிசர்வ் செய்திட்டு வரேன் சார்... எதுக்கும், மிஸ்டர் இளங்கோவனையும் என்னோட அனுப்புங்க சார்... அவருக்கும் அந்தக் கனகா டிரைனிங் மேட்."

அருளப்பன், தன்னையறியாமலே நாற்காலியில் உடம்பைச் சாய்த்து, பேசினார்-

"என்ன மேட்டோ இருந்துட்டு போகட்டும். நீ ஒருத்தி போதாதம்மா... அகாய சூரியாச்சே... மிஸ்டர் இளங்கோவிற்கு ஜே.டி., வேற ரெஸ்பான்சிபிலிட்டி கொடுப்பார். நீ மட்டும் போ... இந்த ஏ.ஓ. சொன்ன ரூல்ஸ்ல ஓடிச்சுப் போடறது மாதிரி ரிசர்வ் பண்ணிட்டு வந்துடு."

மைதிலி, தயங்கித் தயங்கிப் போனாள். இளங்கோவிற்கு, இருப்புக் கொள்ளவில்லை. காதலியைப் பிரித்த காதகனான அருளப்பனை கண் குத்திப் பார்த்தான். பிறகு அந்தக் கூட்டத்தில் ஏதாவது கேளாறு செய்ய வேண்டும் போல் இளங்கோவிற்கு தோன்றியது. செய்யவும் துவங்கினான்.

"சார்... சார்.... டைரெக்டர் எந்த பிளைட்ல வாரார்?"

"என்ன கேள்வி மிஸ்டர்? டில்லி பிளைட்தான்"

"டில்லியில் ரெண்டு பிளைட் இருக்கு... ஒன்று சென்னைக்கு நேரா வருது... இன்னொன்று ஹைதராபாத் வழியா வருது.. இதுல எந்த பிளைட்ல வருவாருன்னு தெரியுமா?"

"அடக் கடவுளே..."

இளங்கோ விடவில்லை.

"எனக்குத் தெரிஞ்சு புது டைரெக்டர் ஹரிசிங், ரயிலுல வரத்தான் ஆசைப்படுவாரு... எங்க முஸொரி டிரையினிங்கல

அவர் கிளாஸ் எடுக்கும்போது, கூடுமானவரை விமானப் பயணத்தை அவாய்டு செய்யுறதா, சொன்னாரு.

'நானே கேட்டேன்யா... அவர் பறந்து வரார்ருன்னு ராமதுரை சொன்னான். அதான் அவரோட பி.ஏ. சொன்னான்."

"பறந்து வரார்ருன்னு சொன்னதை, ஏன் பிளைட்டுன்னு எடுத்துக்கிறீங்க? அவசரம் அவசரமா வாராரு எங்கிற அர்த்தத்துல சொல்லி இருக்கலாமில்லயா?"

"அடப்பாவி.. அவன் தமிழ் ஆர்வத்துக்கு நானா அகப்பட்டேன்?"

ஆதிகேசவன் டெலிபோனை சுற்றோ சுற்றென்று சுற்றினார். தில்லி ராமதுரைக்கு டெலிபோன் காவடி எடுத்தார். லயன் கிடைக்கவில்லை.

இப்போது ஏ.ஓ., ஆடிட் அப்ஜக்‌ஷனுக்கு பதிலைக் கண்டுபிடித்தவர் போல், துள்ளிக் குதித்துப் பேசினார்.

"நம்ம போனுக்கு யாராவது கால் போட்டாலும், லயன் கிடைக்காது. கொஞ்சம் டெலிபோனை அப்படியே வையுங்க சார்..."

ஆதிகேசவன், டெலிபோனை வைக்கவும், அது மணி அடித்து முனங்கவும் சரியாக இருந்தது. ஒரு வேளை அது தில்லி காலோ என்று பயபக்தியுடன் எடுத்து, எரிந்து எரிந்து விழுந்தார்.

"நான் டில்லி லயன் கிடைக்கலேன்னு அவஸ்தைப் படறேன்.. உனக்கு, பாமாயில் கிடைக்கல என்கிறதா பெரிசாப் போச்சு... டெலிபோனை வை... என்ன... மிரட்டறே? வீட்டுக்கு வந்தா என்னடி பண்ணுவே... வைடி போனை..."

ஆதிகேசவன், டெலிபோனை வைக்காமல் காதுகொடுத்துக் கேட்டார். அவர் மட்டுமல்ல, அங்கேயிருந்த எல்லாரும்; அவர் மனைவி தர்மபத்தினி, கணவன் சொன்ன சொல்லைத் தட்டாதவர்.

ஆகையால், அவர் 'வைடி' என்று சொல்லிவிட்டதால், அவரை மட்டுமல்ல, அந்த ஆபீசில் அவளுக்குத் தெரிந்த மற்றவர்களையும் வைதாள், வைதாள் அப்படி வைதாள்.

ஆதிகேசவன், கூனிக்குறுகி டெலிபோனை வைத்தார். டில்லிக்குச் சுழற்றப் போனார்... டயல் சத்தமே கேட்கவில்லை. இளங்கோ விளக்கமளித்தான்.

"எதிர்முனையில் பேசினவங்க, டெலிபோனை ஏறுக்கு மாறா வைத்தால், வேற நம்பருக்கு பேச முடியாது சார்... மேடம் ஆதிகேசவன் போனை சரியா பொருத்தாமல் ஓரங்கட்டி வைத்திருப்பாங்க."

ஆதிகேசவன், குரங்கு, ஓணானைப் பிடித்துப் பார்ப்பது போல, டெலிபோனை எடுத்து டயலிங் சத்தம் வருகிறதா என்று கேட்டார். வரவேயில்லை. 'அய்யோ... பிளேனா... ரயிலா... தெரிஞ்சாகணுமே' என்று ஒரு எழுத்துக்கு ஒரு தடவை புலம்பியபடி, டெலிபோன் குமிழை எடுத்தார். ஆனாலும் மறுமுனையில் தர்மபத்தினி டெலி போனை சரியாக வைத்ததுபோல் தெரியவில்லை. எப்படியோ கால் மணிநேரத்திற்கு பிறகு டயல் சத்தம் கேட்டது. 'பி.ஏ.,' ராமதுரைக்கு போன் போட்டார். மணி அடித்தது. ஆனால் மகராஜன் இல்லை.

"டைரெக்டருடைய வீட்டுக்கு போன் போடுங்க சார்"

போட்டார். உடனே மணி அடித்தது. 'ஏஸ்...' என்ற குரலைக் கேட்டதும், ஆதிகேசவன் எழுந்தார். குழைந்து குழைந்து பேசினார்.

"ஹலோ சார்... எஸ் சார்... குட் ஈவினிங் சார்... நமஸ்தே சார்... ஐ யாம் சாயின்ட் டைரெக்டர் ஆதிகேசவன் சார்... குச்சி நையி சார்... அப்புறம் சார்... சாரி சார்... ஐ தாட் யு தமிழ் நோ சார்... ஐ யாம் நாட் தமிழ் வெறியன் சார்... பை தி பை சார்... ஆப் கா கமிங் ட்ரெயின் ஆர் பிளேன். கம்மிங் பை... ட்ரெயின்... தாங்க்யூ சார்... வெரி வெரி தாங்க்யூ சார்... என்ன யூ ர் நாட் டைரைக்டர் ஹிஸ் சன்..."

ஆதிகேசவன், அனைவரையும் பார்த்து பரிதாபமாக கருத்துரைத்தார்.

'இந்த காலத்துல பெரிய பொறுப்புல இருக்கிறவங்களோட மவனுகளும் மிரட்டுறாங்க. தப்பித் தவறி வாயில தமிழ் வந்ததுக்காக என்னை போய் தமிழ் வெறியரை இருக்கபடாது என்கிறான், அந்த பயல்;

'புரோமோட்டி' அருளப்பன், ஆதிகேசவனுக்கு, ஆறுதல் சொல்வாமல் கடுக்காய் கொடுத்தார்.

"ஆனா சார்... ஒரு வேள... இங்கிருந்து புறப்படறதை கம்மிங்னு சொல்லியிருக்கலாமே?"

"என்னய்யா சொல்றே?"

"எஸ் சார்... அங்கே இருந்து கம்மிங்னு டெலிபோன்ல சொன்னா, டில்லிக்கு கம்மிங்னு அர்த்தம். இங்கிருந்து கம்மிங்னா டில்லிக்கு கோயிங்க்னு அர்த்தம்... எனக்கென்னமோ டைரெக்டரு மகன், அவன் அப்பன் ரயிலில சென்னையிலிருந்து புறப்படறத சொல்லியிருப்பான். ராமதுரை ஏற்கனவே அவரு வருவதை உங்ககிட்ட சொல்லிட்ட அனுமானத்துல போகிறதை மட்டும் சொல்லியிருப்பான்."

ஆதிகேசவன் உச்சந்தலையில் இரண்டு கைகளையும் சேர்த்துக் கட்டினார். இளங்கோ ஒரு யோசனை சொன்னான்.

"டைரெக்டர் மகன் கிட்ட பழைபடியும் பேசுங்க சார்"

"அவ்வளவுதான்... அப்புறம், அவன் அப்பன வரவேற்க நானிருக்க மாட்டேன். பிள்ளைக்காரன் அவரு காதுல ஊதிடுவான். தற்செயலா தமிழ்ல பேசினதே தப்பாப் போச்சு... இந்த ஆசாமி மட்டும் காலிஸ்தான் ஆளாக இருக்க மாட்டான்னு என்ன நிச்சயம்?"

இளங்கோ, இடைமறித்தான்.

"சார்... இப்ப ஆக வேண்டிய வேலையை கவனிக்கலாம்..."

"ஓ,.. கே.. ரயில்வே ஸ்டேஷனுக்கு ஒரு குரூப் போகட்டும்.... ஏர் போர்ட்டுக்கு ஒரு குரூப் போகட்டும்... எங்கே வராரோ அங்கே பிக்கப் செய்யலாம்... அப்புறம் ஏ.ஓ! ஒங்களைத்தான். நாளைக்கு எல்லாரையும் ஆபீசுக்கு வழக்கமாக வர நேரத்தில் வரச் சொல்லுங்க..."

"நாளைக்கு ஹாலிடே சார். நல்ல டேயிலேயே வரமாட்டாங்க"

'டேய்' என்ற வார்த்தையை அழுத்தம் திருத்தமாய் சத்தம் போட்டு உச்சரித்த நிர்வாக அதிகாரியை நோக்கி ஆதிகேசவன், கண்டிப்புடன் சொன்னார்.

"நாம் மானேஜ்மெண்ட் கேடர்... நமக்காகத்தான் அவங்க இருக்காங்களே தவிர, அவங்களுக்காக நாம் இருக்கல. மானேஜ்மெண்ட் கேடர் எப்போ கூப்பிட்டாலும் வரணும். சரி, மிஸ்டர் ஏ.ஓ.! உங்க பட்டாளத்த கூப்பிடுங்க."

நிர்வாக அதிகாரி, டெலிபோனில் எதையோ பேசினார். பத்து நிமிடத்திற்குள் நான்கைந்து கிளார்க்குகள் பறந்து வந்தார்கள். அவர்கள் உட்கார இடம் இருந்தாலும், உட்காரவும் இல்லை. 'மானேஜ்மெண்ட் கேடர்' அவர்களை உட்காரவும் சொல்லவில்லை. இளங்கோ, அவர்களிடம் ஏதோ சொல்லப் போனான். பிறகு 'கிளாஸ் திரிகளிடம்' மேஸ்திரி மாதிரியான நிர்வாக அதிகாரிதான் பேச வேண்டுமே தவிர, அசிஸ்டன்ட் டைரெக்டர் பேசுவது கௌரவக்குறைவு என்பதுபோல் பேசமாமல் இருந்தான். எவரும், அந்த கிளார்க்குகளை முகம்பார்த்து நோக்கவில்லை. ஆதிகேசவன் கூட, ஏ.ஓ.வைப் பார்த்து, சொல்லுங்கள் என்பது மாதிரி கண்களால் சொன்னார். அந்த நிர்வாக அதிகாரியும், அவர்களுக்கு என்னவெல்லாமோ சொன்னார். ஒவ்வொருவருக்கும் ஒரு கெஸ்ட் அவுஸ் ரிசர்வ்

செய்ய பொறுப்பு ஒப்படைக்கப்பட்டது. சிலர் விமான நிலையத்திலும், ரயில் நிலையத்திலும எடுபிடிச் சாமான்களைத் தூக்குவதற்காக நிறுத்தி வைக்கப் பட்டார்கள்.

அப்படியும் இப்படியுமாய் ஒரு சினிமா பட நேரம் முடிந்தது. ஆதிகேசவன், எவரையும் வெளியே அனுப்பவில்லை. தேநீர் குடிக்கக்கூட விடவில்லை. அசிஸ்டெண்ட் டைரெக்டர் அருளப்பன், எஞ்ஜினியர் ராமு இரண்டு கிளார்க்குகள், இரண்டு கார்களில் சென்ட்ரல் ரயில் நிலையத்தை நோக்கி புறப்பட்டார்கள். ஆதிகசவன் இளங்கோவைப் பார்த்து போகலாமா என்பது போல், பார்த்தால் இளங்கோ ஏடாகோடமாய் பதிலளித்தான்.

"இந்த டெல்லி பிளைட்டே சரியான டைம்முக்கு வரதில்லை சார். எதுக்கும் டெலிபோனில பிளைட் டைமை செக்கப் செய்துட்டு போகலாம் சார்."

"நீ வேற... இங்கே இருக்கிறத அங்கே இருப்போம்.. டெலிபோன்ல அவன் ஏதாவது சொல்ல, நாம் அத நம்ப, கடைசில நம்ம நம்பி வர்ர டைரெக்டர் திரிசங்குவா ஆயிடுவார். நத்திங் டூயிங்... புறப்படு..."

சென்னை விமான நிலையத்திற்குள் வந்த ஆதிகேசனும், இளங்கோவும், மூன்று கிளார்க்குகளும், பிளைட் நேரம் காட்டிய தொலைக்காட்சிப் பெட்டியைப் பார்த்தார்கள். இரண்டு விமானங்களும், இரண்டு மணிநேரம் லேட். இளங்கோ ஆதிகேசவனை, குற்றவாளி போல் பார்த்துவிட்டு, பிறகு முகத்தை வேறுபுறமாக திருப்பிக் கொண்டான். அப்போது ஆதிகேசவனுக்கு ஒரு திடீர் எண்ணம்.

"இந்தாப்பா இளங்கோ... சென்ட்ரல்ல டிரயின் வர்ர சமயம் இது. நானும் ஏ.ஓ.வும் அங்கே போய் அவரைப் பார்த்துவிட்டு வந்துடுறோம். பிளைட்க்கு முன்னால வந்துடுவோம்..."

"சில சமயம் பிளேன் கொஞ்சம் சீக்கிரமாகவும் வரலாம் சார்"

"அதனால என்ன? உனக்குத்தான் டைரெக்டரு முகௌரியிலேயே தெரியுமே... அவரை வரவேற்று எப்படியோ பேசிக்கிட்டே இரு.. நாங்க வந்துடறோம். ஒருவேளை ரயிலில் வந்தால் ஏ.ஓ.வ. உன்கிட்ட அனுப்பி வைக்கிறேன்."

ஆதிகேசவன், நிர்வாக அதிகாரியுடன் ஓடிவிட்டார். இளங்கோ தேள்கடி திருடன் போல் விழித்தான். எப்படி இந்த டைரெக்டரை, பயணிகள் வெள்ளத்தில் கண்டுபிடிக்கிறது? முட்டாள்த்தனமா அவரைத் தெரியுமுன்னு வேற பெருமை அடிச்சுட்டேன்.

இளங்கோ, அங்குமிங்குமாக அலைந்தான். அந்த விமான நிலையத்தில் கம்பிகளில் பொருத்தப்பட்ட ஒரு பிளாஸ்டிக் நாற்காலியில் உட்கார்ந்தான். தொலைக்காட்சி அறிவிப்பைப் பார்த்தான். கண்ணாடிக்குள் வைக்கப்பட்ட நாகரீகப் பொருட்களைப் பார்த்தான். செக்யூரிட்டி ஆசாமிகளின் சட்டைப் பட்டன்களை எண்ணினான். அவர்களின் துப்பாக்கிகளுக்குள் எத்தனை ரவை இருக்கும் என்று கணக்குப் போட்டான். பிறகு, இதுவும் போததென்று சக அதிகாரியான மைதிலியிடம் பட்டும் படாமலும், தொட்டு தொடாமலும் கூத்தடித்த நிகழ்வுகளை கண்முன்னால் நடப்பதுபோல் மீண்டும் புதுப்பித்துக் கொண்டான்.

எப்படியோ ஒரு மணி நேரத்தை ஓட்டிய பிறகு தற்செயலாகத் திரும்பினால், எதிர்த்திசையில் எலிவேட்டரில், பொம்மைகள் போல் மனிதர்கள் ஆடாமல் அசையாமல் நின்றார்கள். பிறகு கீழ்நோக்கி நகர்ந்தார்கள். அடடே... தில்லி பிளைட் வந்துடுச்சே...

இளங்கோ, விமான தளத்திற்குள் சுழன்று சுழன்று செல்லும் கன்வேயர் பெல்ட்டில் பெட்டிகளை எடுக்கப் போன மனிதர்களையும், கையில் பெட்டிகளை வைத்துக் கொண்டு

நேராய் வாசலுக்குப் போனவர்களையும் விட்டுவிட்டுப் பார்த்தான். இந்த டைரெக்டர் எப்படி இருப்பான்? சர்தார்ஜியா? இல்ல பஞ்சாபியா? இல்ல ராஜஸ்தானியா? கருப்பா, சிவப்பா?

இளங்கோ, ஒவ்வொரு பயணியாக உற்றுப் பார்த்தான். மாலை போட்டு வரவேற்கப் பட்டவர்களையும், கட்டித் தழுவி எதிர்கொண்டு அழைத்தவர்களையும் விட்டுவிட்டு, 'பே' என்று தனியாக யாரும் நிற்கிறார்களா என்று பார்த்தான். ஒரு 'பேயிடம்' போய் 'ஆர் யூ ஹரி சிங்?" என்றான். அவர் முறைத்த முறைப்பில் வேறுபக்கம் போனான். எந்தப் 'பேயும்' அங்கே இல்லை. ஒரு வேளை வெளியே போய் ஹரிசிங் நிற்கலாம் என்று ஓடினான், ஓடினான். விமான வழி வாசல் ஓரத்திற்கே ஓடினான்.

இதற்குள் இன்னொரு சத்தம், திரும்பிப் பார்த்தால், இன்னொரு தில்லி விமானம். எலிவேட்டரில் பழைய பயணிகளே, கீழ்நோக்கிப் போய் மேல் நோக்கி வருவதுபோல் இருந்தது. ஒரே மாதிரியான சர்தார்ஜிகள். ஒரே மாதிரியான பைஜாமாக்கள். பொதுப்படையான புடவைகள். 'இங்கிலீஸ் கலர்' பெட்டிகள்.

இளங்கோ மீண்டும் அவர்களைச் சல்லடை போட்டான். எவரும் தனித்து நிற்கவில்லை. அங்குமிங்கும் பார்க்கவில்லை. இளங்கோ பயந்து போனான். ஆனாலும் லேசாக நிம்மதி. ஆசாமி, ரயிலில்தான் வந்திருப்பார். ஆதிகேசவன் அவரைப் பிடித்திருப்பார். எனக்கு வேலை மிச்சம்.

இளங்கோ, கால்மணிநேரம் இளைப்பாறுகிறவன் போல், கால் மேல் கால் போட்டு, கச்சிதமாக இருந்தான். அப்போது, ஆதிகேசவன், நிர்வாக அதிகாரியுடனும், மூன்று கிளார்க்குகளுடனும் ஓடோடி வந்தார். வரும்போதே பேசிக் கொண்டு வந்தார். "இளங்கோ... இளங்கோ... டைரெக்டர எங்கேப்பா வச்சிருக்கே? அதிக நேரமா காத்திருக்காரோ?"

இளங்கோ ஆதிகேசவனை பார்க்க முடியாமல் பார்த்தான். பிறகு தட்டுத்தடுமாறி சமாளித்தான்.

"இங்க வர்ல சார்... அங்கேதான் வந்திருப்பாரு..."

"ஏன் மிஸ்டர்! உனக்கு பதவிக்குரிய திறமை இல்லியே. அங்க வந்திருந்தால், நான் எதுக்கு இங்கே வரேன்? நெசமாவே உனக்கு டைரெக்டர் நேரடியா தெரியுமா, இல்ல புளுகுனியா? அய்ய்யய்யோ... மோசம் போயிட்டேனே. இந்த இளங்கோவால மோசம் போயிட்டேனே. இந்த ஏ.ஓ. அப்பவே மறிக்கிறது மாதிரி அபசகுனமா பேசினார்... அது பலிச்சுட்டே... மோசம் போயிட்டேனே... மோசமாய் போயிட்டேனே.."

ஆதிகேசவன், அலறும் ஓசைக்கு பின்பாட்டுப் பாடுவதுபோல், எல்லோரும் இக்கன்னா போட்டார்கள். ஆதிகேசவனுக்கு டைரெக்டர் என்ன செய்து விடுவாரோ என்று பயம். இவர்களுக்கு ஆதிகேசவன் என்ன செய்திடுவாரோன்னு பயம். இந்தச் சமயத்தில் மைதிலி வந்தாள். கையில ஒரு செவ்வகக் காகிதத்தை ஆட்டியபடியே சிலுக்கி மினுக்கி வந்தாள்.

"சக்சஸ் சார் சக்க்சஸ... ரிசர்வேஷன் கிடைச்சுடுத்து... ஏ.ஓ. சொன்னது மாதிரி நம்ம டைரெக்டருக்கு கெஸ்ட் ஹவுசில தங்க... அந்தஸ்து இல்ல... ஆனாலும் நான் வாங்கிட்டேன..."

"இந்தாம்மா... உன் பெருமைய அப்புறம் வச்சிக்கோ... இல்லன்னா நீ போய் தங்கிக்கோ."

மைதிலி ஒன்றும் புரியாமல் விழித்தபோது, அவள் விழியோடு விழிவிட்ட இளங்கோ, ஏதோ ரகசியமாகச் சொன்னான். இந்தச் சமயத்தில் எடுபிடி ஆட்கள் மாதிரி நின்ற கிளார்க்குகளில் ஒரு துடிப்பான இளைஞன் தடிப்பாகக் கேட்டான். யூனியன் லீடர்... அவர்களுக்கு கேட்கும்படி தனது சகாக்களிடம் ஒரு சொற்பொழிவையே நிகழ்த்தினான்.

"டைரெக்டரும் ஒரு மனுசன்தான். அவர் வராருங்கிற எக்சைட்மென்டல நடந்ததினால ஏற்பட்ட விவகாரம் இது. ரயில்வே ஸ்டேஷன்லேயும் ஏர்போர்டிலேயும் 'மிஸ்டர் ஹரி சிங்...

வி ஆர் ஹியர்"... அப்படின்னு ஒரு அட்டையை வச்சுட்டு இருந்தால், இந்த வம்பே வந்திருக்காது. மேலதிகாரியைப் பார்க்கும் போதும், அவரை ஒரு மனுஷனா நினைச்சுப் பேசியிருந்தால், இப்படி வந்திருக்காது... தெய்வமா நினைக்கிறதாலே ஏற்பட்ட கோளாறு... இப்ப 'அந்த தெய்வம் என்னச் செய்யப் போகுதோ... எனக்கென்னப்பா வம்பு?... நாட்டுக்கு ஜனநாயகம் வந்தாலும் நிர்வாகத்துக்கு இன்னும் வர்ல"

ஆதிகேசவன் தலைமையில் நின்ற அந்த மானேஜ்மெண்ட் கேடர், சொற்பொழிவாளனை நேருக்கு நேராகப் பார்க்கவில்லை. "ஆப்படர் ஆல் அவன் ஒரு கிளாஸ் திரி ஊழியன், நாமலோ கெஜட்டட்: அவன்கிட்ட என்ன பேச்சு?"

வாசுகி - 1993

❖

# கதைக்க முடியாத கதை

அந்த மாலை நேரம், குரங்குகை மாலையாக கசங்கிக் கொண்டிருந்தது.

குமுதினியின் அறைக்குள் ஒவ்வொருத்தியாக வந்து உட்கார்ந்தார்கள். கல்லூரியில் பல்வேறு பாடப்பிரிவுகள் இருப்பதுபோல் அந்த மாணவிகளும், பல்வேறு வண்ணத் தோரணங்களாய் வந்தார்கள். ஒரே கூட்டம். அந்த மகளிர் கல்லூரி விடுதியிலும் ஒரு தொலைக்காட்சிப் பெட்டி இருந்தது. ஆனால், அது ஓட்டை; உடைசல். குமுதினியிடமோ அழகான வண்ணப்பெட்டி இருந்தது.

குமுதினி சிரித்தபடி, அத்தனை பெண்களையும் வரவேற்பது போல், இருக்கைகளை நகர்த்திப் போட்டாள். அந்த அறை, திரையரங்காகியது. வசதியாக உட்கார்ந்திருந்த ஒரு வெடிவால் தாவணி, "குமு! கதவைச் சாத்தட்டுமா? இதுக்கு மேல் கூ:ட்டம் தாங்காதுடா" என்றாள்.

குமுதினி சிரித்தபடியே சொன்னாள்:

"அப்படிக் கதவைச் சாத்துறதாய் இருந்தால், முதல்ல, நான்தான் அறைக்கு வெளியே நிற்பேன்."

அப்போது வாசலுக்குள் நுழைந்த தமிழ்ப் பட்டப்படிப்பு இரண்டாவது ஆண்டுக்காரி ஒருத்தி, வெடிவால் மங்கையைச் செல்லமாகவும், சீண்டுவது போலவும் கேட்டாள்.

"இடுவார் பிச்சையைக் கெடுவார், கெடுப்பாராம். ஒனக்கென்ன வந்திருக்கு?"

"ஏய், வாயை அடக்கிப் பேசுடி."

'சரி, நீ கெடுவாளாயே இருந்துட்டு போ...

இரண்டு பெண்களும், ஒருவரை ஒருவர் சக்களத்திகள் மாதிரி பார்த்தபோது, அரசி, ஆண்டாள், மல்லிகா, செண்பகம், பாமா, வடிவு, விமலா, கமலா, கஸ்தூரி ஆகிய மற்றப் பெண்கள், அவர்களையே தொலைக்காட்சிப் பிம்பங்களாய் நினைத்து ரசித்தார்கள். குமுதினி, சண்டைக் கோழிகளை அமைதிப்படுத்தினாள்.

"ஏன் இப்படிக் 'கதைக்கிறீங்க?' இங்கே யாரும் யாருக்கும் பிச்சை போடல. நம்மோட பேச்சுக்கள் எல்லாம் காகிதத் தோட்டாக்கள்தான். ஆனாலும், அந்தக் காதிகம் அட்டைக் காகிதமாய் அழுத்தமாய் ஆகிடக்கூடாது."

எல்லாப் பெண்களும், அவளை அதிசயித்துப் பார்த்தார்கள். பொருளாதாரப் பட்டப் படிப்பில் இறுதியாண்டு. ஏதோ உச்சியில் இருந்து, சுனை நீர் உள்ளூறக் கொட்டிக் கொண்டிருப்பது போன்ற குளுமையான முகம். சிவப்பும் கருப்பும் சந்தித்து, தங்களது 'சந்ததி' நிறத்தைப் பரீட்சார்த்த ரீதியில் உருவாக்கிய கருஞ்சிவப்பு. உடைமேல் உடை வைத்ததுபோல் இருந்த பல பெண்களுக்கு மத்தியில், உடைக்குள், உடலே தெரியாமல் இருப்பவள். அந்தப் பெண்கள், அதற்காக அவளை அதிசயித்து நோக்கவில்லை. அவள் அழகால் ஏற்படும் இயல்பான இலைமறை காய்மறைவுப் பொறாமையையும் மீறிய அன்புப் பார்வை. சூது என்பதே இனிமேல் சொல்லித்தான் தெரிய வேண்டும் என்பதுபோல், பேசும் பேச்சு; வாயில் சென்னைத் தமிழைச் சின்னதாக்கும் இலங்கைத் தமிழ். அவளையே, சொல்லி வைத்ததுப் போல் பார்த்த அத்தனை பெண்களும், வாசலில் சத்தம் கேட்டுக் கண்களைத் திருப்பி காதுகளைச் சாய்த்தார்கள்.

நாணம் கலந்த பார்வையோடு சித்திராவும், இன்னும் நான்கைந்து பெண் பட்டாளமும் உள்ளே வந்தது. சித்திரா, பையிலிருந்த அழைப்பிதழை எடுத்து, குமுதினியிடம் நீட்டினாள்.

இதற்குள் ஒருத்தி, "எப்போ கல்யாணம்? அவர் பேரு என்ன? நீ காதலிச்ச அதே ஆள்தானே?" என்றாள்.

"படித்துப் பாரேண்டி" என்ற சித்திரா, அவளுக்கும் ஒரு அழைப்பிதழைக் கொடுத்துவிட்டு, அங்கேயே திருமணம் நடந்து கொண்டிருப்பது போல் நாணப்பட்டபோது, அதே அந்த வெடிவால் மாணவி, "இவள் பேரு, சித்திரா. அவர் பேரு என்னவா இருக்கும்? தெரியலியா நான் சொல்றேன்... பங்குனி... இல்லேன்னா வைகாசி" என்றாள்.

உடனே, இன்னும் அவளிடம் 'வன்மம்' வைத்த தமிழ்க்காரி "ஏண்டி? கர்நாடகமாய் பேசுறே? சித்திரை சித்ராவா ஆயிட்டாள் பங்குனி, பங்குனியா ஆயிடும்! வைகாசி, வைகான்னு ஆயிடும். ஏய்... சித்ரா உன் 'அவருக்கு' என்ன, என்ன பேருப்பா? முந்தின மாதமா? பிந்தின மாதமா?" என்றாள்.

உடனே வெடிவால், "இன்னும் கல்யாணமே ஆகல! அதுக்குள்ளே எப்படி மாதம் வரும்?" என்றாள்.

மணக்கப் போகிறவளோட வந்த விடுதி மாணவியர் செயலாளர் தமயந்தி குமுதினியை உரிமையோடு கண்டித்தாள்.

"என்னடி குமுதினி! சித்ராவுக்கு ஏதாவது செய்யணுமுன்னு நன்கொடை வசூலிச்சோம். நீ கண்டுக்கலே" என்று சொன்னபடியே, பாதி மையான ஒரு காகிதத்தை நீட்டினாள். அதில், குமுதினி எதையோ எழுதி நீட்டிவிட்டு, மேஜையைத் திறந்தபோது, செயலாளப் பெண் ஆச்சரியம் தாங்க முடியாமல் கத்தினாள். "அடேயப்பா, ஐநூறு ரூபாய்."

எல்லா மாணவிகளும், தொலைக்காட்சிப் பெட்டியை நோக்காமல், அந்தக் காகிதங்களையே பார்த்தபோது, குமுதினி ஒரு சின்ன அட்டைப் பெட்டியைத் திறந்தாள்.

"சித்திரா, இங்கே வா. இது உன் கைக்கு சரியாய் இருக்கான்னு பாரு. இல்லேன்னா நகைக் கடைலே போய் மாத்திட்டு வாரேன்."

தயங்கியபடி வந்த சித்திராவை தன் பக்கம் இழுத்தபடியே, குமுதினி அவள் கையில் மோதிரத்தை மாட்டினாள். பிறகு, "ஒனக்குன்னு செய்தது மாதிரியே இருக்குது" என்று சொல்லி விட்டு, மோதிரத்தைக் கழற்றப் போன சித்ராவை தடுத்து. "ஒன்னவர் விரல்லேயே இருக்கட்டும்... ஒன் 'அவர் கல்யாண மோதிரம் போடுமுன்னாலேயே நான் போட்டதாய் இருக்கட்டும். அப்பாகிட்டே இருந்து இந்த மாதக் 'கோட்டா' வர்லே. இல்லேன்னா பெரிசாவே வாங்கியிருப்பேன்" என்றாள்.

மாணவிகள் பிரமித்தார்கள். சிலர், 'பணத்திமிரைக் காட்டுகிறாள் பாரு' என்றுகூட, தங்களை அறியாமல் நினைத்துவிட்டு, அப்புறம் தலைகளில் மானசீகமாகக் குட்டிக் கொண்டார்கள். அப்பா, தொழிற்சாலை வைத்திருப்பவர். சென்னை நகரில், தனிப்பங்களாவில் இருக்க வேண்டும் என்று அவர் வாதாடி எழுதியிருந்தாலும், மற்ற மாணவிகளோடு இருக்க வேண்டும் என்பதற்காகவே, இந்தக் கொசுத் தொல்லையும், வார்டனம்மா தொல்லையும் நிறைந்த விடுதிக்குள் வந்திருப்பவள் குமுதினி. லண்டனில் படிக்க வேண்டும் என்று அப்பா சொன்னாலும், படித்தால் தமிழ்நாட்டுத் தலைநகரில்தான் படிப்பேன் என்று பிடிவாதம் போட்டிருந்தவள். இந்த கல்லூரியில் இதே சித்திரா அவளுக்கு உயிர்த் தோழி ஆகிவிட்டாள்.

சித்திராவும், அவள் மெய்காவலாளிகளும் போய் விட்டார்கள். மாணவிகள் தொலைக்காட்சியை உற்று நோக்கினார்கள். குமுதினிக்கும் அந்த தொலைக்காட்சியின் ஒலியும், ஒளியும், அவள் மனத்தில், காசிநாதனை ஒளிரூபமாக்கி காட்டியது. 'காசிநாதன் இப்போ என்ன செய்வார்? என் மாதிரியே என்னையே நினைத்தபடி இருப்பாரா? மதுரைக்கு வரணுமுன்னாரே, வந்திருப்பாரா?'

தொலைக்காட்சியில், அந்த நிகழ்ச்சி முடிந்து, அடுத்த நிகழ்ச்சி துவங்கியது. ஒரு சில மாணவிகள் ஓடிவிட்டார்கள்.

பெட்டியில் வண்ணம் போய், வெண்மை வந்தது. உடனே நேரத்தைக காட்டும் 20-20-50, அப்புறம் 50-51...60. பிறகு வட்ட வட்டமான உள்வட்டங்களைக் கொண்ட ஒரு பெரிய வட்டம்.

'வணக்கம் இன்றைய தலைப்புச் செய்திகள்.'

"இலங்கையெங்கும், குறிப்பாக கொழும்பு நகரில் நூற்றுக்கணக்கான தமிழர்கள், சிங்களவர்களால் கொல்லப் பட்டிருப்பதாக கூறப்படுகிறது. கொலை வேகம் குறையவில்லை என்று செய்திகள் கூறுகின்றன."

குமுதினி, தன்னை அறியாமலே எழுந்தாள். அந்தக் கொலைகள், அந்தப் பெட்டிக்குள்ளேயே நடப்பதுபோல், அதை விரோதித்துப் பார்த்தாள். துக்கித்துக் கேட்டாள். கேட்கக் கேட்கக் காதுகள் சிவந்தன. பார்க்கப் பார்க்கப் பரிதவிப்பு:

பதினைந்து நிமிடச் செய்தி வாசிப்பில், பத்து நிமிடங்களுக்கு மேல், இலங்கை. இலங்கையில் இனப்படு கொலைகள். வாசிப்பாளரே. அரண்டும், மிரண்டும், அழுவது போலவும் படித்தார். கொழும்பில் மட்டும், நூறு பேர் கொல்லப்பட்டு இருக்கிறார்களாம். ராணுவம் இந்தக் கொலைகாரச் செயலில் ஈடுபட்டிருப்பதுபோல் தெரிகிறதாம். ஊரடங்கு உத்திரவாம். பத்திரிகைத் தணிக்கையாம். பெண்கள் கற்பழிப்பாம். தமிழ்க் குழந்தைகள் நெருப்பிலாம். தெருக்களில் ஒரே பிணக் குவியலாம். விமானப் போக்குவரத்து ரத்தாம். தொலைதகவல் தொடர்புத் துண்டிப்பாம். துப்பாக்கிச் சூடுகளாம்...

குமுதினி நடப்பது தெரியாமல் நடந்து, அந்தத் தொலைக்காட்சிப் பெட்டிமேல் சாய்வது தெரியாமல் சாய்ந்தபோது, பெட்டியின் மேல் முனையில் இரண்டாக விரிக்கப்பட்ட திரைத்துணி, மீண்டும் தொங்கி இழவுச் செய்திகளைச் சொன்ன திரையை மறைத்தது. அதுவரையில் செய்திகளை சிறிது துணுக்குற்று கேட்ட மாணவிகள், அப்போதுதான், குமுதினிக்கு ஒருவேளை

ஏற்பட்டிருக்கக்கூடிய ஈடு செய்ய முடியாத இழப்புகளை உணர்ந்தவர்கள்போல் ஓடிப்போய், அவளைத் தாங்கிப் பிடித்துக் கொண்டார்கள். அவளோ, அவர்களையும் மீறி, அடித்துப் புரண்டாள். கொழும்பில் நடுத்தர தொழிற்சாலை ஒன்றின் உரிமையாளரான அவள் தந்தையும், தாயும், தம்பியும், தங்கையும், சிங்களவர்கள் அதிகமாக வாழும் நகர்ப்பகுதியில் ஒற்றைக் குடும்பமாய் இருப்பவர்கள். அவளைக் கைப்பிடிப்பதாய் இருக்கும் காசிநாதன், அதற்கு அடுத்த தெருவில், பொறியாளனாக இருப்பவன். "என்ன ஆனார்களோ?"

குமுதினி வாய்விட்டுக் கதறினாள்.

"அப்பா! அம்மா! ஒங்களையும் தம்பி, தங்கைகளையும் நான் உயிரோடு பார்ப்பேனா? பார்க்க முடியுமா... காசி, என்னோட காசி. அப்பா, அம்மம்மா, என்னை விடுங்கடி, விடுங்கடி."

கல்லூரிக் கட்டடமே அதிரும்படி குமுதினி கத்தினாள். அந்த விடுதியில் உள்ள அத்தனை பெண்களும் ஓடி வந்தார்கள். ஒரே அமளி. ஒரே பரபரப்பான படபடப்பு. நளினி மூர்ச்சித்தவளாய்த் தரையில் வீழ்ந்தாள். எவளோ ஒரு பெண், சமயோசிதமாக, அவள் முகத்தில் நீரைத் தெளித்தபடி, "காற்று வேணும் கொஞ்சம் வழி விடுங்க" என்றாள். குமுதினியே அங்கு மரித்துவிட்டதுபோல், மாணவிகள் 'ச்சொ, ச்சொ' என்றார்கள். இறுதியில் அங்கே ஓடிவந்த விடுதிச் செயலாள மாணவி தமயந்தியும், சித்ராவும், குமுதினியைத் தூக்கி நிறுத்தினார்கள்; சித்ரா, அவளை, தன் தோளில் சாய்த்துக் கொண்டாள். 'என்ன விஷயம்' என்பதுமாதிரி ஒருத்தியை, வினாக்குறியுடன் அவள் பார்க்க, அவள் விளக்கினாள். விளக்கும்போதே அழுதுவிட்டாள். அழுதவளைக் கட்டிப் பிடித்துக் கொண்டு குமுதினியும் அழுதாள். இறுதியில் செயலாளப் பெண், நளினிக்கு ஆறுதல் கூறினாள்.

"என்ன குமுதினி குழந்தைமாதிரி... ஒன்னோட நல்ல குணத்துக்கு ஒன் குடும்பத்துலே யாரும் செத்திருக்க மாட்டாங்கம்மா: நிச்சயமாய் நம்புடி."

குமுதினி, தன்னைப்போலவே அழுதுக் கொண்டிருந்த சித்ராவின் மார்பில் முகம் புதைத்தாள். பிறகு, ”நான் எப்படியோ? என்னோடா அம்மா, அப்பா குணத்தோட ஒப்பிட்டால் நான் தூசுடி, தூசு. என்ன ஆனாங்களோ? அவங்களோட பிணத்தையாவது நான் பார்ப்பேனா...” என்றாள்.

“அபத்தமாய்ப் பேசப்படாது. வேணுமுன்னாப் பாரேன். அவங்களுக்கு எதுவும் ஏற்பட்டிருக்காது.”

“ஏய் சித்ரா! என்னை இப்பவே கொழும்புக்கு அனுப்புடி. என் பெற்றோரை நான் பார்த்தாகணும். என் தம்பி, தங்கை கிட்டப் பேசியாகணும். இப்பவே பார்க்கணும்: இப்பவே பேசணும். என்னை அனுப்புடி. அப்படியே அவங்களுக்கு வந்தது எனக்கும் வரட்டும். எனக்கும் வரணும். தமயந்தி என்னைக் கூட்டிட்டுப் போடி.. கூட்டிட்...”

மாணவிகள் மௌனித்தார்கள். அத்தனை கண்களும் மேகமாயின. அவளுக்கு எப்படி ஆறுதல் சொலவதென்று புரியவில்லை. ‘அப்பா செத்தால் அம்மாவைக் காட்டலாம், அம்மா செத்தால் அப்பாவைக் காட்டலாம். இருவரும் செத்தால் குடும்பத்தில் எஞ்சியவர்களைச் சுட்டிக் காட்டி, ஆறுதல் கொடுக்கலாம். அந்தக் குடும்பமே ஒட்டு மொத்தமாய் செத்தால்...?

தமயந்தி தன் அழுகையை அடக்கியபடியே ஆற்றுவித்தாள்.

“அழாதே குமுதினி, அழாதே! தொலைக்காட்சியிலே கூறப்படுகிறதுன்னுதானே சொல்லி இருக்காங்க?’

“அரசாங்கச் செய்தியிலே கூறப்படுதுன்னு சொன்னால், இலங்கையில கூற்றுவன் கூத்தாடுறான்னுதானடி அர்த்தம்? நாலைஞ்சு நாளாவே பதட்ட நிலை இருக்குதுன்னு செய்தி வந்துதே. சிங்களவங்க, ஐந்து வருஷமாய் தமிழர்களோட வீடுகளுக்குள் புகுந்து, எல்லாப் பொருளையும் கொள்ளையடிச்சு

கொள்ளையடிச்சு பழக்கப்பட்டுப் போனாங்க. இப்போ எம் ஆட்களோட உயிரையே கொள்ளை அடிக்கிறாங்களே."

உள்ளத்தால் செத்து, உடலால் மட்டுமே அங்கே இருப்பவள்போல் உணர்வற்று கிடந்தாள் குமுதினி. சிறிது நேரத்திற்குப் பிறகு, ஒவ்வொரு பெண்ணாக அகன்றார்கள். இறுதியில், சித்திரா மட்டுமே நின்றாள். வெளியே ஏதோ சத்தம் கேட்டு நகரப் போனவளை, குமுதினி திடீரென்று பாய்ந்து பிடித்துக் கொண்டாள். "எனக்குப் பயமாய் இருக்கு. என்னை விட்டுட்டுப் போயிடாதே" என்றாள்.

"இந்த நிலையில் ஒன்னை விட்டுட்டுப் போனால், எனக்கும் சிங்களவங்களுக்கும் என்ன வித்தியாசம்?"

"நான் யாருக்காக அழுறது? அப்பாவுக்கா... அம்மாவுக்கா... தம்பிக்கா... தங்கைக்கா... என்னோட காசிக்கா... யாருக்காகடி அழுறது? இவங்க எல்லாம் உயிரோட இருந்து, அவங்கெல்லாம் எனக்காக அழுதால்கூடப் பரவாயில்லே. ஒருத்திக்காக பலர் அழலாம். பலருக்காக ஒருத்தி அழமுடியுமாடி?"

"என்னம்மா நீ... கற்பனையும் பயமும் ஒண்ணாயிட்டால் நாம் வேரில்லாமல் போயிடுவோம். நடந்திருக்காத ஒன்றை நடந்ததாய் அனுமானிக்கிறது பெரிய தப்பு."

குமுதினி, குழந்தையாய்க் கேட்டாள்.

"சித்ரா, அப்படியா சொல்றே? எங்க குடும்பத்துல யாரும் இறந்திருக்க மாட்டாங்கன்னு சொல்றியா?"

"ஆமாம். என் மனசுல ஏதோ ஒண்ணு, ஒனக்கு எந்த இழப்பும் நடந்திருக்காதுன்னு சொல்லுது."

"நீ சொன்னது மாதிரியே இருக்கட்டும். என்னோட காசிநாதனுக்கும் எதுவும் நடந்திருக்காதே?"

"எதுவும் நடந்திருக்காதும்மா. நீ என்னை நம்புடி."

"நிசமாவா?"

"நிசமாவே என் வாக்கு எப்பவுமே பொய்த்ததில்லை."

குமுதினி, சித்திராவை மாணவி மாதிரி பார்த்தாள். ஆசிரியையாக அனுமானித்தாள். யோகியாக நினைத்தாள். முக்காலமும் தெரிந்த முனி புங்கவப் பெண்ணாய் எண்ணினாள். அவள் கரத்தைப் பலமாகப் பிடித்துக் கொண்டாள். அவள் தோளில் வலுவாகச் சாய்ந்து கொண்டாள்.

இரவில் இரு பெண்களும் தூங்கவில்லை. சித்திராவின் கையைப் பலமாகப் பிடித்தபடி, அங்குமிங்குமாய் புரண்ட குமுதினி, திடீர் திடீரென்று எழுந்தாள். சுவரில் சாய்ந்தாள். தரையில் அமர்ந்தாள். அறைக்குள் தாவித் தாவி நடந்தாள். மனப்புலனில், அம்மா முதலில், அப்புறம் அப்பா, பிறகு தம்பி, ஒரு தங்கை, இறுதியில காசிநாதன்.

இந்த நினைவுகள் வகைவகையாய் மாறி மாறி, முன்னும் பின்னுமாய் வந்தன. ஐந்து உடல்களும் சிதைந்து, சீரழிந்து, ஈமக்கடனுக்காக இன்னும் துடித்துக் கொண்டிருப்பது போன்ற பிரமை. அவர்களின் அவயங்கள் தனித்தனியாய்ச் சிதறிக் கிடப்பது போன்ற சிந்தனை.

குமுதினி பயந்து போனாள். தனியாய் விழித்திருக்க பயந்துப்போய் கட்டிலில் தூங்கிய சித்திராவை எழுப்பப் போனாள். அவள், யோகித்தனமாக பேசிய ஆறுதலை மீண்டும் கேட்க வேண்டும் என்று ஒரு ஆவல். ஆனாலும், பலமாக மூச்சு விட்டுத் தூங்கும் தோழியை அப்போதைக்கு சுமைதாங்கியாய் ஆக்குவதற்கு அவள் மனம் கேட்கவில்லை. இறுதியில், அவளோடு சேர்ந்து ஒட்டிப் படுத்துக் கொண்டாள். அவள் கையை, தன் இடுப்போடு சுற்றி வளைத்துக் கொண்டாள். இந்த உளைச்சலில் இன்னோர் எண்ணம்.

'பெற்றோரும் காசியும் இறந்திருந்தால் நான் உயிரோட இருக்கப் போவதில்லை. இருக்கவே மாட்டேன்.'

சுய மரணச் சிந்தனை, குமுதினிக்குள் சிறிது ஆறுதலைக் கொடுத்தது. எந்தப் பிரச்சனைக்கும் மரணம் முற்றுப்புள்ளி வைக்கும் என்பது புரிந்தது. அவளுக்குத் தூக்கம் வரவில்லைதான். ஆனாலும் அவள் மரணத் திடத்தோடு படுத்தாள்.

பொழுது புலர்ந்தது. புல்லினங்கள் ஆர்க்கும் முன்னாலேயே குமுதினி எழுந்தாள். பத்திரிகைகள் வருகிற வரைக்கும், அவளால் காத்திருக்க முடியவில்லை. விடுதியை விட்டு வெளியேறியபோது ஏதோ கேட்கப் போன காவலாளியிடம் 'ஏற்கனவே செத்துப் போனவளுக்கு என்ன ஆனால், ஒனக்கென்னயயா?' என்று கத்திவிட்டு, தன்னதனியாக நடந்தாள். பத்திரிகைகளை, எதிர்பார்த்து, திறக்கப்படாத கடைகளைப் பார்த்தபடி திறந்த விழியோடு நடந்தாள். நேற்று வரை விடுதிக்குள்ளேயே இரவில் நடமாட பயந்த அந்த இலங்கை தமிழ்க்காரி, இப்போது, தன் நடமாட்டமே பார்ப்பவர்களுக்குப் பயமூட்டும்படி ஓடினாள். தாவினாள். நடந்தாள். ஆங்காங்கே நின்று தேம்பினாள்.

எப்படியோ, எல்லாத் தமிழ் பத்திரிகைகளையும், ஆங்கிலப் பத்திரிகைகளையும் வாங்கியவளுக்கு, அப்போதுதான் காசு கொண்டு வரவில்லை என்பது புரிந்தது. பத்திரிக்கைகாரப் பையனிடம் மன்றாடினாள். ஏற்கனவே தெரிந்தவன்தான்.

"தம்பி! நான் இதோ இந்தச் செய்தி சொல்ற துரதிருஷ்டக்காரிப்பா.. அதோ அந்த விடுதியில் வந்து காசு வாங்கிக்றியா? எனக்கு இவை எல்லாமே வேணும்."

"அதுக்கென்னம்மா நீங்க கொண்டு போங்க. நான் அப்புறமாய் வாங்கிக்கிறேன்."

குமுதினி, கை நிறையப் பத்திரிகைகளோடு நடந்தாள். படிக்காமலே நடந்தாள். உண்மையை எதிர்கொள்ள பயம். பின்னர், ஒரு சில இடங்களில் நின்று நின்று வாசித்தாள். ஒரு பத்திரிகையில் வந்தது இன்னொரு பத்திரிகையில் பொய்யாகட்டும் என்ற பொய்

மனப்பான்மையுடனேயே படித்தாள். நூற்றுக் கணக்கான இலங்கைத் தமிழர்களை இலங்கை ராணுவ பலத்தோடு சிங்களவர்கள் குத்திப் போட்டதும், வெட்டிப் போட்டதும், கற்பழித்ததும் நிருபணமாயின. விடுதிக்குள் எப்படித்தான் வந்தாளோ... நடப்பது தெரியாமல் நடந்து, தன் அறைக்குள் வருவது தெரியாமல் வந்து கட்டிலில் விழுந்தாள். சித்திரா, அப்போதும் அவளுக்கு ஆறுதல் சொன்னாள்.

குமுதினி சுரணையற்றுக் கட்டிலில் விழுந்தாள். அவளுக்கு ஆறுதல் சொல்லப் போன சித்திரா நிதானப் பட்டாள். 'அழட்டும், நல்லா அழட்டும். மனத்தின் சோகக் குவியல்கள் கண்ணீரில கரையட்டும். விம்மலோடு விம்மலாய் வெடித்து வெளிக் கிளம்பட்டும்.'

மூடிய கண் திறக்காமல், காலையிலிருந்து நண்பகல் வரை கட்டிலைக் கௌவிக் கொண்ட குமுதினியையே சித்திரா யோசித்தாள். 'இவளோட குடும்பத்தின் இப்போதைய நிலையை, எப்படி அறிவது? யாரிடம் கேட்பது?

குமுதினி கண்ணற்றவளாய், கண் விழித்தாள். சித்ராவும், தமயந்தியும், குமுதினியை தாங்கிப் பிடித்து ஆட்டோவில் ஏற்றினார்கள். இலங்கைத் துணைத் தூதரகத்துக்கு அழைத்துச் சென்றார்கள். அங்கே பலத்த போலீஸ் காவல். அவர்களை உள்ளே விட மறுத்தார்கள். கெஞ்சிப் பார்த்தும் மிஞ்சிப் பார்த்தும் பலன் இல்லை. வெளியே வந்த காருக்குள் இருந்த அதிகாரியைப் பார்த்து குமுதினி கையெடுத்துக் கும்பிட்டாள். ஓராண்டுக்கு முன்பு, முதல் தடவையாக இந்த அலுவலகம் வந்தபோது, சொந்தவீடாய்த் தோன்றிய அந்த மாளிகை, இப்போது அந்நியமாய்க் காட்டியது. ஆனாலும், குமுதினி அந்த அதிகாரியிடம் மன்றாடிக் கேட்டாள்.

"என்னை ஞாபகம் இருக்குதா அய்யா? இந்த அலுவலகத்துல பண்பாட்டு விழாவிலேய பாடியவள். இப்போ என்னோட குடும்பம் கொழும்பில் எப்படி இருக்கு, என்று சொல்ல முடியுமா?".

காருக்குள் இருந்தவர், டிரைவரை உசுப்பினார். கார் பறந்தது. தன்னையறியாமலே காரின் முன்னால் ஓடிய குமுதினியை, சத்திரா தாங்கிப் பிடித்தாள். அவளை தமிழ்ப் புலியாக நினைத்த ஒரு காவலாளி மேல் புலிப் பார்வையை வீசினாள். பிறகு, சித்திராவையும், தமயந்தியையும் மார்பின் இரு பக்கமும் சேர்த்தபடி, அங்கேயே தவம் கிடந்தாள். தகவல் கிடைக்கவில்லை. தகராறுகள் கிடைத்தன. இறுதியில் குமுதினிதான் தோழிகளை, உஷார் படுத்தினாள்.

"என்னோட பெயரைத் தெரிஞ்சு ஒருவேளை இன்னும் உயிரோட இருக்கிற என் குடும்பத்தை அழிச்சிடப்படாது. வா."

நான்கு நாட்கள் குமுதினிக்கு விநாடி விநாடியாய் கழிந்தன. ஒவ்வொரு விநாடியும் உயிர்மரணப் போராட்டம். மாணவக் கொந்தளிப்பை தாங்கும் வகையில் கல்லூரிகள் மூடப்பட்டன. திருமணமாகப்போகும் சித்திரா, குமுதினிக்காக இசகுபிசகாய் எதுவும் செய்து, மாட்டிக் கொள்ளக் கூடாதே என்று பயந்து, அவள் தந்தை விடுதியிலிருந்து அவளை வலுக்கட்டாயமாகக் கூட்டிக் கொண்டு போய்விட்டார்.

தனித்து விடப்பட்ட குமுதினியின் புலம்பல் ஒடுங்கியது. அழுகை அகன்றது. உணர்வால் செத்துப் போனாள். சோகத்தால் மரத்துப் போனாள். கைப்பணம் போய்விட்டது. எங்கேயாவது போய் விவரம் கேட்க வேண்டுமானால், பணம் வேணுமே...

குப்புறக் கிடந்தவள், விம்மல் சத்தம் கேட்டுக் கண் விழித்தாள். தந்தையோடு வந்த மணப்பெண் சித்திரா தரையில் மண்டியிட்டபடி, அவளையே பார்த்து அழுதாள். அழவேண்டியவள், அழுபவளுக்கு ஆறுதல் சொல்பவள்போல, அவள் முதுகைத் தட்டிக் கொடுத்தாள். சித்திரா, நான்கைந்து நூறு ரூபாய் நோட்டுகளை அவளிடம் நீட்டிவிட்டு, தன் கையில் போட்டிருந்த மோதிரத்தைக் கழற்றியபோது, "ஒனக்குப் பணம் வந்திருக்காது. வேற வழியில என்னால உதவவும்முடியலே. அதனாலதான்..." என்று இழுத்துப் பேசினாள்.

குமுதினி, ரூபாய் நோட்டுகளை வாங்காமலே, தன் உள்ளங் கையில் திணிக்கப்பட்ட மோதிரத்தை மௌனமாக நின்ற சித்திராவின் விரலில் மாட்டியபடியே, அரட்டினாள்.

"இது என்னோட அன்பைக் காட்டுகிற சின்னம். கொடுத்த அன்பைத் திருப்பித் தரலாம். அன்பே வேண்டாமுன்னு இதைத் தரலாமாடி? என் கல்யாணத்துக்குத் திருப்பிப் போடணுமேன்னு நினைக்கிறியா? அப்படி ஒரு நிலைமை வராதுடி. தாரதாய் இருந்தால், இந்தப் பாவிக்கு அன்பை மட்டுமே தாடி, அன்பு உருவமற்றது. மோதிரம் உருவம் உள்ளது."

சித்திரா, குமுதினியைக் கட்டிப் பிடித்துக் கொண்டாள். விலகி விலகிப் போன அவள் முகத்தைத் தன் தோளில் கவிழ்த்துக் கொண்டாள். குமுதினியின் பிடரியில், சித்திரா சிந்திய கண்ணீர் பெருக்கெடுத்தது.

இரண்டு நாட்கள் மேலும் ஓடின.

குமுதினி, அறைக்குள்ளேயே முடங்கிவிட்டாள். காலத்தை மறந்த புலனற்ற நிலை. சொல்லவும் முடியாத, சொன்னாலும் தீராத அவலத்தையே உணவாகக் கொண்ட உள்ளத்தின் ஒடுங்கிய நிலை. விடுதி வெறுமையாய்க் கிடந்தது. எவளோ ஒருத்தி வந்து, ராமேசுவரத்துக்குப் பாதிக்கப்பட்ட தமிழர்கள், கப்பலில் வந்து இறங்குவதாகப் பத்திரிகைச் செய்தி ஒன்றைப் படித்துச் சொன்னாள். குமுதினிக்கு லேசாய் உணர்வு தட்டியது. ராமேசுவரம் போய்ப் பார்க்கலாம். பணத்துக்கு?

புத்தகங்களைக் குடைந்து, பெட்டியைக் குடைந்தவளுக்கு எப்போதோ வைத்திருந்த இருநூறு ரூபாய் கிடைத்தது. எழும்பூர் ரெயில் நிலையத்தைப் பார்த்து ஓடினாள்.

ராமன் தொழுத பூமியான ராமேஸ்வரம், இப்போது இரத்த அலைகளாய் விம்மியது. ஆயிரக்கணக்கான மக்கள் எதிர் கொண்டழைக்க, கப்பலில் வந்திறங்கிய அகதிகளை, குமுதினி, ஓடி

ஓடிப் பார்த்தாள். ஒவ்வொருவராய்ப் பார்த்தாள். தெரிந்த முகம் எதுவும் தென்படவில்லை. எவரிடமாவது கேட்கலாம் என்றால், ஒவ்வொரு முகமும் செத்துத் தொங்கியது.

அந்த முகங்களைப் பார்க்கப் பார்க்க, அவர்களின் சுமையையும், தான் வாங்கிக் கொண்டதுபோல் அவள் உள்ளம் கனத்தது. அதே சமயம் தனது இழப்புத் தாங்கிக் கொள்ளக் கூடியது போலவும் தோன்றியது.

சென்னை திரும்பிய குமுதினி, யார் மூலமாவது, தன் குடும்பத்து நிலைமையை உணர்ந்த பிறகே, ஒரு முடிவுக்கு வரவேண்டும் என்ற தீர்மானத்துக்கு வந்தாள். அவர்கள் இருந்தால் இருக்கலாம்... இறந்தால் இறக்கலாம்.

மீண்டும் தன்னந்தனியாய், இலங்கைத் துணைத் தூதரகம் போனாள். அவளை உள்ளேயே விடவில்லை. விரக்தியோடு திரும்பியவள், தமிழக அரசின் சம்பந்தப்பட்ட அதிகாரிகளைப் பார்த்தாள். அத்தனைபேரும் ஆறுதல் சொன்னார்கள். அறிந்து சொல்வதாய் இதய சுத்தியோடு பதிலளித்தார்கள்.

ஓரிரு நாட்கள், அவளுக்குக் கொலைகார நாட்களாய் ஓடின. அறையே சிறையாகியது. தமிழ் ஐக்கிய முன்னணிப் பொதுச் செயலாளர் அமிர்தலிங்கம், சென்னைக்கு வந்திருப்பதாக வானொலி கூறியது. குமுதினி லேசாய் உயிர்த்து எழுந்தாள். அந்த இலங்கைத் தமிழ்த் தலைவரைச் சந்தித்தாள். அவரோ, ஒட்டு மொத்தமாய் அத்தனை தமிழர்களுக்குமாக அழுது கொண்டிருந்தார். அவள், அவரிடம் தன் நிலையை எடுத்துச் சொன்னபோது, "பக்குவமாய், விசாரிச்சுப் பார்க்கேன். ஒருவேளை நான் விசாரிக்கிறதாலேயே ஒன் குடும்பத்தினர் பழி வாங்கப் படாமல் இருக்கணும். எதற்கும் விபரத்தை எழுதிக் கொடு" என்றார்.

குமுதினி, எழுதிக் கொடுக்காமல் நழுவி வந்தாள். 'செத்திருந்தால் இந்நேரம் செத்திருப்பார்கள். எனக்குத் தகவல்

வேண்டும் என்பதற்காக ஒரு வேளை உயிரோடு இருந்து, அவர்களுக்கு, நானே எமனாகப் படாது. பார்க்காவிட்டாலும் பரவாயில்லை. நல்லபடியாகப் பொன் பொருளோடு வேண்டாம். கைகால் கதியாய் இருந்தால் போதும்.'

குமுதினி, விடுதிக்குள் வந்து, உடல் முழுவதையும் மூடிக் கொண்டாள். "இன்னுமா தூக்கம்?' என்று அம்மா போர்வையை விலக்குகிறாள். "ஏன் அழுக்குப் பேர்வையைப் போத்தியிருக்கே?" என்று அப்பா, கேட்கிறார். "ரூபாவானில ஒரு நல்ல நிகழ்ச்சி" என்று தங்கை ஞாபகப்படுத்துகிறாள். 'சென்னையில் இருந்து என்ன வாங்கிட்டு வந்தே?" என்று தம்பி கேட்கிறான். இவர்கள் எல்லாருக்கும் எதையோ பதிலாகச் சொல்லிவிட்டு, குமுதினி, புரண்டு படுக்கிறாள். போர்வையால் மீண்டும் உச்சிமுதல் உள்ளங்கால் வரை மூடிக் கொள்ளப் போகிறாள். திடீரென்று பேர்வை இழுக்கப்படுகிறது. காசிநாதன் சிரித்தபடி, "எனக்கும் போர்வை" என்கிறான்.

குமுதினி அலறியபடியே எழுந்தாள். அவள் சத்தம் கேட்டு யாரும் வரவில்லை. விடுதியே வெறிச்சோடிக் கிடந்தது. கடிகாரத்தைப் பார்த்தாள். ஓடாமல் கிடந்தது. நேரத்தை அறிவதற்காக, வானொலிப் பெட்டியைத் திறந்தாள். கொழும்பில் இருந்து, விமானத்தில் தமிழர்கள் சென்னைக்கு வருவதாக, வானொலிச் சேதி கூறியது. குமுதினி எழுந்தாள்.

ஒரு மணி நேரத்துக்கு முன்பாகவே மீனம்பாக்கம் விமான நிலையத்துக்கு வந்துவிட்டாள். குடும்பத்தினர் கண்டிப்பாக வருவார்கள் என்று மனம் கணக்குப் போட்டது. அப்பாவுக்குத் தெரியாத அதிகாரிகளே இல்லை. பணத்துக்கும் பஞ்சம் இல்லை. கண்டிப்பாக வருவார்கள். ஒருவேளை, காசிநாதனும் அவர் குடும்பத்தினரும் வரலாம்; வர வேண்டும்.

விமானம் ஆகாயத்தை வட்டமடித்தபோது, அவள் குதிகால்களை உயர்த்தி உயர்த்திப் பறக்கப் போகிறவள் போல்

எழும்பினாள். விமானம் இறங்கியது. குமுதினி, ஓடினாள். பாதுகாப்புத் தடையையும் மீறிப் போனாள். அதற்குள் விமானத்திலிருந்து ஒவ்வொருவராய் இறங்கினார்கள். நளினி, தலையைத் தூக்கிப் பார்த்தாள். தன் முன்னால் நின்றவர்களைப் பலவந்தமாய் விலக்கிப் பார்த்தாள். 'அப்பா மாதிரி தோணலயே. அம்மா மாதிரி தோணலயே? 'அதோ அப்பா! என்னோட அப்பா. அப்பா, அப்பா, அப்பா இதோ இருக்கேன், இதோ இருக்கேன்."

கூவிய குமுதினியின் குரல் உடைந்தது. வந்தவர் அப்பா மாதிரிதான்... பார்த்தவர்களில், எவரும் அவளுக்குத் தெரிந்தவராய் தெரியவில்லை. அப்போதும் ஒரு ஆறுதல். குடும்பத்தினர் அகதி முகாம்களில் இருக்கலாம். ஒருவேளை வீட்டிலேயே இருக்கலாம். இல்லையானால், அவர்கள் தப்பியோடி வட மாகாணங்களில் வவுனியா, மன்னார், முல்லைத்தீவு, கிளிநொச்சி போன்ற இடங்களில் இருக்கலாம். திரிகோணமலையில் திரியலாம். கிழக்குப் பகுதியான மட்டக்களப்பில் காலத்தைக் கழித்துக் கொண்டிருக்கலாம்.

விரக்தி வாய்ப்பட்ட வடிவோடு, அவள் திரும்பியபோது, திடீரென்று ஒரு குரல்... திரும்பினாள். யார் என்று அடையாளம் பிடிபடவில்லை. அப்புறந்தான், தந்தையின் தொழிற்சாலையில் சூட்டும் போட்டும் போட்ட அதே அருணாசலம்,இப்போது தாடியும், மீசையும், ஒட்டிப்போன வயிறோடு, உலர்ந்து போன கண்களோடு நிற்பது தெரிந்தது. அந்த முதியவரின் கையைப் பிடித்தபடி, அவள் விம்மினாள். அவர், தம் சுமையை எடுத்து அவள் தலையில் இறக்கினார்.

"எல்லாம் முடிந்தது... எல்லாமே முடிந்தது. கொழும்புல அப்பா காரில் ஏறினார். தொலைவில் வந்த பழக்கப்பட்ட சிங்களவர்களைப் பார்த்து, அப்பா சிரித்தபடி நின்றார். நம் கம்பெனியில் கடனுக்கு சரக்கு வாங்குபவர்கள்தான்... அப்பாவைப் பார்த்துவிட்டுப் பாய்ந்தாங்க. அப்புறம் அவர் தலை கீழே விழுந்தது. அதோடு விடலை. பிணத்தைக் காரிலேயே தூக்கிப் போட்டபடி போனாங்க. ஒங்க வீட்டைப்

பார்த்து ஓட்டினார்கள். அப்போ என்னோட குடும்பமும், ஒன்னோட தம்பி பிறந்த நாளை கொண்டாடுறதுக்காக ஒங்க வீட்டுக்குப் போயிருந்தாங்க. எல்லாருக்குமே அது இறந்தநாளாய் ஆயிட்டும்மா... ஒருவர்கூடத் தேறலம்மா. அதோட அவங்க விடலேம்மா. நம்ம தொழிற்சாலையையும் தரை மட்டமாக்கிட்டாங்க. என் தலைவிதி, நான்தான் தப்பிச்சேன். இலங்கையில் நம்ம ஆட்களுக்கு நடந்த கொடுமைகளை, வார்த்தைகளாலே வர்ணிக்க முடியாதும்மா."

குமுதினி, கல்லானாள். மரமானாள்; அவளை பார்த்தபடி, நின்ற அருணாசலத்திடம், ஓர் அதிகாரி வந்து, "நாங்க ஏற்பாடு செய்திருக்கிற முகாமுக்கு வாரீங்களா? இல்ல, இந்த அம்மாவோட போறீங்களா?" என்றார். அருணாசலம் குமுதினியையே பார்த்தார்.

குமுதினியின் உடம்பு லேசாய் அதிர்ந்தது. 'நான் இனிமேல் இருக்கப் போறதில்லை. இவரும் என்னோடு வந்து என் மரணத்துக்கு இடையூறாக இருக்க வேண்டாம்.'

கல்லான நெஞ்சோடு அவள் பதிலளித்தாள்.

"இவரை முகாமுக்கே அனுப்புங்க".

அருணாசலம், பிரிய மனம் இல்லாமல் பிரிந்தார்.

குமுதினி, தன்னந்தனியாய் நடந்தாள். மரத்துப் போன மனசோடு, செத்துப் போன சிந்தனையோடு, சாவதற்காக நடந்து கொண்டிருந்தாள். அருணாசலத்திடம், காசிநாதனைப் பற்றிக் கேட்காதது கூட, அவளுக்கு உறைக்கவில்லை.

கிண்டியைத் தாண்டி, அண்ணாசாலை வழியாக, அவள் நின்று நின்றும், வேக வேகமாகவும் நடந்தாள். அவள் பார்க்காமலே பல காட்சிகள் அவள் கண்ணில் முட்டின.

ஆங்காங்கே ஆர்பாட்டங்கள். அத்தனைபேர் உடைகளிலும், இலங்கையின் சோகத்தை உள்வாங்கும் கருப்புத் துணிகள், தொழிலாளர் ஊர்வலங்கள், பல்வேறு கட்சிகளின்

சுவரொட்டிகள். பெண்களின் ஊர்வலங்கள், முக்கிய இடங்களில் உண்ணாவிரதங்கள், பாய்ந்து சென்ற வாகனங்களில் துக்கக் கொடிகள். 'இந்திய அரசே ராணுவத்தை, அனுப்பு' என்ற முழக்கங்கள். அன்றாடப் பிழைப்புக்காரர்கள் கூட ஆர்ப்பாட்டம் நடத்திக் கொண்டிருந்தாக்ள். அவர்களின் கரங்களில் போராளித் தனமான அட்டைகள். கண்களில், இலங்கயை எரிக்கப் போவது போன்ற அக்கினிப் பிழம்புகள்... கொடும்பாவி எரிப்புகள்.

தானும் ஆடி, சதையும் ஆடி, தமிழகமே ஆடிப் போனதை, குமுதினி உள்வாங்கினாள். இலங்கை தமிழர்களுக்காக இங்குள்ள தமிழர்கள், ஊழி நடனம் ஆடுவது போல், அவள் பார்வைக்குப் பட்டது. பார்க்கப் பார்க்க, அவளுள் இனம் காண முடியாத ஓர் இன உணர்வு ஏற்பட்டது.

'இவர்கள் எல்லாம் யாருக்காக இப்படிச் செய்கிறார்கள்? இவர்கள் ரத்தம் ஏன் இப்படி துடிக்கிறது? இதுதான் இனம் என்பதோ? இதுதான் ரத்தபந்தம் என்பதோ? இவ்வளவு பெரிய தமிழ்க் குடுமபத்தில் நான் அனாதையா? எம்மவர்களுக்காக உடலாலும், உயிராலும் துன்பப்படும் இவர்கள் என் சோதர, சோதரிகள். என் அப்பன்கள், என் அம்மாக்கள், உடன் பிறந்தவர்கள், உறவினர்கள், நான், இந்த இனத்தளத்தில்தான் நடமாடுகிறேன். ஓர் அப்பாவின் மரணத்தில் இதோ பல தாய் தந்தையரை பார்க்கிறேன். ஒரு சில குடும்பத்தின் மரிப்பில் ஐந்துகோடிப் போரைக் கொண்ட தமிழ்க் குடும்பத்தை தரிசிக்கிறேன். நான் அனாதையில்லை. தற்கொலை செய்து கொள்ளும் கோழையில்லை. இந்த மொழி என் தாய்... இந்தத் தமிழகம் என் வீடு... இவர்கள் என் சோதரர், சோதரிகள்... நான் சாக மாட்டேன். சாவுக்கும் போகமாட்டேன். இலங்கைக்கும் போகமாட்டேன். காசிநாதன் ஒருவேளை உயிரோடு இருந்தால், அவர் இங்கேதான் வரவேண்டும். எந்த தகவலும் தெரியாத காசிநாதனைவிட இப்போது என்னிடம் ஆறுதலுக்காக புலம்பிய பெரியவர் அருசணாசலமும், இங்கே, அகதிகளாக குவியும்

இலங்கை தமிழர்களுமே எனக்கு அதிக முக்கியம். இவர்களுக்கு, ஒரு சேவகியாக இருப்பேன். சேவிப்பேன்...

தனி வாழ்வில் செத்து, பொது வாழ்வில் பிழைத்த குமுதினி, ஆர்பாட்டக்காரர்களையும், உண்ணாநோன்பு கொண்டவர்களையும் கையெடுத்துக் கும்பிட்டாள். வேக வேகமாக நடந்தாள்.

அருணாசலம் அகதி முகாமுக்கு அனுப்பப்படுவதற்கு முன்பே, அவரைத் தன்னோடு அழைத்துக் கொள்வதற்காக வேக நடையாய் நடந்தாள். உயிரோட்டமாய், உணர்வோட்டாய் ஓடினாள்.

கலைமகள் (தீபாவளி மலர்) - 1990

# தலைப்பாகை

பராபர பரம்பொருளாய், ஒரு கடலே, முக்கடலாய், முக்கடலே ஒருகடலாய் சங்கமிக்கும் கன்னியா குமரியில் இருந்து வடமேற்காய் ஐந்தாறுகல் தொலைவில் உள்ள சஸ்தா விளை, பூவண்டர் தோப்பாய் பெயர்மாற்றம் பெற்று, அந்தப் பெயரும் ரகசிய ரகசியமான பரம ரகசியமாய் சாமித்தோப்பு என்று அழைக்கப்பட்ட காலம்.

திருவாங்கூர் சமஸ்தான மன்னரும், இசை மேதையுமான சுவாதித் திருநாள், சுசீந்திரம் தாணுமாலயன் ஆலய வருகையை முன்னிட்டு, மேலே ஆகாய தோரணங்களாய் அகண்ட கொடைகள் விரிக்கப்பட்டு, தாராய் மினுங்கும் மேல்சாதி நெடுஞ்சாலை... இந்த ஆலயத்திற்கு அழைத்துச் செல்லும் பிரதான சாலையில் கூடும் இடத்தில் தெருமறிச்சான்கள் பொருத்தப்பட்டு இருந்தன. வைக்கோல் புரியில் இடைவிடாது கட்டப்பட்ட வேப்பிலைக் கொத்துக்களைக் கொண்ட இந்த தடுப்பூத் திரை, குறுக்காக வழிமறித்தது. கீழ்சாதிக்காரர்கள், கோவிலுக்குள் போவது இருக்கட்டும், அந்த ஆலயத்தை கண்ணால்கூட பார்த்துவிடக் கூடாது என்பதற்காக நிரந்தரமாக வைக்கப்பட்டவை. இந்த மறிச்சான், உள்ளே நுழையும் மேல்சாதிக்காரர்களுக்கு ஒரு வருடல்... கீழ்சாதிகளுக்கோ, ஒரு தூக்குக் கயிறு. ஒன்றே இரண்டான கொடுமை.

இப்படிப்பட்ட மேல்சாதி சாலையில் இருந்து, இந்த ஆலயத்திற்கு முன்பே ஒருகல் தொலைவில் ஒதுங்கியும் - ஒதுக்கப்பட்டும் போகும் மண் பாதை. கருவேல மரங்களின் வழி

மறிப்பாலும், பயமுறுத்தும் கள்ளிப்புதர்களாலும் பிறபடுத்தப் பட்டும், பாதாள பள்ளக்குழிகளால் தாழ்த்தப்பட்டும் போன இந்தப் பாதை, தனது தகுதிக்கு ஏற்ற, அந்த குக்கிராமத்திற்கு, வளைந்தும், நெளிந்தும், பனைமரக் குவியல்களுக்கு வழிவிட்டும், கற்குவியல்களில் மறைந்தும், சமதளத்தில் மீண்டும் தன்னை போன்ற ஆட்களை அழைத்துச்சென்று கொண்டிருந்தது.

இந்தப் பாதையில், ஆண்டிச்சியும், அவள் கணவன் சுடலைமாடனும், வேகவேகமாக ஆங்காங்கே தென்பட்ட, இதர ஏழை பாளைகளோடு, அந்தக் கிராமத்தை நோக்கி நடந்து கொண்டிருந்தார்கள். ஆதரவு தேடும் அனாதைகளாய் கல்லும், முள்ளும் காலுக்கு செருப்பாய் நடந்து நடந்து, சாமித்தோப்பின் நடுப்பகுதியின் எல்லையோரத்தில் குமைந்து கொண்டு நின்றார்கள்.

உடம்பில் வைரம் பாய்ந்தாலும், உள்ளத்தில் முருங்கை பாய்ந்ததுபோல், ஆறடி உடம்பை நான்கடியாய் சுருக்கி, முட்டிக்கு கீழே போகாத மூன்றடி வேட்டியை ஈரடியாய் சுருட்டி, தன்பாட்டுக்கு நின்ற வீட்டுகாரனோடு, அந்தக் கொட்டடியின் வடக்கு வாசல் பக்கம் மொய்த்த கூட்டத்திற்குள் கலக்க முடியாமல், சிறிது தொலைவில் ஆண்டிச்சி நின்றாள். நடந்ததை நினைத்து கோபப்பட்டும், நடக்க போவதை நினைத்து அச்சப்பட்டும், அவள் கண்ணீரும் கம்பலையுமாய் துவண்டாள். அவள் விவரித்த அந்தக் கொடுமையைக் கேட்டும், நெருப்பு பற்றாத கணவனின் முகத்தை பார்க்கவே அவளுக்குப் பிடிக்கவில்லை.

இந்த இடத்திற்குகூட, அவள்தான், அவனைக் கூட்டி வந்தாள். அப்போதும் அவன் அந்த கூட்டத்திற்குள் போகத் தயங்குவதை பார்த்துவிட்டு, அவள், அவனை கோபங்கோபமாக திட்டினாள். அவன் முதுகை, கூட்டத்தை நோக்கி தள்ளி விட்டாள். அவனோ, அவளை ஒரு சுற்று சுற்றிவிட்டு, பின்பக்கமாய் நின்று கொண்டு, அவளை தள்ளி விட்டான். உடனே, ஆண்டிச்சி, அவனை அடிக்கப்போவதுபோல் கையை தூக்கிவிட்டு, பின்பு

அப்படி தூக்கிவிட்ட கைகளை உதறினாள், பின்னர், தனது தலையிலே அடித்துக் கொண்டாள்.

முட்டுக்கு கீழே அரையடி சென்ற சேலையை மேல்நோக்கி இழுத்து, மாராப்பு என்ற பேர்பண்ணி, இடுப்புக்கு மேலே தோள்வரை ஒன்றைச் சுற்றாய் சுற்றி இருந்தாள். அவள் தலையிலும், தோளிலும் ஈரச் சொட்டுகள்... ஈரம் காயாத, சின்னச் சின்ன மண்பானைச் சிதறல்கள்... இடையிடையே சோற்றுப் பருக்கைகள்... கருப்பும் அழகு என்ற இழிவும்மையை நீக்கி, கருப்பே அழகு என்னும்படியான ஏகார அழகுத் தோற்றம். புதுவைக்கு அருகே உள்ள வக்கிரகாளி அம்மன் காட்டு வளாகத்தில் உள்ள ஒருவகை மரங்கள், காலப்போக்கில் மரத்தன்மை போகாமலே, இரும்பாகிப் போனது போன்ற, பெண்மை இழக்காத கம்பீரமான உடல் வாகு...

சுசீந்திரம் வளைவு பாலத்தில் இருந்து ஒருகல் கிழக்காவும், மூன்றுகல் வடமேற்காகவும் உடல் உபாதை இல்லாமல், மனோ வாதையுடன் ஓரடியை ஈரடியாய் அரைநாழிகையில் நடந்து முடித்த அவளால், அங்கே உள்ள நூறடி இடை வெளியை கடக்க இயலவில்லை. கண்நோக்கும் பார்வைகுள் சிக்கும் அந்தக் கொட்டடிக்கு முன்னால், மண்டி நிற்கும் ஆண், பெண் அத்தனை பேரும், கழுவிவிட்ட பளிங்கு கற்கள் போல் மினுமினுப்பாகவும், வெள்ளையும், சொள்ளையுமாகவும் காட்சி அளிப்பதை கண்டதும், அவள், தனது அழுக்குத் துணியை பார்த்தும், தூசி துரும்புகள், மண் துகள்கள் மலிந்த நிரம்பிய உடம்பை பார்த்ததும், கூசிப் போனாள். நெருப்பால்கூட பற்றமுடியாத அளவிற்கு அழுக்கு படிந்த வீட்டுக்காரனின் வேட்டியை பார்த்தும் அவளுக்கு கோபமும் அழுகையும் போட்டிபோட்டு வாயிலிருந்தும், கண்களிலிருந்தும் வெளிப்படத் துடித்தன.

'அரகர அரகர சிவ சிவ அய்யா' என்ற முழக்கம், அந்த கொட்டடி முன்னால் குவிந்த மனிதர்களிடமிருந்து ஒற்றைக் குரலாய் எழுந்தது. அங்கிருந்து கிளை பிரிந்து வெளிப்பட்ட

மக்களிடம், குழுச் சத்தமாகவும், தனிச் சத்தமாகவும் கேட்டது. அரகர சிவ சிவ என்ற புதுமையான - புரட்சியான முழக்கம் மாடன்களையும், மாடத்திகளையும் வணங்கும் அந்த மக்கள் அதுவரைக் கேட்டறியாத ஒரு அசாதரணமான சாதரண மந்திரம்...

சுடலை மாடனையும், முத்தாரம்மனையும் மன துக்குள் இருந்து எடுத்துப்போட்டுவிட்டு, நின்ற, ஆண்டிச்சியும், அந்த சத்தத்தை உள்வாங்கினாள். அந்த முழு முழக்கத்தையும் அச்சரம் பிசகாமல் கா து வழியாக உள்வாங்கி கட்புலனில் நிறுத்திக் கொள்ள, அவள் சிரமப்பட்டாள். ஆனாலும் அந்த சொற்றொடரின் முற்றுப்புள்ளிச் சொல்லே முதல் சொல்லாய் மீண்டும் மீண்டும் ஒலிக்கும் 'அய்யா' என்ற உச்சரிப்பு அவள் கண்களில் உப்பு நீரை கொட்ட வைத்தது. செயலற்று போய், ஓலைப் பாயில் ஒடுங்கி கிடக்கும், தன்னைப் பெற்ற சொந்த அய்யாவுக்கும் அய்யாவான ஒரு பேரய்யாவை காணத் துடிக்கும் தாக்கத்திலும், இயலாமையிலும், அவள், அரகர சிவ சிவ என்ற கூட்ட உச்சரிப்பு முடிந்து, அய்யா என்ற நாதப்பிரவாகம் துவங்கும்போது, 'என்னப் பெத்த அய்யா' என்று சத்தம்போட்டே பிளிறினாள்,

அந்த உந்தலில், கூட்ட குகைகுள் கொலுவிற்றிருக்கும் வைகுண்டரை தரிசிக்க, பின் பாதங்களை தூக்கி, முன் பாதங்களில் நின்றாள். இரண்டு தலைகளுக்கு இடையே கண் துளைத்து, காவிக் கட்டிலில் சம்மணம்போட்டு உட்கார்ந்திருக்கும் அந்த உருவத்தை, எப்படியோ பட்டும் படாமலும் பார்த்து விட்டாள். உடனே உள்ளத்திற்குள் உறைந்துகிடந்த ஒருகோடி துயரங்கள், நூற்றுக்கணக்கான கண்ணீர் துளிகளாய் உருமாற்றம் பெற்று, வெளியே விழுகின்றன. தொண்டைகுள் சிக்கிய துக்கம், வாய் வழியாய் வார்த்தைகளாய் விழுகின்றன.

'என்னப் பெத்த அய்யா... எனக்கா இந்த நெலம?... இல்லாதவன் பொஞ்சாதி எல்லாருக்கும் மயினி என்கிற ஊர் கத என் கதயா ஆயிட்டே அய்யா... இங்க வந்து ஒம்ம மகள கூட்டிட்டு போமுய்யா... அய்யா... என்னப் பெத்த அய்யா...'

ஆண்டிச்சி, கண்ணீரும் கம்பலையுமாய் கத்தினாள். அவளை ஆறுதலாய் பற்றப்போன கணவனை, ஒரு உதறு உதறினாள். அதனால், கண் நிறைந்த நீர்த் துளிகள் சொட்டு நீர் பாசனம்போல், அங்குமிங்குமாய் சிதறின.

திடீரென்று, தனது கண்களை, மென்மையாக விலக்கிய கரங்களை முரட்டுதனமாக விலக்கியபடியே, ஆண்டிச்சி கண் திறந்தாள். நடுதர வயதில் ஒரு பெண்ணை பார்த்தாள். அவள் காதுகளில் ஆடும் பாம்படங்கள், ஆண்டிச்சியை வரவேற்பதுபோல் தோன்றின. எதிரே வந்து நின்றவள், அன்போடு வேண்டினாள்.

'இங்க வந்துட்டா அழப்பிடாது... ஒன்ன அழவச்சவியதான் அழணும்'

கணவன்கார சுடலை மாடனுக்கு, தனிமைத் துயரம் போய், ஒத்தாசைக்கு ஒரு தாய் கிடைத்த ஆறுதல்... முதல் தடவையாகப் பேசினான்.

'அம்மாவுக்கு எந்த ஊரு...'? சாமிய பாத்து முடிச்சாச்சா...

'எனக்கு இந்த ஊருதான்... என் பேரு திருமாலம்மாள்... நான், அய்யாவோட அத்த மகள்... ஊரல் வாய்மொழியில வாக்கப்பட்டு, புருசன பறிகொடுத்திட்டு... ரெண்டு பிள்ளியளோட திரும்புனவள்... முத்துக்குட்டிக்கு எட்ட நின்னே சேவகம் செய்யுற பாக்கியம் எனக்கு கிடச்சிருக்கு...'

'முத்துக்குட்டின்னா.. யாரும்மா...'

'நான் ஒரு பாதகத்தி... ஒண்ணாப் பழகுன பழைய நெனப்புல தெரியாத்தனமா அந்த நாராயண சொரூபத்த பழைய பெயரவச்சி சொல்லிப்புட்டேன்'

தோள்தட்டும் சதைக் குழாயாய் பாம்படங்கள் தொங்கும் காதுகளோடும், கேள்விக் குறி கண்களோடும், நெற்றியில் ஒற்றை செம்மண் நாமத்தோடும், வெள்ளைப் புடவையோடும், கணவன் இறந்தாலும் கழுத்தில் மங்கல நாணோடும் தோன்றிய

திருமாலம்மாளை, ஆண்டிச்சி, ஆச்சரியமாகப் பார்த்தபோது, திருமாலம்மாள் அந்தப் பார்வையின் பொருள் புரிந்து விளக்கம் அளித்தாள்.

'ஊரு உலகத்துல எல்லா சாதியிலயும் புருசமாரு இறந்துட்டா... பொண்டாட்டிமாரு தாலிய கழட்டணும்... நகநட்டு போடப்புடாது... பூவையும் பொட்டையும் தொடக்கூடாதுன்னு... அந்த காலத்துல இருந்தே வழக்கப்பட்ட இந்த காலத்து முறைய, நம்ம நாராயண சொரூபம் மாத்திட்டாரு... 'புருஷன் செத்தாலும் பொட்டச்சுவ தாலிய கழத்தப்படாது... மூளியாய் நிக்கப்படாதுன்னு' உபதேசம் செய்யுறாரு. இதனாலயே அவரு மேல எல்லாருக்கும் கோபம். ஆனா அவர ஒரு தடவ பாத்துட்டா அந்த கோவமே பயபக்தி ஆயிடும்... நம்மசாமி அப்பேர்ப்பட்ட சாமி'

ஆண்டிச்சிக்கு எதையும் மாற்றிக் கொள்ளலாம் என்ற புதிய எண்ணம் ஏற்பட்டது. அந்த எண்ணத் தாக்கத்தில், திருமாலம்மாளிடம், தான் பட்ட பாட்டை சொல்லத் துவங்கினாள்.

'ஒங்கள என் அம்மா மாதிரி நெனச்சி... இன்னிக்கி நான்பட்ட பாட்டையும், நாளைக்கு படப் போற பாட்டையும் சொன்னாத்தான் என் தல வேசாகும்மா... சொல்லட்டுமா புண்ணியவதி?'

'எல்லாத்தையும் மொதல்ல... அய்யாகிட்ட சொல்லு... அப்புறமா நீ சொன்னதையும், அதுக்கு அய்யா சொன்னதையும், என்கிட்ட சொல்லு... இப்பவே சொல்லிட்டா... அப்புறம் அய்யாகிட்ட சொல்லும்போது ஒனக்கு வேகம் குறஞ்சிடப்படாது பாரு'

'இந்த பன்னாட கோலத்தில எப்படிம்மா போறது?'

'யாரு ஒன்ன இப்படி போகச்சொன்னது?... ஒன்ன மாதிரி... என்ன மாதிரி எளிய சனங்க ஊரு கிணத்துலயோ... குளத்துலயோ குளிக்கமுடியாம, மேல் சாதிக்காரனுவ தடுக்கான். சுசீந்திரம்

கோயிலையோ... பகவதியம்மன் முகத்தையோ பார்க்க முடியாம தெருமறிச்சான் வச்சி மறைக்கான்... இதனாலதான், நம்ம அய்யா... பள்ளுப்பறை பதினெட்டு சாதியும்... எந்த தடயும் இல்லாம குளிக்கதுக்கு முத்திரிக் கிணறு உற்பத்தி செய்திருக்காரு... நிழல் தாங்கலுன்னு கோயில்கள ஏற்படுத்தியிருக்காரு... நம்ம சனங்க ஆடுமாடு பண்ணிகள பலியிட்டு, அதுகள மாதிரியே ஆயிட்டு வாரத தடுக்கதுக்கு உயிர்பலி வேண்டான்னு உபதேசிக்காரு. பரம் பொருளுக்கு எதுவுமே தேவையில்லன்னு, அத ஒளி வடிவத்துல கும்பிட வைக்காரு. சரி சரி... நேரா முத்திரிக் கிணறு போயி, ரெண்டு பேரும் துணிமணிகளை கசக்கி துவச்சி குளிங்க... நல்ல சமயத்தில வந்தீக... வெண்நீசனான வெள்ளைக்காரன் துணையோட... கலி நீசனான திருவாங்கூர் மவராசவோட பட்டாளத்து சிப்பாய் பயலுவ அய்யாவ வதைசெய்து சிறைசெய்து விலங்குபோட்டு, அடிஅடின்னு அடிச்சி இழுத்திட்டு போவும்போது, அந்த முத்திரிக் கிணறையும், முழுசா உப்புபோட்டு மூடிட்டானுவ... போன வாரந்தான் கிணற சுத்தி செய்தோம்... சீக்கிரமா போயி குளிச்சி முடிச்சி, ஈரத் துணியோட அய்யா முன்னால போயி நில்லுங்க... ஒங்களுக்கு விமோசனம் தானா வரும்'

திருமாலம்மாள், தான் நிற்பது வரைக்கும் அவர்கள் போகமாட்டார்கள் என்ற அனுமானித்ததுபோல், சிறிது விலகிப்போய் நின்று கொண்டு, அவர்களை போகும்படி வலது கையை ஏற்ற இறக்கமாய் ஆட்டிக் காட்டினாள். உடனே, அந்தப் பக்கமாய் அரகர சிவ சிவ அய்யா என்று ஓதிக்கொண்டே சென்ற கூட்டத்தோடு ஆண்டிச்சியும், சுடலை மாடனும் சேர்ந்து கொண்டார்கள்.

முக்கால் கல் தொலைவில் உள்ள எண்கோண கிணற்றைச் சுற்றி மனிதச் சுவர்களான எளிய சனங்கள், ஆண், பெண் வித்தியாசம் இன்றி, தோண்டிப்பட்டைகளின் நடுப்பக்கம் உள்ள பூவரசு கம்புகளின் மேல் கட்டப்பட்ட கயிறுகளை கிணற்றுக்குள்விட்டு நீரை மொண்டு மொண்டு தலையில் ஊற்றினார்கள். ஓலை

குடிசைகளில் செருவை எனப்படும் பனைவோலை வேயப்பட்ட ஒதுக்குப் புறத்தில், மண் பானையில் உள்ள அரைகுறை தண்ணீரை, சிறட்டைகளில் மோந்து, காசை செலவளிப்பது போல், சிறிது சிறிதாய் ஊற்றிக் கொள்கிறவர்கள், அப்போது தண்ணீரை வெள்ளமாக உடம்பெங்கும் வியாபிக்கவிட்டார்கள். ஆனாலும் ஒரு பெரியவர் ‘அஞ்சி தோண்டிப்பட்டைகளுக்கு மேல ஊத்தப்படாது’... குளிச்சதும் ஓடிடப்படாது... தோண்டிப்பட்டை தண்ணிய அஞ்சி தடவ உள்ளங்கையில ஊத்தி குடிக்கணும்... அஞ்சி தடவ அரகர சிவ சிவ அய்யான்னு சொல்லணும்... அய்யா நமக்கு கொடுத்திருக்கிற எல்லாமே அஞ்சு என்கிறது ஏழை மக்களோடு பஞ்சாட்சரம்... மெய், வாய், கண், மூக்கு, செவி என்கிற ஐம்புலன்கள்... நீர், நிலம், காற்று, நெருப்பு, ஆகாயம் என்கிற பஞ்ச பூதங்கள்... இந்த நெனப்போட குளிக்கணும்’ என்றார்.

தும்பைப் பூ வேட்டியோடு பாகவத தலையோடு தோற்றம்காட்டிய அந்தப் புலவரை, சிறுவர்கள் சிறிது விசனமாகப் பார்த்தார்கள். ஆறுமாதமாக குளிக்காத உடம்பில் ஐந்து தோண்டிப்பட்டை தண்ணீர் தலைக்கு மட்டுமே போதாது... ஆகையால் அந்த சிறுவர்கள் தோண்டிப்பட்டை எண்ணிக்கை வரம்புகளை மீறி, குளித்துக்கொண்டிருந்தார்கள். இதைப் பார்த்த வாலிபர்களும், இளம்பெண்களும் தங்களோடு வந்த முதியவர்களுக்கு தெரியாமல் கிணற்றின் ஒவ்வொரு கரைக்கும்போய் ஐந்தந்து பட்டைகளாக அள்ளி அள்ளி உடம்பில் படர விட்டார்கள். அதே சமயம் இப்படி குளிக்க வைத்த வைகுண்டரை நினைத்து அரகர சிவ சிவ அய்யா என்ற நாதத்தை ஐந்து தடவைக்கு மேலேயே ஒலிக்கவிட்டார்கள்.

ஆண்டிச்சியும், சுடலை மாடனும், ஒரு உபகாரி கொடுத்த தோண்டிப்பட்டையால் குளித்து முடித்து, கட்டிய துணியையும் உடலோடு சேர்த்து கசக்கினார்கள். அவர்கள் உடம்பு, கல் போலவே இருந்ததால், அந்த துணிகளும் கல்லில் உரசப்

பட்டவைபோல் வெளுத்துவிட்டன, பின்னர், உடம்புகளை காட்டிக் கொண்டிருந்த ஈரத்துணி, அதே மேனிகளை மறைக்கும் அளவிற்கு லேசாய் காய்ந்தபோது, அவர்கள் கூட்டப்பதியை நோக்கி திரும்பினார்கள். எல்லோரையும் போல், அவர்கள் உடம்பிலும் ஒரு மினுக்கம்... நடையில் ஒரு வேகம்... சுத்தம் சுகம் தரும்... என்பதை சொல்லாமல் சொல்லும் முத்திரிக்கிணறை மாறி மாறி திரும்பி கைக் கூப்பியபடியே ஒருவர் கரத்தை இன்னொருவர் பற்றிக் கொள்ள மனச்சுமை குறைந்த தெம்பில் நடந்தார்கள்.

அந்தக் கொட்டடியின் வடக்கு வாசலில் தொடர்ந்து கூட்டம் மொய்த்துக் கொண்டிருந்தது. ஆனாலும் புதிய வரவுகளுக்கு வழிவிடும் வகையில், நான்கடி அகல, நீள வாக்கிலான இடைவெளியும் இருந்தது. ஈரத் துணிக்காரர்கள், வரிசை வரிசையாக போய்க்கொண்டிருந்தார்கள். இவர்களில் பலர் கூட்டத்தில் சங்கமித்தனர்... சிலர், மனித வேலி கொண்ட அந்த பாதை வழியாக வெளியேறிக் கொண்டிருந்தார்கள்.

வரிசை வரிசையாக வந்து காய்ந்து போன ஈரமக்களை தள்ளியும் அவர்களால் தள்ளபட்டும், ஆண்டிச்சியும், சுடலைமாடனும், வைகுண்டரை பார்க்கும் தொலைவிற்கு வந்துவிட்டார்கள்.

வழக்கமான, நான்கு கால் கட்டிலிற்குப் பதிலாக, ஆறுகால் கட்டில்... அதன்மேல் ஒரு காவிப் போர்வை... காவியுடுத்த வைகுண்டருக்கு நாற்பது வயது இருக்கலாம். நெற்றியில் செம்மண் நாமம் கால்மேல் காலடக்கி உட்கார்ந்திருந்தார். பார்க்கப் பிராயமுமாய், படுக்க கிழவனுமான ஒருவித அத்வைத தோற்றம்... சிறுபிராயத்தில் மல்யுத்த, சிலம்பு பயிற்சிகளில் ஈடுபட்டதைக் காட்டும் பரந்த மார்பும், ஒரு காளையின் திமில் போன்ற தோள்களும் கொண்ட திருவுருவம்... கண் நிறைந்து... - அதே சமயம் கண்ணுக்குள் சிக்காத தோரணை... அவரைச் சுற்றி நிற்கும் அத்தனை பேருக்கும் விதவிதமாய், பேருக்கு மட்டுமே காட்டும் மாயத்

தோற்றம். அதுவே அவர்களுக்கு யானை தோற்றமாகிறது. திமிறி நிற்கும் பம்பைத் தலையும், தலைமுடியிலிருந்து இரண்டு மூன்று விழுதுகளாய் விழுந்துகிடக்கும் சடைகளும், அவர்களை பயமாக்குகிறது. ஆனாலும் அந்த கண் வெளியிடும் ஒளிக்கற்றைகள் அவர்களின் பயத்தை பாதியாக குறைத்து பயபக்தியாக்குகிறது.

வைகுண்டரின் கட்டிலுக்கு கீழே, ஒரு மணையில் வரம்பெற்றான் பண்டாரம் உட்கார்ந்து, அய்யாவிடம் முறையிடும் எளிய சனங்களின் கோரிக்கைகளை காதுகுவித்து உள்வாங்கி, பின்னர் அய்யாவின் முகபாவனையை பார்த்து அதற்கேற்ப அவர்களுக்கு அறிவுரை சொல்லிக் கொண்டிருந்தார். ஒரு கலயத்தில் உள்ள செம்மண்ணில் ஒரு திரளை எடுத்து, அந்த மக்களுக்கு 'தொட்டு நாமம்' சாத்தினார். அவர்களது உள்ளங் கைகளில், ஒரு பெரிய செப்பு தவலையில் உள்ள முத்திரி கிணற்று நீரை, ஒரு குவளையில் மொண்டு, ஐந்து தடவை ஊற்றி சிறிது மண் எடுத்து அவர்கள் வாயில் போட்டு குடிக்கப் பணித்தார். அய்யா இருக்க பயமேன் என்று அவர்களை ஆற்றுப்படுத்தினார். அவ்வப்போது, வைகுண்டரைப் பார்த்து கும்பிட்டுக் கொண்டார். சில சமயம், அவரது வாயருகே காது குவித்தார்.

வைகுண்டரின் பஞ்ச பாண்டவ சீடர்கள் வரிசை மீறும் கூட்டத்தை வழிப்படுத்திக் கொண்டிருந்தார்கள். அய்யாவின் வாகனக்காரர்கள், அவர்களுக்கு உதவிக் கொண்டிருந்தார்கள். ஒரு சிலர், தீராமல் கிடந்த தங்களது வியாதிகள், அய்யாவால் தீர்ந்துபோனதை சத்தம்போட்டே சொல்லிக் கொண்டிருந்தார்கள். அரகர சிவ சிவ உச்சரிப்பில் அவர்களின் வாய்களில் அவை, மந்திரச் சொற்களாக ஒட்டிக்கொண்டன. அடிக்கடி தரிசனத்திற்கு வந்துக்கொண்டிருப்பவர்கள் குனிந்த நிலையில் நின்று 'அய்யா நாங்கள் அறிந்து அறியாமல் செய்ததெல்லாம் அய்யா பொறுக்கணும்' என்று ஐந்து தடவை திரும்ப திரும்பச் சொல்லி கைகளால் வாய்களைத் தட்டினார்கள். பின்னர் நிமிர்ந்து நின்று 'அய்யா பொறுத்து - அய்யா மாப்புத்தந்து-அய்யா வச்சி

ரட்சிக்கணும்-அய்யா பொறுமை தரணும்-அய்யா, நாங்கள் ஒண்ணு சொன்னது, ஒண்ணு கேட்டு என்று இருதடவை சொல்லிவிட்டு, மீண்டும், 'ஒண்ணுக்கு ஒண்ணு' நிரப்பாக இருக்கணும் - அய்யா நல்ல புத்தி தரணும் - அய்யா அன்னமும் வஸ்த்திரமும் தரணும் - அய்யா வச்சிரட்சிக்கணும் - அய்யா எங்களை யாதொரு நொம்பலமில்லாமல் - யாதொரு சஞ்சலமில்லாமல் அய்யா வச்சிரட்சிக்கணும்' என்று பொதிப்பு (பிரார்த்தனை) செய்தார்கள்.

குனிந்த தலை நிமிராமல், தருமம் தலை கவிழ்ந்ததுபோல் நடந்த ஆண்டிச்சி, வைகுண்டரின் முன்னால், தான் நிற்பதைப் பார்க்கிறாள். அவரைப் பார்க்கப் பார்க்க கண்கள் குளமாகின்றன. அவர் தனது தந்தையைப் பெற்ற தாத்தா போல ஒரு காட்சிமை... ஒரு தடவை, ஒரு மேல்சாதி சிறுவன், தன்னை கிண்டல் செய்ததை அந்த தாத்தாவிடம் அழுதபடியே அவள் முறையிட்டதும், உடனே அந்த தாத்தா பின் விளைவுகளைப் பற்றி கவலைப் படாமல், எக்காளமாய் நின்ற அந்தச் சின்னப் பயலின் காதுகளை திருகியதும் நினைவுக்கு வருகிறது. உடனே, பயப்பிராந்தியின் கரைகள் உடைவதுபோல் தோன்றுகிறது. வைகுண்டர் முன்னால் வந்தததும் கண்ணீர் மழையாய் வாய்வெளி இடியாய் கொட்டுகிறது.

'அய்யா... என்னப் பெத்த அய்யா... நான் பட்டபாட்ட கொஞ்சம் கேக்கணும் அய்யா... செத்த நேரத்திற்கு முன்னால, வடகரைக்கு பக்கத்திலுள்ள தேரூர்ல இருந்து, தலையில கஞ்சிப் பானையை வச்சிக்கிட்டு, கூலி வேலைக்கு போறதுக்கு வயக்காட்டு பக்கமா வழக்கம்போல நடந்தேன். அப்போ எங்க ஊரு வலிய கணக்கெழுத்து என்னை வழிமறிச்சான். கையில வச்சிருக்கிற நடைக்கம்ப என் மார்புக்கு நேரா நீட்டி, அய்யோ அய்யயயோ... அந்த அக்கிரமத்த என் வாயல எப்படி சொல்லுவேன்...'

ஆண்டிச்சி, திடீரென்று தரையில் குப்புற விழுந்து வைகுண்டரின் பாதங்களை கண்ணீரால் கழுவிக் கொண்டிருந்தாள்.

வரம்பெற்றான் பண்டாரத்தின் சைகையில், சுடலை மாடன், மனைவியை தூக்கி நிறுத்தி, வைகுண்டரின் அருகே அவளை தலை கவிழ்த்தி நிற்க வைத்தான். பிறகு பண்டராத்தின் மவுன ஆணையின்படி அவனே விளக்கினான். ஆரம்பத்தில் வார்த்தைகள் அவனோடு மல்லிட்டன. ஆனாலும், அந்த வைகுண்ட பார்வையில் வார்த்தைகள் சுயம்புகளாயின.

'ஆம்பிளையான எனக்கே சொல்லமுடியலன்னா... அவள் பொம்புள... சொல்ல முடியாதுதான்... சொல்லுததுக்கே உடம்பு கூசுதுய்யா... ஆனாலும் அய்யாகிட்ட சொல்லாம யார்கிட்ட சொல்ல? அந்த மேல்சாதிக்காரன் என் பொஞ்சாதி மார்ப பார்த்து அதோடு பேரே சொல்லச் சொல்லி இருக்கான்... இவள்... அலறிப் பயந்து... கண்ணீரும் கம்பலையுமா மார்பு சாமி, நெஞ்சு சாமின்னு" தட்டுத் தடுமாறி சொல்லி இருக்காள். உடனே அந்தப் பாவிப் பயல், நடக்கம்புல இருக்கிற கொக்கிய வச்சி இவளோடு மார்பு முனையை திருகிக் கிட்டே 'இதோட பேரச்சொல்லுன்னு' அதட்டி இருக்கான். இவள், கோவத்துல அந்த பிரம்ப பறிச்சி கீழ எறிஞ்சிருக்காள் இதனால கீழ விழுந்த அந்த சீக்காளிப் பய... கீழ கிடந்தபடியே, விழுந்த கம்ப எடுத்து, இவள அடிஅடின்னு அடிச்சிருக்கான். அடிச்சாக்கூட தேவல... நாளைக்கும் வரப்போறதாயும், இவளோட மார்பு முனையை பழையபடியும் கம்புபோட்டு திருகப் போவதாகவும்' இவள் முலைக்காம்புன்னு சொல்லுதது வைரக்கும் இவள விடபோறதுல்லன்னும் சபதம் போட்டிருக்கான். அய்யா எங்கள ஒண்ணு இங்கேயே சேத்துக்கணும்... இல்லாட்டா எங்கள மானத்தோட அனுப்பணும்... இதுக்கு மேல, எங்களால தாங்க முடியாதுய்யா'.

சுடலை மாடனின் ஒவ்வொரு வார்த்தைக்கும், ஒவ்வொரு கேம்பலாய் வெளிப்படுத்திய ஆண்டிச்சி, இறுதியில் 'அய்யா... என்ன பெத்த அய்யா... என்னை... இந்த அவமானத்தில இருந்து காப்பாத்துமுய்யா... அய்யாவே அடைக்கலம்... புருசனும் வீரமில்ல...

போனவீடும் சரியில்ல நான் குலமான்... என்ன இப்படி பண்ணிட்டானே அய்யா... உம்மகிட்ட சொல்லாம யாருகிட்டே சொல்லுவேன்'? அவன் அப்படி பண்ணும்போது, நான் எங்க குலதெய்வம் உதிரமாடனத்தான் நெனச்சேன் ஆனா கெட்டதுலயும் ஒரு நல்லது மாதிரி 'இங்க நடந்தத, ஒன் பனையேறி சாமிகிட்ட சொல்லு... அவன்... என்னத்த கிழிச்சிப்புடுறான்னு பாப்போம்முன்னு.' கொக்கரிச்சான். அவனாலதான் இங்க வந்தேன் அய்யா'.

வைகுண்ட மந்திரத்தை மெல்ல வெளிப்படுத்திக் கொண்டிருந்த கூட்டம் மவுனமானது. வண்டுகள் போல் மொய்த்த மக்கள், இந்திய வரைப்படத்தின் தட்சிணம்போல் இடைவெளி கொடுத்து நின்றார்கள். வரம்பெற்றான் பண்டாரத்தின் வாயையே பார்த்தார்கள். அவரோ, ஆண்டிச்சியை ஒரு பார்வையாகவும், வைகுண்டரை மறுபார்வையாகவும் பார்த்துக் கொண்டிருந்தார்.

வழக்கத்திற்கு மாறாக வைகுண்டர் எழுந்தார். அவர் அடியும், முடியும் ஆடி, பின்னர் பாதாதி கேசம் வரை குலுங்கியது. கண்ணன், ஐந்து தலை நாகத்தின் மேல் நின்று ஆடியது போன்ற ஆட்டம்... சிவனின் ஊழியாட்டம் போன்ற உடலாட்டம்... மாகாளியின் உக்கிரப் பார்வை... ஆவேசப்பட்டவராய் வரம்பெற்றான் பண்டாரத்தைப் பார்த்து 'ஒரு நாமக்கட்டியையும் துண்டையும் எடுத்துட்டுவா' என்றார். அவை வருவதுவரைக்கும் ஆண்டிச்சியைப் பார்த்து, தன் கரத்தை முருகனின் அபயக்கரம்போல் ஆக்கிக் கொண்டார். அவளும் பாரம் இறக்கியவளாய் தனது அண்ணாச்சியின் வயதுள்ள அவரை மூலப் பரம்பொருளாய் காலப் பழமையாவும், புதுமையாவும் பார்த்துக் கொண்டே நின்றாள்.

நாமக்கட்டி வந்ததும், வைகுண்டர், அதில் முத்திரி நீரிட்டு, ஆள்காட்டி விரலால் ஒரு அழுத்து அழுத்தி, ஆண்டிச்சிக்கு வெள்ளை நாமம் சாத்தினார். பிறகு அவள் கணவனுக்கும் அதை சாத்திவிட்டு, பண்டாரம் கொடுத்த துண்டை எடுத்து அவன் தலையில் தலைபாகையாய் கட்டினார். பின்னர் அவனையும்

கூட்டத்தையும் மாறி மாறி பார்த்துக்கொண்டே உச்சக் குரலில் ஒலித்தார்.

"என் மக்கா! இன்று முதல், நீங்கள் வெள்ளை நாமம்தான் சாத்த வேண்டும்... செம்மண் நாமம், எதிரிக்கு தெரியவில்லை... இனிமேல் நன்றாய் துலங்கும் இந்த வெள்ளை நாமம் மூலம் சாதியின் பெயரால் ஏழை எளியவர்களை வதை செய்யும் அறக்கேடர்கள், நம்மை இன்னும் அதிகமாக வம்புக்கு இழுப்பார்கள். நான், அவர்களின் வம்பை வளர்த்து, பிறகு அழிப்பேன். இதில் சந்தேகம் வேண்டாம். தோளில் துண்டுகூட போட்டுக்கொள்ள தடைச் செய்யப்பட்ட என் மக்கா! இனிமேல் நீங்கள் தலைப்பாகை கட்டிக் கொள்ள வேண்டும். இங்கே உள்ள பதிக்கும் தலைப்பாகை கட்டியே நீங்கள் வரவேண்டும். ஒரு காவத்தில், நமக்கு உரிமையான உருமாக்கட்டில் கிடைத்த கத்தி தேவையில்லை. நெற்றியில் துலங்கும் ஒத்தை வெள்ளை நாமமும் அரகர சிவ சிவ என்ற மந்திரமும் கலி நீசனை பயமுறுத்தும்."

அரிசி மூட்டைகள், விறகுக் கட்டுகள் போன்றவற்றை எளிதாக சுமக்கும் சுடலை மாடனுக்கு, அந்த தலைப்பாகை பெருஞ்சுமையாய் வலித்தது. தலையே போனதுபோல் தவித்தான். ஒன்றும் புரியாமல் பேந்தப் பேந்த விழித்தான். இதை புரிந்து கொண்ட வைகுண்டர், அவனுக்கும் அவன் மனைவிக்கும் சொல்வதுபோல், அனைவருக்கும் உபதேசித்தார். அவர் உபதேசம் பாட்டாயும், உரையாயும் ஒலித்தது.

"கீழது எல்லாம் மேலது ஆகும்... மேலது எல்லாம் கீழது ஆகும்... குகையாளப் பிறந்த என் குழந்தாய்! எழுந்திரடா... இந்த அய்யா, ஒனக்குன்னு ஒன்றும் செய்யலுன்னு யோசிக்காதே மகளே... உன் ஆமக்கனுக்கு தலைப்பாகை கட்டி, அவன மனுசனாய் ஆக்கிட்டேன் இனிமேல், இவன் உன்மேல் ஒரு துரும்புகூட விழுவதற்கு விடமாட்டான். அய்யா உன்கூடவே இருக்கேன். நடைகம்பு வைத்தவன் நடைபிணமாவான். 'குலைய

விடாதிருங்கோ... குரு நினைவை வை... பக்தி உள்ள மக்களுக்கும்... புத்தி உள்ள மக்களுக்கும்... பயங்கள் தெளித்து வைப்பேன்... பதறாதே என் மக்கா... நாம ஆடுகள் அல்ல மக்கா... மாடுகள் இல்ல மக்கா... கிருஸ்துவ பெண்கள் வருசக் கணக்கா நடத்துற தோள்சீல போராட்டதுல நீங்களும் கலந்துக்கணும்... ஆணுக்கு தலைப்பாகை... பெண்ணுக்கு மாராப்பு... நெஞ்சுக்கு அரகர சிவ சிவ... இந்த அறக்கேடர்கள இந்த மூணுமே வதம் செய்யும்... கலங்காதீங்க மக்கா... நடத்திக் காட்ட நான் இருக்கேன்."

சிறிது நேரத்தில் வைகுண்டர் உணர்ச்சியின் உச்சத்தில் இருந்து, நிதானத்தின் அடிவாரத்திற்கு வந்துவிட்டார். ஆண்டிச்சியையும், அவள் கணவனையும் 'நான் இருக்கேன்' என்ற தோரணையில் பார்த்தார். பின்னர், பின்னால் நிற்கும் அவர்களைப் போன்ற எளியவர்களை ஒரு பார்வை பார்த்துவிட்டு, ஆண்டிச்சிக்கு, சுடலை மாடனுக்கும் கண்களால் விடை கொடுத்தார்.

எளிய கூட்டம், எரிமலை கூட்டமாகிறது. ஒற்றை மனிதனாய் மாறி, அரகர சிவ சிவ அய்யா என்ற சொற்கள், போராளித் தனமாகின்றன. அந்த மனித தலைகள்மீது எண்ணில்லா கரங்கள் தலைப்பாகைப் போல் சுருள்கின்றன. வலது கை விரல்கள் பஞ்சபூதங்களாய் பரிணமிக்கின்றன.

கூட்டத்தில் பெரும்பகுதியினர், தத்தம் தூக்கு பையில் வைத்திருந்த மாற்று வேட்டிகளை எடுத்து, வைகுண்டரிடம் சமர்ப்பிக்கிறார்கள். சிலர், மாற்று வேட்டியில்லாத எளியவர்களிலும் எளியகோட்டுக்கு கீழே இருப்பவர்களுக்காக, தத்தம் வேட்டிகளை மூன்று துண்டுகளாக்கி அந்த அய்யாவிடம் கொடுக்கிறார்கள்.

வைகுண்டர், அந்த துண்டுகளை உயிர்ப்பித்ததுபோல், ஒவ்வொருவர் தலைக்கும் கிரீடம் சூட்டுவதுபோல் தலைப்பாகைக் கட்டிவிடுகிறார். மூன்று நாழிகை வரை, அவரது கைகள் ஓயவில்லை.

அந்த கூட்டத்திலிருந்து குகையிலிருந்து விடுபட்ட கடுவாய்போல், அய்ந்து விரல்களும் பஞ்சாயுதங்களாக, இரண்டு கண்களும் எரிமலையாக தலைக் கீரிடமான தலைபாகையுடன் சுடலை மாடன் படைநடையாய் நடக்கிறான்.

ஆண்டிச்சி-அந்த பெயருக்கு மாற்றாளாய், சொல்லாலும், செயலாலும் மாறியவள்போல், 'வலியகணக்கு நாளைக்கு வராமல் போய்விடக் கூடாதே' என்ற ஆதங்கத்தில், அவனை எதிர்கொள்ளும் தோரணையில் தன்க்குள் இருக்கும் ஒரு மகிசாசுர வர்த்தினியை கண்டுகொண்டதுபோல், தாய்மையும், தயவுமிக்க பேய்மையும் ஊடும் பவுமாக, ஆண்டிச்சிக்குள் நெசவிட, கணவனுக்கு இணையாக நடக்கிறாள்.

தினகரன் (பொங்கல் மலர்) - 2001

❖

# சேரிடம்

ஸ்கூட்டரை 'கம்யூனிட்டி ஷெட்'டில் விட்டு விட்டு, பசுபதி படிக்கட்டுகளில் ஏறினார். மூன்றாவது மாடியில் உள்ள குவார்ட்டர்ஸ்.

கணவனுடன் சீக்கிரமாகச் சண்டை போடணும் என்று நினைத்தவளாய், அவசரமாகக் கதவைத் திறக்கப்போன காமாட்சி, 'அவரே தட்டட்டும்' என்று கோபத்தோடு நின்றாள்.

பசுபதி, கதவைத் தட்டினார்.

"எனக்கென்ன காதா செவிடு? ஒரு தடவ தட்டினா போதாதாக்கும்" என்று சொல்லிக்கொண்டே காமாட்சி கதவைத் திறந்தாள்.

பசுபதி எதுவும் பேசவில்லை. வாஷ்பேசினில் முகத்தைக் கழுவிக் கொண்டார். உள்ளேபோய் ஆடைகளைக் களைந்துவிட்டு, ஒருநாலு முழவேட்டியைக் கட்டிக்கொண்டு வராந்தாவில் வெறுமையாக இருந்த ஒரு சாப்பாட்டுத் தட்டையும், மனைவியையும், உள்ளே சமையலறையும் மாறி மாறிப் பார்த்தார்.

காமாட்சியால் தாள முடியவில்லை. என்றாலும் அமைதியாகவே பேச்சைத் துவக்கினாள்.

"ராஜகோபாலன் வந்திருந்தார்."

"அடடே, அப்படியா... நம்ம வீட்டுக்கெல்லாம் சாதாரணமாய் வரமாட்டானே. என்ன விஷயமாம்...?"

"அவர் மகள் ரேவதிக்குக் கல்யாணமாம். நோட்டீஸ் கொண்டு வந்தார்."

"நல்லா இருக்கட்டும்."

"ராஜகோபாலன், குடும்பத்தப் பத்திக் கவலப்படுற மனுஷன். பொறுப்பான தகப்பன். நல்லாத்தான் இருப்பார்."

"சரி. நான் நல்லா இல்லாட்டா போறேன். விஷயத்தைச் சொல்லு. மாப்பிள்ளை யாராம்?"

"எல்லாம் தெரிஞ்ச இடம்தான். திருச்சில பெல்லுல வேலை பார்க்கிற சாரங்கன்தான். நம்ம மோகனாவைக் கேட்டாங்கல்லா? அவன்தான்."

"அடடே... அந்தப் பையனா. ரொம்ப நல்ல பையனாச்சே."

"அதனாலதான் மோகனாவுக்கு நகை போட்டாலுஞ் சரி, போடாட்டாலுஞ் சரி, கட்டிக் கொடுங்கன்னு கேட்டாங்க. இந்த வீட்ல நல்லது நடக்கறதுதான் ஒங்களுக்குப் பிடிக்காதே"

பசுபதி, மனைவியை ஏறிட்டுப் பார்த்தார். உள்ளறையில் இருந்து தன்னை எரித்து விடுவதுபோல் பார்த்த மகள் மோகனாவைப் பார்த்தார். நடக்கப்போகும் சண்டையை எதிர்பார்த்து ரசனையுடன் நின்ற மகனையும், லைட்டுப் போட்டால் மருமகள் திட்டுவாள் என்று பயந்தவள் மாதிரி இருட்டு வீட்டுக்குள் குருட்டுப் பூனை மாதிரி பதுங்கிக் கிடந்த அம்மாவையும், அவள் முழங்காலைப் பிடித்துக் கொண்டிருந்த தங்கை சிவகாமியையும் பார்த்தார்.

"நான் மட்டும் முடியாதுன்னா சொன்னேன்? தங்கச்சிக்கு மாப்பிள்ளை பார்த்துக்கிட்டு இருக்கேன், சீக்கிரமா முடிஞ்சிடும். ஆறுமாசம் பொறுங்கன்னு சொன்னேன். ஆறு மாசம் பொறுக்க முடியாதவன், நம்ம பொண்ணுகிட்டே ஏதாவது குற்றம் குறை இருந்தால் ஆயுள் முழுதும் பொறுப்பான் என்கிறது என்ன நிச்சயம்?"

"ஒவ்வொருத்தர் வீட்டில் அக்காள வச்சிட்டுத் தங்கச்சிக்குக் கல்யாணம் நடக்குது. இந்த வீட்ல அத்தக்காரிக்காக, என் பொண்ணு மொட்ட மரமாக நிக்க வேண்டியதிருக்கு. ஒங்க தங்கைக்கு அவளோட தலவிதிப்படி கல்யாணம் நடக்கல. அந்த விதிய என் பொண்ணுமேலே சுமத்துனா எப்படி?"

"இந்தா பாரு காமாட்சி... வீணாய் மேல மேல பேசிக்கிட்டு போகாதே. சிவகாமி, மோகனாவைவிட வயசிலே பெரியவள். அவளுக்குக் கல்யாணம் பண்ணுமுன்னே மோகனாவுக்கு நடக்காது. அப்படி நடக்கிறதும் நாகரீகமல்ல."

"என் மவளும் ஒங்க தங்கச்சியும் ஒண்ணு? கழுதயும் கவுரிமானும் ஒண்ணாயிடுமா? ஏற்கனவே அவளுக்கு வயசாயி கிழட்டு மாடு மாதிரி ஆயிட்டா. அவளுக்குக் கிழட்டு மாப்பிளகூடக் கிடைக்க மாட்டான். இதுக்காவ என் பொண்ண பலியிடணுமுன்னா முடியாது. நீங்க சம்மதிச்சாலும் சரி இல்லாட்டாலும் சரி, நான் நடத்தப் போறேன். என் பொண்ணும் ஒங்க தங்கச்சி மாதிரி கிழவியா போறத என்னால பார்த்துக்கிட்டு இருக்க முடியாது."

காமாட்சி அழுகிறாளா அல்லது கணவனை அழ வைக்கிறாளா என்று புரிந்துகொள்ள முடியாத அந்த நிலையில், இருட்டறைக்குள் இருந்த கிழவி தட்டுத் தடுமாறி வெளியே வந்து, தன் தலையில் பலங்கொண்ட மட்டும் அடித்துக் கொண்டாள். மகனிடம் முகம் பார்த்து கேட்டாள். 'கூடப் பிறந்த தங்கச்சிய நாயவிடக் கேவலமாப் பேசுறாள். நீ பார்த்துக்கிட்டு இருக்கியே... இருக்கியே...?"

மருமகள் காமாட்சியும், தனது தலையிலும் அடித்துக் கொண்டு, மாமியாரிடம் சொல்லால் மல்லாடினாள்.

"நீ என்னைக்கு இந்த வூட்ல வெள்ளைச் சேலையோட காலடி வச்சியோ அன்னைக்கே என் புருஷன் எனக்கில்லாமப் போயிட்டாரு"

மோகனாவும் சிவகாமியும் தத்தம் அம்மாக்களைப் பிடித்து இழுத்துக்கொண்டு போனார்கள். பசுபதி, இவர்கள் சத்தம்

பிளாக்கின் இதர காதுகளுக்குக் கேட்க வேண்டாம் என்று நினைத்தவர்போல், இருபது ஆண்டுகளுக்கு முன்பு வாங்கிய ஓட்டை ரேடியோவைச் சத்தமாக வைத்துவிட்டு வெளியே நடந்தார்.

பசுபதிக்கு, உச்சி முதல் உள்ளங்கால் வரை வலித்தது. நெற்றிப் பொட்டைத் தேய்த்து விட்டுக்கொண்டு, எதிரே இருந்த மைதானத்தில் போய் உட்கார்ந்தார்.

பசுபதி, அலவலகத்தில் நேர்மையாக நடப்பவர். கண்டிராக்டர்களுடன் 'கிசுகிசு' பேசி அறியாதவர். இதனால் 'கிசுகிசு' பேசிய பெரிய அதிகாரிகளால் முட்டுக்கட்டையாகக் கருதப்பட்டு, ஜீவனில்லாத எலும்பு கட்டையாக நடத்தப்பட்டவர். அவருக்குக் கீழே இருந்தவர்கள் மேலே போய்விட்டார்கள். அவருக்குச் சமமான பொறுப்பில் இருக்கும் இளைஞர்கள் கூட கார் வாங்கிவிட்டார்கள். சிலர், 'நான் வாங்கித் தரேன். நீரு பேசாமக் கையெழுத்து மட்டும் போடும்' என்று கூட அவரை அசைத்தார்கள். அவர் அசைந்து கொடுக்கவில்லை.

அன்று பசுபதிக்கு முக்கியமான வேலை இருந்தது. மனைவியின் நச்சரிப்பில் பத்தாண்டுகளுக்கு முன்பு, சகாய விலையில் ஒரு பிளாட் வாங்கிப் போட்டிருந்தார். அவர் வேலைபார்க்கும் கம்பெனி, வீடு கட்டுவதற்காக ஊழியர்களுக்குக் கடன் கொடுக்க முன்வந்தது. பலர் கட்டிய வீட்டையே இரண்டாவதாகக் கட்டிக் கடன் வாங்கி இருக்கிறார்கள். பசுபதி மீண்டும் மனைவியின் நச்சரிப்புத் தாங்க முடியாமல் கடனுக்கு மனுப் போட்டார். 'லேயவுட்' அங்கீகாரமானால் கடன் கிடைக்கும்.

வரைபடங்கள் அடங்கிய ஒரு காகிதக் கட்டுடன், பசுபதி ஸ்கூட்டரில் ஏறினார். முந்தின நாள் நடந்த சண்டைக்கு அனுதாபம் தெரிவிக்கும் வகையிலோ அல்லது அவரை அவமானப்படுத்தும் வகையிலோ பார்த்த சக பிளாக் ஆசாமிகளைப் பார்த்தும் பார்க்காதவர்போல் புறப்பட்டவர், 'நோ என்ட்ரியில்'

ஸ்கூட்டரை விட்டு விட்டார். போக்குவரத்து கான்ஸ்டேபிள் நேரிடையாகவே கேட்டுவிட்டார்.

"நோ என்ட்ரி போர்டு போட்டிருக்கே... பார்க்கலியா?"

"பார்க்கல ஸார்."

"சரி..... பார்த்தா படிச்சவர் மாதிரி இருக்கீங்க. உங்க பேரு அட்ரஸைச் சொல்லுங்க."

பசுபதி, அவரிடம் முகவரியைக் கொடுத்துவிட்டு, லே அவுட்டை அங்கீகரிப்பதற்காக உள்ள அலுவலகம் வந்தார். காகிதக் கட்டைக் கொடுத்து விட்டுத் திரும்பினார்.

அவரது லே அவுட் பிளான் ஆயிரத்தெட்டு கேள்விக் கணைகளுடன் திரும்பி வந்தது. அதேசமயம், அவரது பிளாட்டுக்கு அருகேயுள்ள பிளாட்காரருடைய பிளான் அங்கீகாரத்துடன் வந்தது.

பசுபதியால் தாள முடியவில்லை. 'என்ன உலகம். என்ன மனிதர்கள். சீச்சீ'

அவருக்குத் திடீரென்று ஒரு யோசனை தோன்றியது. அந்தப் பாடாவதி ஸ்கூட்டரை விற்றால் என்ன? பிளாட்டையும் விற்றால் என்ன? இரண்டிலேயும் கிடைக்கிற பணத்தில் தங்கச்சிக்கு ஒரு வழி பண்ணிடலாம்.

ஒரு மாதத்தில், அவர் தங்கை சிவகாமிக்கு, சுமாரான இடத்தில் முப்பத்தாயிரம் ரூபாய் விலையில், ஒரு பையன் கிடைத்தான். காமாட்சி, தாலிக் கட்டப்படும்வரை திட்டியதைக் கணக்கில் எடுத்துப் பார்த்தாலும், கல்யாணம் நன்றாகத்தான் நடந்தது.

சிவகாமி, கணவன் வீட்டுக்குப் போய்விட்டாள். ஆனால், அவளால் எழுந்த பிரச்சினைகள் போக மறுத்தன.

காமாட்சியும் சரி, பிள்ளைகளும் சரி, பசுபதியை ஒரு புழுவைப் பார்ப்பதுபோல் பார்த்தார்கள். இப்போதெல்லாம், அவர்

துணிமணிகளை அவர்தான் துவைத்துக் கொள்ளவேண்டும். மனைவிக்காரி, மனம் போன போக்கில், 'மஞ்சகடுதாசி' கொடுக்கும் அளவிற்கு, பல புடவைகளை இன்ஸ்டால்மெண்டில் வாங்கினாள். பிள்ளைகள் கண்ட கண்ட சினிமாக்களுக்குப் போனார்கள். அவர், இலைமறைவு காய மறைவாகக் கேட்டால், "அத்தைக்கு நீங்க முப்பதாயிரம் செலவழிக்கும்போது, நாங்க கேவலம் ஒரு இரண்டாயிரம் ரூபாய் செலவளிக்கக்கூடாதா?" என்று பதிலடி கொடுத்தார்கள்.

ஒரு மாதம் ஓடியது.

கணவன் நீட்டிய முப்பது நூறு ரூபாய் நோட்டுக்களை 'இப்பவாவது புத்தி வந்ததே' என்கிற மாதிரி காமாட்சி சிரித்துக் கொண்டே வாங்கினாள். அவர் வேலையில், அதற்கு மேலே கூட வாங்கலமாம். பணத்தை வாங்கி வைத்துவிட்டு, முதல் தடவையாக அவருக்கு மோர் கொண்டு வரப்போனாள். இதற்குள் மகன்களும் மகள்களும் அவரை மொய்த்துக் கொண்டார்கள். டி.வி. வாங்கணும்... டைனிங் டேபிள் வாங்கணும்... ஃபிரிட்ஜ் வாங்கணும்... எதிர் வீட்ல வாங்காத சிலதையும் வாங்கணும்.

பசுபதி அமைதியாகப் பேசினார்.

"நானும் யோசித்துத்தான் இந்த முடிவுக்கு வந்தேன், காமாட்சி. இந்த பணமும் முதல் தவணதான்... இன்னும் தருவாங்க."

"அய்யோ... மெள்ள பேசுங்க. எதிர் வீட்டுக்காரிக்குப் பாம்புக் காது."

"அதுக்கென்ன... நல்லா யோசித்துப் பார்த்தேன். நான் வாங்குற சம்பளத்தையும் நீங்கள் செலவழிக்கிற செலவையும் பார்த்தா... மோகனாவுக்குக் கல்யாணத்துக்காகப் பைசா கூட மிச்சம் பண்ண முடியாது. அதனால வாலண்டியரா ரிட்டையராகிட்டேன். கிராசுவிட்டி பணம் முப்பதாயிரம் ரூபாய் வந்தது. மாதம் முன்னூறு ரூபாய் பென்ஷன் வரும்..."

காமாட்சி காட்டு கத்தலாய்க் கத்தினாள். அண்டை வீட்டுக்காரிக்கு காது கிழியும்படி கத்தினாள்.

"யாரைக் கேட்டு ரிட்டையரர் ஆனிங்க? ஒங்களுக்குப் பைத்தியமா? உத்தியோகத்துலே இருந்தாதானே மோகனாவுக்கு ஏதாவது இடம் வரும்? கெடுத்துத் தொலைச்சிட்டீங்களே கெடுத்து."

"கவலப்படாத காமாட்சி! நம்ம ஆடிட்டர் ஜெயராமன் மகன் வக்கீல் சுந்தரம் இருக்கானே அவனுக்கு மோகனாவ கொடுக்கிறதா செட்டில் பண்ணிட்டேன். நம்ம வரதராஜன்தான், முடிவு பண்ணிக் கொடுத்தான்."

"ஒங்களுக்குப் பைத்தியமா. நீங்க பினாத்துர வரதராஜன் மகளுக்கும் சுந்தரத்திற்கும் இன்னைக்கு நிச்சயதாம்பூலம்."

பசுபதி திகைத்தார்.

"என்னது! மோகனாவுக்கு செட்டில் பண்றதாகச் சொல்லி என்கிட்ட ஆயிரம் ரூபாய் கடன் வாங்குன வரதராஜனா இப்படிப் பண்ணிட்டான்? அவனா எனக்குத் துரோகம் பண்ணிட்டான்?"

காமாட்சி, மீண்டும் கத்தினாள்.

"நீங்க ஒரு சரியான பைத்தியம். இந்த ரூபாயை வச்சி ஒங்க தங்கச்சிக்குப் பிரசவ செலவு பார்க்கலாமுன்னு நினைக்காதீங்க. சரியா சீர் வரிசை பண்ணலியாம். பிரசவத்துக்கு வர முடியாதுன்னு ஒரு லெட்டர் எழுதியிருக்காள். நன்றி கெட்ட நாய்..."

இதுவரை மௌனமாக இருந்த கிழவி, இப்போது தட்டுத் தடுமாறி வந்தாள்.

"ஏண்டியம்மா! எதுக்காக என் மவள கரிச்சுக் கொட்டுற? ஒன் மவளுக்குச் சீக்கிரமாக கல்யாணவமாவணுமுன்னு ஒன் புருஷன், நான் பெத்த மவள அவசர அவசரமா பாழும் கிணத்துல தள்ளிட்டான்."

"வேலையை விட்டாச்சுன்னா குவார்ட்டர்ஸைக் காலி பண்ணிட்டுக் குடிசைக்குப் போக வேண்டியதுதானா?" என்றான் மூத்த மகன் சபாபதி.

"பைத்தியக்கார அப்பா இருக்கிற வீட்ல நம்மால இருக்க முடியாது" என்று எங்கோ புறப்படப் போனான் இளைய மகன்.

"நீங்களே சொல்லுங்கப்பா. முன்னபின்ன யோசிக்காமல் பைத்தியக்காரத்தனமா வேலய விடலாமா?" என்றாள் மோகனா.

பசுபதியை கைப்பிடித்த காமாட்சி, கணவனை, அங்கேயே உதறினாள். மாறி மாறி உதறினாள்.

"நீங்க பைத்தியம்... பைத்தியம்... பைத்தியமேதான். அய்யோ, யாராவது இந்த பைத்தியத்த எங்கேயாவது சேருங்களேன். அய்யோ அய்யய்யோ.

காலப்போக்கில் பசுபதியின் முகம் விகாரப்பட்டு வந்தது. சாடை மாடையாகவும், நேரடியாகவும், ஏச்சுக்கள், பேச்சுக்கள்... மூன்று மாதத்தில், கீழ்ப்பாக்கம் 'பைத்தியக்கார' ஆஸ்பத்திரியில் அன்று கத்த துவங்கியவர் இன்னும் கத்திக்கொண்டே இருக்கிறார்.

'நான் பைத்தியமில்ல. நல்லவன்... நல்லவன்...'

- குமுதம், 1982 - வாக்கில்

❖

# ப(ே)ல வேசம்

அந்த அறை குளிர்ச்சியாக இருந்தாலும், உதவி இயக்குநர் (விற்பனை) அருணாசலம் சூடாகத் தோன்றினார். தோள் குலுங்காமல் கழுத்தை மட்டும் பக்கவாட்டில் ஆட்டியபடியே, எதிரே நின்ற இந்திராவை, ஒரு பார்வை பார்த்தார். கன்னங்கரேர் உருவத்துடன் கிடா மீசைத்தனமாக உள்ள 'பாஸை' பார்த்து, அவள் பீஸான பல்பானாள். வெறும் வயித்துக்காரியான அவள், பிள்ளைத்தாச்சி போல் இடுப்பைப் பிடித்தபடி நெளிந்தாலும், குனிந்தாலும், அவர் விடவில்லை.

"ஏம்மா... நீ சம்பளம் வாங்குறதை மறக்கிறயா...? மேக்கப் போட மறக்கிறியா...? மாத நாவல் படிக்க மறக்கிறியா...? இந்த டெல்க்ஸ் மெஸேஜை மட்டும், ஏம்மா மறந்தே....? இதை எனக்கு தெரியப்படுத்தணுமுன்னு, உனக்கு ஏம்மா தெரியலை. இமிடியட் என்கிற வார்த்தை எதுக்காக போட்டிருக்கான்? இமிடியட்டைப் புரியாட்டா இடியட்டுன்னு தானே அர்த்தம்? 'ஏ.டி' கேக்குறேன் பதில் சொல்லு...."

"என்ன ஸார் நீங்க ஏ.டி. வாடின்னு..."

"அட நீ ஒருத்தி... நான் என் பதவிய என்ன மாதிரியே சுருக்கி சொன்னேன்... மீண்டும் சொல்றேன். அஸிஸ்டெண்ட் டைரக்டர்னா, உனக்கு இளக்காரமா போச்சு... போம்மா... போய் சீக்கிரமா டெலக்ஸ் செய்திக்கு பர்ட்டிகுலர்ஸ் எடும்மா..."

காபி கலர் புடவையும், ஜாக்கெட்டும் போட்டு, இரண்டு கைகளிலும் அதே கலரில் வளையல்களை அடுக்கடுக்காகப் போட்டிருந்த இந்திரா, வெளியே போனபோது -

பலவேசம் உள்ளே வந்தார். அவரும் ஒரு அஸிஸ்டெண்ட் டைரக்டர்தான். அந்தக் கம்பெனியில் பர்சேஸ் பிரிவைக் கவனிப்பவர். இவருக்கு, அவரோ... அவருக்கு, இவரோ... ராசா இல்லை. இருவருமே தனிக்காட்டு ராசாக்கள்... எசமான் எம்.டி. டில்லியில்.

பலவேசத்தை உற்று உற்றுப் பார்த்த அருணாசலம், ஆவேசப்பட்டு பேசினார்.

"ஏய்யா... லீவுல போனீரே... ஒரு வார்த்தை எங்கிட்ட சொன்னீரா? இவ்வளவுக்கும், நீரு லீவ்ல போனால், உங்க வேலையையும் நான்தான் கவனிக்கணும். அங்குமிங்குமா கேட்ட செய்தியை வச்சு நானே உங்ககிட்டே கேட்டேன். அப்போவும் போகல போகலன்னு புழுகினீரு. கடைசியில டெல்லிக்காரன் சொன்னான். நீரு லீவ்ல போயிட்டதாயும், ஒரு மாசத்துக்கு முன்னாலேயே லீவ் லெட்டரை அனுப்பிச்சுட்டதாயும்... தெளிவா சொன்னான்... லீவு சமாச்சாரத்தை மறைக்கிறதுல... என்னய்யா உமக்கு கிடைச்சுடப் போவுது...?"

அருணாசலம், எந்த அளவுக்குத் துடித்தாரோ, அந்த அளவுக்கு நிதானப்பட்டார் பலவேசம். நெற்றியில் விபூதியும், குங்குமமும் அழியாதபடி கைக்குட்டையால், முகத்தை ஒற்றியபடியே, ஒரு குறுஞ்சிரிப்போடும், அதே சமயம், அருணாசலம் பேச்சால் பெரிதும் பாதிக்கப்பட்டவர் போலவும் விளக்கமளித்தார்.

"அற்ப விஷயத்துக்கெல்லாம் ஏன் தலைவரே இப்படிக் குதிக்கீங்க? போட்ட லீவை கேன்ஸல் செய்யறதுன்னு தீர்மானிச்சேன். அதனால்தான் உங்ககிட்டே அப்படி சொன்னேன். ஆனால், உங்க ஸிஸ்டரு.... போயே ஆகணுமுன்னு ஒத்தக் காலுல நின்னாள். அதனாலதான், கடைசி நேரத்துல புறப்பட்டேன். உங்ககிட்டே சொல்ல நினைச்சேன், ஆனா, டெலிபோன் அவுட் ஆப் ஆர்டர். உங்களுக்கு நிதானமே கிடையாது தலைவரே... தாம் தூமுன்னு குதிக்கிறதுதான்,

உங்களுக்கு எப்போவும் வேலையாப் போச்சு. உங்களுக்கு ஏற்கெனவே பிளட் பிரஷ்ஷர். இப்படிக் கத்தாதீங்க. நான் பொறுத்துக்குவேன். ஆனால், உங்க ரத்தக் குழாய் பொறுக்காது."

அருணாசலம், தன் மீதே தவறு கண்டவர்போல், பேசாமல், பேப்பர் வெயிட்டை மேஜையில் உருட்டியபோது, பழுத்த ஞானிபோல் தோற்றம் காட்டிய பலவேசம், மெள்ளக் கேட்டார்.

"தலைவரே... உங்க ஸ்டெனோ இந்திராவை, ஒரு அரை மணி நேரம் தர முடியுமா?"

"உம்ம ஸ்டெனோவுக்கு கண்டபடி லீவ் கொடுத்துட்டு, என் ஸ்டெனோவை ஏய்யா இப்படி பிராண்டுறீரு? இப்போ அவள் பிஸி. மத்தியானமாய் பார்க்கலாம். எங்கய்யா போறீரு? லீவுல எங்கே போனீரு? உட்கார்ந்து பேசுமுய்யா... உட்காருமுய்யா..."

"இதோ வந்துடுறேன் தலைவரே...."

"எங்க போறீங்க....?"

"இதோ இங்கேதான். பக்கத்துல தான்... பத்தே பத்து நிமிஷம்...."

எட்டிப் பிடிக்கப் போன அருணாசலத்தின் கைகளுக்கு இடம் கொடுக்காமலே, பலவேசம், வெளியே வந்தார். மேஜை மேல் உட்கார்ந்த ஒருவனையும், அந்த ஒருவனின் டிபன் கேரியரை திறந்து பார்த்த ஒருத்தியையும், மாத நாவல் படித்த மல்லிகாவையும், வாரப் பத்திரிகை படித்த வசந்தாவையும், அரைமணி நேரமாய் டெலிபோன் செய்து கொண்டிருக்கும் அரசனையும், சினேகப்பூர்வமாய் பார்த்தார். அருணாசலம்தான் வெளிப்பட்டாரோ என்று அலறிப் போன ஊழியர்கள், அப்படி வந்தது 'ஜென்டில்மேன்' பலவேசம் என்றதும் நிதானப்பட்டார்கள். ஸ்டெனோ இந்திராவிடம் வந்து கனிவோடு பேசினார்.

"ஒங்க தம்பி... ஏர்போர்ட் அதாரிட்டியில் ஏதோ ஒரு வேலைக்கு அப்ளை செய்ததாய் சொன்னது நீங்கதானேம்மா...?"

"ஆமாம், ஸார்... ஆமாம்... மூணு மாதத்துக்கு முன்னால சொன்னதை இன்னும் ஞாபகம் வச்சிருக்கீங்களே... நீங்கதான் ஸார் எப்படியாவது..."

"இல்லாட்டா... வலியக் கேட்பனா...? சரி... பர்டிகுலர்ஸை டைப் அடிச்சுக்கொடு. அப்புறம் ரெண்டே ரெண்டு பக்கம் டைப்பாக்கணும். என் டாட்டர் ஏதோ கான்பரன்ஸ்ல..."

"சாயங்காலமா அடிக்கிறேன் ஸார். இப்போ 'அது' வேலை வச்சிருக்கு."

"அவளுக்கு மத்தியானமே வேணுமே. கான்பரன்ஸ் மூணு மணிக்காம். ரெண்டே ரெண்டு பக்கந்தான்."

பலவேசம், இந்திராவுடன் தனது அறைக்குள் போனார். ஒரு காகிதக் கத்தையை நீட்டினார், இந்திரா, அழாக்குறையாய் கேட்டாள்.

"என்ன ஸார்... ரெண்டு பக்கமுன்னு, இருபது பக்கம் தர்றீங்க...?"

"எழுத்துல இருபது. டைப்புல இரண்டு தான் வரும். ஓ.கே."

பலவேசம் போன ஒரு மணி வரை அருணாசலம், பைல்களுக்குள் அல்லாடினார். திடீரென்று, ஒரு டெலிபோன்.. இந்திரா வடிகட்டி கொடுத்த போன்.

"ஹலோ யார் பேசுறது. தெரியுதான்னு கேட்டா, எனக்கு என்ன ஜோஸ்யமா தெரியும்? அடடே... சொக்கரா... என்னப்பா... உன் பிரமோஷனுக்கு வஞ்ச் கொடுக்கிறியா..? என்னை ஏம்பா கூப்புடல? என்னது, பலவேசத்துக்கிட்டே, என்கிட்டே சொல்லும்படியா... பல தடவை சொன்னியா...? ஓ.கே. வாரேன். என்ன... பலவேசமும் அங்கே இருக்காரா..."

மேஜையில் கையூன்றியபடி எழப்போன அருணாசலம், தொப்பென்று நாற்காலியில் விழுந்தார்.

'எதுக்காக இந்த பலவேசம், என்கிட்டே சொல்லலை? நான் போறதால இவனுக்கு என்ன கஷ்டம்? இப்ப மட்டும் அவன் என் கண்ணுல அகப்பட்டால்... கூடாது, கோபப்படக்கூடாது. பிளட் பிரஷ்ஷர் அதிகமாகிவிடும். அதனால லஞ்ச் பார்ட்டிக்குப் போய்ப் பலவேசத்தை திட்டும்படியா ஆகப்படாது.'

அந்தச் சமயம் பார்த்து, பியூன் வெள்ளைச்சாமி, உள்ளே வந்தான். அருணாசலம், பிடித்துக் கொண்டார்.

"வாய்யா... வா... பத்து மணி ஆபீசுக்குப் பன்னிரண்டு மணிக்கா வாரே? இந்திரா இங்கே வா... இவனை இன்னிக்கு சஸ்பெண்ட் செய்தாகணும்..."

"என் மகனை ஆஸ்பத்திரியிலே சேர்த்துட்டு வர்றேன் ஸார்..."

"மடையா... இதை ஏன் மொதல்ல சொல்லப்படாது? பழையபடியும் பிட்ஸா...? பணம் ஏதும் வேணுமா? இதோ அம்பது போதுமா? டேய்.... இங்கே வாடா... உங்கப்பானா... இந்த ஜன்னல் திறப்பாரு...? கண்ணாடி ஜன்னலை திறந்து வைக்கணுமுன்னு, ஏண்டா உனக்குத் தெரியலை... முண்டம், முண்டம்... முழு முண்டம்..."

மத்தியானத்திற்குப் பிறகு, பலவேசம் பீடா வாயோடு, உள்ளே வந்தார். அருணாசலம், அவர் கழுத்தை நோக்கிப் போன கரங்களை முடக்கியபடியே கேட்டார்.

"எங்கே போயிட்டு வாரீங்க...?"

"அதோ அங்கேதான்..."

"ஏய்யா.. இப்படி ரகசியமா நடக்கியரு... சொக்கர் கொடுக்கிற லஞ்ச் பற்றி என்கிட்டே சொன்னால் என்னய்யா?" அதுவும், அவன் என்னை வச்சுத்தான், உங்கள கூப்பிட்டிருக்கான். உம்ம சோத்தையா நான் சாப்பிடுவேன்? கடவுளே... கடவுளே... சீ... இப்படியும் ஒரு..."

"விஷயம் தெரியாம... இப்படிக் குதிக்கிறீங்களே... தலைவரே, எனக்கும் இருதயத்துல இஸ்க்கிமியா இருக்குதா...? செக்கப்புக்குப் போனேனா... அந்த வழியில சோழா ஹோட்டல பார்த்தேனா... பார்ட்டி ஞாபகம் வந்துட்டு..."

"சரி... என்னையும் கூட்டிட்டுப் போறது..."

"நினைச்சேன். ஆனால், அங்கே இருக்கிற அயிட்டங்களைப் பார்த்த பிறகு மனசை மாத்திக்கிட்டேன். விஸ்க்கியைப் பார்த்தா விடுவீரா? அப்புறம் உம்ம உடம்பு என்னாகிறது? என் சிஸ்டருக்கு, நான் எப்படி பதில் சொல்றதாம்...?"

"சரி.. சரி... நான் ஒரு ஊ று வாயேன்... உம்ம வேலையைப் போய்ப் பாரும்..."

"நீங்க இப்படி என்னை இன்சல்ட் செய்யுறதாலதான், டில்லிக்காரனும் இன்சல்ட் செய்யுறான். ஆமாம் தலைவரே! 'டிரேட் பேர்ல' நம்ம கம்பெனிக்கு ஸ்டால் போடுறோம். நடக்கிறது மெட்ராஸ்ல... நடத்த வேண்டியது நான். ஆனால், டில்லி டைரக்டர் ரமணப்பா, பெங்களூர் அஸிஸ்டெண்ட் டைரக்டர் லிங்கப்பாவை நடத்தும்படி சொல்லியிருக்கான். எல்லாருக்கும் நான் கேவலமாய்ப் போயிட்டேன்."

அருணாசலம், அவருக்குப் பதிலளிக்கவில்லை. டில்லிக்கு டெலிபோனை காவடி எடுக்க வைத்தார்.

"ஹலோ... டைரக்டர் ஆப் எக்ஸிபிஷனா... ஸார்... நம் பலவேசம், மெட்ராஸ்ல கல்லு மாதிரி இருக்கப்போ, பெங்களூர் லிங்கப்பாவை கூப்புடுறது சரியில்லைன்னு படுது ஸார். அப்புறம் லோகல் மேனுக்கு மரியாதை கிடைக்காது ஸார். அவரை மாதிரியே... இவரும் டிசைன் எக்பர்ட்தான் ஸார். உங்க மேல கன்னடத்துக்கு கன்னடமுன்னு பழி வந்துடப்படாது ஸார். தேங்க் யூ ஸார். தப்பா எடுத்துக்காதீங்க. நானும் ஒத்தாசை செய்யுறேன் ஸார்..."

அருணாசலம், வெற்றிப் பெருமிதத்துடன் டெலிபோனை வைத்துவிட்டு, பலவேசத்தைப் பார்த்தார். "லிங்கப்பா வர்லப்பா" என்றார் - எதுகை மோனையோடு.

பலவேசம், நன்றி என்று சொல்ல முயன்று, அந்த வார்த்தை வெளிப்படும் முன்பே, வெளியே போனார். எங்கிருந்தோ வந்த டெலிபோனுக்கு, அவர் தனது அறையில் இருந்து பதில் சொல்வது அருணாசலத்திற்குக் கேட்டது. இங்கிருந்தபடியே குரலிட்டார்.

"யாரோட டெலிபோன்..."

"மாத்திரை சாப்பிட்டாச்சா... தலைவரே."

அருணாசலம், கேட்டதை மறந்து, மாத்திரையை எடுத்தார். அதை வாயில் போட்டு, கண்ணாடி தம்ளர் தண்ணீரை, கழுத்துக் குழாய் மூலம் உட்செலுத்தி விட்டு, வேலையில் கவனமானார்.

"இந்திரா... பர்டிகுலர்ஸ் எடுத்துட்டியா..? என்ன வேலை ஆயிட்டு இருக்குதா..? பர்ட்டிகுலர்ஸ் எடுக்க வேண்டிய சமயத்துல டைப்ரைட்டர் சப்தம் ஏன் கேட்குது? ஓ.கோ... அப்படி அப்படியே. டைப் அடிக்கிறியா? குட். அப்புறம் நான் சொன்னதைப் பெரிசா எடுத்துக்கிட்டு ஓவர் டைம் போடாமல் இருந்துடாதே. என் பிரின்ஸ்பிள் என்னென்னா, நல்லா நாள் பூராவும் விசுவாசமாக வேலை பார்க்கணும். அதேசமயம், நிர்வாகம் தருகிற எல்லா சலுகைகளையும் பயன்படுத்திக்கணும்..."

பேசிக்கொண்டே இருந்த அருணாசலம், பியூன் வெள்ளைச்சாமி, நீட்டிய ஒரு டெலக்ஸ் மெஸேஜை ஆங்கிலத்தில் படித்து, தமிழில் உள் வாங்கினார். அவர் பெயருக்கு வந்த டெலக்ஸ்.... அதன் தமிழாக்கம் இதுதான்.

"சிறிது நேரத்திற்கு முன்பு, பலவேசத்திடம் டெலிபோனில் சொன்னதுபோல், நமது மானேஜிங் டைரக்டர் பெங்களூரில் இருந்து சென்னைக்கு வந்து, அங்கிருந்து டில்லி புறப்படுகிறார்.

டில்லி பிளைட் வரைக்கும் மீனம்பாக்கம் விமான நிலையத்தில் இருப்பார். நீங்கள் அவரைப் போய்ப் பார்க்கவும்..."

அருணாசலம், துடித்துப் போனார்.

"டேய்... பலவேசம்..."

"அவரு போய் ஒரு மணி நேரம் ஆகுதே ஸார். ஆபீஸ் கார்ல போனார்."

"டேய் மடையா... வெள்ளைச்சாமி! உனக்கு மூளை இருக்காடா...? அரை மணி நேரத்துக்கு முன்னால வந்த டெலக்ஸை இப்போ தாரே..."

அந்த அறைக் குகைக்குள், அருணாசலம், குறுக்கும் நெடுக்குமா கத்திக் கொண்டே சுற்றினார். இனிமேல், மீனம்பாக்கம் போகமுடியாது. இந்நேரம் எம்.டி. செக்யூரிட்டி ஜோனுக்குள் போயிருப்பார். இந்த பலவேசப் பயல் பேருக்கு ஏத்தபடியே நடத்துக்கிடுறானே... இவனை விடப்படாது.

இரண்டு மணி நேர கொந்தளிப்பிற்கு பிறகு, பலவேசம் அறைக்குள் நுழைவதைப் பார்த்துவிட்டு அருணாசலம், எழுந்தார். புஷ் டோர்களை வேகமாய்த் தட்டிவிட்டபடியே, பலவேசம் அறைக்குள் பாய்ந்தார்.

"எங்கே போயிட்டு வர்றீங்க...?"

"தலைவரே... உட்காருங்க. மருந்து சாப்பிட்டீங்களா..?"

"எங்கேய்யா போனே...?"

"அதோ அங்கதான். காப்பி சாப்பிடுவோமா...?"

"ஏர்போட்டுக்கு எம்.டி. வந்ததை என்கிட்டே, ஏய்யா சொல்லலை..."

"ஓ அதுவா... இந்த சின்ன விஷயத்துக்கா இப்படிக் குதிக்கிறீங்க...?"

"எதுய்யா, சின்ன விஷயம்... நீரு போயிட்டு நான் போகாட்டால் எம்.டி. என்னைப் பற்றி என்னய்யா நினைப்பார்? இவ்வளவுக்கும், உமக்கு டெலிபோன்ல, எனக்கும் சேர்த்துச் சேதி சொல்லி இருக்காங்க...."

"உமக்கு நிதானம் என்கிறதே கிடையாது தலைவரே...! முதல்ல சொல்றதைக் கேளுங்க. உடம்பு அசதியா இருக்கேன்னு வீட்டுக்குப் போனேன். நம்ம ஆபீஸ் போன் என்கேஜ்ட். கம்பெனி செக்ரெட்டரி என் வீட்டுக்கு போன் போட்டார். பிளைட் டைமுக்கு, முக்கால் மணி நேரந்தான் இருந்துது. உங்களை பிக்கப் செய்தால், எம்.டி. போகிற பிளேனைக் கூடப் பார்க்க முடியாது. அதனால ரொம்ப ரொம்ப வேதனையோட நான் போனேன். ஆனால், அதுக்குள்ளே எம்.டி. உள்ளே போயிட்டார். சும்மா, கையைத்தான் ஆட்ட முடிஞ்சுது."

"யோவ் பலவேசம்! நீ மனுஷன் இல்லய்யா... நிறத்துல வெள்ளையாய் இருந்தாலும், நீ மனசால கரும்பன்றிய்யா... உனக்கும் தெரு நாய்க்கும் வித்தியாசம் கிடையாது. நீதான் இப்படின்னா... உன் வீட்டுக்காரி அதுக்கு மேல. இந்த ஊருக்குப் போயிருக்கார்னு சொல்லாமல், அவுட் ஆப் ஸ்டேஷன்னு சொல்ற அழுகுணியம்மா. ஒருவேளை என்கிட்டே நடந்துக்கிற மாதிரி, அந்தம்மாகிட்டேயும் நடந்தியோ என்னமோ...? நீ உருப்பட மாட்டய்யா... நீ இரண்டு கால் மிருகம். டிரெஸ் செய்த நரி."

பலவேசத்தைப் பார்த்துத் தூக்கிய கைகளை ஒன்றுக் கொன்றாய்ப் பிடித்துக் கொண்டு, தனக்கு தானே பயந்தவராய், அருணாசலம் அலுவலகத்தை விட்டே வெளியேறினார். அவர் போனதும், அலுவலக ஊழியர்கள், பலவேசம் அறைக்குள் ஓடிவந்தார்கள். இந்திராவின் சப்தமும், வெள்ளைச்சாமியின் குரலும் அதிகமாய் ஒலித்தன.

" என்ன ஸார் இது? அந்தக் 'காட்டான்' அப்படிப் பேசறான். நீங்க பேசாமல் இருக்கீங்களே. பதிலுக்குப் பதில் கொடுத்தா, என்ன ஸார்? ஜென்டில்மேனான... உங்களையே இப்படிப் பேசறான்... அப்புறம் நாங்க எம்மாத்திரம்? டில்லிக்கு கம்ப்ளெயிண்ட் செய்யுங்க ஸார்..."

"பாவம்... அவருக்கு வீட்ல என்ன சிரமமோ..?"

"எல்லாருமே கையெழுத்துப் போட்டு, இப்போ நடந்த சம்பவத்தை டில்லிக்கு எழுதப் போறோம். விசாரணை வரும்போது, நீங்க நடந்ததைச் சொல்லணும். சொல்லுவீங்களா? யாரையுமே மனம் நோகப் பேசாத நீங்க இரண்டுகால் மிருகமாம். டிரெஸ் செய்த நரியாம். அன்றைக்கு என்னடான்னா இவங்கள ஏழின்று வேற கூப்பிட்டுருக்கான். சரி... புகார் எழுதப் போறோம். நடந்ததை சொல்வீங்களா...?"

பலவேசம், அவர்களை கண் நெகிழப் பார்த்தார். அதே கண்களைத் துடைத்துப் பார்த்தார். பிறகு, தரையைப் பார்த்தபடியே தான் பேசுவது, அதிகமாய் கேட்கக்கூடாது என்பது போல் பதிலளித்தார்.

"விட்டுடலாமுன்னு நினைச்சேன். ஏதோ எப்படியோ... அப்புறம் உங்க இஷ்டம்..."

"இந்தக் காட்டானை விட முடியாது. எழுதத்தான் போறோம். உங்களால நடந்தை நடந்தபடியே, சொல்ல முடியுமா..? முடியாதா...?"

"உங்களுக்கு தெரியாதா....? எனக்குப் பொய் பேசி பழக்கம் இல்லைன்னு... உங்களையும் பார்க்க பாவமாய் இருக்குது. அப்புறம் உங்க இஷ்டம்."

கல்கி விடுமுறை மலர் - 1990.

❖

# அபத்தங்கள்

மானேஜரின், ஏர் கண்டிஷன் அறைக்குள் நின்று கொண்டிருந்த சுமதிக்கு, வியர்த்துக் கொட்டியது. அங்கிருந்து வேகமாக வெளியேறி, தன் இருப்பிடத்தில் வந்து அமர்ந்தாள். ஏவுகணை மாதிரி வேகமாக வந்து, 'குண்டு' மாதிரி 'தொப்பென்று' இருக்கையில் அவள் விழுந்ததால் ஏற்பட்ட சத்தத்தைக் கேட்டு, பைலுக்குள் இருந்த தலையை எடுத்த தலைமைக் குமாஸ்தாவே, சிறிது அதிர்ந்து போனார். உள்ளங்கை கீழே விழுந்துவிட்டதா என்பதை ஊர்ஜிதப் படுத்துவதுபோல், சுமதி, தன் வலதுகையை உதறிக் கொண்டாள்.

சுமதி, அருகிலிருந்து வசந்தியின் தோளைத் தட்டிக்கொண்டே, "வாரீங்களா அக்கா... கேன்டீன் வரைக்கும் போயிட்டு வரலாம்." என்றாள்.

"ஆபீஸ் டயம்ல கேன்டீன் போகலாமா? நீ வந்து இரண்டு மாதத்துக்குள்ள வேலையை மட்டுந்தான் கத்துக்கிட்டன்னு நினைச்சேன். இதையும் கத்தாச்சா?"

சுமதி, பேசாமல் முகத்தைத் துடைத்துக் கொண்டாள்; "வேலையை மட்டுந்தான் கத்துக்கிட்டென்னு நினைச்சேன்" என்ற வசந்தியின் வார்த்தைகளில், மண்டிக்கிடந்த பொறாமைத் தீயின் சூடு அவளுக்குத் தெரியாததால், அது, அவளைச் சுடவில்லை. இவளைப் பார்க்கும் போதெல்லாம், வசந்திக்கு ஒரு தாழ்வு மனப்பான்மை ஏற்பட்டு, மனதில் அழிக்க முடியாத ஒரு பாரத்தை சுமந்து கொண்டிருப்பது போன்ற ஒரு கனம் ஏற்படுவது, சுமதிக்குத் தெரியாது.

ஒரு மாதத்திற்கு முன்பு, "இந்தா பாரு வசந்தி! நீ வேலையில் சேர்ந்த மூணு வருஷமாகுது... ஆனால், சுமதி, ஒரு மாதத்துல உன்னைவிட, பிரமாதமா 'டிராப்ட்' போடுறாள்" என்று தலைமைக் குமாஸ்தா, 'நகைச்சுவைக்கும்' நடைமுறைக்கும் இடைப்பட்ட குரலில் சொன்னபோது ஏற்பட்ட பொறாமை, சிக்கலான பைல்களை மானேஜரே, 'சுமதியிடம் இதைக் கொடுங்கள்' என்று சொன்ன போது, ஒரு தாழ்வு மனப்பான்மையாக மாறிவிட்டது. ஆகையால், அதன் வெளிப்பாடாக தான் ஆபீஸ் நேரத்தில் வெளியே போகாதவள் என்ற ஒழுங்குணர்வு உள்ளவளாக, தன்னைக் காட்டிக் கொள்கிற தோரணையில், வசந்தி, பைலில் எதையோ, ஒன்றைக் கிறுக்கிக் கொண்டிருந்தாள். ஆனால், சுமதியால், சும்மா இருக்க முடியவில்லை.

"வாங்கக்கா... போயிட்டு வரலாம்..."

"சுமதி... உனக்குத் தெரியுமோ தெரியாதோ... நான் ஒரு டிஸ்ஸிபிளினேரியன் ... கேன்டீன் போறதுக்குன்னே ஒரு டயம் இருக்கு... லஞ்ச் டயம்."

"முக்கியமான விஷயம் பேசணும்... இல்லன்னா, நான் கூப்பிடுவேனா அக்கா...?"

வசந்தி, அவளுக்கு பதிலளிக்கவில்லை. அலட்சியத்துடன், வேறு பக்கமாக முகத்தைத் திருப்பிக் கொண்டாள். "இவள் என்ன, எதுக்கெடுத்தாலும், 'அக்கா... அக்கா...'ன்னு சொல்லி மானத்தை வாங்குறாளே. இவளைவிட, ஒரு வயசுதானே அதிகம். அதனால, அக்காவாகிவிட முடியுமா?"

வசந்தி பொருமிக் கொண்டாள். லஞ்ச் டயம் வந்தது.

சுமதி வேலையில் கெட்டிக்காரியாக இருந்தாலும், இதர விஷயங்களில், தன்னை நம்பி இருக்கிறாள் என்பதை செக்ஷனில் உள்ளவர்களுக்கு, குறிப்பாக, அந்த 'ஓட்டப் பல்லு' தலைமைக் குமாஸ்தாவுக்கு காட்டிக் கொள்ளும் விதத்தில், "வாரியா போகலாம்...

அப்போதே நச்சி எடுத்தியே..." என்று சொல்லிக்கொண்டு, சுமதியின் பெருவிரலைப் பிடித்துக்கொண்டு, கேன்டீனுக்குப் போனாள்.

"என்னமோ... முக்கியமான விஷயமுன்னு சொன்னியே... சொல்லு..."

"நம்ம மானேஜரு எப்படிக்கா...?"

"தங்கமான மனுஷன்... அவரைவிட, ஒரு நல்ல மனுஷன் இருக்க முடியாது..."

"நான் எதுக்குக் கேட்டன்னா..." என்று சுமதி பேச்சை இழுத்தபோது, பியூன் செல்லச்சாமி, ஒரு போண்டாவை வாயில் வைத்துக் கொண்டு வந்தார். அவர் வாய் பேசியதா, போண்டா பேசியதா என்பதைக் கண்டுபிடிப்பது சிரமம்.

"இரண்டு லேடீஸ் சேர்ந்துட்டா உலகமே அவர்களுக்கு மறந்துவிடுமாம். மூணு லேடிஸ் சேர்ந்தால்தான் வம்பாம்..."

"நீ மூணாவது வந்துட்டே... இனிமேல் வம்புதான்..."

"நான் என்ன பொண்ணா...?"

"ஒன்றுமில்ல செல்லம்... நம்ம மானேஜரு எப்படிப் பட்டவர்னு சுமதி கேட்டாள். நான் எப்படிப்பட்டவர்னு விளக்கப்போனேன். நீ வந்துட்டே... நீயே அவளுக்குச் சொல்லு...."

செல்லச்சாமி, தனக்கு, வசந்தி கொடுத்திருந்த பொறுப்பை உணர்ந்து அகமகிழ்ந்தான்.

"என்னம்மா... நீங்க? இந்த மூணுமாசத்தில் மானேஜரு அய்யாவை புரிஞ்சுக்கலியா... தங்கத்தை ஒரு தட்டிலேயும்... இவர ஒரு தட்டிலேயும் வச்சா... இவரு இருக்கிற தட்டுதான் கனமா இருக்கும். பத்தரை மாத்துத் தங்கம்... இதுக்கு முன்னால.... ஒரு சும்பப் பயல் மானேஜரா இருந்தான். என்னை அவன் பொண்டாட்டி துணிங்களகூட, ஓவர்டயம் கொடுக்காம துவைக்கச் சொல்லுவான்... நைட்ல பத்து மணி வரைக்கும், அவன்

குடிக்கிற கிளாஸ்ல, நான்தான் விஸ்கியை ஊத்தணும்... என்னைப் பார்த்தவுடனே, அவன் சாராய வாய் 'டா' போடும். ஆனால், இந்த மனுஷன், 'மிஸ்டர்' செல்வமுன்னுதான் சொல்லுவார். நானே ஒரு தடவை அவரு வீட்டுக்கு போய், 'காய்கறி வாங்கிட்டு வரட்டுமான்'னு கேட்டேன். 'இனிமேல், வீட்டுப் பக்கம் வராதேன்'னு... சிரிச்சுக்கிட்டே அனுப்பிட்டாரு. புண்ணியவான் இவரும்மா...."

பேசிக் களைத்த சொற்பொழிவாளன்போல், செல்லச்சாமி, சோடாச் சாப்பிடப் போய்விட்டார். சுமதி, நெற்றியில் வழிந்த வேர்வையைத் துடைத்துக் கொண்டு, பரிதாபமாக வசந்தியைப் பார்த்தாள்.

"எதுக்காக திடீர்னு மானேஜரைப் பத்திக் கேட்டே....?"

"வந்து..."

"சும்மா சொல்லு..."

"கொஞ்ச நாளாயே மானேஜரு, என்னை ஒரு மாதிரி பாக்குறாரு... இன்னைக்கு பையை என் கையில் கொடுக்கிற சாக்கில், என் உள்ளங்கையை லேசா அழுத்தினாரு... எனக்கு கையும் ஓடல... காலும் ஓடல...."

வசந்தி, அவளை ஒரு மாதிரி பார்த்தாள்.

"இப்படில்லாம் பழி போடாதே சுமதி. அவரு கை தற்செயலாய் பட்டிருக்கும். உதாரணமாய், ஒன்று சொல்றேன் கேளு... ஒரு நாள், பஸ் ஸ்டாப்பில் நின்னேன். சரியான மழை... அந்தப் பக்கமா இவரு வந்தாரு... காரிலே ஏறிக்கோன்னு சொல்லி இருந்தா, ஆபத்துக்கு தோஷமில்லன்னு நானும், அவர் கூடயே போயிருப்பேன். ஆனால், என்ன செய்தாரு தெரியுமா...? காரை விட்டு இறங்கி, என்னிடம் வந்து, 'நீங்க கார்ல போய் வீட்ல இறங்கிட்டு, வண்டியை அனுப்புங்க.... நான் அதுவரைக்கும் இங்கேயே நிக்கிறேன்'னு சொன்னார். இவ்வளவுக்கும் என்வீடு, அவர் போற வழியில்தான் இருக்கு... வழியில் என்னை இறக்கி

விடுறதுக்குப் பதிலாய்... அவரே வழியில் இறங்கிட்டாரு... அவ்வளவு பெரிய மனுஷன்..."

சுமதி, சிறிதுநேரம் பேசாமல் இருந்தாள், உடனே வசந்தி, "என்ன... நான் இவ்வளவு சொல்லியும், உனக்கு நம்பிக்கை வரலியா?" என்றாள்.

"நீங்க சொல்றது சரிதான், அக்கா. நான் இன்டர்வியூக்கு வந்திருந்த போது, 'சுமதி, உன்னைவிட சரோஜ் என்று ஒரு பிரில்லியண்ட் கேர்ல் வந்தாள். அவளை போடணுமுன்னு நினைச்சேன். ஆனால், நீ, உன் வறுமையை சொன்னதும், நோயாளியான உன் அப்பா, உன்னை நம்பி இருக்கதச் சொன்னதும், என் மனசு மாறிட்டு... என் நம்பிக்கைக்கு பாத்திரமாய் நடந்துக்கோன்னு சொன்னாரு...."

வசந்திக்கு, பற்றி எறிந்தது. அவள் அருமைத் தங்கை சரோஜிக்கு வேலை கிடைக்காமல் போனதுக்கு, இந்தப் பழிகாரிதான் காரணமா?

"என்னக்கா... பேசாமல் இருக்கீங்க...? ஐ அம் ஸாரி... அந்த பெரிய மனிதரை தப்பா புரிஞ்சுக்கிட்டேன். நான்தான் அசடு...."

"அவரு தரோ ஜென்டில்மேன். நீ அவரை மயக்காமல் இருந்தால் சரிதான். போவோம் டயம் ஆயிட்டு.. நான் டிஸ்பிளினேரியன்..."

சுமதி, துடித்துப் போனாள். அவள் மயக்குறாளாம். நெருப்புக் கட்டிகளை நெஞ்சில் சுமந்துகொண்டவள்போல், அலுவலகத்திற்குள் வந்தாள். எந்த வேலையும்... அவளுக்கு ஓடவில்லை. வசந்திக்கே, அவளை அப்படிப் பேசியிருக்கக்கூடாது என்று தோன்றியது. இதற்கு பிராயச்சித்தமாக, மாலையில் சுமதியிடம் அவள் பிரச்சனையை முழுவதுமாகக் கேட்டு, தக்க ஆலோசனைகள் கொடுக்க வேண்டும் என்று மனதுக்குள்ளயே ஒத்திகைப் பேச்சாய் பேசிக்கொண்டாள்.

“அசடே... நிலைமை எனக்குப் புரியுது. நாளைக்கு மானேஜரிடம் போய், ‘ஸார்... நேற்று... வசந்தியிடம்... உங்களைப் பத்தி தப்பாச் சொன்னேன்... அவள், உங்கள் ஏகபத்தினி விரதத்தை, கார் உதாரணம் மூலம் சொன்னாள். ஐ ஆம் ஸாரி... என்னை உங்க தங்கை மாதிரி நினைத்து, விகற்ப இல்லாமல் தொட்டிட்டிங்க... இதை, நான் பெரிசா நினைத்திட்டேன். உங்களை, என் அண்ணன் மாதிரி நினைச்சு மன்னிப்பு கேட்கிறேன்’ னு சொல்லு... ஒருவேளை மானேஜருக்கு, உன்மேல், தப்பான எண்ணம் இருந்தாலும், மாத்திக்கிடுவாரு...”

வசந்தி, தனது மனோ ஒத்திகையை முடித்துவிட்டு, சுமதியை கனிவோடு பார்த்தபோது, “சுமதி... நேற்று நீ போட்டிருந்த டிராப்படை பார்த்துட்டு, மானேஜர் ரொம்ப பாராட்டுறாரு... வசந்திக்கும் சொல்லிக் கொடு...” என்றார் தலைமை குமாஸ்தா குத்தலாக.

மாலையில், வசந்தி, சுமதியிடம் பேசவில்லை. இவளும் அதைப் பற்றிக் கவலைப்படவில்லை.

வீட்டிற்கு வந்த சுமதிக்கு, அம்மா நினைவுபடுத்திய பிறகுதான், அப்பாவுக்கு மருந்து வாங்கி வரவில்லை என்று தோன்றியது. மருந்துக் கடைக்குப் போகப்போன அவளை, காலையில் பார்த்துக் கொள்ளலாம் என்று அப்பா சொல்லிவிட்டார். ஆபீசில் ஒரு ‘பார்டியில்’ சாப்பிட்டு விட்டதாக, சொல்லிவிட்டு, அன்றிரவு அவள் சாப்பிடவில்லை. வசந்தியின் வார்த்தைகள், நெஞ்சிலிருந்து கண்ணுக்கு வந்து, நீராக வடிந்தன. மானேஜர், தற்செயலாக தொட்டிருக்கலாம். நாற்பது வயதான அவர், அவளை மகளாகவோ தங்கையாகவோதான் நினைத்திருப்பார்... சுமதி, மானேஜரை தப்பாக எடை போட்டுவிட்டு குற்ற உணர்வுடன் தூங்க முயற்சி செய்தாள். ஆனாலும், சுமதி கொடுத்த தீப்புண் வார்த்தைகள், அவள் முயற்சியை முறியடித்துக் கொண்டிருந்தன.

தூங்கும்போது கடைசியாக நிற்கும் எண்ணம், விழிக்கும்போது முதல் எண்ணமாக வருமாம். சுமதிக்கும், விழிப்பு தட்டியதும் வசந்தியின், 'நீ மயக்காமல் இருந்தால் சரி...' என்ற அக்கினித் திராவக வார்த்தைகள் உடலை எரித்தன. அவள், தன்னைத் தானே ஆறுதல் படுத்திக்கொண்டாள். ஆபீஸில் ஸ்டெனோகிராபர் துரை, ஒரு தடவை அவளிடம், 'சுமதி... நீங்க ரொம்ப கவர்ச்சியாக இருக்கீங்க, உங்க... நெற்றியில் சுருண்டு கிடக்கும் முடியை பார்த்தால்..." என்று கன்னாபின்னா என்று பேசியதும், அன்றிலிருந்து, அவனை, தான் ஏறிட்டுப் பார்க்காமல் இருப்பதும், அவளுக்கு நினைவுக்கு வந்தது.

அவசர அவசரமாகக் குளித்துவிட்டு, முகத்துக்கு பவுடர் போடப் போன சுமதி, ஆசையை அடக்கிக் கொண்டாள். நெற்றியில் மோதிரம் போல் படிந்த தலைமுடியை எடுத்து, உச்சியில் ஒரு முடிக்கற்றைக்குள், அது மீளாதவாறு சொருகிக் கொண்டாள். செக்கச் சிவந்த மேனி முழுவதையும், அம்மாவின் பழைய காலத்து புடவையினால் மறைத்துக் கொண்டாள். அலுவலகம் போக வாசலைத் தாண்டிய அவளை, "என்னடி இந்தக் கோலத்துல போறே..." என்று சொன்ன அம்மாவின் வார்த்தைகள் எடுபடவில்லை. வசந்தி சொன்னது வக்கிரமாக இருக்கலாம். அதிலும் ஒரு பாடம் இருக்கே...

மானேஜர், அவளுக்குக் காத்திருப்பதுபோல், அவள் வந்தவுடனே கூப்பிட்டார். அவரை தப்பாகப் புரிந்து கொண்டு விட்டோமே என்ற கூச்சத்தோடு அவள் போனாள். அதை, அவர் நாணமாக எடுத்துக் கொண்டார்.

"சுமதி! இப்படி வா... ஒன் டிராப்ட்ல இந்த வாக்கியம் எனக்கு விளங்கல... எப்படின்னு சொல்றீயா?"

சுமதி, அந்த 'அண்ணனிடம்' நெருங்கினாள். கையை மேஜை மேல் ஊன்றிக்கொண்டு, வேசாகக் குனிந்து, அவர் கோடிட்ட வாக்கியத்தை படிக்கப் போனாள். திடீரென்று, கை வளையலை,

அவரின் கை அங்குமிங்குமாக உருட்டியது. அந்தச் சாக்கில் அவள் திரண்ட சதையைப் பிடித்துக் கிள்ளியது. சுமதிக்கு வியர்த்துக் கொட்டியது. கையை உதறிக்கொண்டே, வெளியே வந்தாள். பொங்கி வந்த கண்ணீரை துடைத்துக் கொண்டாள்.

லஞ்ச் டயம் வந்தது.

தலைமைக் குமாஸ்தா, தனியாக இருந்தார்.

"என்னம்மா... சுமதி... கேன்டீன் போகலியா...?"

"பசிக்கல ஸார்..."

"இந்த வயசில... இந்தச் சமயத்தில பசிக்காமல் இருந்தால், அதுக்கு என்ன அர்த்தமுன்னா..."

"ஸார்... நம்ம மானேஜரு எப்படி?"

தலைமைக் குமாஸ்தா, நாற்காலியில் நிமிர்ந்து உட்கார்ந்தார். இரண்டு கண்களையும் பாதி மூடிக் கொண்டு பேசினார்.

"என்னோட இருபது வருஷ சர்வீஸ்ல, இந்த மாதிரி உத்தம புருஷன பார்க்கலம்மா... சாட்சாத் ஸ்ரீராமச்சந்திர மூர்த்தின்னா, ராமச்சந்திரமூர்த்திதான். போன வருஷமே, நான் ரிட்டயர்டாகணும். 'ஸார், பிள்ள குட்டிக்காரன்... என்ன பண்ணுவேன்னு...' சும்மா ஒரு பேச்சுக்கு சொன்னேன். அவ்வளவுதான். மனுஷன்... உடனே, என்ன நான் சொல்றது புரியுதா... உடனே எம்.டிக்கு டிரங்கால் போட்டாரு. ரெண்டு நாள்ல எனக்கு எக்ஸ்டென்ஷன் வந்துட்டு. அணையப்போன விளக்கில, எண்ணெ ஊத்தின மகான் அவரு. ஒவ்வொரு நாளும் காலையில் எழுந்திருக்கும்போது, அவர் காலுல மானசீகமா விழுறேன்."

சுமதி, ஏதோ பேசப் போனாள். அதற்குள் கேஸியர் வந்தார். தலைமைக் குமாஸ்தாவின் வார்த்தைகள், தன் காதிலும் விழுந்தன என்பதை நிரூபிப்பதுபோல், "உங்களுக்கு அவர் மகான் மட்டுந்தான். ஆனால், எனக்கு அவரு கண்கண்ட தெய்வம். ஒரு

நாளு, அவசர செலவுக்கு, கேஷ் பாக்ஸிலிருந்து ஒரு ஐம்பது ரூபாய எடுத்துட்டேன். திடீர்னு, அவர் கேஷை 'செக்' பண்ண வந்தார். விஷயத்தைச் சொன்னேன். இனிமேல் அப்படிச் செய்யாதீங்க. செலவுக்கு வேணுமுன்னா என்கிட்ட வாங்கிக்கலாம்...' என்று சொன்னாரு. பழைய மானேஜருன்னா, வீட்டுக்கு அனுப்பியிருப்பான்..."

சுமதி, ஏதோ சொல்லப் போனாள்; ஒட்டுக்கேட்டு பழக்கப்பட்ட பெருமாள், வந்த வேகத்தில், 'என் பொண்ணுக்கு வாழ்வு கொடுத்தவரே... இந்த கலியுகக் கர்ணன்தான்... பிராவிடண்ட் பண்டை நம்பி... என் மகள் கல்யாணத்த நிச்சயிச்சிட்டேன்... பணம் வரல... கடைசில இவர்கிட்ட சொன்னேன். சொந்தப் பணத்தை கொடுத்து... என்னோட மானத்தை காப்பாத்துனாரு..." என்றார்.

சுமதியால், தாளமுடியவில்லை. 'மானத்தைக் காப்பாத்தின' அந்த மகாராஜனின் விசுவாச பிரஜைகளிடம், தன் சொல் ஏறாது என்பதை புரிந்து கொண்டவளாய், வெளியே வந்தாள். வெறி பிடித்தவள்போல், தன் வளையல்களை உடைத்தெறிந்தாள்.

சுமதி, இரண்டு நாட்களுக்கு 'லீவ்' போட்டாள். மூன்றாவது நாள் ஞாயிற்றுக்கிழமை. ஆனாலும், அலுவலகம் வரும்படியும், வேலை நிறைய இருப்பதாகவும், ஆபீஸ் 'நோட்' வந்தது. சுமதி, போனாள்.. அப்பாவுக்கு மருந்து வாங்கியாக வேண்டுமே... ராமபிரானாக கருதப்படும் அவர் ஏடாகூடமாக நடந்தால் முகத்தில் அடித்தாற்போல் கேட்டுவிடுவது என்றும் தீர்மானித்தாள்.

அலுவலகத்தில், இரண்டு மூன்று பேர் இருந்தார்கள். அவள் போனதும், மற்றவர்களை மானேஜர் அறைக்குள் கூப்பிட்டார். 'ஓ.கே. ஸார்... இப்பவே எடுத்துட்டு வந்திடுறோம்...' என்று சொல்லிவிட்டு, அவர்கள் 'வேனில்' புறப்பட்டார்கள்.

வேனின் சத்தத்திற்கு இணையாக சும்தியின் இதயம் அடித்துக் கொண்டது. மானேஜர், கூப்பிட்டால், போகப் போவதில்லை என்று உறுதியெடுத்துக் கொண்டாள். மானேஜர்,

கூப்பிடவில்லை. நேராக அவளிடம் வந்தார். அவள் வலது கையை எடுத்து, தன் தோளில் போட்டுக் கொண்டு, "சுமதி பிலி மீ... என்னால உன்னை மறக்க முடியல... ஐ வாண்ட் யூ... ஐ வாண்ட் யூ..." என்றார். சுமதி என்ன நடக்கிறது என்று புரியாமல் சூன்யமாக நின்றாள். பிறகு, கீழே வீசி எறிவதற்காக அவர் கைகளை பிடித்து இழுத்தவளுக்கு, உதடுகள் வரை சூடான வார்த்தைகள் கொதித்து முட்டின. அந்தச் சமயத்தில் -

எதிரே சக ஊழியர்கள்... பத்து நிமிடத்திற்கு முன்பு மேனேஜர் அனுப்பி வைத்த அதே ஊழியர்கள்... 'ஸார்... கடுமையான டிராபிக் ஜாம்... வேனுல போக முடியல' என்று சொல்ல வந்தவர்கள் விக்கித்து நின்றார்கள்.

சுமதி, அவர்களிடம் முறையிடப் போனாள். ஆனால், அந்த சகாக்கள் அவளைப் பார்த்தப் பார்வை கொடூரமாக இருந்தது. ஏழை சொல் அம்பலம் ஏறுமோ, இல்லையோ, ஒரு அபலைப் பெண்ணின் சொல் ஏறாது என்பது அந்தக் கொந்தளிப்பான சமயத்திலும், அவள் சிந்தனையைத் தட்டியது.

சுமதி, முகத்தை கைகளால் தாங்கிக்கொண்டே அழுதாள். உலகத்து பாவ மூட்டைகள் அனைத்தும், அவள் தோளில் உட்கார்ந்து அழுத்தியது. அந்த அழுத்தம் தாங்க முடியாமல், அவள் தோள் குலுங்கியது. அதனால், லேசாக சாய்ந்த அவள் மேனியை புவியீர்ப்பு விதி கீழே இழுத்தது. தள்ளாடிக் கொண்டே வீட்டிற்குப் போனாள்.

மறுநாள், சுமதி வரவில்லை.

அலுவலகத்தில், ஒருவர் முகத்திலும் ஈயாடவில்லை. மானேஜர், அறைக்குள் முடங்கிக் கிடந்தார்.

தலைமைக் குமாஸ்தா, நெடிய மௌனத்தை கலைத்தார்.

"கடைசியில், இந்த சுமதி - இவ்வளவு மோசமா, இருந்திருக்காளே - தங்கமான மனுஷன்... அவரோட மனசை கெடுத்திட்டா... பாருங்களேன்..."

''ஆனால் அவரும் அப்படி...'' என்றார், இதுவரை மானேஜரால் எந்தவித பலனும் அடையாத ஒரு குமாஸ்தா. தலைமைக் குமாஸ்தா பதிலடித்தார்.

"என்னய்யா... அவருமுன்னு இழுக்கியரு... அவ்வளவு பெரிய விஸ்வாமித்ரரையே அந்த மேனகை மயக்கிட்டான்னா, இவரும் மனுஷன்தானே... அடிமேல் அடி அடிச்சா, அம்மியும் நகரும்..."

''அவள் டிரஸ்சையும், பவுடரையும் பார்க்கும்போதே, எனக்குத் தெரியும்... மானேஜரை மயக்கிடுவான்னு..." என்றான் சுமதியிடம் தோல்வி கண்ட துரை.

"ஆற்றையும் நம்பலாம்... குளத்தையும் நம்பலாம்... ஆனால் பதினாறு முழம் கட்டிய பெண்களை நம்பினால்..." என்று விவேக சிந்தாமணி பாட்டைப் பாடினார் பெருமாள்.

இதைக்கேட்டு, வசந்தியின் பெண்மை சீறியது. முன்னதாகவே சுமதி, தன்னிடம் யோசனை கேட்டாள் என்று அவள் எடுத்துரைக்க ஆயத்தம் செய்தபோது, "இப்ப நம்ம வசந்தியுந்தான் இருக்காள். மூணு வருடமாய் வராள். மானேஜரு முகத்தை நிமிர்ந்து பார்த்திருப்பாளா? பெண்ணுன்னா இவள்தான் பெண்..." என்றார் தலைமைக் குமாஸ்தா.

வசந்தி, பெட்டிப் பாம்பாகி விட்டாள். ஒருவேளை சுமதி, ராஜினாமா செய்து அதனால் ஏற்படும் காலியிடத்தில், தன் தங்கையை இப்போதாவது சேர்த்துவிடலாம் என்ற ஒரு முன்னெச்சரிக்கை...

"மானேஜரு, இடிஞ்சி போய் உட்கார்ந்திருக்காரு... அப்படி என்ன பெரிய தப்பு பண்ணிட்டாரு? விஸ்வாமித்திரரே மயங்கலியா? நீங்கபோய் அவருக்கு ஆறுதல் சொல்லிட்டு வாங்க' என்று பெருமாள், தலைமைக் குமாஸ்தாவிடம் சொல்ல, அவர் எல்லோரின் ஏகமனதாக தீர்மானத்திற்கு அடிபணியும் ஜனநாயகவாதிபோல் எழுந்தார்.

மாலையில், மருந்துவாங்க பஜாருக்கு வந்த சுமதியை, ஆபீஸ் சௌக்கிதார் பார்த்துவிட்டான். இளம் வயதுக்காரன், உள்ளதை உள்ளபடியே சொல்பவன். ஆகையால், அவனை 'லூஸ்' என்பார்கள். சுமதியிடம், அலுவலகப் பேச்சையும், ஏகமனதான தீர்மானத்தையும், கூட்டாமல் குறைக்காமல் சொன்னான்.

பம்பாயில் மானேஜிங் டைரக்டர் படேசிங், தனக்கு வந்த கடிதத்தின் தலையும் புரியாமல், வாலும் புரியாமல், மீண்டும் அதைப் படித்தார்.

"அன்புள்ள அய்யா,

வணக்கம்.

தங்கள் அலுவலகத்தின் சென்னைக் கிளையில் குமாஸ்தாவாக வேலை பார்க்கும் சுமதி எழுதுவது...

இந்தக் கடிதத்தையே என் ராஜினாமாவாக ஏற்றுக் கொள்ளவும்.

ராஜினாமாவிற்கான காரணத்தை, நான் சொல்லப் போவதில்லை. ஏனென்றால் சொன்னாலும், நீங்கள் நம்பப் போவதில்லை.

சில்லறை விஷயங்களில், பெருந்தன்மையாக இருக்கும் ஒருவர், மகத்தான பாவத்தை செய்தாலும், அதை நம்ப, இந்த சமுதாயம் மறுக்கிறது. பழியை சௌகரியமாக இன்னொருவர் மேல் போட்டு விடுகிறது. குறிப்பிட்ட ஒருவர், இன்னொருவரை அவருக்கும் தனக்கும் உள்ள உறவை வைத்தும், அவரால் தனக்கு கிடைக்கும் நன்மையை வைத்துமே எடை போடுகிறார். ஒரு மனிதனின் செயலைப் பற்றிய தீர்ப்பு, சுயநலத்தின் அடிப்படையில் தீர்மானிக்கப்படுகிறது. ஒருவரின் 'பப்ளிக் ரிலேஷன்' சரியாக இருந்தால், அவர் மாசு மருவற்றவராகிறார். சமுதாய நியதிகளையும், குற்றங்களையும், சுயபலனை பின்னணியாகக் கொண்ட உறவின்மூலம், நாம், தீர்மானிப்பது வரைக்கும், இந்தச் சமுதாயம்

உருப்படப் போவதில்லை. "ஒருவன் தொண்ணூற்றொன்பது தடவை குற்றம் செய்தாலும், நூறாவது தடவை குற்றம் செய்வான் என்ற அவசியமில்லை" என்றார் காந்திஜி. இதேமாதிரி, ஒருவன் தொண்ணூற்றொன்பது பேருக்கு நன்மை செய்து விட்டதால், அவன் நூறாவது நபருக்கு தீமை செய்ய மாட்டான் என்று நம்புவதும் அபத்தம்; என்ன செய்வது? அபத்தங்களே, சமுதாய விதிகளாகின்றன.

"ஒருவர், எல்லோருக்கும் பரோபகாரியாக இருந்து, யார்மீதும் தீய எண்ணம் இல்லாமல் இருக்கலாம். அப்படிப் பட்டவருக்கு, ஒரே ஒரு நபர்மீது தீய எண்ணம் வரும்போது, அவர், அதன் ஏகாதிபத்யவாதியாகி விடுகிறார். எல்லோரையும் தீய நோக்கில் அணுகுபவர்கள், தங்கள் வெளிப்பாடுகளை பகிர்ந்தளிக்கிறார்கள். ஆனால், ஒரே ஒருவர்மீது மட்டும் தீய நோக்குகொண்ட ஒருவர், அதை ஒருவரிடமே மொத்தமாக கொடுக்கிறார்; இந்த சாதாரண மனோவிதியை புரியாத மனநோயாளிகள் மத்தியில் நான் பணிபுரிய விரும்பவில்லை."

தங்கள் உண்மையுள்ள,

சுமதி.

தாமரை - மே, 1977

❖

# முள் மேல் நடை

வேலைக்கு தேர்ந்தெடுக்கப்பட்ட பட்டதாரிகளின் பெயர்கள், 'மெரிட்'படி வரிசைக் கிரமமாக டைப்பாகி, டைரக்டரும் கையெழுத்துப் போட்டுவிட்டார். நியமன உத்தரவுகளை, ஒவ்வொருவருக்கும் தனித் தனியாக அனுப்பியாக வேண்டும்.

'டெம்பரரி' டைப்பிஸ்ட் மோகனுக்கு, அன்றைக்கு வேறு வேலை அதிகமாக இல்லை. பட்டதாரிகள், கேள்விகளுக்கு எப்படிப் பதிலளித்திருக்கிறார்கள் என்று அறிய, அவனது 'எஸ்.எஸ்.எல்.சி. மூளை' குறுகுறுத்தது. தேர்வுப் பேப்பர்களை, ரேக்கிலிருந்து எடுத்து, புரட்டிக் கொண்டே வந்தான்.

தானே, அவர்களைவிட நன்றாகப் பதிலளித்திருக்க முடியும் என்ற எண்ணத்திற்கு வந்த அவன் கண்கள், திடீரென்று, ஒரு பரீட்சைப் பேப்பரில் நிலை குத்தி நின்றன. 'சமதர்மம் வருவதற்கு முன்னால், சமதர்ம மனோபாவம் வரவேண்டும்; ஏழைகளைப் பாராட்டுவதன் மூலம், ஏழ்மையைப் பாராட்டலாகாது' என்பன போன்ற வாசகங்கள், அவன் கருத்தைத் தாக்கின. எழுதியவரின் பெயரைப் பார்த்தான்.

யாரோ ஒரு பெண். பிரபாவதியாம். 73 மார்க் எடுத்திருந்தாள். அதுதான் 'டாப்' மார்க். திடீரென்று மோகனுக்கு ஒரு சந்தேகம். செலக்ஷன் லிஸ்ட்டில், அவன், பிரபாவதி பெயரை 'டைப்' அடித்ததாக நினைவில்லையே? அவசர அவசரமாக, தெரிந்தெடுக்கப்பட்டிருப்பவர்களின் பட்டியலை எடுத்துப் பார்த்தான்.

பிரபாவதியின் பெயரைக் காணோம். கேண்டிடேட்டுகளின் மார்க்குகள் பட்டியலைப் பார்த்தான். அதில் பிரபாவதிக்கு, 'ரிட்டன் டெஸ்ட்டில்' 73 என்று இருக்க வேண்டிய மார்க் 37 என்று டைப் அடிக்கப்பட்டிருந்தது தவறாக டைப் செய்யப்பட்டு விட்டதால், நேர்முகப் பேட்டியில் 52 மார்க் எடுத்திருந்த போதிலும், அந்தப் பெண் தேர்வு பெற முடியவில்லை.

அவன் செய்த தவறுக்காக ஒரு பெண் அனாவசியமாய் வேலை வாய்ப்பை இழக்க வேண்டுமா? தவறை மேலிடத்தில் ஒத்துக் கொண்டால், முதலில் பயங்கரமாக திட்டுவார்கள். பிறகு, அவன் நேர்மையை புரிந்து கொண்டு, இந்தப் பிரபாவதிக்கும் ஆர்டர் அனுப்புவார்கள்.

மார்க் பட்டியலை எடுத்துக்கொண்டு, நேராக அஸிஸ்டெண்ட் டைரக்டரிடம் சென்றான்.

"ஸார்! ஒரு தப்பு நடந்து போச்சு. பிரபாவதி என்கிற கேண்டிடேட்டுக்கு கிடைத்த 73 மார்க் 37 என பதிவாயிட்டுது," என்று 'தம்' பிடித்துச் சொன்னான்.

டெலிபோனில் பேசிக்கொண்டே அவனைக் கையமர்த்திய அஸிஸ்டெண்ட் டைரக்டர், சாவகாசமாக டெலிபோனை வைத்துவிட்டு, அவனை இன்னொரு முறை சொல்லச் சொன்னார்.

அவன் சொன்ன விஷயத்தில், அவர் அதிர்ந்து போவார் என்று மோகன் நினைத்தான். கடைசியில், அவன்தான் அதிர்ந்து போனான்.

"நடந்தது நடந்து போச்சு. இனிமேல் குட்டையைக் குழப்பாதே."

அவன் கெஞ்சினான்.

"சார்... இதுல... ஒரு பெண்ணின் எதிர்காலமே அடங்கியிருக்கு."

அஸிஸ்டெண்ட் டைரக்டருக்கு, அவனோடு பேசப் பிடிக்கவில்லை. இந்த 'கிளார்க்' அதுவும் டெம்பரரிப் பயல், தன்னுடன் வாதாடுவது அவருக்குப் பிடிக்கவில்லை. ஒருவிதமாக

முறைத்துக்கொண்டே, "லீவ் இட் டு மி... டோண்ட் ரேக் அப்... இனிமேல் இந்த விஷயத்தைப் பற்றிப் பேசக்கூடாது" என்று சொல்லிவிட்டு, இருக்கையை விட்டு எழுந்தார். ஏன் செக்கப் செய்யவில்லை என்று அவரும் தாளிக்கப்படுவாரே...

மோகனுக்கு இருப்புக் கொள்ளவில்லை. அவனுடைய டைப்பிங் தவறு, ஒரு பிரகாசமான பெண்ணின் வனப்பான வாழ்வுக்கு இடையூறாக இருக்கலாகாது. அவளுக்கு எத்தனை தங்கைகளோ... எத்தனை ஊதாரி அண்ணன்களோ...

அவனுக்கு ஒன்று தெரியும்.

ஆபீஸர்களில் பெரும்பாலோர் வார்த்தைகளால் 'குலைப்பவர்கள்'. எழுத்தால் 'கடிக்கத்' தெரியாதவர்கள். முடியாதவர்கள்; ஆகவே, இவர்கள் விட்டுவிடச் சொல்கிறார்களே என்பதற்காக விட்டுவிடாமல், திரும்பத் திரும்ப மன்றாடினால் நிச்சயமாய்ப் பலன் கிடைக்கும் என்று அவன் நம்பினான்.

நேராக டெபுடி டைரக்டரிடம் போனான். அப்போது அவர், அழகான ஸ்டேனோ ஒருத்தியிடம் 'டிக்டேட்' செய்து கொண்டிருந்தார். அவனைச் சைகையிலேயே வெளியே நிற்கும்படி கூறினார். இறுதியில், ஸ்டெனோ சிரித்துக்கொண்டே வெளியே வந்தாள். மோகன் உள்ளே போனான்.

டெபுடி டைரக்டரிடம் நடந்ததைச் சொன்னான். உடனே அவர், இப்படி சொன்னார் -

"நடந்ததை சொல்லிட்டே... நடக்கப்போறதை நாங்கள் பார்த்துக்குவோம்... டோன்ட் ஒர்ரி... உன் கடமை சொன்னதோடு சரி... லீவ் இட்..."

அந்த வார்த்தையை அப்படியே எடுத்துக்கொள்ள மோகனுக்கு மனம் ஒப்பவில்லை. நடந்ததை மாற்ற இவருக்கு அதிகாரம் கிடையாது. இவர் பேச்சின் தோரணையைப் பார்த்தால், இவர், மேல் அதிகாரியிடம் சொல்லபோவதும் இல்லை.

மோகன், சர்வ அதிகாரம் கொண்ட இயக்குநர் திரிசங்குவிடம், அவரது 'பி.ஏ.' இல்லாத சமயத்தில், அறைக்குள் நுழைந்து, விவரம் சொன்னான். அவர், துடித்து போனார்.

டெபுடி, அஸிஸ்டெண்ட் டைரக்டர்களைக் கூப்பிட்டு திரிசங்கு அதட்டினார். அவர்கள் மீது ஏன் 'கிரேவ் மிஸ் டேக்' செய்ததுக்காக ஏன் நடவடிக்கை எடுக்கக்கூடாது என்று விளக்கம் கேட்டு, எழுத்து மூலம் 'மெமோ' கொடுத்தார்.

டெபுடியும், அஸிஸ்டெண்டும், ஒரு பிரில்லியண்ட் கெர்லின் பிரகாசமான எதிர்காலம் இருட்டாகப் போவதற்கு வாய்ப்பு ஏற்பட்டதற்காக வருந்தி, பிறகு 'அப்பாயின்மெண்ட் லிஸ்ட்டை' திருத்தி விட்டதாகவும், பிரபாவதிக்கு நியமன உத்தரவு போய்விட்டதாகவும் எழுதிக் கொடுத்தார்கள். அதோடு அவர்கள், 'வருத்தத்தை' முடிக்கவில்லை.

இதற்கெல்லாம் காரணமான மோகனை 'சஸ்பெண்ட்' செய்ய வேண்டும் என்றும் எழுதினார்கள். மோகன், வேறொரு கேண்டிடேட்டிடம் 'கமிட்' செய்திருக்க வேண்டும் என்றும், சம்பந்தப்பட்ட கேண்டிடேட்டிடம் பணம் வாங்கிக்கொண்டே, பிரபாவதியின் பெயரை வேண்டுமென்றே 'ஒமிட்' செய்திருக்க வேண்டும் என்றும், லிஸ்ட்டில் தன் பெயர் இருப்பதை அறிந்த, சம்பந்தப்பட்ட கேண்டிடேட், மோகனுக்கு 'பேசிய தொகையை'க் கொடுக்காமல் இருந்திருக்கலாம் என்றும், அப்படிக் கொடுக்காமல் இருப்பது சகஜமென்றும், இதனால் ஆத்திரம் அடைந்த மோகன், அந்தக் கேண்டிடேட்டைப் பழிவாங்க நினைத்து, பிரபாவதி என்கிற பெண்ணுக்கு உதவி செய்வதாய் நடிப்பதாகவும், இதை தங்களின் தலா இருபது, பதினைந்து ஆண்டு கால அனுபவங்கள் உணர்த்துவதாகவும் அறிக்கை சமர்ப்பித்தார்கள்.

விளைவு?

டைரக்டர், மோகனை 'சஸ்பெண்ட்' செய்தார்.

இடிந்துபோன மோகன், அவர்கள் 'டிஸ்மிஸ்' செய்யுமுன்னாலேயே, ராஜினாமாக் கடிதத்தைக் கொடுத்து விட்டான்.

ஓரிரு மாதங்கள், அவனுக்கு ஒன்றும் ஓடவில்லை.

ஒருநாள், மோகனின் நண்பன் சந்திரன், அவனை அதட்டினான். பொறியியல் பட்டதாரியானாலும், பழைய எஸ்.எஸ்.எல்.சி. கிளாஸ்மேட்டிடம் பண்போடும் பரிவோடும் பழகுபவன் அவன்.

"ஏண்டா கழுதை... நேத்து உன் அம்மா சொன்னாங்க... பருக் அண்ட் புருக் கம்பெனியில் அஸிஸ்டெண்ட் வேலைக்கு இன்டர்வியூக்குப் போனாயாமே? என்கிட்ட ஒரு வார்த்தை சொல்லக்கூடாது?"

"சொன்னால் என்ன செய்திருப்பே...?"

"அந்தக் கம்பெனி பெர்ஸனல் ஆபீஸர் என்னுடைய கேர்ல் பிரண்ட். 'இவனுக்கு வேலை கொடு... இல்லன்னா நான் உன்னைக் கட்டிக்க மாட்டேன்...' என்று சொன்னால் போதும், ஒப்புக்கொள்வாள். அந்த அளவுக்கு என் மேல் மயக்கம்..."

"ஆளை விடுப்பா. நீ வேற ஏதாவது ஏடாகோடமாய்ப் பண்ணி வம்பில மாட்ட வச்சிடாதே... அதோட உன் காதல நீ இப்படி கொச்சப்படுத்தாதே."

"சும்மா தமாஷுக்குச் சொன்னேண்டா. நாளைக் காலையில் நாம் ரெண்டு பேரும் அவளைச் சந்திக்கப் போறோம்... ஏதோ உன் லக்..."

மோகன் வேண்டா வெறுப்பாக, நண்பனோடு போனான். சிபாரிசால் வேலையில் சேருவோருக்கு தாழ்வு மனப்பான்மை ஏற்படும் என்பதும், அது தர்மம் இல்லை என்பதும் அவன் கருத்து. என்றாலும், வயதுக்கு வந்த தங்கைகளையும், வயது முதிர்ந்த தந்தையையும் தாங்கவேண்டிய வறுமையின் அடி, அவனின் உறுதியையும் நகர்த்தியது.

"மீட் மிஸ் பிரபாவதி..." என்று சந்திரன் அந்தப் பெண்ணை அறிமுகம் செய்து வைத்தான்.

அந்தப் பெயரைக் கேட்டுத் திடுக்கிட்டு, மோகன், அந்தப் பெண்ணையே பார்த்துக் கொண்டிருந்தான். நாணத்தால், ஏதோ ஒரு சாக்கில் டெலிபோனை விரலால் தட்டிக்கொண்டே, பிரபாவதி மூச்சு விடாமல் பேசினாள்.

“அன்னிக்கு நீங்க பீச்சில... சாரி... அன்னிக்கு நீங்க மோகனைப் பற்றிச் சொன்னதும், இன்னைக்குப் பைலைப் பார்த்தேன். இவர் தகுதிகள் பிரில்லியண்ட் தான்... ஆனால், இவர் வேலை பார்த்த நிறுவனத்துக்கு இவருடைய ‘கேரக்டர்’ பற்றி எழுதிக் கேட்டிருந்தோம். வஞ்சக் குற்றச்சாட்டில் சஸ்பெண்ட் ஆகியிருந்தார்னு எழுதியிருக்காங்க. அதனால...தான்...”

“பிரபா... நீ அப்படிச் சொல்லக்கூடாது. அந்த நிறுவனத்திலே ஒரு பெண்ணுக்கு நியாயமாய் வேலை கிடைக்கிறதுக்காகச் சண்டை போட்டவன் இவன். ஒரு பெண் வாழ்றதுக்காக, தன்னையே அழிச்சுக்கிட்டவன் இவன்...”

“அந்த நிறுவனம் எவ்வளவு மோசமானதுன்னு எனக்குத் தெரியும். அதனாலதான்... எனக்கு அங்கே அப்பாயிண்ட்மெண்ட் ஆர்டர் வந்தாலும் சேராமல், இந்த கம்பெனியில சேர்ந்தேன். உங்க நண்பரோட ரிக்கார்ட் இப்படி இருக்கையில்...

“அப்படிச் சொல்லக்கூடாது. இவன்தான் நம்ம மாப்பிள்ளைத் தோழன்.”

பிரபாவதி, சீரியஸ் ‘மூடில்’ இருந்ததால் நாணவில்லை; சிரிக்கவில்லை.

சிறிது நேரம், பேனாவை எடுத்து வாயில் வைத்துக் கடித்துக் கொண்டிருந்தாள். அதன் பிறகு, “ஆல்ரைட்... இவரைப் பற்றி வந்திருக்கிற லெட்டரை எடுத்துடறேன். அந்த நிறுவனத்தின் இப்போதைய டைரக்டரை... ஒரு ‘ஸோஷியல் கேதரிங்ல’ பார்த்திருக்கேன். அவர்கிட்ட பேசி... நான் அவங்களுக்கு எழுதிய லெட்டரையும் கிழிச்சுப் போட்டுடச் சொல்றேன்.”

பிரபாவதி, சொன்னாளே தவிர சீரியஸாகவே இருந்தாள். "ஏன் ஒரு மாதிரி இருக்கிறே..." என்றான் சந்திரன்.

"ஒன்றுமில்லை... இந்த மாதிரி ரிக்கார்டை 'டேம்பர்' பண்ற வேலை எனக்குப் புதுசு. நான் எழுதின ரிக்காட்டை, நானே அழிக்கணும். ஒரு வேளை, விசயம் வெளிப்பட்டால், இவரை மாதிரிதான் நானும் ஆகணும்."

மோகன், பிரபாவதியைப் பார்த்தான். இந்தப் பெண்ணுக்காகச் சண்டை போட்டபோதே, அவளிடம் ஒருவித மானசீகமான அன்பையோ காதலையோ கொண்டிருந்தான். அதே பிரபாவதி, தனக்காக நியாயத்திற்குப் புறம்பான வழியைக் கையாளலமா? கூடாது. ஆபீஸ் நியாயம், உலக தர்மம் ஆகாதுதான். ஆனால், மாற்று உபாயம் கிடைக்கும் வரை, நடைமுறை நியாயம் இருந்தாகவேண்டும்!

"மேடம்! இவன் நச்சரிப்புத் தாங்க முடியாமல்தான் இங்கே வந்தேன். உண்மையில் எனக்கு எங்கேயும் வேலை செய்ய பிடிக்கல. இவன் அப்பாகிட்ட சொல்லி... நான் உங்கள் மேரேஜை அரேஞ் பண்ணணும்முன்னா, நீங்க எனக்கு வேலை கொடுக்கக் கூடாது... நான் வர்ரேன்..."

சிரித்துக்கொண்டே பேசியதாக நினைத்துக்கொண்டு, வெளியே வந்த மோகன், நினைவுச் சுமையை ஏற்றிக்கொண்டான்; தொட்டிலாட்டிய தந்தையின் கை இப்போது அவன் கையை எதிர்பார்த்து நிற்கும் கட்டாய நிலையையும், வயது வந்தும் வாய்ப்பில்லாமல் நிற்கும் தங்கைகளின் எதிர்காலமும், அவனை முள்போல் குத்தின.

அவர்கள் இருவரையும் அந்த அறையில் தனியாக விட்டுவிட்டு மோகன் வெளியேறி, முள் மேல் நடப்பதுபோல் நடந்தான்.

- குமுதம் 19.2.76

❖

# போக்கிடம் இல்லாத பொழுது

"உயர் அதிகாரிகள் பயிற்சி மையம்" என்று இந்தியில் முதலாவதாகவும், ஆங்கிலத்தில் இரண்டாவதாகவும் எழுதப்பட்ட அந்த போர்டை, ராமையா கடுப்பாகப் பார்த்தபடியே, அந்த வளாகத்திற்குள் போனார். அங்குமிங்குமாக உள்ள அம்புக்குறிகளை உற்று உற்றுப் பார்த்தும், எதிர்ப்பட்டவர்களை கேட்டுக் கேட்டும், அவர் எப்படியோ அந்த வகுப்பறைக்குள் போய்விட்டார். அவருக்கு முன்னாலயே டை கட்டிய ஒரு மனிதர் நான்கைந்து பேர் சூழ நின்றார். அவரிடம் எல்லோருமே உரிமையாகவும், மரியாதையாகவும் பேசிக் கொண்டிருந்தார்கள். மரியாதைக்குரிய ராமையாவும், அந்த மனிதரிடம் பேச்சுக் கொடுத்தார்.

"மன்னிக்கணும். என் பெயர் ஆர்.ராமையா. சென்னையில் டெப்டி டைரக்டர். சீனியர் ஆபீஸர்ஸ் இன் சர்வீஸ் டிரெயினிங்குக்காக வந்திருக்கேன். நீங்க..."

"ஓ... ஐ... ஸீ... என் பெயர் டபிள்யூ. கன்னா. ஜான்ஸில பெர்சனல் ஆபீஸரா இருக்கேன்."

"உங்களுக்கு இங்க எல்லோரும் தெரியும் போலத் தெரியுது..."

"எஸ்... மிஸ்டர். ராமையா... மூணு வருஷத்துக்கு முன்னால, இதே பயற்சி மையத்தில் அசிஸ்டெண்ட் புரொபஸரா இருந்தேன். இதே மாதிரி இன் சர்வீஸ் பயிற்சிகளுக்கு கோர்ஸ் டைரக்டராகவும் இருந்தேன். அப்புறம் யூ.பி.சி. எழுதி, ஐ.ஏ. ஆண்டு ஏ.எஸ். சர்வீஸ்ல சேர்ந்தேன். நான் எவ்வளவு சொல்லியும் கேட்காம பாடம் எடுத்த எனக்கே பாடம் கற்பிக்கிறது மாதிரி அனுப்பிட்டாங்க."

"பயிற்சி கொடுத்தவருக்கே பயிற்சியா...? நல்லா இருக்கே!"

"இதுக்குப் பேர்தான் கவர்ன்மென்ட் என்கிறது."

டபிள்யூ. கன்னாவும், ஆர். ராமையாவும் பேசிக் கொண்டிருந்தபோது, அந்த அறைக்குள் நிறைய பேர் வந்து விட்டார்கள்.

அசல் எட்டாவது வகுப்பு அறை மாதிரிதான். கரும்பலகை, பிரம்பு, மேப், சாக்பீஸ், முப்பது வயசு முன்கோபி. ஆனாலும், ஒரு சின்ன வித்தியாசம். மாணவர்கள் பகுதியில், பெஞ்சுகளுக்குப் பதிலாக ரப்பர் மெத்தை நாற்காலிகள். தூங்குவதற்கு வசதியான சன்மைக்கா மேஜைகள்.

இந்த அறைக்குள் ஏற்கெனவே பத்துப் பதினைந்து பேர் இருந்தார்கள். உள்ளே நுழைந்த ராமையாவை, டபிள்யூ. கன்னா கையைப் பிடித்து இழுத்து, ஓர் இடத்தைக் காட்டி, "உட்காரலாம்" என்றார். உட்காரப் போன ராமையாவோ, கடைசி வரிசையில் ஒதுக்குப்புறமாய் இருந்த ஒருவரைப் பார்த்துவிட்டார். 'அடஅட... கே.என். சீனிவாசனா? அப்பாடா...?

ராமையா, 'கே.என்.எஸ்.' பக்கத்தில் உட்கார்ந்தார். தூங்கிக் கொண்டிருந்தவரை உசுப்பினார். இருவரும், ஒருவர் கையை ஒருவர் பிடித்தபடி ஏதோ பேசினார்கள்.

இதற்கிடையே முன்கோபி போல் தோன்றிய எதிர்வரிசை ஒற்றை மனிதர், கடிகாரத்தைப் பார்த்தபடியே எழுந்தார். பிறகு, இவர்களுக்கு எழுந்து நின்று பேச வேண்டிய அவசியம் இல்லை என்பதுபோல், மேஜைக்கு அப்பால் உள்ள ஆசிரியர் நாற்காலியில் உட்கார்ந்தார். அறிமுகத்தை பீடிகையாக்கினார்.

"என் பெயர் சுரேஷ்சிங். இந்த பயிற்சி நிலையத்தில் அசிஸ்டெண்ட் புரொபஸர். உங்களுக்கு கோர்ஸ் டைரக்டர். தயவுசெய்து உங்களை அறிமுகம் செய்து கொள்ளலாமா?"

அறிமுகங்கள் அரங்கேறின.

வலது பக்க முன்வரிசையில், அருணாச்சல் பிரதேச நசாரிக், இடது பக்க முன்வரிசையில் நாகாலாந்து வசோல், இரண்டாவது வரிசையில் மராட்டிய மாநில மிஸஸ் ஜோஷி, ஆந்திர கிருஷ்ணாராவ், கன்னட பாட்டீல், கேரள குஞ்சுதன் நாயர், மேற்கு வங்காள குப்தா, 'டில்லியின் செல்வர்' எஸ்.பி. வர்மா, மத்திய பிறதேச பார்ஜன், பீஹார் சத்பதி - இப்படி பல்வேறு மாநில அதிகாரிகள்.

இப்போது போதகர் சுரேஷ்சிங் - அதுதான் கோர்ஸ் டைரக்டர், முகத்தை உம்மாக்கி, வாயைக் கோணலாக்கியபடியே புத்திமதி சொன்னார்.

"நீங்க எல்லாம் சீனியர் அதிகாரிகள். வயதிலும் சீனியர்கள். உங்களுக்கு நான் சொல்ல வேண்டியதில்லை. இந்தப் பயிற்சி நிஜமாவே சீரியஸான பயிற்சி. இதை யாரும் சம்பளத்துடன் கூடிய விடுமுறையாய் நினைக்கக்கூடாது. அதனால்தான் சொல்றேன் வீ ஆர் டெட் சீரியஸ்..."

சுரேஷ்சிங், மேஜையை அடித்தபடியே, தம் பேச்சுக்குத் 'அடிக்குறிப்பு' செய்துவிட்டு மீண்டும் தொடர்ந்தார்.

"இந்த டில்லியில், 'எங்க தங்கப் போறோமோன்'னு கவலைப்பட வேண்டாம். இங்கேயே ஹாஸ்டல் இருக்குது. ஆளுக்கு ஒரு ரூம். தின வாடகை ஐந்து ரூபாய்தான். எஸ். லேடி... அண்ட் ஜென்டில்மென். ஐந்தே ஐந்துதான். டோண்ட் ஒர்ரி. இப்போ நிர்வாக இயல் என்ன என்பது பற்றி விளக்கப் போகிறேன்... நிர்வாகம் என்பது இம்பெர்ஸனல். அப்ஜெக்டிவ். அதே சமயம், பெர்சனல்... சப்ஜெக்டிவ்..."

சுரேஷ்சிங், பேசிக்கொண்டே போனபோது, மிஸஸ் ஜோஷி சந்தேகம் கேட்டு, டம்பப் பையைத் தூக்கியபடியே எழுந்தாள். சுரேஷ்சிங், ரொம்பவும் சந்தோஷப்பட்டார். "இந்த மேடம் நல்லா கவனிக்கிறாங்க... சந்தேகம்தானே, அறிவின் திறவுகோல்... எஸ்... ப்ளீஸ் மேடம்..."

"ரூம் வாடகை ரூபாய் அஞ்சுன்னு சொன்னீங்க. பர்னிஷ்ட் ரூம்தானே...? கட்டில் இருக்குதா...? பேன் இருக்குதா...? டாய்லெட்..."

"எல்லாம் இருக்கு. கவலையே வேண்டாம். நிர்வாக இயல் என்பது...."

சுரேஷ்சிங், நிர்வாக இயலை மேற்கொண்டும் ஜவ்வு மிட்டாய் ஆக்கியபோது, பாட்டீலும், நாயரும் ஒருசேர எழுந்தார்கள்.

"எங்களுக்கு ஹாஸ்டல் வேண்டாம். கரோல்பாக்கில சொந்தக்காரங்க இருக்காங்க... ஹாஸ்டல்ல தங்க மாட்டோம்... தங்கவே மாட்டோம்..."

சுரேஷ்சிங், கோபப்படப் போனார். இதற்குள் இரண்டு இள வட்டங்கள் வந்தன. எடுத்த எடுப்பிலேயே பேசின.

"சார்... ஐ ஆம் மிஸ். முன்னி ஆப் ராஜஸ்தான்..."

"சார், ஐ ஆம் சஞ்சய் தாமஸ். புரம் ஆந்திரா..."

அந்த இருவரும், அறிமுகம் இல்லாதவர்கள் என்பதைக் காட்டும் வகையில், ஆளுக்கு ஒரு வரிசையில் உட்கார்ந்தார்கள்.

மீண்டும் சுரேஷ்சிங்... மீண்டும் நிர்வாக இயல்... 'கேன்.என்.எஸ்' மீண்டும் ராமையாவின் காதை உரசினார்.

"பாரு... ராமு... இந்தச் சின்னஞ்சிறுசுகள் நம்ம லெவல் பதவிக்கு வந்திருக்கிறதைப் பார்க்க வெட்கமா இருக்குது..."

இந்தச் சமயத்தில், 'பயிற்சி அதிகாரிகள்' மிஸஸ். ஜோஷியை விட்டுவிட்டு, மிஸ். முன்னியை மொய்த்தார்கள். முட்டிக் கால்களோடு நின்றுவிட்ட அவளது கவுணை ஒப்புக்கும், கால்களை உண்மைக்குமாய்ப் பார்த்துவிட்டு, ஒவ்வொரு கிழமும் லேசாய் விசிலடித்தது. சுரேஷ்சிங்கோ, எதைப் பற்றியும் கவலைப்படாமல், நிர்வாக இயலை வாயால் பிடித்திழுத்தபோது-

வலது பக்கம் கடைசி வரிசையில் இருந்த வர்மா எழுந்தார். டில்லிக்காரர்... அதோட சண்டைக்காரர்... இவரோடு சண்டை போட தயாராக இல்லாத அதிகாரிகள், இந்த வர்மாவை நான்காவது தடவையாக பயிற்சிக்கு அனுப்பியிருக்கிறார்கள். சுரேஷ்சிங்கைப் பேச வேண்டாம் என்று கையாட்டிவிட்டு, வர்மா இப்படிப் பேசினார்.

"நிர்வாகம் என்பது என்ன என்பது முக்கியமில்லை. எப்படி என்பதே முக்கியம். அந்த எப்படி என்பதிலும், இப்படியா அப்படியா என்பது முக்கியம். அதுகூட முக்கியமில்லை. இப்படி என்பது எப்படி, அப்படி என்பது எப்படி என்று அலசி ஆராய்ந்து சிந்தித்துச் சீர்தூக்கி."

சுரேஷ்சிங், வாயடைத்துப் போனார். முன்னாள் அசிஸ்டெண்ட் புரொபசர் டபிள்யூ. கன்னா குறட்டை போட்டே தூங்கினார். மற்றவர்களோ, எவன் பேசினாலும் இப்படித்தான் பேசுவான். இவனே பேசட்டும் என்பது மாதிரி சும்மா இருந்தார்கள். இந்த மௌனத்தை அங்கீகாரமாக எடுத்துக் கொண்ட எஸ்.ஆர். வர்மா, உத்வேகம் பெற்றார். வகுப்பறைக்கு முன்னால் வந்து சுரேஷ்சிங் முன்பக்கம் தனது முதுகைச் சார்த்தியபடியே நிர்வாக இயல் பற்றி, 'கௌண்டர் லெக்சர்' கொடுத்தபோது -

"டீ பிரேக்... டீ பிரேக்..."

தேநீர் குடித்தபோது, மிஸ். முன்னியும், அவள் வயதுக்காரனான சஞ்சய் குமாரும், ஒருவருடன் ஒருவர் அறிமுகம் செய்து கொண்டார்கள். முதலில் தயங்கித் தயங்கிப் பேசி, பிறகு, தயங்காமல் பேசிக் கொண்டார்கள். கே.என்.எஸ், கிமெண்ட் அடித்தார்.

"வேணுமுன்னா பாருடா... ராமு. ரெண்டு பேரும் லவ் பண்ணப் போறாங்க பாரு... குட்டி நல்லாத்தாண்டா இருக்காள். சர்க்கார் செலவுல காதல் பண்ணப் போறாங்கப் பாரு..."

"நீ ஒருத்தன்... ஆக வேண்டியதைப் பார்க்காமல்..."

வகுப்பு, மீண்டும் துவங்கியது.

எங்கேயோ காணாமல் போன சுரேஷ்சிங், திடீரென்று ஓர் ஆறடி மனிதருடன் உள்ளே வந்தார். அந்த மனிதரின் படர்ந்த முகத்தையும், பெரிய பெரிய பற்களையும் பார்க்கும்போது, ஆசாமிக்கு மீசை இருந்தால் நன்றாக இருந்திருக்கும். ஆனாலும், பாதகமில்லை. ஜாட் இனத்துக்கு உரிய கம்பீரம், துடுக்குத்தனமான பேச்சு.

"லுக்... நீங்க சீனியர் அதிகாரிகள்... பல்வேறு மாநிலங்களிலிருந்து, ரயிலில் முதலாவது வகுப்பு அல்லது ஏ.சி. சிலிப்பர்ல வந்திருக்கீங்க. தினமும் 125 ரூபாய் அலவன்ஸ் வாங்கப் போறீங்க. வசதியான ஐந்து ரூபாய் அறையில் தங்கப் போறீங்க. இப்படி சகல வசதியோடும், சம்பளத்தோடும் அரசாங்கம் உங்களை எதுக்காக இங்கே அனுப்பி வைக்குது... சொல்லுங்க...? எதற்காக... ஏன்... எதற்காக..."

திடீரென்று, டில்லிபுத்திரன் வர்மா எழுந்தார். ஏன் என்பதற்கு இருப்பிடத்தில் இருந்து பத்து நிமிடமும், பிறகு வகுப்பறையின் முகப்புக்கு வந்து எதற்கு என்பதற்கு பத்து நிமிடமும் பேசினார். அதற்குள் அந்த ஜாட் மனிதர் சுதாரித்து, தனது தலைமையில் மூன்று தடவை ஏற்கனவே பயிற்சி எடுத்த வர்மாவின் தோளில் கையைப் போட்டு, அவர் மார்பைப் தட்டிக் கொடுப்பதுபோல், ரத்தக்கசிவு வரும்படி கிள்ளியபடியே பேசினார்.

"நான் இந்த பயிற்சி நிலையத்தின் டைரக்டர். பேராசிரியர் திவான்லால்... வர்மாஜி! எனக்கும் பேச சான்ஸ் கொடுங்க! லுக் லேடீஸ் அண்ட் ஜென்டில்மேன்... உங்களுக்காக கெஸ்ட் லெக்சர் ஏற்பாடு செய்திருக்கோம். ஒவ்வொரு லெக்சருக்கும் 300 ரூபாய். அவங்க போக்குவரத்துக்கு 100 ரூபாய். இப்படித் தினமும் நாலு லெக்சர். இது எதுக்காக... யாருக்காக... டோண்ட் டாக் வர்மா. ஐ வில் டாக். மூத்த அதிகாரியான ஒவ்வொருவருக்கும் இந்தப் பயிற்சிக் காலம் வரைக்கும் சராசரி 15 ஆயிரம் ரூபாய் செலவு செய்கிறோம். எதுக்காக...? யாருக்காக...? நானே சொல்கிறேன்.

இங்கே பயிற்சி பெற்ற பிறகு, நீங்கள் உங்கள் டிபார்ட்மெண்டுக்குப் போய், அங்கே உள்ள உங்கள் சகாக்களை நல்வழிப்படுத்த வேண்டும் என்பதே இந்தப் பயிற்சியின் நோக்கம். பத்தாம் பசிலியாய் வந்து நவீனத்துவமாய் திரும்ப போகும் உங்களிடம், உங்கள் சகாக்கள் நிறைய எதிர்பார்ப்பார்கள். அவர்களின் எதிர்ப்பார்ப்பை நீங்கள் ஈடேற்ற வேண்டும். ஒரு மெழுகுவர்த்தி பல மெழுகுவர்த்திகளை எரிய விடுகிறதல்லவா... அப்படி... எப்படி..."

'டில்லியின் செல்வன்' வர்மா விளக்கம் சொல்லப் போனபோது, நமது ராமையா எழுந்தார். கம்பீரமாக. வேட்டியை விடாப் பிடியாகக் கட்டியிருக்கும் மனிதர். ஆத்திரத்தின் முதிர்ச்சி முகத்தில் தெரிந்தது. இதற்குள், அந்த 'கண்டுபிடிப்பை' அடக்கமுடியாமல் அவரோடு எழுந்த கே.என்.எஸ், ராமையாவிடம் ரகசியம் போல் பகிரங்கமாகவே பேசினார்.

"பாருடா ராமு.... அப்போ தனித்தனியா உட்கார்ந்திருந்த முன்னியும் சஞ்சயும் இப்ப ஒண்ணாய் உட்கார்ந்து டயலாக் பேசறதைப் பாருடா..."

ராமையா, சீனிவாசனை தோளை அமுத்தி உட்கார வைத்தார். இடுப்புக்குக் கீழே நழுவப்போன வேட்டியைக் கட்டாமலே பிடித்துக்கொண்டு, அந்த ஜாட் டைரக்டரைப் பார்த்து தமிழ் இனத்திற்கே உரிய புறநானூற்று பார்வையோடு கேட்டார்.

"சார்... இந்த ஆறு வாரப் பயிற்சி எப்ப முடியும்...?"

"ஒய் டவுட்.... அடுத்த மாதம் 31-ஆம் தேதியோட முடியும்."

"ஆறு வாரமுன்னா... நாற்பத்திரண்டு நாள். அதனால, அடுத்த மாதம் 28-தேதியே முடிச்சுடுங்க சார்..."

"நோ... நோ... 31-ஆம் தேதின்னா 31-ம் தேதிதான்..."

"நோ... நோ... 28-ஆம் தேதியேதான். 28-ஆம் தேதிதான்...."

"முப்பத்தி ஒண்ணு. ரைட்..."

"ராங்... இருபத்தெட்டு...."

அந்த அரசு பயிற்சி நிலையத்தின் இயக்குநரான திவான்லால், பொறுமை இழந்தார். கத்தப் போனார். ராமையாவும் திருப்பி கத்துவதற்கு தயாராக இருப்பதுபோல் உதடுகளை குவித்தபோது, திவான்லால் ஜென்டில்மேனாகி கேட்டார்.

"லுக் ஜென்டில்மேன்! மேற்கொண்டு ஒரு மூணு நாள் இருக்கக் கூடாதா? இங்கேதான் பொறுப்புணர்ச்சி வேணும் என்கிறது. அடிப்படையில் ஒவ்வொரு அரசு அலுவலருக்கும் பொறுப்புணர்வு வேண்டும். உங்ககிட்ட அது இல்ல."

"பொறுப்புணர்வு இருக்கிறதாலதான் சொல்றேன். இருபத்தெட்டு இருபத்தெட்டே..."

இயக்குநர் திவான்லால், உதடுகளை உப்ப வைத்தார். பயிற்சி மாணவ அதிகாரிகளும், வீம்புக்குப் பேசுவதுபோல் தோன்றிய ராமையாவை, அதிசயமாய்ப் பார்த்தார்கள். முன்னியும், சஞ்சயும் மட்டும், எதைப் பற்றியும் கவலைப்படாமல், லேசாய் ஒருவரை ஒருவர் உரசியபடியே எதையோ பேசிக் கொண்டிருந்தார்கள். கோபத்தால் கண் சிவந்து, குமுறலால் பற்கள் வெளிப்பட்டு, படபடப்பாய் நின்ற திவான்லாலைப் பார்த்து, ராமையா பேசப் போனபோது, திவான்லால் மீண்டும் கெஞ்சினார்.

"ஆறு வாரம் என்பது நீங்கள் சொல்வது மாதிரி டெக்னிக்கால சரியா இருக்கலாம். ஆனால், மேலும் மூன்று நாட்கள் நீங்கள் பயிற்சி பெற்றால், உங்கள் சகாக்களுக்கு, மேலும் சிறப்பாக, இங்கே கற்றதை கற்பிக்க முடியும். எத்தனையோ அதிகாரிகள் இருந்தும், உங்கள் அலுவலகம், உங்களைதான் நல்லவர், வல்லவர் என்று அனுப்பி இருக்க வேண்டும். இந்தச் சூழலில் மூன்று நாட்களை பற்றி நீங்க கவலப்படக் கூடாது."

ராமைய்யா, பற்றற்ற குரலில் பதிலளித்தார்.

"கவலப்பட்டுத்தான் ஆகணும் ஸார். நான் அடுத்த மாதம் 31-ம் தேதி ரிடையராகிறேன் சார். 28-ம் தேதி டில்லியிலிருந்து புறப்பட்டால்தான், 30-ம் தேதி சென்னைக்குப் போய், அதுக்கு மறுநாள் பொறுப்பை ஒப்படைக்க முடியும். 'ரிடையராகிற எனக்கு எதுக்குய்யா டிரெயினிங்'குன்னு எழுதிப் போட்டேன். 'எதிர்த்தா பேசறே?'ன்னு ஒரு மெமோ கொடுத்தாங்க. அதனால்தான் சார் வந்தேன். ஒரு வேளை உங்க சொல்ல கேட்டு 31-ஆம் தேதி வரைக்கும் இங்கே இருந்தா எனக்கு பென்சம்கூட தரமாட்டாங்க, அதனால 28-ம் தேதியே கோர்ஸ் முடியுது. ரைட்....?"

கல்கி, 30-12-1990

❖

# மாப்பிள்ளைத் தேர்வு

'ஏன் பிறந்தாய் மகளே' என்று பிறப்பித்த காலத்தில் நினைக்காது போனாலும், இருபது ஆண்டுகளுக்குப் பிறகு, இப்படி அமைச்சர் முதல் ஆண்டிவரை நினைக்கும் இந்தக் காலக்கட்டத்தில், இதோ இதே நாளில், குட்டாம் பட்டியில் வாழும் ராமலிங்கம் மட்டும், இன்னொரு பெண்ணையும் பெறாமல் போனோமே என்று வருத்தப்பட்டார்.

அவரது பறட்டைத் தலையில், தேய்ப்பதற்காக சதைக் குவளை மாதிரியான அவர் கையில் தேங்காய் எண்ணெய் பாட்டிலைச் சாய்த்துக் கவிழ்த்த தேனம்மா அருகில் நிற்பதையோ, அவர் கையில் எண்ணெய் ஊத்தியதையோ கவனிக்காமல், மனிதர் குத்துக் கல்லாய் நின்றார். இன்னொரு நாளாக இருந்தால், கையில் அதிகமாகப் பெருக்கெடுத்த எண்ணெயைப் பார்த்துவிட்டு, 'இவ்வளவு எண்ணெய் தேய்த்தால் உருப்பட்டாப் போல்தான்' என்று மனைவியை கத்தி முடித்திருப்பார்.

ஆனால் இப்போதோ, துண்டை எடுத்து விசிறியாக்கிய படியே நின்றார். தேனம்மா, தனது தலையில் எண்ணெய் தடவி விடுவதையோ அப்படித் தடவியதில் அவரது முன் முடியில் அவளது கை சிக்கிக் கொண்டு, முடியை இழுத்த இழுப்பில் ஏற்பட்ட வலி யையோ, உணராமல் நின்றபடியே நின்றார்.

ராமலிங்கம், எந்த மனிதனுக்கும், தன்னைப்போல் அவனா, இவனா என்ற பிரச்சினை வரக்கூடாது என்று நினைத்துக் கொண்டார். இந்த பிரச்சினைக்கு தீர்வாக இரட்டை அதிர்ஷ்டங்கள் வந்தாலும், அவருக்கு அவை, துரதிருஷடங்களாக தெரிந்தன.

அவரது ஒரே மகள் மலரைக் கேட்டு இரண்டு இடங்களில் இருந்து ஆள் அனுப்பி விட்டார்கள். அரசியலைப் பொறுத்த வரையில் ஒரு குடும்பம் கதர் வேட்டி.... இன்னொன்று கரைவேட்டி; அதைப் பற்றி அவருக்குக் கவலையில்லை. பண பலத்திலோ ஆள் பலத்திலோ ஒன்றுக்கொன்று குறைந்ததில்லை. அதோடு ஒரே பங்காளிக் குடும்பம். இவரோட அம்மாவும், தேனம்மாவும் பிறந்த குடும்பம்.

முதல் வீட்டு பிள்ளையாண்டான் முத்துவேலுவும், இன்னொரு வீட்டுப் பிள்ளையாண்டான் பழனிச்சாமியும், ஒரே தராசில் இருந்த தட்டுக்கள் மாதிரி. முத்துவேல் உரக்கடை வைத்திருக்கிறான். கூடமாட விவசாயக் கருவிகளை கமிஷனுக்கு வாடகைக்கு விடுகிறான்.

பழனிச்சாமியும் வேகப்பட்டவன் அல்ல. பெரிய பலசரக்குக் கடையாக வைத்து இருக்கிறான். அதுவும் பெரிய பங்களா மாதிரி கடை; பொண்டாட்டியைத் தவிர எல்லாம் வாங்கலாம்.

இவனுக்கு மோட்டார் பைக் வாகனம். அவனுக்கு ஸ்கூட்டரே ஆசனம். ஆள் பார்வை என்று எடுத்துக் கொண்டால்கூட, முத்துவேல் புலி, பழனிச்சாமி சிங்கம். இவனுக்குத் தூக்கலான பல்; ஆனால் உருண்டையான முகம்; அவனுக்கு தூக்கலான முகம்; ஆனால் அழகான பல்வரிசை; பழக்கவழக்கத்தை வைத்துப் பார்த்தால், இருவருமே சிகரெட் பிடிப்பவர்கள்;கள்ளச் சாராயத்தை மட்டும் குடிக்காதவர்கள். குணம் என்று வைத்தால், இருவருமே தங்கக்கம்பிகள். இவரை எதிரில் பார்த்தாலே போதும். முத்துவேல் 'மாமா' என்று சொல்லியபடியே வேட்டியை இறக்கிப் போட்டுச் சிரிப்பான். பழனிச்சாமி சிரித்தபடியே 'மாமா' என்று மேல் துண்டை, தோளில் இருந்து கையில் இறக்கிக் கொள்வான்.

இப்போது இந்த இரண்டு பேருமே பேண்ட், சர்ட் போடுவதால் மடக்கி வைத்த சட்டையைத்தான் நிமிட்டி விடுகிறார்கள்.

இவன்களில் எவனை மகள் மலருக்குத் தேர்ந்தெடுப்பது என்பது அவருக்குப் பிரச்சனையாகிவிட்டது. இவர், தனது குலதெய்வமான சுடலைமாடனிடம் பூப்போட்டுப் பார்த்தார். அந்த மாடன் முத்துவேலுக்கு வெள்ளைப் பூவைக் காட்டி, பழனிச்சாமிக்கு, டேஞ்சர் நிறப் பூவைக் காட்டிவிட்டான். அதே சமயம், மனைவி தேனம்மா தனக்குப் பிடித்த காளியம்மாளிடம் சீட்டு எழுதிப் போட்டாள். அந்த ஆத்தாளோ, பழனிச்சாமிக்கு ஆமாம் போட்டு, முத்து வேலுக்கு 'சீல்' போடுகிறாள். போதாக்குறைக்கு, கடந்த நான்கு நாட்களாக இரண்டு பயல்களுமே அவரையே பெண்ணாக நினைத்து அவர் போகுமிடமெல்லாம் அவரை 'சைட்' அடிக்கிறார்கள்.

ராமலிங்கத்திற்குக் கோபம் கோபமாக வந்தது. வீட்டின் மூன்று வாசல்களைத் தாண்டி படிகளுக்குக் கதவு போல் உள்ள கொல்லைப்புற கிணற்றுச் சுவரில் சாய்ந்து நிற்கும் மலர், எதையுமே கண்டுக்காதுபோல், வலது கையால் இடது கைக்குச் சொடக்குப் போட்டுக் கொண்டிருந்தாள். அந்தப் பயல்கள் சொக்கிப் போகும் அளவுக்கு அவளிடம் என்ன இருக்கிறது என்று அவருக்குப் புரியவில்லை. அப்புறம், ஒரு தந்தைக்கு, மகளின் அழகு தெரியாது என்பதை ஒப்புக் கொண்டது போல் முகத்தைத் திருப்பினார்.

ஆனாலும், மலர், அம்மாவைப் போல் இரண்டு கன்னத்து எலும்புகளும் துருத்தி நிற்க 'இருமுகம்' காட்டாமல், தன்னைப் போல் வட்ட முகம் கொண்டதில் மகிழ்ந்து போனார். அதே சமயம் தன்னைப் போல் சப்பிப்போன உடம்பில்லாமல், அம்மாவைப்போல் அழுத்தமான உடல்வாகு கொண்டதில் அவருக்கு ஒரு பூரிப்பு; ஆனாலும் சரியான 'பேக்குராண்டு' இரண்டு பேரில் எவன் பிடிக்குது என்று சாடைமாடையாகச் சொல்லலாம். சொன்னால் தானே... இரண்டு பேரையுமே கட்டிக்கத் தயார் என்பது மாதிரி பார்த்தால் எப்படி!

ராமலிங்கத்தின் தலையில் எண்ணெய் தேய்த்து முடித்துவிட்ட தேனம்மா, தனது புறங்கையால், அவரது கையில் எண்ணெய் பிசிறைத் தடவி விட்டபடியே சொன்னாள்:

"உங்களுக்கு ஒரு விசயம் தெரியுமா? மேலத்தெரு ராக்கம்மா கல்யாணம் ஆன இந்த ஒரு வாரத்துல ஒரு நாளுகூடப் புருஷனைத் தொட விடலையாம். கேட்டால், சிகரெட் பிடிக்க தெரியாதவனெல்லாம் ஒரு ஆம்பிளையான்னு கேட்கிறாளாம்... நம்ம பொண்ணு சுத்தப் பட்டிக்காடு."

ராமலிங்கத்திற்குக் கோபம் வந்தது. கிணற்றுச் சுவரில், இன்னும் சாய்ந்தபடியே இப்போது வலது கைக்கு இடது கையால் சொடுக்கு போட்டுக் கொண்டிருந்த மகளை, திட்டுவதற்குச் சாக்குபோக்கு பார்த்தார்.

"ஏழா மலரு... இங்க வா.."

"வாரேன்பா..."

மலர், இடுப்பில் சொருகிய சேலையை பாதம்வரை படர்த்திவிட்டு, தந்தையின் பக்கம் ஓடோடி வந்தாள். அப்பா எதற்காக கூப்பிடுகிறார் என்பது தனக்குத் 'தண்ணீர் பட்டபாடு' என்பதுபோல் அடுக்களைப் பக்கம் ஓடினாள். நான்கைந்து தம்ளர்களில் நல்ல டம்ளர் ஒன்றை எடுத்து, பானைக்குள் துழாவப் போனாள். பிறகு, அந்த டம்ளரை அப்படியே வைத்துவிட்டு, சுண்ணாம்பு கறைபட்ட, தன் கையைக் கழுவிவிட்டு, ஒரு செம்பை எடுத்து நீர் மொண்டாள். அப்பாவுக்காக அவ்வளவு சுத்தம். இவ்வளவுக்கும் அண்ணன் தண்ணீர் கேட்டால் தான் குடித்து வைத்த எச்சில் தண்ணீரைக் கொடுப்பவள்தான்.

செம்பை நீட்டிய மகளிடம் அப்பா கத்தினார்.

"இந்தா. என் தலையிலே ஊத்து. அப்பவாவது பித்தம் தெளியட்டும்."

மலர், கவலைப்படவில்லை. கண்ணீர் மல்க வில்லை, வேசாகச் சிரித்துக் கொண்டாள். "தண்ணீர் வரவர உப்புக் கரிக்குதுப்பா, இனிமே தெருக்குழாயிலதான் குடிக்கத் தண்ணீர்

பிடிக்கணும்,'' என்று சொல்லிவிட்டு, சர்வசாதாரணமாகப் போய்விட்டாள்.

கண்ணை மூடியபடியே, வாய் வழியாக மூச்சுவிட்ட ராமலிங்கம், வீட்டுக்கு வெளியே, தெருவில் கேட்ட பேச்சுச் சத்தத்தைக் கேட்டு நிமிர்ந்தார். அது தேனம்மாவுக்குச் சாதா சத்தமாகவும், இவருக்கு அசரீரி குரலாகவும் ஒலித்திருக்க வேண்டும். சத்தம் இதுதான்.

“தீமிதி விழா இல்லாத திரௌபதியம்மன் கொடையா?”

அந்தத் தெருப் பேச்சு, ராமலிங்கத்திற்கு திருப்பேச்சாய் ஒலித்தது. மார்பை நிமிர்த்தி, தலையைத் தூக்கித் தன்னையே எக்காளமாகப் பார்த்துக் கொண்டார். மனைவியிடம் முகம் கொடுத்து, அதே சமயம், மகளிடம் பேசுவதுபோல் பேசினார்.

“ரெண்டு பயலையும் தீ மிதிக்க வைக்கப் போறேன். எவன் தேறுறானோ அவனுக்கே நம்ம மலரு.”

தேனம்மா, விவரம் கேட்பதற்கு முன்பே, ராமலிங்கம் நடையைக் கட்டினார். நிறத்தாலும், குணத்தாலும் பழுத்துப்போன அரைக்கை சட்டை ஓட்டைகளுக்குள் இன்னும் இரண்டு கைகளைத் திணிக்கலாம். அந்தத் தொளதொளப்புச் சட்டையோடு, வடக்குத் தெருவைத் தாண்டி, அது சங்கமமாகும் வண்டிப்பாதையில் நடந்து, அந்தப் பாதை அஸ்தமித்த அல்லது விஸ்வரூபம் எடுத்த கப்பிச்சாலையில் நடந்தார். இருபுறமும் உள்ள சிற்றுண்டி, சைக்கிள், பலசரக்கு, பெட்டிக்கடைகளை ஒப்புக்குகூடப் பார்க்காமல், முத்துவேலின் உரக்கடை முன்னால் போய் நின்றார். அந்தக் கடையில் வேக வைத்த இரும்புக்கு மேக்கப் போட்டதுபோல், பல்வேறு வகையான கருவிகள், கடையின் பின்பக்கச் சுவரில் சாய்த்து வைக்கப்பட்டிருப்பதைப் பார்த்தார். அவரைப் பார்த்ததும், அவர் பக்கத்தில் மலரே நிற்பதுபோல பாவித்துக் கொண்டு, முத்துவேல் ஓடிவந்தான்.

"மாமா! உப்புத் தண்ணீரை நல்லா தண்ணியா மாத்துறதுக்கு ஒரு மிஷின் வந்திருக்கு. வாங்கிக்கிறீங்களா?"

ராமலிங்கத்தின் நெற்றி, நரம்புக் கோடுகளாயின. 'என் வீட்டு கிணத்துல உப்புத் தண்ணி இருக்குது இவனுக்கு எப்படித் தெரியும்? இதற்கு பேர்தான் ராசியோ... பொருத்தமோ..

ராமலிங்கம் மகிழ்ந்து போனார். அவன் வைத்திருக்கும் டிராக்டரை வாடகைக்கு எடுக்க வந்தவர், அதைவிடச் சிறப்பான பரீட்சை நடத்தப் போவதில் மகிழ்ந்து போனார். இதற்குள் முத்துவேல் ராக்கெட் மாதிரி இருந்த அந்தக் கருவியைக் கொண்டு வந்து, அதன் மத்தியில் இருக்கும் பஞ்சு மாதிரியான பகுதி எப்படி நீரில் இருந்து இரும்புச் சத்தையும், உப்பையும் அப்புறப்படுத்துகிறது என்று விளக்கினான். ராமலிங்கம் கேட்டார்.

"எவ்வளவு மாப்பிள்ளை விலை?"

"விலை என்ன மாமா விலை? எடுத்துட்டுப் போங்க!"

"தாய் பிள்ளையா இருந்தாலும், வாய் வயிறு வேற இல்லயா?"

"பிறத்தியாருக்குக் கொடுக்கது மூவாயிரம் ரூபாய். உங்களுக்குக் கொடுக்கிறதுல எனக்குக் கமிஷன் வேண்டாம். இரண்டாயிரத்து ஐநூறா கொடுத்திருங்க... நானே உங்கள் வீட்டுக் கிணத்துல மாட்டித் தாரேன்.

ராமலிங்கம் ஆறு நூறுரூபாய் நோட்டுக்களை உள்பாக்கெட்டிலிருந்து அங்கிருந்தபடியே, எண்ணி எடுத்தார். பிறகு அவனிடம் நீட்டினார். அவன் அதை ஒரு கையில் சுருட்டாக்கிக் கொண்டு, மறுகையால் பில் போட்டான். ராமலிங்கம் பாணம் தொடுத்தார்.

"இது அட்வான்ஸ். ஐநூறு ரூபாயையும் எண்ணிப் பார்த்துட்டு பில் போடுங்க மாப்பிள்ளை."

முத்துவேல், அவசர அவசரமாக எண்ணிட்டு, பில்லைத் தொடர்ந்தான். எழுதியபடியே சொன்னான்: "சரியாக இருக்குது மாமா."

ராமலிங்கத்திற்கு என்னவோபோல் இருந்தது. திரும்பிப் பார்க்காமலேயே ரசீதை வாங்கிக் கொண்டு நடந்தார். அப்போது முத்துவேல் வேர்க்க விறுவிறுக்க அவர் பக்கம் ஓடி வந்தான்.

"என்ன மாமா இது? கூட நூறுரூபாய் அதிகமாகக் கொடுத்துட்டீங்களே. இப்படியா கொடுக்கது? இந்தாங்க மிச்ச ரூபா."

"அடடே அப்படியா! சரி, அட்வான்சை அறுநூறு ரூபாயா வைச்சுக்கங்க."

"வேண்டாம் மாமா. பில்லு போட்டாச்சு. கணக்குப் பிசகக் கூடாது. அது வியாபாரத்திற்கு நல்லதல்ல."

முத்துவேல், தமது எதிர்கால மாமனாரிடம் நல்லபேர் வாங்கி விட்ட பெருமிதத்தில், ஒரு சிரிப்பைச் சிந்தினான். அவரும் பதிலுக்குச் சிரித்துவிட்டு பரீட்சைப் பயணத்தைத் தொடர்ந்தார்.

அந்தக் கடையில் இருந்து, மேற்கொண்டு வடக்குப் பக்கமாய்த் திரும்பி, ஒரு முட்டுத் தெருவுக்கு வந்தார். இரண்டு மூலைகளையும் அடைத்த பெரிய கடை. கழுகு இறகை விரித்தது மாதிரி, இருபக்கமும் நீண்ட கிளைக்கடைகள். ஒன்றில் மஞ்சள், மசாலா, எண்ணெய், சோள, கம்பு மூட்டைகள். கடையில் ஒரே கூட்டம். பக்கத்தில் ஓர் ஒயின் கடை மூடியிருந்தது. அதன் பக்கம் நாலைந்து 'முக வெட்டுக்காரர்களுடன்' பேசிக் கொண்டிருந்த பழனிச்சாமி, ராமலிங்கத்தைப் பார்த்ததும் வேட்டியை இழுத்துப் போட்டுக் கொண்டு, அவர் முன்னால் வந்து நின்று தோப்புக் கரணம் போடப் போவதுபோல் குனிந்து கேட்டான்.

"ஒங்களுக்கு ஆயுசு நூறு மாமா... இந்தப் பலசரக்குக் கடை வைக்கும்போதுகூட, உங்க கையால இரண்டாயிரம் ரூபாய்

வாங்கித்தான் வைச்சேன். ஒங்க ராசி.... இன்னைக்கு இது ஒரு லட்சத்துல நிக்குது."

ராமலிங்கம் திடுக்கிட்டார். பயல், வட்டிக்குக் கொடுத்ததை சொல்லாமல் சொல்லிக் காட்டுகிறானோ... ஆனாலும் பழனிச்சாமி பேச்சைத் தொடர்ந்தான்.

"இப்பவும் உங்க கையால ஐநூறோ, ஆயிரமோ கொடுங்க மாமா.. சாயங்காலமா கொடுத்துடுறேன். இந்த ஒயின் கடையை நடத்துன டவுன்காரங்க கட்டுப்படி ஆகல்லைன்னு என்கிட்ட விற்க வாராங்க."

ராமலிங்கம் லேசாய் யோசித்தார். பிறகு உள்பையில் கைவைத்து, அங்கேயே நோட்டுக்களை எண்ணி, ஆறுநூறு ரூபாய் நோட்டுக்களை வெளியே கொண்டு வந்தார். அவற்றைச் சுருட்டி மடக்கி பழனிச்சாமியிடம் நீட்டினார்.

"இந்தாங்க மாப்பிள்ளை! ஐநூறு ரூபாய். எண்ணிப் பார்த்து விட்டு அட்வான்ஸ் கொடுங்க."

பழனிச்சாமி அந்த நோட்டுக்களை பயபக்தியோடு எண்ணினான். இரண்டு தடவை எண்ணினான். மூன்றாவது தடவை லேசாய்த் திரும்பி நின்று எண்ணினான். பிறகு கடைப்பயலை அதட்டியபடியே, அந்தச் சாக்கில் கடைக்குள் ஏறினான். ஏறிய வேகத்திலேயே இறங்கினான். அருகே வந்த 'முக வெட்டுக்களில்' கண்வெட்டுக்காரனிடம் ஐந்து நூறு ரூபாய் நோட்டுக்களை நீட்டினான். நீட்டியபடியே மங்களம் பாடினான்.

"மாமாவோட கைராசியிலே, இந்த ஒயின் ஷாப் கொஞ்ச நாளிலே நானே ஒயின் தயாரிக்கிற அளவுக்குப் பெரிசாய் ஆயிடும்... இல்லையா மாமா?

ராமலிங்கம், தலையை ஆட்டுகிறார். அவன், பேசுகிறான்.

"சாயங்காலமா நீங்க கொடுத்த ஐநூறு ரூபாயையும், வீட்டுல வந்து தாரேன் மாமா."

"உங்க பணம் வேறே என் பணம் வேறயா மாப்பிள்ளை? என் பணம்தான் ஒங்ககிட்டே நிக்கட்டுமே."

ராமலிங்கம் திரும்பித் திரும்பி நடந்தார். அப்படியும் பழனிச்சாமி, முத்துவேலைப்போல் ஒரு நூறுரூபாய் நோட்டை எடுத்துக் கொண்டு பின்னால் ஓடிவரவில்லை.

ராமலிங்கத்திற்கு யார் மாப்பிள்ளை என்று இப்போது முடிவு எடுப்பதில் சிரமம் ஏற்படவில்லை.

'கமிஷன்கார முத்துவேல், உப்புச்சப்பில்லாத பயல். கணக்கு தவறக்கூடாதாம். ஒரு நூறு ரூபா நோட்டு-அதுவும் உழைக்காம வந்த பணம், அவனுக்குப் பெரிசா தெரியலன்னா; என்ன பயல்? அவனுக்கு மலரைக் கொடுத்தால், கல்யாண வீட்டுலேயே ஒப்பாரி வைக்க வேண்டியதுதான்.'

'ஆனால் இந்த பழனிச்சாமியோ... சமர்த்தன். இந்திரசித்... அந்த நூறு ரூபாய் நோட்டை, கல்லாப் பெட்டியிலே கள்ளத் தனமா எவ்வளவு லாகவமாகப் போட்டான்! சம்பாதிக்கணுமுன்னா இப்படில்லா சம்பாதிக்கணும். அதோடு ஒயின் ஷாப் வைக்கப் போறான். அந்தச் சாக்குல கள்ளச் சாராயத்த பாட்டிலுல ஏத்தப் போறான். இதனாலேயே, கொஞ்சநாளுல தலைவரா ஆயிடுவான். கல்யாணத்துல நகைபோடுறமோ, நட்டு போடுறமோ, ஒரு சூட்கேஸை சீதனமாக் கொடுத்திடணும்...!

வாலிபம் போனாலும், வயோதிகம் வராத ராமலிங்கம், பழனிச்சாமியின் தந்தையிடம் ஒப்புதல் கொடுக்கத் திசைமாறி நடந்தார்.

# பாசப் பாவம்

அந்த ஒரு வார காலமும், அவன் மாதிரியே போன இடம், தெரியாமல் போய்விட்டது.

எத்தனை நாளைக்குத்தான் அக்கம் பக்கத்துப் பெண்களிடம் 'கேம்ப் போயிருக்கார்' என்று சொல்ல முடியும்? வாழ்க்கையை 'கேமா'க எடுத்துக்கொண்டு ஓடிப் போய்விட்டவனை, எத்தனை நாளைக்கு கேம்பிற்குள் வைக்க முடியும்?

கூடப் பிறந்த அண்ணனிடமே, 'வந்துடுவார். நேற்று கூட லட்டர் வந்தது. போன இடத்துல ஏகப்பட்ட வேலையாம். இன்னும் இரண்டு நாளையில வந்துடுவாராம்' என்று சாமர்த்தியமாகச் சொல்லிவிட்டு, அவனுக்குத் தெரியாமலே கண்களைத் துடைத்துக் கொண்டாள். அவன், 'லட்டரைக் காட்டு பாக்கலாம்' என்று கேட்டபோது 'நல்லா இருக்கே. நீ ஒன் ஒய்ஃப் எழுதுற லட்டரைக் காட்டுவியா. என்னண்ணா நீ' என்று சிணுங்குவது போல் சிணுங்கி, அந்தச்சாக்கில் அவனுக்குத் தெரியாமல் அழுது கொண்டாள்.

ஊரில இருந்து வந்த மாமனாரிடம்கூட - 'அப்பா வந்தால் இருக்கச் சொல்லு. நான் சீக்கிரமாய் வந்துடுறேன்'னு சொல்லிட்டுப் போயிருக்கார் மாமா' என்று, நிதானமாகவும் மெதுவாகவும் சொன்னால் அழுது விடுவோம் என்று நினைத்து, சீக்கிரமாகவே சொல்லிவிட்டாள். ஆனால் இப்படி எத்தனை நாளைக்குத்தான் சொல்லிக் கொண்டிருக்க முடியும்?

அரிசி குறையட்டும். அன்றாடச் செலவு ஒழியட்டும். குழந்தைக்கு வந்த காய்ச்சலும் இருக்கட்டும். எப்படியோ வாயைக்கட்டியும் வயிற்றைக் கட்டியும் குழந்தையின் துன்பத்தைக் காண முடியாமல் தவிக்கும் தாய்மையைத் தனிமைப் படுத்தியும் சமாளித்துக் கொள்ளலாம். ஆனால், இன்னொருத்தியுடன் ஓடிப் போய்விட்ட அவனைப் பற்றிச் சொல்லாமலும், அதனால் ஏற்பட்ட சோக உணர்வுகளைப் பகிர்ந்து கொள்ளாலும் எப்படி இருக்க முடியும்? இருந்தாள்.

கட்டிலை மட்டுமே கட்டிக் கொண்டவள் போல், கட்டிலோடு கட்டிலாக ஒட்டிக் கிடந்த அவள், குழந்தையின் அழுகை ஒலி கேட்டதும், உள்ளத்தின் ஓலத்தை ஒடுக்கிக் கொண்டே எழுந்தாள். அந்தக் குழந்தையிடம் - அவன் கொடுத்த தனது சொந்தக் குழந்தையிடமே அவளுக்கு முதலில் வெறுப்பு ஏற்பட்டது. குழந்தைக்கு ஐந்து வயதாகியிருந்தால், இந்நேரம் அடித்திருக்கக் கூடச் செய்வாள். ஆனாலும் -

கண்விழிகள் இரண்டும் கனத்ததுபோல் கண் தெரியாமல், கண் திறக்காமல், அவை பழுத்ததுபோல் செக்கச் செவேலென செவ்வரளிப் பூப்போல், பார்த்து அடையாளம் காண முடியாது போனாலும், அவள் இங்கேதான் இருப்பாள் என்று அனுமானித்ததுபோல் அவள் மார்பில் கைபோட்ட குழந்தையை எடுத்து மார்புடன் அணைத்துக் கொண்டாள். குழந்தையின் வாய்க்குள் பால் போனதா அல்லது கண்ணில் ஊற்றாக கழுத்தில் அருவியாக மார்பில் ஆறான கண்ணீர் போனதா என்பதைச் சொல்ல முடியாது.

குழந்தையை அழுத்தமாக அணைத்துக் கொண்டே, நெஞ்சில் படர்ந்த மனப் புழுக்கத்தைத் தாய்மையால் விசிறி விடப் பார்த்தாள். முடியவில்லை.

அவளுக்குத் திருமணமாகி இரண்டு ஆண்டுகள்தான் ஆகின்றன. அரசாங்க உத்தியோகம் பார்க்கும் அவனைத்தான் கட்டுவேன் என்று அவள் ஒன்றும் அடம்பிடிக்கவில்லை.

சொல்லப்போனால், மணமேடையில்தான் அவனை முதன் முதலாகப் பார்த்தாள். இவ்வளவுக்கும் பி.யூ.சி. வரைக்கும் படித்துவிட்டு பின்னர் செகண்டரி கிரேட் ஆசிரியையாகப் பயிற்சி பெற்றவள்: பட்டணத்தில் போலீஸ் இலாகாவில் வேலை பார்த்த அண்ணன்தான், தங்கை 'நாட்டுப்புறமாக' இருக்கக் கூடாது என்று நினைத்து இவனைக் கொண்டுவந்தான்.

திருமணமான பிறகுதான், அப்பாவின், ஆஸ்திக்காக, இவளை அவன் கட்டிக் கொண்டாலும், இன்னொருத்தியுடன் ஏற்கெனவே 'புனிதக் காதலி'ல் அவன் ஈடுபட்டிருப்பதும் தெரிய வந்தது. காவற்துறையில் துப்புகளைத் துலக்கும் வேலையில் இருக்கும் அவள் அண்ணனுக்கு சொந்தத் தங்கையின் எதிர்காலத்தை நிர்ணயித்ததில், அவன் கலை, கை கொடுக்கவில்லை.

ஆரம்ப மாதங்களுக்குப் பிறகு அவள் எழுந்திருக்கும் முன்னாலே அவன் போய்விடுவதும், இரவில் அவள் தூங்கிய பிறகே அவன் வருவதும் வழக்கமாகிவிட்டது.

அவளால் பார்க்க முடியாமல், ஓரளவு கேள்விப்பட்டு இருந்தவளை, 'இவங்க மாலதி... எங்க ஆபீஸ்ல வேலை பார்க்கிறவங்க. என்னோட பெஸ்ட் பிரண்ட்' என்று சொல்லிக் கொண்டே அவன் கூட்டி வருவான் என்று அவள் நினைக்கவில்லை. ஆனாலோ -

அவன் கூட்டி வந்தான்.

ஒரே அலுவலகத்தில் உத்தியோகம் பார்க்கும் அவள்- அவளின் தாற்காலிக பியூன் உத்தியோகத்தை, நினைத்தால் பாதுகாக்கக் கூடிய அல்லது பறிக்கக்கூடிய நிலையில் உள்ள உத்தியோகத்தில் உலவும் அவன் - தன் கணவனிடம் முதலில் ஏற்பட்டிருக்கக் கூடிய பயத்தை காதலாக மாற்றியிருப்பாள் என்பதையும், உத்தியோகம் 'காய்'மாவதற்காக, தன'காயத்தை' 'காயமே இது பொய்யடா' என்ற ஏகாந்த உணர்வில் மெய்யாகவே கொடுத்திருப்பாள் என்பதையும் மனோதத்துவம் படித்த மேகலாவால் புரிந்து கொள்ள முடிந்தது.

தயங்கித் தயங்கி உள்ளே வந்து, பிறகு இவள் காட்டிய 'சாதாரணத்தால்' அந்தப் பெண் தைரியக்காரியாக வெளியேறினாள். 'அடிக்கடி வாரேன்க்கா. உங்க வீடு தான் தெரிந்து போச்சே' என்று சொல்லி, அவள் விடைபெற்ற போது, மேகலாவுக்கு அதுவரை சந்தேகமாக இருந்தது, சர்வ உண்மையாகத் தெரிந்துவிட்டது.

மேகலா, இருட்டி போன தன் எதிர்காலத்திற்காகக் கலங்கினாள். குழந்தையின் எதிர்காலம் எப்படி ஆகுமோ என்று குழந்தை போலவே அழுதாள். இதற்குள், அவள் அடிக்கடி வீட்டுக்கு வருவதும், அவனிடம் 'ஒங்களைப் பற்றி எனக்குத் தெரியாதா' என்று அடிகடிச் சொல்வாள். மனைவியிடம் 'டிபனுக்கு இவ்வளவு நேரமாடி' என்று அதட்டுகையில், 'அக்கா, நீங்க அவரு சொல்றதுக்கெல்லாம் பேசாமல் இருந்தால் அவரு தலைக்கு மேல குதிப்பாரு. அன்றைக்குக் கூட அந்த தியேட்டர்ல என்னடான்னா...' என்று சொல்லிவிட்டு, பேசியதை முடிக்க முடியாமல் திண்டாடியவள்.

மேகலாவும் திண்டாடினாள்.

இந்த மாலதி வருவதையும், அவனுடன், தான், தனிமையில் பகிர்ந்து கொள்ளக்கூடிய சில மணி நேரங்களை ஆக்கிரமித்துக் கொள்வதையும், மனைவி பதவி வகித்த மேகலாவால், பொறுக்க முடியவில்லை. ஒரு நாள் அவனில்லாத சமயத்தில் வந்த அவள் வந்ததும் வராததுமாக 'அவரு இல்லியா அக்கா' என்று சொன்னபோது மேகலாவால் சகிக்க முடியவில்லை.

'ஆமாம்மா; என்னை எப்பப் பார்த்தாலும் அக்கா அக்கான்னு சொல்றியே, என்மேல இவ்வளவு பாசமா?'

'ஒங்க மனசு யாருக்கு அக்கா வரும்? கள்ளமில்லாத மனசுக்கா ஒங்க மனசு. என் கூடப் பிறந்த அக்காளைவிட நீங்கதான் எனக்கு அக்காள். ஒங்கள மாதிரி பெருந்தன்மை யாருக்கு அக்கா வரும்? ஒங்கள வாய் நிறைய அக்கான்னு கூப்பிடும்போது எவ்வளவு சந்தோஷமாய் இருக்கு தெரியுமாக்கா?'

'நீ சொல்றதுல கடைசி வார்த்தை உண்மை. என்னை அக்கான்னு சொல்றதுனால ஒனக்கு சந்தோஷமாத்தான் இருக்கும். அதனால... அவரு, ஒனக்கு ஆசை அத்தானா ஆயிடுவாரு பாரு...'

அந்தப் பெண், அவளை நிமிர்ந்து பார்த்தாள். ஏதோ ஒன்று மனதில் பட்டு நெஞ்சை அரித்துக்கொண்டே வாய்க்கு வந்தது போல், உதட்டைக் கடித்தாள். தலையை குனிந்து கொண்டே வெளியேறினாள்.

ஆனால், அவன் இரவில் தலையை நிமிர்த்தி கொண்டே வந்தான். 'நானும் அவளும் உயிருக்குயிராய் இருக்கோம். ஒனக்கு முன்னால அவள் எனக்குப் பழக்கமானவள். நீ அவளை வீட்டை விட்டுத் துரத்துவது, என்னைத் துரத்துவது மாதிரி' என்று சொன்னான். என்றாலும், அவன் நாகரீகமானவன் வீட்டு நடப்பு வெளியாரை வரவழைக்கும் அளவுக்கு விரசமாகக் கூடாது என்ற நாகரீகத்தைத் தெரிந்து வைத்திருப்பவன். மேகலாவை அடிக்கவில்லை. அவள் நகை நட்டுக்களைக் கேட்கவில்லை. தன் பெட்டி படுக்கைகளை எடுத்துக்கொண்டு, இரவு பத்து மணிக்குப் போனவன், போனவன்தான்.

அழுது வீங்கிப்போய், முகத்தின் அத்தனை பகுதியும் நீர்சொரியும் கண்களாய் மாறினவள்போல் இரவைக் கழித்த மேகலா, கணவன் தனக்காக வரவில்லையானாலும் தன் குழந்தையைப் பார்க்கவாவது வருவான் என்று நினைத்தாள்.

அவன் வரவாகவில்லை. செலவாகி விட்டான்.

வீட்டுக் கதவு பயங்கரமாகத் தட்டப்பட்டது. மேகலா குழந்தையைத் தோளில் போட்டுக் கொண்டே முன்னறைக்கு வந்து கதவைத் திறந்தாள். அண்ணனை மௌனமாக வெறித்துப் பார்த்தாள். அவன் பொரிந்து தள்ளினான்.

'ஆமாம்; தெரியாமத்தான் கேக்குறேன். என்னையும் ஒன் புருஷன் மாதிரி புறம்போக்குன்னு நினைச்சியா? என் கிட்ட ஒரு

வார்த்தை சொல்லல. சரி; அண்ணன்னு சொல்லாண்டாம். ஒரு போலீஸ்காரன், என்கிற முறையிலாவது சொல்லலாம்... இல்லியா?'

கொடூரமான மௌனம். சொல்லாமல் கொல்லும் மௌனம். 'நீ கொண்டு வந்த மாப்பிள்ளையைப் பார்த்தியா' என்று கேளாமல் கேட்பது போன்ற மௌனம்.

'ஆல் ரைட். அந்தப் பயலை ஒன் காலுல விழுந்து மன்னிப்புக் கேட்க வைக்கிறேனா இல்லியான்னு பாரு. இன்னைக்கு ராத்திரிக்கு ஒரு வேடிக்கை நடக்கப் போவுது பாரு. ஒன் வாழ்க்கையில் குறுக்கிட்டவன் என்ன கதியாய் ஆகப் போகிறான் பாரு! ஒன்னை நிர்க்கதியாய் விட்டுட்டுப் போனவன் என்ன கதியாய் ஆகப் போகிறான் பாரு.'

'அவரை ஒன்றும் செய்யாதீங்க அண்ணா' என்று நாவல் நாயகிகள்-திரைநாயகிகள் போல் பேசாத மௌனம். தலைக்கு மேல் போனது சாணானால் என்ன... முழமானால் என்ன என்கின்ற வானளாவிய மௌனம்.

'சாப்பிட்டியா? செலவுக்குப் பணம் இருக்கா? ஏதாவது வாங்கிட்டு வரட்டுமா? இல்ல என் வீட்டுக்கு வாரீயா?'

தலையைக்கூட ஆட்டாத மௌனம். தன்னையே தின்றுகொள்ளும் மௌனம்.

'நீ வாய் திறந்து பேசியிருந்தால் இப்படி ஆயிருக்காதே. இன்னுங்கூட, அவனை விட்டுக் கொடுக்க ஒனக்கு மனசு வருதா?'

மௌனம் விட்டுக் கொடுத்தது.

குழந்தை தோளில் இருக்கிற உணர்வு இல்லாமலே அண்ணனின் கையைப் பற்றி 'என்னைக் கைவிட்டு விடாதே' என்று சொல்லாமல் சொல்லி, அவன் தோளில் முகந்தேய்த்து விம்மினாள். நீர் தேங்கிய அண்ணனின் கண்களில் கொதித்த நீர் தன் தலையில்

விழும்படி அவனை அங்குமிங்குமாக ஆட்டிக்கொண்டே அழுதாள். அந்த ஆட்டத்தில் ஆடிய குழந்தை, அதைத் தாலாட்டாக நினைத்து சிரித்தது.

இரவு வந்தது. போலீஸ் அண்ணன் வந்து முன்னறையில் உட்கார்ந்தான். பின்பு படுக்கையறையில் உழன்று கொண்டிருந்த தங்கையைப் பார்ப்பதும், முன்னறைக்கு வந்து ஜன்னல் வழியாக வெளியே எட்டிப் பார்ப்பதுமாக உலாவிக் கொண்டிருந்தான். அண்ணனும் தங்கையும் மௌனத்தால் ஒன்றுபட்டனர். சோகத்தைப் பகிர்ந்து கொள்பவன்போல் அவன் மருமகனை எடுத்து மார்போடு அணைத்தவாறு உலவினான்.

இரவு மணி பதினொன்று இருக்கும். குரைத்த தெரு நாய்கள் லத்திக் கம்பின் அதட்டலில் அடங்கின. பூட்ஸ் ஒலிகள் கேட்டன.

கதவு தட்டப்பட்டது.

அண்ணன்காரன் உள்ளே வந்து, தங்கையை வெளிக்கதவைத் திறக்கும்படி சைகை செய்தான். எதையுமே பொருட்படுத்தாததுபோல் இருந்த தங்கையின் கையைப் பிடித்து நிறுத்தி, முதுகைத் தள்ளி முன்னறைக்குக் கொண்டு வந்தான்.

மேகலா கதவைத் திறந்தாள். கதவைப் போல் கண்களையும் அகல விரித்தாள்.

கையில் லத்தி கம்புகளுடன் நான்கு அய்ந்து யூனிபாரக்காரர்கள்... அவர்களுக்கு மத்தியில் தலை தொங்கிப்போன கணவனும், அதே அந்த மாலதியும்...

போலீஸ் அதிகாரி கனிவான கண்டிப்புடன் கேட்டார்.

'ஏம்மா, இவரு ஒன் புருஷனா?'

மேகலா, தன் தலையை வேசாக ஆட்டினாள்.

'இவரையும் இந்தப் பொண்ணையும் ஒரு வீட்டுல ஏடாகோடமான சந்தர்ப்பத்துல பிடிக்க வேண்டிய அவசியம்

ஏற்பட்டது. 'மாரல் டார்பிடுட்' இவருகிட்ட கேட்டால், ஒங்களோட சம்மதத்தோட இந்தப் பெண்ணைக் கல்யாணம் பண்ணிக்கப் போறதாயும், அதுக்காக ஒங்களோட சம்மதத்தோட ஒத்திகை பார்த்ததாகவும் சொல்றார். அப்படியாம்மா?'

நெடிய மௌனம். பொய்க்கு விலைபோகாத மௌனம்.

போலீஸ் அதிகாரி அவனை மிரட்டினார்.

'நீ ஒரு மனுஷனாய்யா... பெண்டாட்டிக்கு குழந்தை பிறக்கல. அதனால குழந்தை வேணுமுன்னு அவளோட தூண்டுதலாலேயே இந்தப் பெண்ணைக் கல்யாணம் பண்ணிக்கப் போறதாய் சவுடால் விட்டியே, இப்போ சொல்லுய்யா. இந்தப் பிள்ளை முகத்தைப் பார்த்து சொல்லுய்யா. சீ... நீ ஒரு மனுஷனா?'

அவன், மனைவியைப் பரிதாபமாகப் பார்த்தான். ஆசைநாயகி, தலையில் முக்காடு போட்டுக் கொண்டு, அப்படியும் மறையாமல் இருந்த முகத்தின் மிஞ்சிய பகுதியைக் கைகளை வைத்து மூடிக் கொண்டிருந்தாள். மேகலாவின் அண்ணன் கை முஷ்டிகளை ஒன்றுடன் ஒன்று மோதவிட்டுக் கொண்டிருந்தான்.

போலீஸ் அதிகாரி தீர்ப்புச் சொன்னார் :

"ஆல் ரைட். இனிமேலயாவது ஒழுங்கா நடந்துக்கோ. ஒன் மச்சானோட முகத்துக்காகவும் இந்த அம்மாவுக்காகவும் விடுறோம். இல்லன்னா மவனே அஞ்சு வருஷம் வாங்கிக் கொடுத்திருப்போம். கவலைப்படாதிங்கம்மா. இனிமேல் இவனை ஒங்க வழிக்கு வராமல் பார்த்துக்கிறது எங்க பொறுப்பு. கோவிந்தா! வரட்டுமாடா. ஒன் தங்கச்சி புருஷனை ஊமைக்காயம் படும்படியா உதை... ரத்தம் வராமல் குத்து... அடியாத மாடு படியாது. அதுலயும் ஒன் மச்சான் அசல் எருமை மாடு! வரட்டுமா. - ஏய், நீ கெட்ட கேட்டுக்கு முக்காடா. ஒனக்கு குடும்பஸ்தன் தானா அகப்பட்டான்...?' நடடி நாயே"

மேகலா உள்ளே வந்து படுக்கையறைக்குள் போவதற்காக நடந்து கொண்டிருந்த கணவனைக் கையமர்த்தி நிற்கச் செய்தாள்.

வெளியே ஒரு போலீஸ்காரரால் முக்காடு விலக்கப்பட்டு, இன்னொருவரால் முகத்தை மறைத்த கை விலக்கப்பட்டு செத்துப்போனவள்போல் விறைத்து நின்ற அவளைப் பார்த்தாள். அவளால் பேசாமல் இருக்க முடியவில்லை. மறுபிறவி எடுத்தவள் போல் கர்ஜித்தாள்:

"இன்ஸ்பெக்டர் ஸார்! அந்தப் பெண்ணை என் வீட்ல விட்டுட்டுப் போங்க..."

தலையில் இருந்து தொப்பியை, அதிர்ச்சியின் அடையாளமாக, கையில் எடுத்துக் கொண்டே, இன்ஸ்பெக்டர் கேட்டார்.

"என்னம்மா நீங்க? என்ன சொல்றோமுன்னு புரிஞ்சுதான்..."

'புரிஞ்சுதான் பேசறேன் சார். இவள் என்னோட சம்மதத்தோடுதான் அவரோட தொடர்பு வச்சிருக்காள். இவள் தொடர்புக்கே நான்தான் காரணம்.'

'சும்மா இரும்மா. இவள் செய்தது விபச்சாரம். விபச்சாரத்தடை சட்டத்தின் கீழ்...'

'அப்படின்னா நானும் குற்றவாளி. விபச்சாரத்தைத் தூண்டிவிட்ட குற்றவாளி நான்... என்னையும் போலீஸ் ஸ்டேஷனுக்குக் கொண்டு போங்க. அப்படிக் கொண்டு போறதாய் இருந்தாலும் காலையிலதான் கொண்டு போகலாம். சாயங்காலம் ஆறு மணிக்கு மேல பெண்களை போலீஸ் ஸ்டேஷன்ல வைக்கக்கூடாதுன்னு உத்தரவு இருக்கிறதாய் பேப்பர்ல படிச்சேன்.'

இன்ஸ்பெக்டர் கொதித்தார்.

'டேய் கோவிந்தா! ஒன் தங்கச்சி பேசுறதைப் பார்த்தியாய்யா? இவள் இப்படி இருந்தால் அவன் எப்படி இருப்பான்? நம்ம டிபார்ட்மென்ட் நண்பனோட தங்கையாச்சேன்னு சும்மா இருக்கேன். இல்லன்னா...'

இன்ஸ்பெக்டர், சொன்னபடி சும்மா இருக்க வில்லை. சகாக்களுடன் வெளியேறினார். அண்ணன்காரன், அவர்களுக்குப் பின்னால் 'ஸாரிடா, ஸாரிடா' என்று சொல்லிக் கொண்டே எக்கி எக்கி நடந்து வழியனுப்பிவிட்டு கோபமாக உள்ளே வந்தான்.

அவள், விலக்கிய முக்காட்டை மீண்டும் போட்டுக் கொண்டு, தெரிந்த முகத்தை மூடிக்கொண்டு நின்றாள். ஆசைநாயகன் கதவுப்பக்கமாக வந்து நின்றான்.

மேகலா அமைதியாகப் பேசினாள் :

'வாம்மா வா, உள்ளே வாம்மா.'

அவள் அடிமேல் அடியெடுத்து உள்ளே வந்தாள். கதவைத் தாழ்ப்பாள் போடப்போன மேகலா, கதவருகே நின்ற கணவனை கண்களால் புலன் விசாரணை செய்துகொண்டே, கத்தினாள்.

'ஒங்களுக்கு இங்கென்ன வேல? எப்போ கட்டுனவளை விட கட்டாதவளைக் பெரிசா நினைசிங்களோ, அப்பவே கட்டுன தாலிக்கு மரியாதை இல்லாமப் போயிட்டுது. கணவன் என்கிற அந்தஸ்தும் பேர்யிட்டுது. எப்போ சொந்தக் குழந்தையை விட்டுட்டுப் போகத் துணிஞ்சீங்களோ, அப்பவே தகப்பன் என்கிற அந்தஸ்து போயிட்டுது! அதுக்கும்மேல எப்போ உங்கள நம்பின இந்தப் பெண்ணை போலீஸ் கையில விட்டுட்டு வீட்டுக்குள்ள தனியா வந்தீங்களோ, அப்பவே மனிதன் என்கிற அந்தஸ்தும் போயிட்டுது. போங்க... எனக்குத் தூக்கம் வருது. நான் தாழ்ப்பாள் போடணும். உம்... இதுக்கு மேலயும் நீங்க மனுஷன்னா நிற்க மாட்டீங்க.'

அவன் மனிதன்தானாம். மனைவியையும், மச்சானையும் கூர்ந்து பார்த்துவிட்டு, 'கூப்பிடுவாள், கூப்பிடுவாள்' என்று நினைத்துக்கொண்டே வெளியே போய் நின்றான். அப்புறம் காணாமல் போய்விட்டாள்.

கோபமாகப் பேசப் போன அண்ணனின் கையை மேகலா பிடித்துக் கொண்டு குரல் கொடுத்தாள் :

'இந்தப் பிரச்சினையை ஒன் தங்கையோட பிரச்சினையாய் நினைக்காமல் ஒரு பெண்ணோட பிரச்சனையாய் நினைத்தால் ஒனக்குக் கோபம் வராது. இந்த ஏழைப்பெண் எப்படியோ மயங்கிட்டாள். இதுக்கு அவரும் காரணம். இவளை மட்டும் தண்டிக்கிறது என்ன நியாயம்? போலீஸ் கைக்குப் போகிற இவள் நிலைமை என்னாகுமுன்னு நினைச்சுப் பார்த்தியா? தன் குஞ்சை சந்தோஷப் படுத்துறதுக்காகக் கோழிக்குஞ்சைக் கொத்திக்கிட்டுப் போற கழுகு மாதிரி பாசத்தை என்மேல கொட்டி பிரச்சினையைப் பார்க்காதே. புலி, சிறுத்தை மாதிரி துஷ்ட மிருகங்களைப் பார்த்ததும், உடனே சாதுவான இதர மிருகங்களை எச்சரிக்கைப்படுத்திக் கூவும் மயில் மாதிரி பிரச்சினையைப் பாரு. என்றைக்கும் பாசத்தை உறவுக்காரங்க மேல மட்டும் வைத்தால் அந்தப் பாசம் விபரீதத்துல கொண்டு விட்டுவிடும். இதுக்கு மேலையும் இந்த மனுசனோட நான் வாழ்ந்தா, நான் ஒன் தங்கை இல்லண்ணா.'

சரிந்து விழுந்த மேகலாவை, கோவிந்தன், கொழுகொம்பாய் தாங்கிக் கொண்டான்.

குமுதம் - 1978

❖

# சொற்பிடி

அந்த குமாஸ்தாவுக்கு கெட்ட காலம். இல்லையென்றால், அந்தச் சமயத்தில், அவன் உள்ளே போயிருக்க மாட்டான். அலுவலகத்தில் நடந்த ஒரு பயங்கரமான மோசடி சம்பந்தப்பட்ட கோப்பை படித்துக் கொண்டிருந்த மானேஜர் ஏகாம்பரம், அவனைப் பார்த்ததும் "எஸ்..." என்று இழுத்தபோது, அவனுக்கு கைகால் இழுத்தன.

"சார்... என்னை... பம்பாய்க்கு ஒரு மாதம் டூர் அனுப்பப் போவதாகக் கேள்விப்பட்டேன்... என் குடும்பமே... நோயில் கிடக்கு... அதனால்..."

"அதனால்... துரையை அனுப்பக் கூடாதோ? என்னமேன் நினைச்சுட்டே... யு ஆர் கோயிங்..."

மானேஜர் 'பெல்லை' அழுத்த, தலைமைக் குமாஸ்தா தலைதெறிக்க வந்தார்.

"எஸ் ஸார்"

"இவரை பம்பாய்க்கு டூர் அனுப்பற ஆர்டரை டைப் அடிங்க... இப்பவே நான் கையெழுத்துப் போட்டாகணும்..."

"ஸார்... நாளைக்குத்தான் 'டிசைட்' பண்ணப் போறதா சொன்னீங்க... டில்லியில் இருந்து கிளியரன்ஸ் கேட்கணுமுன்னு சொன்னீங்க."

"சொல்றதைச் செய் மேன். பிரிங் தி ஆர்டர்"

தலைமைக் குமாஸ்தா போய்விட்டார். வெறுங்குமாஸ்தா, கையைக் காலை ஆட்டிக் கொண்டிருந்தான்.

"டோண்ட் வேஸ்ட் மை டயம்... நீ இப்போ இடத்தைக் காலி பண்ணல... உன்னை பெர்மனென்டா பம்பாய்க்கு மாத்திடுவேன்"

குமாஸ்தா இளைஞன் போய் விட்டான்; பாத்ரூமிற்குப் போன மானேஜர் ஏகாம்பரத்திற்கு, அலுவலகப் பேச்சுக்கள் ஓரளவு கேட்டன.

"நீ ஒரு அசடுடா... அவரு மூட்ல இல்ல. போகாதடான்னு சொன்னேன்... கேட்டியா..."

"இனிமே போனீயன்னா, மவனே... பெர்மனென்டா... பம்பாய்க்கு போயிட வேண்டியதுதான்... அவர், ஒண்ணு சொல்லிட்டார்னா... சொன்னதுதான்... இனிமேல் அவரே நினைச்சாலும் மாற்ற மாட்டார்..."

"அவர் ஒவ்வொரு பிரச்சினையையும், தன்னோட தன்மானத்துக்கு விடப்படுற சவாலாய் நினைக்கிறவரு... அவருகிட்ட பேசி... விஷயத்த பாழாக்கிட்டியே..."

"அம்மாவுக்கு ஜூரம்... ஒய்புக்கு டெலிவரி டயம்... பசங்களுக்கு கட்டி.... நான் போனால்... குடும்பமே போயிடும்."

"என்ன பண்ணுறது?... ஒரு மாதம் பல்லைக் கடிச்சிக்கிட்டு போயிட்டு வா... அவர் வைராக்கியம் வச்சா.. வச்சதுதான்... அவர் சொன்னால் சொன்னதுதான்..."

மானேஜர் ஏகாம்பரம், சுழற்நாற்காலியில் வந்து உட்கார்ந்தார். அலுவலகப் பேச்சுக்கள், அவருக்குப் பெருமையாக இருந்தன. அவர் ஒரு 'டிஸ்ஸிப்ளினேரியன்.

அவர் வாழ்க்கையில் சாதித்ததை நினைத்துக்கொண்டே இருக்காமல், நினைத்ததை எப்படி சாதிப்பது என்பதைப் பற்றியே

நினைப்பவர். 'உன்னை ஒழிச்சிக் கட்டுறேன், என்று வாயில் தெரிந்து வந்தாலும் சரி, தெரியாமல் வந்தாலும் சரி, அப்படிச் சொன்னதுக்காக, அதைச் செய்யாமல் விட மாட்டார்.

தலைமைக் குமாஸ்தா நீட்டிய ஆர்டரில் ஏகாம்பரம் கையெழுத்துப் போட்டார். குமாஸ்தாவின் நிலைமை, அவருக்கே இரக்கத்தைக் கொடுத்தது. "நோ... நோ... ஒன்றைச் சொல்லிட்டா... அதை நிறைவேற்றி ஆகணும்..."

ஏகாம்பரம், காரில் ஏறி வீட்டிற்குப் பறந்தார்.

ரமா, கதவை வேகமாக தள்ளிக் கொண்டு உள்ளே வந்தபோது, அவள் அக்காள், முகத்தை ஒருபுறமாகத் திருப்பிக் கொண்டு, அவளை ஓரக்கண்ணால் பார்த்தாள்... அம்மாக்காரி, அவளை எரித்து விடுவதுபோல் பார்த்துவிட்டு, நன்றாக இயங்கும் சுவர்க் கடிகாரத்தைப் பார்த்தாள். மணி இரவு எட்டு...

"ஏண்டி லேட்டு"

"லேட்டாயிடுத்து"

"நான் ஏன் லேட்டுங்கறேன்... நீயும் லேட்டுங்ற... ஏண்டி இவ்வளவு லேட்டு..."

"காலேஜின்னா ஆயிரம் இருக்கும்... அதெல்லாம் உன்கிட்ட சொல்லணுமா...?"

"காலேஜின்னாவா... பீச்சுன்னாவா..."

ரமா, திடுக்கிட்டு அம்மாவைப் பார்த்தாள்....

"சொல்லுடி ஸ்பெஷல் கிளாஸ், பிராக்டிக்கல் வகுப்பு, மன்த்திலி டெஸ்ட் எல்லாம்... பீச்சில்தான் நடக்குதா...?"

ரமா பதிலளிக்காமல், சுவர்க்கடிகாரத்தை வெறித்துப் பார்த்தாள்.

"நான் கேட்டுக்கிட்டே இருக்கிறேன். நீ பாட்டுக்கு குத்துக்கல் மாதிரி நின்னா... என்னடி அர்த்தம்? சொல்லுடி... எவன் கூட... பீச்சுக்கு போனே?... பி.யு.சிக்குப் போய் ஆறு மாதங்கூட ஆகல... அதுக்குள்ள காதல் வந்துட்டோ..."

ரமா, கண்களை சுவர்க் கடிகாரத்தில் இருந்து எடுத்து, அக்கா மீது வீசினாள். அக்காக்காரியும், தன் பங்குக்குக் கேட்டாள்.

"அம்மா கேக்கிறாள் பாரு... சொல்லேண்டி.... இந்த வயசில பீச்சு கேக்குதோ?... அப்பாவுக்குத் தெரிஞ்சா... அவ்வளவுதான்... வீட்டை விட்டே துரத்திடுவார்..."

"சொல்லுடி.... அவரு வருமுன்னால் சொல்லிடு... அவருக்குத் தெரிஞ்சா என்ன நடக்குமோ... விஷயம், அவருக்குத் தெரியாமல் இருக்கிறதுக்கு, நான் பொறுப்பு...."

"எனக்குத் தெரியாமல் எதையும் வைக்க முடியாது."

ஏகாம்பரம், கோபாவேசமாக உள்ளே நுழைந்தார். டையை அவிழ்த்து தூர எறிந்தார். பூட்ஸ் கால்களால் தரையை உதைத்தார்.

"எல்லாத்தையும்... வெளியில் கேட்டுக் கொண்டுதான் நின்னேன். ஏய்... ரமா! எனக்கு விஷயம் தெரிஞ்சாகணும்... பீச்சுக்கு யார்கூட போயிருந்தே? எவ்வளவு நேரம் இருந்தே... எனக்கு இப்பவே தெரிஞ்சாகணும்..."

ரமா, பதிலளிக்கவில்லை. இப்போது அம்மாவையே வெறித்துப் பார்த்தாள். தாய்க்காரி, தவியாய் தவித்தாள். குறுக்கே பேசப்போன அவளை, ஏகாம்பரம் சைகையால் தடுத்துவிட்டு, ரமாவின் கண்களையே வெறித்துப் பார்த்தார். ரமாவின் கண்கள், லேசாக சுழன்று ஒரே நிலையில் நின்றன. அப்படி நின்றால், அவள் ஒரு முடிவுக்கு வந்து விட்டதாக அர்த்தம்.

ஏகாம்பரம் அதட்டினார்.

"ஏய் ரமா... நான் சொல்றது காதில விழல...? எனக்கு, என்ன நடந்ததுன்னு தெரிஞ்சாகணும்... பீச்சுக்கு யார் கூட போனே?... சொல்லு..."

ரமா, அசைவதாக இல்லை. அவள், தன்னையே பார்த்துக் கொண்டாள்.

"சொல்லமாட்டே... ஆல்ரைட்... உன்னை சொல்ல வைக்கிறேன்."

ஏகாம்பரம் உள்ளே போனார். 'வாக்கிங் ஸ்டிக்கை' கொண்டு வந்தார்.

"கடைசியா ஒரு சான்ஸ் தர்றேன். சொல்லிடு... சொல்றியா.. இல்லியா..."

ரமா, நகர்வதாகத் தெரியவில்லை. ஏகாம்பரம் தயங்கவில்லை. 'வாக்கிங் ஸ்டிக்கை' எடுத்து, அவள் பாதத்தில் வைத்து அழுத்தினார். அழுத்தத்தை நிருத்தமால் அழுத்திக் கொண்டே இருந்தார். அம்மாக்காரிக்கு அழுகை வந்துவிட்டது. அக்காக்காரி அழுதே விட்டாள். ஆனால் ரமா, காலைக்கூட அந்தப்பக்கம் இந்தப்பக்கம்கூட நகர்த்தவில்லை. வாக்கிங் ஸ்டிக், அவள் பாதத்தைக் குடைந்து கொண்டிருந்தாலும், அவள் பாதம்தான் அதை குடைந்து கொண்டிருப்பதுபோல் தோன்றியது.

ஏகாம்பரம் பொறுமை இழந்தார். தான் ஒரு தந்தை என்கிற எண்ணம் போய், அவளிடம் எப்படியும் பதிலை வரவழைத்துவிட வேண்டும் என்ற உறுதி வலுவானது. வாக்கிங் ஸ்டிக்கை, அவள் பாதத்திலிருந்து எடுத்து, தலை முடிக்குள் விட்டார். ஸ்டிக்கை சுத்தச் சுத்த அவள் தலை தானாக சுழன்றது. அவளுக்கு நரகவலி எடுத்திருக்க வேண்டும். பாதத்திலும் ரத்தம் கொப்பளித்தது.

"விட்டுடுங்க... சொல்லிடுறேன்" என்று ரமா சொல்லவில்லை. பல்லைக் கடித்துக் கொண்டும், லேசாக

முனங்கிக் கொண்டும், தலையில் கைவைத்தாள். அம்மாக்காரியால் பொறுக்க முடியவில்லை.

"நீங்க இவ்வளவு பெரிய அரக்கனாய் இருப்பீங்கன்னு நான் நினைக்கவே இல்லை. என் பொண்ணை விட்டுடுங்க... விட்டுடுங்க..."

ஏகாம்பரம், சுயநினைவு பெற்றவராய், ரமாவை விடுவித்தார். அவர் உடலெங்கும் வியர்வை. அவருக்கே கை வலித்தது.

"சொல்ல மாட்டே.... சொல்ல மாட்டே என்று கத்தினார். ரமாவும் "சொல்லமாட்டன்..." என்று சொல்லாமல் சொல்வதுபோல் அசையாமல் இருந்தாள்.

ஏகாம்பாரம் தலைவிரிகோலமாக உள்ளே போனார். பத்து நிமிடம் கழித்து, ரமாவின் பெட்டி படுக்கையோடு வந்தார்.

"நான் பெத்த கடனுக்காக இந்த பெட்டியை எடுத்துக்கோ. இன்னையில் இருந்து நீ என் மகள் இல்லே... அய்ந்து நிமிஷம் டயம்... கொடுக்கிறேன்... ஒண்ணு... நடந்தத சொல்லிடு... இல்லே வீட்டை விட்டு... நட..."

ஐந்து நிமிடம் ஆயிற்று. ரமா பதிலளிக்கவில்லை;

ஏகாம்பரம் பெட்டியை எடுத்து, வாசலுக்கு வெளியே வைத்தார். அம்மாக்காரியும் அக்காக்காரியும் கைகளைப் பிசைந்தார்கள். ஏகாம்பரம் இறுதி எச்சரிக்கை விடுத்தார்.

"நான் சொன்னால் சொன்னதுதான். பீச்சுக்கு யார் கூட போனேன்னு தெரிஞ்சாகணும்... இல்லன்னா... நீ... இந்த வீட்ல இருக்கக் கூடாது, இரண்டில் ஒண்ணு செய்..."

ரமா, இரண்டில் ஒன்றை செய்ய நினைத்தவள் போல் எழுந்தாள். பாவாடை, தாவணியை தட்டி விட்டுக் கொண்டாள். வெளியேறுவதற்கு ஆயத்தமாக பெட்டியைத் தூக்காமலே நடக்கத்

துவங்கினாள். இதற்குள் அம்மாக்காரி, அவள் கையைப் பிடித்து நிறுத்திக் கொண்டே கணவரிடம் பேசினாள்.

"உங்க புத்திதான உங்க பொண்ணுக்கும் இருக்கும்? நீங்க... சொன்னால் சொன்னதுதான். இதுமாதிரி அவள் பிடிச்சா பிடிச்சதுதான்... உங்களுக்குப் பிறந்தவள்... உங்களை மாதிரி பிடிவாதமாகத்தான் இருப்பாள்... உங்ககிட்ட யாரும் வலுக்கட்டாயமா எதையும் வாங்க முடியுமா? இந்த மூதேவியும் உங்கள் மாதிரியே பிறந்து தொலைச்சிருக்காள்.... எல்லாம் என் தலையெழுத்து."

ஏகாம்பரம், புறப்படப் போன மகளை தடுக்கவில்லைதான். அதே சமயம், அவளை இழுத்துக் கொண்டு உள்ளறைக்குள் போன மனைவியையும் தடுக்கவில்லை. அவர் சொற்பிடி, அவருக்கே பற்பிடியாகி விட்டது.

இந்த அனுபவத்திற்குப் பிறகு ஏகாம்பரம், குமாஸ்தாவின் 'டூர்' ஆர்டரை ரத்து செய்வாரா அல்லது இதுவே ஒரு 'காம்ப்ளெக்ஸாகி' மேலும் கடுமையாக நடந்து கொள்வாரா என்பதைப் பொறுத்துத்தான் பார்க்க வேண்டும்.

நாகமணி, 27-8-1980

# இரும்புக் காந்தம்

ராசாத்தியின் உடலெல்லாம் எரிந்தது. அவன் அப்படி நடந்து கொள்வான் என்று அவள் எதிர்பார்க்கவில்லை. கொத்தவால் சாவடியிலேயே அதிக நேரம் ஆகிவிட்டது. ஊத்துக் கோட்டையில் இருந்து வரும் லாரிக்காகக் அவள் எதிர்பார்த்து நின்றதால், நேரமாகிவிட்டது. மொத்த விலைக்கு வாங்குகிற கொய்யாப் பழத்தையும், 'தர்கீஸ்' பழத்தையும், வெள்ளரிப் பிஞ்சுகளையும், மயிலாப்பூரில் 'கூறு' போட்டு விற்பது அவள் 'புழப்பு.'

அடுத்த நாள் கோவில் விசேஷம் என்பதால், அவள் அதிகமாகவே வாங்கினாள். 'கன்னி' நிலையில் இருந்த கொய்யாப்பழம் பத்து கிலோ; மறுநாள் 'நல்லா' பழுத்திடும். தர்கீஸ் பழம், 'பத்து ரூபா.' 'அஞ்சி' தர்கீஸிலேயே மூணு ரூபா நிற்கும்; முந்நூறு வெள்ளரிப் பிஞ்சுங்க.... இத்தனையையும், சைக்கிள் ரிக்ஷாவிலே ஏத்திக்கினு பாரீஸ் வந்தாள். 'இம்மாத் துட்டுதானான்'னு' கேட்ட ரிக்ஷாக்காரருக்கு, ஒரு கொய்யாப்பழத்தை எடுத்து, போனஸாக கடிக்கக் கொடுத்தாள். காசு கேட்ட வாய்க்குள் அதை வைத்துக்கொண்டே, அவர் புறப்பட்டார். மணி இரவு ஒன்பது இருக்கும்.

அந்த கண்டக்டர், என்னமோ நல்லவன்தான். வழக்கமாய் அவள் 'கூடைகளை' முணுமுணுக்காமலே ஏத்துகிறவன்தான். அந்த தைரியத்துல, அவள் 'புரண்ட்' வழியிலே ஏறி, டிரைவர் சீட்டுக்கு அருகே, கூடைக்கள 'வச்ச'போது, 'தம்மடிச்சிக்கினு' வந்த

கண்டக்டர், 'ஓரமா அடுக்குமே' என்று சொல்லிக்கொண்டே அவள் முதுகின் ஓரத்தில் லேசாகத் தட்டினான்.

ராசாத்திக்கு, முதலில் அந்த ஸ்பரிசம், ஒருவித 'இதுவை'க் கொடுத்தது. அவனைத் திரும்பிப் பார்த்தாள். ஒருவேளை கல்யாணம் பண்ணிக்கப் போறேன்னு சொல்லப் போறானோ... 'பய' வுயாபாரத்துக்கு ஒரு 'கும்புடு' பூட்டுடலாம்... அவள் சும்மா இருப்பதைப் பார்த்த கண்டக்டர், கொஞ்சம் 'தள்ளி வையுமே'ன்னு சொல்லிக் கொண்டே, அவளை லேசாகத் தட்டினான். அந்தச் சமயத்தில், ராஜகம்பீரத்தோடு துள்ளிக் குதித்து உட்கார்ந்த டிரைவர், கண்டக்டரைப் பாராமலே, "உன் குழந்தைக்கு இப்போ எப்படிடா இருக்கு?" என்று சொல்லிக் கொண்டே 'கீரை' போட்டார். கண்டக்டர், விசிலடிக்க மறந்து, அவளைத் தள்ளிக் கொண்டே இருந்தான்.

பஸ் உருமலோடு சேர்ந்து, ராசாத்தியும் உருமினாள். அவள் கனவு ஒருகணம் உருவாகி, மறுகணம் சிதைந்து, 'அணு பிளப்பு' போல ஆக்ரோஷமாக உருவெடுத்தது.

"நானும் பொறுத்துப் பொறுத்துப் பார்த்துக்கினே கீறேன்... 'பேஷண்டுக்கும்' ஒரு லிமிட்டு உண்டுய்யா... நீ பாட்டுக்கு டச்சு பண்ணிக்கினே நிக்கிற... இன்னாய்யா... உன் மனசுல இன்னாத்தான் நெனப்பு? அடச் சீ...."

பஸ்ஸில் இப்போது ஆட்கள் அதிகமாகக் கூடிவிட்டதால், கண்டக்டருக்கு, அவள் பேச்சு, தன்மானப் பிரச்சினையாகிவிட்டது. போதாக்குறைக்கு, அந்தக் கழுகுக் கண்ணன் டிரைவர், 'வூட்டுல' வத்தி வச்சுடுவான். அவளைப் பயமுறுத்துவது, பல 'பாஸஞ்சர்களை'ப் பார்த்த கண்டக்டருக்குச் சிரமமாக இல்லை.

"இன்னாம்மே... பத்தினி வேடம் போடுற... எனக்கும் ஸிஸ்டருங்க இருக்கத்தான் செய்யுறாங்க. கூடைங்கள தள்ளி வைம்மேன்னு சொன்னது தப்பா... தெரியாம கை பட்டுட்டுது.

அதுக்கு ஊரக் கூட்டி ஒப்பாரி வைக்கிறியே.... கூடைங்கள கீழே இறக்குமே..."

ராசாத்திக்கும், இது ஒரு தன்மானப் பிரச்சினை.

"ஏய்யா... தெரியாம கை படுறதுக்கும், ஒரு 'இதுவோட' கை படுறதுக்கும் தெரியாமலா பூடும்?"

"நீ அனுபவத்துல தெரிஞ்சுக்கிட்டவளாய் இருக்கலாம்... பல கையுங்கள பத்தி நல்லாத்தான் தெரிஞ்சி வச்சிருக்கே...."

"யோவ்... கஸ்மாலம்... செருப்பு பிஞ்சுடும். ஜாக்கிரதையா பேசு...."

கண்டக்டர், பதிலுக்கு ஏதோ சொல்ல வாயெடுத்தான். அதற்குள், பிரயாணிகளிடையே பெரிய முணுமுணுப்பு ஏற்பட்டது.

"பஸ் புறப்பட இவ்வளவு தாமதமா? எந்நேரம் வீட்டுக்குப் போய் சேருவது?" கூட்டத்தில் ஒருவர், 'சிட்சுவேஷன் லீடராகி', "ஏய்யா பேச்சை வளத்துகினே போறிங்க... கூடைங்களே வேணுமுன்னா கீழே இறக்கிடு. உங்க சண்டை முடியுற வரைக்கும் நாங்க காத்து நிக்கணுமா? அவனவன் வீட்டுக்குப் போகாண்டாம்..." என்றார்.

அந்த ஆசாமியும், அவரைச் சார்ந்த பிரயாணிகளும் தனக்கு ஆதரவு கொடுப்பதாக முதலில் நினைத்து, முடிவில் ஏமாந்த ராசாத்தி, 'மடமடன்னு' கூடைகளைக் கீழே இறக்கிவிட்டு, "இனிமேல் உன் பஸ்ஸில் ஏறினால், என் பேரு ராசாத்தி இல்ல... பிள்ளப் பெத்த பிறவுமா உனக்கு இந்தப் புத்தி... கஸ்மாலம்..." என்று காறித் துப்பினாள். அதற்குள் பஸ் நகர்ந்தது.

"கண்ணகி சிலையை இறக்கிட்டு, உன்னை அதுல நிறுத்திட வேண்டியதுதான்" என்று சொல்லிக் கொண்டே, கண்டக்டர் 'டிக்கெட்' என்றான். பயணிகள், அவன் நகைச்சுவையைச் சுவைப்பதுபோல் சிரித்தார்கள்.

ராசாத்தி, வேற பஸ்ஸை எதிர்பார்த்து நின்றாள். மயிலாப்பூருக்கு போக வேண்டிய பஸ் எதுவுமே வரவில்லை. மணி பத்தைத் தாண்டிவிட்டது. ரிக்ஷாவில் ஏற்றிக்கொண்டு மயிலாப்பூர் போகலாமா என்று நினைத்தாள். கட்டாது.

அவள், காத்துக் காத்து நின்றாள்.

மயிலாப்பூருக்குப் போகும் பஸ்ஸைப் பார்த்ததும், ராசாத்தி சேலையை இறுக்கிக் கட்டிக்கொண்டு, கொய்யாப்பழக் கூடையை எடுத்து, வெள்ளரிப் பிஞ்சு கூடைமேல் வைத்து, லாவகமாக தூக்கிக்கொண்டு, பஸ்ஸிற்குள் நுழையப் போனாள். பழைய கண்டக்டர், அங்கே, நின்று கொண்டிருந்தான்.

ராசாத்தி, ஏறிய வழியே இறங்கினாள். கூடைகளை தனித்தனியாக இறக்கினாள். அதை கண்டக்டர், குதர்க்கமாகச் சிரித்துக்கொண்டே விசிலடித்தான். கடைசிப் பஸ் புறப்படத் தயாராகியது.

ராசாத்தியால், அழுகையை அடக்க முடியவில்லை. ஆத்தாக்காரி, துடிச்சிக்கினு இருப்பாள். நடந்து போகலாமா... பொறுக்கிப் பசங்க மடக்கினால்... ‘பாழாப் போனவன் தட்டுனதுல, குறைஞ்சா பூட்டோம்... வுலகமே இப்படித்தான்கீது... என்னா பண்றது... பேசமா ஏறிக்கலாமா...”

அவள் வருகையை எதிர்பார்ப்பதுபோல், ஸ்டார்ட்டான வண்டிக்கு விசில் கொடுக்காமலே நின்றான் கண்டக்டர். ராசாத்தி மனசைக் கல்லாக்கிக்கொண்டு, வேறு பக்கமாகத் திரும்பிக் கொண்டாள். அந்தக் கடைசிப் பஸ்ஸும் போய்விட்டது.

சுத்தி செய்யப்படாத தங்கம்போல, தூசி படிந்த கட்டம் போட்ட சேலைக்குள், உணர்ச்சி மயமாகத் துடித்துக் கொண்டிருந்த அவள் மேனியை, ராத்திரி மேயும் பலர், தத்தம் கண்களால் துளாவிக் கொண்டு போனார்கள். சிலர், அவள் அருகிலேயே நின்று

முறைத்தார்கள். ராசாத்திக்கு, அடிக்கடி காறித் துப்ப வேண்டியது இருந்தது.

பஸ் நிலையத்தின் அருகில் முக்காடு போட்டு முடங்கிக் கிடந்த ஒரு முதியவர் எழுந்தார்.

"இம்மா நேரத்துல நீ எங்கேயும் போக முடியாது... பேசாமல், அந்த ஓரத்திலே படுத்துக்க... காலங்காத்தாலே பூடலாம்..."

பத்து ஆண்டுகளுக்கு முன்னால், தான் பத்து வயதுச் சிறுமியாக இருக்கும்போது, இறந்துப்போன தன் நயினாவைப் பார்ப்பதுபோல், அவள் அந்த முதியவரைப் பார்த்தாள். அவரை ஆதரவாகப் பிடித்துக்கொண்டு அங்கேயே முடங்கினாள். ஆத்தாள், நினைப்பில் அவளுக்குத் தூக்கம் வரவில்லை.

மறுநாள், காலையில் எழுந்து அவள் புறப்படப் போனபோது, வண்ணாரப்பேட்டையில் இருந்து, ஒரு ஆயா வந்தாள். நேராக அவளிடம் வந்து, "இம்மா லாட்டையும் எவ்வளவுக்கு குடுக்கிறே" என்று கேட்டாள். ராசாத்தி, இருபத்தைந்துக்கு சொல்லி, இருபது ரூபாய்க்குக் கொடுத்தாள். அவளுக்கு ஆச்சரியம் தாங்க முடியவில்லை. மயிலாப்பூரில் கூறு போட்டு விற்றால், மிஞ்சி மிஞ்சித் தேறினால், ஒரு நாலு ரூபாய்தான் தேறும்... இப்போ முள்ளங்கிப் பத்த மாதிரி சொளையாய்ப் பத்து ரூபாய்க் கிடச்சிட்டுது... மறுநாளும் வருவதாக ஆயா வாக்களித்தாள்.

ராசாத்தி, ஆத்தாக்காரியையும் தம்பி தங்கைகளையும் மயிலாப்பூரில் போய்ப் பார்த்துவிட்டு, கொத்தவால் சாவடிக்கு வந்தாள். ஆயா வாங்கின இடத்திலேயே கடையைப் போட்டாள். முன்தினம் வந்த அதே வண்ணாரப்பேட்டை ஆயா, இரண்டு ஆயாத் 'தோழிகளை'க் கூட்டிக்கொண்டு வந்தாள். கொத்தவால் சாவடியில் ஏகப்பட்ட பாக்கி வைத்து, அங்கே தலைகாட்ட

முடியாமல் தவித்த இந்த ஆயாக்களுக்கு, ராசாத்தி பாரிஸில் கடைபோட்டது வசதியாக இருந்தது.

ராசாத்தியின் இட 'ஆக்கிரமிப்பை' இதர தெரு வியாபாரிகள் கண்டித்தார்கள். "ஏதோ போனா பூடுதுன்னு ஒரு நாள் இடங்கொடுத்தோம்... நீ என்னாமே... பெர்மனண்டா ஆயிட்டே..." என்று சொல்லி, ஒரு நடுத்தரப் பெண், அவள் கூடைகளை, தெருவில் கவிழ்க்கப் போனாள். அப்போது, பக்கத்தில் 'எதையெடுத்தாலும் ஒரு ரூபா' கடை போட்டிருந்த கண்ணுச்சாமி, "அதுவும் புழச்சிட்டு பூட்டுமே... உன் தலையிலயா குந்துறாள்..." என்றான் கம்பீரமாக. ராசாத்தி, அவனை நன்றியுடன் பார்த்தாள்.

விரைவில், இளம் பெண் ராசாத்தியும், இருபத்தைந்தைத் தாண்டாத கண்ணுச்சாமியும், 'கிசுகிசு' பேசத் துவங்கி விட்டார்கள். 'பவுடர் டப்பா, அத்தர் சென்ட், ஜட்டி, கைக்குட்டை, பிளாஸ்டிக் டப்பா, கூடை, பந்துகள் முதலிய 'சர்வதேச நிவாரணிகளை' வைத்திருந்த கண்ணுச்சாமி, லுங்கியை ஒரு 'இறுக்குப்' போட்டு கட்டிக் கொண்டு, கர்ச்சிப்பைக் காலருக்குள் வைத்துக்கொண்டு, சினிமாவில் 'டூயட்' பாடுவதற்காகக் கதாநாயகன், காலை வைத்துக்கொண்டு நிற்பதுபோல் நிற்கும் காட்சியைப் பார்க்கப் பார்க்க, ராசாத்திக்கு உடலெல்லாம் ஆடும். விரைவில் இருவரும் 'ரெண்டாவது ஆட்டத்துக்கு' போவது என்று முடிவு செய்தார்கள்.

ஆட்ட நாள் வருவதற்கு ஒரு நாள் முன்னதாக கண்ணுச்சாமி, மயிலாப்பூருக்குப் புறப்பட்டுக் கொண்டிருந்த ராசாத்தியிடம் விரைந்து வந்தான்.

"நாளிக்கி ஜோரரா டிரஸ் பண்ணிக்கினு வரணும்... சொல்லிட்டேன்..."

"எனக்குப் பயமா இருக்குய்யா. ஆத்தாக்காரிக்குத் தெரிஞ்சா உசிர விட்டுடும்."

“எல்லா இடத்துலையும் நடக்கறதுதானமே... ஊரு உலகத்துல நடக்கிறதை காப்பி அடிக்கிறோம். அப்புறம்... இதை... நைலா முந்தானைல வச்சு... வூட்டுக்கு கொண்டு போ... காத்தால கொண்டு வந்துடு....”

“என்னய்யா இது...?”

“செம்புக்கட்டி... போலீஸ் பாலோ பண்ணுது... குயிக்கா வாங்கு... நான் ஜகா வாங்கணும்....”

“யோவ்... இந்த வேலைக்கு வேற ஆளப்பாரு... நான் நல்லபடியா வாழணுமுன்னு நினைக்கிறவா....”

“ராசாத்தி... இந்தத் தொழில எல்லாரும் பண்றாங்க. டயமாவுது.. வாங்கிக்கோ....”

“யோவ்... என்னை என்ன ஒன் பொம்மைன்னு நினைச்சுக்கினியா? மரியாதையா... நல்லபடியா நடக்கிறதா இருந்தா... என்கிட்ட பேசு... இல்லன்னா, நடையைக் கட்டு...”

“ராசாத்தி, சொல்லிட்டேன்... என்னப் பகச்சி, இந்தப் பேட்டையில் நீ கடை போட முடியுமா?”

“நீ போறீயா... இல்ல... நானே போலீஸ்ல சொல்லணுமா?”

கண்ணுச்சாமி, போய்விட்டான். ராசாத்தியால், மயிலாப்பூர் பஸ்ஸில் ஏற முடியவில்லை. அப்படியே, சாலையோரத் தடுப்புச் சுவரில் சாய்ந்து கொண்டாள். ‘கண்ணுச்சாமியும் கட்சில ஒரு கஸ்மாலந்தானா? பேஜாரான வுலகண்டா.... தாலி கொண்டு வருவான்னு எதிர்பார்த்தால், அந்த புறம்போக்கு, செம்புக்கட்டியை கொண்டு வரான்.... என்ன பொழப்புடா நயினா...’

மறுநாள், கண்ணுச்சாமியை கைவிலங்கு போட்டு, ராசாத்தியிடம், இரண்டு போலீஸ்காரர்கள் இழுத்து வந்தார்கள்.

ராசாத்தியால், பேச முடியவில்லை. கண்ணுச்சாமியை அவளால் மறக்க முடியவில்லை. தேம்பித் தேம்பி அழப்போனாள். ஆகையால்,

"ஏய் பொண்ணு, இவன் வழக்கமா திருடுற ஒயரு, பல்பு, செம்புக் கட்டிங்கள உன்கிட்டதான் குடுக்கிறதா சொல்றான்... உள்ளதைச் சொல்லு... இல்லை..."

இந்தச் சமயத்தில், "இவள்தான் சாமி, என்னைத் திருடச் சொல்லித் தூண்டிவிட்டது. ரவ்வோண்டு திருடிக்கினு வந்தா, 'இம்புட்டுத்தான் முடிஞ்சுதான்னு...?' கேட்பாள். இவளாலதான் சாமி கெட்டேன்..." என்றான் அவன்.

ராசாத்தி, விக்கித்து போனாள். கரையான் புற்றில் கரு நாகம் போன கததான்... அடப்பாவி...

போலீஸ்காரர், பிரமை தட்டி நின்ற ராசாத்தியை அச்சுறுத்துவதற்காக, லத்தியைத் ஓங்கியபோது, எங்கிருந்தோ வந்தார் ஒருவர்... மிடுக்கான தோற்றக்காரர், பளபளப்பான சபாரிக்காரர், போலீஸ் லத்தியை பிடித்தபடியே, ஆணையிட்டார்.

"லத்தியை கீழே போடுமேன். நேற்று... இவன் 'கேஸை' பிடிக்கிறதுக்காக, இவனுக்கு 'போக்கு' காட்டினேன். அந்தப் பொண்ணு, அவனுக்கு எவ்வளவோ புத்தி சொன்னாள்....".

கண்ணுச்சாமியை இழுத்துக் கொண்டு போனார்கள். ராசாத்தி கூடையில் அழுகிப் போயிருந்த கொய்யாப் பழம் ஒன்றை எடுத்து, வெளியே எறிந்தாள்.

இரண்டு மூன்று நாட்கள் கடந்தன.

கண்ணுச்சாமியின் கையாட்கள் அவளைக் கலாட்டா செய்யத் துவங்கினார்கள். அவள் கடைக்குப் பக்கத்திலேயே ஒருவன் கடை போட்டுக் கொண்டு, அசிங்கமான பாடல்களை இயற்றிப் பாடினான்.

ஒருநாள், கண்ணுச்சாமியின் தொண்டர்கள் நான்குபேர், அவளைத் தொடுவது மாதிரி சுற்றி நின்று கொண்டார்கள் - அவளை அவமானப்படுத்தி விடுவது என்று. அந்தச் சமயத்தில், வந்து நின்ற பஸ்ஸில் ஏறலாம் என்றால், அதில் பழைய கண்டக்டர்!

ராசாத்தி, பல்லைக் கடித்துக்கொண்டு நின்றபோது, நல்ல வசதியோடு இருப்பதுபோல் காட்சியளித்த ஒரு பெண் வந்தாள். அந்தப் பெண்ணையும் அவர்கள் கிண்டல் செய்யத் துவங்கினார்கள். ராசாத்தியால், பொறுக்க முடியவில்லை.

"ஏண்டா... கம்மனாட்டிங்களா... என்னைத்தான் என்ன வெல்லாமோ பேசுறிங்க... தலைவிதின்னு பொறுத்துக்கின்னேன். அந்த அம்மா, ஒங்கள என்னடா பண்ணுது. ஒங்க வாயில கரையான் அரிக்க...."

இதற்குள் அந்தப் பெண்ணின் கணவன் வந்துவிட்டான். கண்ணுச்சாமி வகையறாக்கள், காணாமல் போனார்கள். அந்தத் தம்பதியுடன், ராசாத்தியும் புதிதாக வந்த பஸ்ஸில் ஏறினாள். அந்தப் பெண்ணின் அருகில் உட்கார்ந்து, அவள் கேட்கிற கேள்விகளுக்கு எல்லாம், ராசாத்தி பதிலளித்துக் கொண்டிருந்தாள்.

அவர்கள் சிபாரிசில் கிடைத்த இடம் ஒன்றில், பாங்க் உதவியுடன், ராசாத்தி பெரியதாகக் காய்கறிகடை போட்டாள். அவள் தம்பி தங்கைகளும் வந்து கவனிக்கும் அளவிற்கு, கடை பெரிதாகிவிட்டது. கூறுபோட்டு விற்ற ராசாத்தி, இப்போது நடுத்தர குடும்பத்தைச் சேர்ந்தவளாகி விட்டாள்.

என்றாலும், சோதனை அவளை விட்டதாகத் தெரியவில்லை. அவள் கடை வைத்திருந்த கட்டிடத்தின் சொந்தக்காரர்,

கார்ப்பரேஷன் காரர்கள் வரப்போவதாகவும், அவர்களிடம், தான் வாடகை ரூபாய் இருபதுதான் கொடுப்பதாகக் கூறவேண்டும் என்றும் கூறினார். "என்ன சாமி... நாயம்... அறுபது ரூபா வாடகையை வேணுமுன்னா, அம்பதுன்னு சொல்றேன்... ஒரேயடியா இருபதுன்னு சொல்றது நாயமா...? பொய் சொல்றதுக்கும் ஒரு லிமிட் வாணாமா?" என்று அவள் திருப்பிக் கேட்டாள். வீட்டுக்காரர், 'ஒரு கை பாக்குறேன்' என்று சவால் விட்டார்.

இரண்டு தினங்களுக்குள் அவள் கடை, இரவோடு இரவாகச் சூறையாடப்பட்டது. ஐநூறு ரூபாய் வைக்கப்பட்டிருந்த கல்லாப் பெட்டியையே காணவில்லை. பாங்க்காரர்கள், அவள் கடனைக் கட்டாமல் இருப்பதற்காக, மோசடி செய்திருப்பதுபோல் பேசினார்கள். 'அட கடவுளே... பழயபடி காய்கறிக் கடையில் வாங்கி, கூறுபோட்டு விக்கக்கூட காசு இல்லியோ...' என்று அவள் 'ஆத்தா' ஒப்பாரி வைத்தாள்.

ஆனால், ராசாத்தி கலங்கவில்லை. கடந்த காலத்தை நினைத்துப் பார்த்தாள். அவள் மட்டும் சிறிது சலனப்பட்டு, கூடைகளை ஏற்றுவதற்காக, கண்டக்டரிடம் இணங்கியிருந்தால், இன்று ஒரு கைக்குழந்தையுடன் விபச்சாரியாக மாறியிருக்கலாம். காதலனுடன் சினிமாவுக்குப் போகவேண்டும் என்ற ஆசையில், அந்த செம்புக்கட்டியை வாங்கியிருந்தால், இந்நேரம் அவள் ஒரு கிரிமினல் குற்றவாளியாக மாறியிருக்கலாம்.

உடனடித் தேவைகளின் சபலங்களுக்கு இரையாகாமல், நேர்மையுடனும், ஒழுக்கத்துடனும் இருந்தால், சோதனைகளே சாதனைகளைக் குவிக்கும் என்பதை அனுபவப்பூர்வமாக

உணர்ந்தவள் அவள். நேர்மை என்பது காந்தம் மாதிரி. தர்மம் என்பது இரும்பு மாதிரி. காந்தம் இரும்பை இழுத்துக் கொண்டுவிடும். தர்மதேவதை அவளிடம் வந்தே ஆகவேண்டும். வேறு வழி இல்லை.

ராசாத்தி, சூறையாடப்பட்ட கடையை அங்குமிங்குமாகப் பார்த்தாள். பின்னர், சேலையை இறுக்கி உடுத்துக் கொண்டாள். காலில் படர்ந்த தூசைத் தட்டிவிட்டுக் கொண்டாள். புலம்பிக் கொண்டிருந்த அம்மாக்காரியைப் பார்த்து, "ஏம்மா, புலம்புற...? ஒண்ணுங் குடி முழுவிப் பூடல... ஆக வேண்டியதப் பார்க்கலாம்..." என்று நளினம் கலந்த கம்பீரத்துடன் எழுந்தாள்.

குமுதம், 19-5-1977

❖

# முதல் இல்லாத இரவு

மங்கலமாகத் துவங்கிய கல்யாணச் செயல்பாடுகள், இப்போது அமங்கலமாக முற்றுப் பெற்றுக் கொண்டிருந்தன.

கல்யாணம் முடிந்து விட்டது. சாப்பாட்டுக்கு முந்தியவர்களுக்குக் கிடைத்த ரசமே, பிந்தியவர்களுக்குச் சாம்பாராக்கப்பட்டு, பந்தியும் முடிந்து விட்டது. மண மேடைக்கு முன்னால் ஜோடிப் பொருத்தம் பார்ப்பதற்காகக் கூடிய இளவட்டங்கள், இப்போது கண்ணில் தட்டுப்படவில்லை. எந்தக் கூட்டத்துக்கும் அழைப்பில்லாமலே வரும் சிறுவர் - சிறுமியர்கள், இந்தக் கூட்டத்துக்கும் வந்து, அய்யரின் மந்திரம் அவருக்கே கேட்ட முடியாத அளவுக்கு, கத்தினார்கள். பந்தல் கால்களுடன் கட்டப்பட்ட குலை வாழைகளின் முந்தானைகளான இலைகளைக் கைகளால் கோதித் துகிலுரிந்து, அவற்றைப் பிடித்துக் கொண்டே கால்களால் சுற்றி, வலம் வந்தார்கள். 'ஸ்பீக்கர் செட்' சைலண்டாகிவிட்டது. மேளக்காரர்கள் 'ரேட்' சம்பந்தமாகப் பெண் வீட்டாருடன் தகராறு செய்து கொண்டிருந்தார்கள். 'கரெண்ட் ஆப்' ஆன ஒரு மணி நேரத்துக்கு உரிய பணம், பேசிய தொகையிலிருந்து பிடிக்கப்படும் என்று பெண்ணின் பெரியப்பா ஒலிப்பெருக்கிக்காரரிடம் வாய் பெருக்கிக் கொண்டிருந்தார்.

உண்ட மயக்கத்திலும், மணமக்களை உற்று உற்றுப் பார்த்த உணர்ச்சிப் பெருக்கத்திலும் ஒய்ந்து போன கல்யாணத் தொண்டர்கள் மண மேடையிலேயே தூங்கினார்கள். அதுவும் கொசுக்கள் கடிக்காமல் இருப்பதற்காகத் தலைகளில் துண்டுகளை எடுத்து முக்காடு போட்டுக் கொண்டு, பிணம் மாதிரிக் கிடந்தார்கள்.

வீட்டின் வராந்தாவை அடுத்து இருந்த உள்ளறையில் புதுப்பெண்ணைச் சுற்றி, ஒரே பெண்கள் கூட்டம். தவளைக் குரலில் அவர்களின் பேச்சு, கிசுகிசு சத்தமாகக் கேட்டதே தவிர அதன் சாரம் வெளியே பாயவில்லை.

தந்தையின் சொல்லை மந்திரமாகக் கொண்டவன் போல், புது மாப்பிள்ளை செல்லப்பாண்டி, தத்தம் ஊர்களுக்கு அவசர அவசரமாகப் புறப்பட்ட உறவினர்களை தெரு வரைக்கும் வந்து வழியனுப்பப் போனான். அவர்கள், அங்கேயே நின்று, அவனோடு தத்தம் நெருக்கத்தை, தெருக்காரர்களுக்குக் காட்டும் வகையில் நெருங்கி நின்று சாவகாசமாகப் பேசிக் கொண்டிருந்தார்கள். அவர்களை நகர வைத்துவிட்டு, வீட்டுக்குள் இருக்கும் புது மனைவியுடன் நெருங்கி அமர ஆசைப்பட்ட அந்த மாப்பிள்ளைப் பையன், சொந்தக்காரர்களுக்கு முன்னால் நடந்து, அவர்களுக்கு, வழி காட்டினான். எப்படியோ பாதித் தெரு வரைக்கும் நடந்து அவர்களை வழி அனுப்பி வைத்துவிட்டு, மனைவியை பார்பதற்காகத் திரும்பி நடந்தான். மனைவியே தெருவுக்கு வந்து, 'என்ன நினைச்சுட்டீங்க... இப்படித்தான் என்னை ஏங்க வைப்பதா' என்று கண்ணால் அதட்டுவது போல் கற்பனை செய்தான். அந்தக் கற்பனையே, அவனை கிறங்க வைத்தது.

செல்லப்பாண்டி, இடையே தட்டுப்பட்ட ஒருசிலரைப் பார்க்காதவன் போல் சக்கரக் கால்கள் கொண்டவனாய், பெண் வீட்டைப் பார்த்துத் தாவித்தாவி நடந்தான். விரல்கள், பாதங்களிலிருந்து பிய்த்துக் கொள்வது போலவும், கால்கள் உடம்பிலிருந்து விலகிக் கழன்று கொள்ள முயல்வது போலவும், அவன் நடக்காத குறையாக ஓடி, ஓடாத குறையாக நடந்தான். பிறைநிலா நெற்றியும், காதளவோடிய கண்ணும், பெரியோர் ஆசீர்வதித்துப் போட்ட மஞ்சளரிசி நிறமும் கொண்ட மனைவியின் கூந்தலைப் பிறர் அறியாது இழுக்கத் துடித்தவனாய், அருகில் அமர்ந்திருக்கும் சாக்கில், அவள் கையைக் கிள்ள நினைத்தவனாய், அவள் நாணத்தில கண் சிவந்து, தன்னை மருட்சியான மகிழ்வோடு பார்க்கும் நேர்த்தியைக்

காணப் பறப்பவனாய், மணப் பந்தலுக்குள் நுழைந்து, வீட்டுக்குள் எப்படி முன்னேறுவது என்பது தெரியாமல் தயங்கி நின்றான்.

பெண் வீட்டுப் பெண் ஒருத்தி வீட்டுப் படிக்கட்டில் நின்றபடியே அவனைப் பார்த்துக் கேட்டாள். அவள் சொன்ன சொல், மனைவியே அவளுக்குப் பின்னணிக் குரல் கொடுத்தது போல் கேட்டது.

'எவ்வளவு நேரமாய்ப் பெண்ணைக் காக்க வைக்கது? சீக்கிரமா 'கை நனைக்க' வாங்க.... அவள் பசியில் துடிக்காள்...'

செல்லப்பாண்டி வகையறாக்களின் குல மரபுப்படி, புதுமணத் தம்பதிக்கு ஒரே தட்டில் உணவு பரிமாறப்படும். மாப்பிள்ளை முதலில் பாதிச்சோற்றை சாப்பிட்டுவிட்டு, மீதியைச் சாப்பிடாமல் வைக்க வேண்டும். அதை மனைவி சாப்பிடுவாள். சாப்பிட வேண்டும். இதுதான் 'கை நனைப்பு'. செல்லப்பாண்டி, தான் உண்ட மிச்சத்தை உண்ணப் போகும் மனைவியின் சிணுங்கலையும், மழுப்பலான சிரிப்பையும் அப்பொழுதே உருவகித்துக் கொண்டான். அந்த மயக்கத்திலேயே அப்படி நின்றான். இதற்குள் படிக்கட்டில் நின்ற பெண், சொன்னதையே மீண்டும் சொன்னாள்.

அந்தச் சமயத்தில் வெளித் திண்ணையில் குத்துக் காலிட்டு உட்கார்ந்திருந்த ஒரு கிழவர், 'மாப்பிள்ளை... எல்லாத்தையும் சாப்பிடாதேயும்... இந்தா படுத்திருகாரு பாரும்... 'வயிருதாரி' பெருமாளு... இவரு அவ்வளவையும் சாப்புட்டுட்டு இன்னும் கொஞ்சம் சோறு போடுங்கன்னு' சொன்னவரு...' என்றார். அதுவரை தலைவிரி கோலமாகப் படுத்துக் கிடந்த அந்த 'வயிருதாரி', "இவரு சங்கதியை நான் சொல்லுதேன் கேளும்... இவரு... கல்யாணத்துல... கொழுந்தியா ஒருத்தி இவரை ஏமாத்தறதுக்காக உருண்டையாய் இருந்த வெள்ளரிக் கத்திரிக்காயச் சோத்துல வச்சாள்... இந்த மனுஷன் அதை முட்டைன்னு கடிச்சு கடிச்சுப் பாக்கி வைக்காமச் சாப்புட்டார்.... இவ்வளவுக்கு அது பச்சைக் கத்திரிக்காய்.... கத்தரிக்காய்க்கும் முட்டைக்கும் வித்தியாசம் தெரியாத மனுஷன்...

இவரு பேச்சை.... நீ ஒரு பைத்தியக்காரன் கேட்டுக்கிட்டு நிக்கே பாரு'' என்று சொல்லிவிட்டு மீண்டும் மணமேடையிலே தடாலென்று விழுந்து மூச்சுவிடும் பிணமானார்.

செல்லப்பாண்டி, சத்தம் போடாமல் சிரித்துக் கொண்டு படிக்கட்டில் ஏறிய போது, உள்ளே இருந்து வந்த ஒருவர், ஒரு செம்பு நிறையத் தண்ணீர் கொண்டு வந்து கொடுக்க, அவன், அதை எடுத்து, வீட்டின் கிழக்கு சுவர் அருகே கையலம்பி விட்டு, கைக்குட்டையை எடுத்து முகத்தைத் துடைத்தபோது, அவன் அக்காள் செல்லம்மா, கைக்குழந்தையுடன் அந்தப் பக்கம் வந்தாள். தம்பியைப் பார்த்தவுடன், தன்னையும் அறியாமலே கண்கள் கசிய, அவற்றைத் தன் குழந்தையின் தோளில் வைத்தே தேய்த்துவிட்டு, 'போடா.... சீக்கிரமாப் போய் சாப்பிடு... ஒன் பொண்டாட்டி ஒனக்காக ஊசி முனையில ஒரு காலும், உச்சந் தலையில ஒரு காலுமாத் தவமிருக்காள். நல்லாச் சாப்பிடு....' என்று சொல்லிக் கொண்டே பந்தலுக்கு அருகே போய் நின்று கொண்டாள்.

செல்லப்பாண்டி, போகிற அக்காளைப் பார்த்தான். கிண்டல் செய்கிறாளா... இருக்காது... அவள் அப்படிப்பட்ட 'டைப்' இல்லை. அவள் முகம் கூட, கடுகடுப்பாய், பானையில் இருந்து பொங்கத் துடிக்கும் பால் மாதிரி கண்ணீர் நுரையுடன் இருப்பது போல் தோன்றியது. அவன், அக்காளின் அருகே சென்றான். அவளே ஏதாவது பேசுவாள் என்று நினைத்தான். அவளோ, பிரியப் போன உதடுகளைக் கடித்துக் கொண்டாள். அவனே கேட்டான்.

"என்னக்கா ஒரு மாதிரி பேசற..."

"ஒண்ணுமில்லேப்பா... நீ சாப்பிடப்போ... நாளானால் சரியாப் போயிடும்."

"நீ... இப்போ சொல்லாட்டா... இன்னைய பொழுது சரியாகாது... இது முக்கியமான நாளு என்பதையும் மறந்துடாதே..."

"ஒன்னுமில்லேப்பா... ஒனக்குச் சம்பந்தமில்லாத விஷயம். நீ போ..."

இதற்குள், 'மாப்பிள்ளை வாங்க' என்று மாமனாரே வீட்டுக்குள் இருந்து கூப்பிட்டார். 'அக்காளிடம் அப்புறம் பேசிக் கொள்ளலாம்' என்று நினைத்து, அவன் நகரப்போனபோது, அக்காள் மகள் செல்வி- பத்து வயதுச் சிறுமி, வீட்டுக்குள் இருந்து வெளியே வந்தாள். அம்மாவிடம் ரகசியம் பேசுபவள் போல், மாமனுக்கும் கேட்கும்படி கத்தினாள்.

"அம்மா... பொண்ணு இன்னும் அழுதுக்கிட்டுத்தான் இருக்காள்..."

செல்லப்பாண்டி, திடுக்கிட்டான். அழுகிறாளா... ஏன்? தன் வீட்டுக்காரர்கள் அவள் மனத்தை நோக வைத்து விட்டார்களா...'நகை சரியில்லை... தொகை சரியில்லை' என்று நச்சரித்து விட்டார்களா... அதற்காக அவள் ஏன் அழணும்? நான் சொல்லுவதுதானே முக்கியம்... நாலுபேர் சொல்வதா முக்கியம்?

அக்காள் மகளின் விரல்களைப் பிடித்துக் கொண்டே அவன் கேட்டான்.

"எதுக்கும்மா ஒன் அத்தை அழுவுறாள்?"

அக்காள் அதட்டினாள்.

"ஏய் கிறுக்கி... இப்படி வா..."

செல்லப்பாண்டி, அக்காள் மகளின் கையைப் பிடித்து இழுத்து, கையலம்பிய இடத்துக்கு கூட்டிப் போனான். அக்காள் படபடத்தாள். மகளின் வாயை மூடுவதற்காக ஓடப் போனவளின் வழியை அடைப்பது மாதிரி, நான்குபேர் ஒரு பெரிய பெஞ்சை தூக்கிக் கொண்டிருந்தார்கள். அதற்குள், அந்தச் சிறுமி தாய் மாமாவிடம் ஒப்பித்துவிட்டாள்.

'அதுவா... வீட்டுக்குள்ள பொண்ணு கண்ணீர் விட்டுக்கிட்டே இருந்தாள். அப்போ, அவளோட அம்மா வந்தாள். உடனே, இவள், அவளைக் கட்டிப் பிடிச்சிக்கிட்டே 'என்னைப் பாழுங் கிணத்துல தள்ளிட்டியேம்மா... இந்தக் கன்னங் கரேர்

மாப்பிள்ளைக்காம்மா நான் காத்திருந்தேன்னு' சொல்லி அழுதாள். அப்போ பார்த்து உள்ளே வந்த அம்மா 'என் தம்பிக்கு என்ன குறைச்சல்... அவன் கால் தூசிக்கு நீ பெறுவாயான்'னு கேட்டுட்டு அழுதுக்கிட்டே வெளியே வந்துட்டாள்..."

செல்லப்பாண்டியின் காதுகள் தாமாக இரைந்தன. அவற்றுக்குள், காற்று புகுந்து, பலூன் மாதிரி ஏதோ ஒன்று வெடிப்பது போன்ற பேரிரைச்சல். கண்கள் அக்கினிக் குழம்பாகி, திரவமாக மாறுவது போன்ற உரு மாற்றம். அடை மழை போல், உடலெங்கும் வேர்வை... கைகள் தாமாகத் தலையைப் பிடித்துக் கொண்டன. சிறிது நேரம் வரை, தாம்பத்தியப் பேராசையில் நெகிழ்வோடு இருந்த இதயம், இப்போது ஒப்பாரி ஓசையுடன், இழவு மேளம் போல வேகமாக அடித்தது. என்புதோல் போர்த்திய அவன் யாக்கையைக் கிழித்துக் கொண்டு வெளியே வரத் துடிப்பது போன்றவேகம். மூச்சு உள்ளேயும், வெளியேயும் போக முடியாமல் மூக்குக்குள்ளேயே சிறைப்பட்டது போன்ற முட்டல்... வானம் இருண்டு, தானும் இருட்டிப் போனது போன்ற பிரமை...

அந்த பிரமையின் பிடியில் சிக்கிக் கொண்டே, பாம்பின் வாய்த் தவளை போல் - பாதி உடல் போன பின், 'நீ என்ன காப்பாத்துவது' என்று பதுங்கி நிற்கும் பிறிதொரு தவளையைப் பார்க்கும் அந்தப் பிராணியைப் போல், அவன் அக்காளைப் பார்த்தான். அக்காள், தொலைவில் இருந்தபடியே, தன் முகத்தை கைக் குழந்தையை வைத்து மறைத்துக் கொண்டாள்.

இப்போது, வீட்டுக்குள்ளிருந்து நாலைந்து பேர் வெளியே வந்து, மாப்பிள்ளையைச் சுற்றி நின்றபடி, 'நேரம் ஆகுதுல்லா... மொதல்ல கை நனையுங்க...' என்று சொல்ல, விஷயம் தெரியாமலும், தெரியப் படுத்தாமலும் பந்தக் காலைப் பிடித்துக் கொண்டு நின்ற செல்லப் பாண்டியின் தந்தை 'போயேண்டா... ஒனக்கு எத்தனை தடவதான் சொல்லுவாங்க....' என்றார்.

செல்லப்பாண்டி, தந்தையின் முகத்தைப் பார்த்தான். மகனை, பட்டப் படிப்புப் படிக்க வைத்ததற்காக, கையில் பட்டை

ஏந்தாத குறையாகக் கடன் வாங்கியும், முழு வயிற்றைச் கால் வயிறாகச் சுருக்கியும், இப்போது பெருமிதமாக நின்ற பெற்றவரைப் பார்த்தான். முதல் சம்பளத்தை அனுப்பியபோது 'மொதல்ல... ஒனக்கு வேண்டியத வாங்கிக்கோடா... மெட்ராஸ்ல... தன்னந்தனியா என்ன பண்ணுவே...' என்று சொன்ன, அந்த விதி விலக்கு மனிதரைப் பார்க்கப் பார்க்க, அவனுக்கு தன் விதி, சிறிதாகத் தெரிந்தது. தந்தைக்கு விவரம் தெரியக் கூடாது என்ற எச்சரிக்கையில், யந்திரம் போல் உள்ளே சென்றான்.

பெண்ணின் முகம் சிரிக்காமல், கண்கள் மட்டும் சிவந்திருந்தன. நாணத்தால் குனிய வேண்டிய தலை அவமானத்தால் கவிழ்ந்திருப்பது போல் தோன்றியது. இப்போதுதான் அவனுக்கே நினைவு வந்தது. தாலி கட்டும்போது தன் கையில் அவள் கண்ணீர் சொட்டு விழுந்தது. அதை அப்போது ஆனந்தக் கண்ணீராக பாவித்தான். இப்போது அதே அந்தக் கண்ணீர் பட்ட கையைத் தூக்கி, தன் கண்களைத் துடைத்துக் கொண்டான். எல்லாப் பெண்களும், பெண்மைக்கு விரோதமாக, மௌனமாக இருந்தது, அவன் உள்ளத்தில் பேரிரைச்சலை ஏற்படுத்தியது. யாரோ ஒருவரோ அல்லது ஒருத்தியோ சொல்வது அவன் காதில் கேட்டது.

'உம்... உட்காருங்க...?'

செல்லப்பாண்டி மனைவியை ஏறிட்டுப் பார்த்தான். அவளோ, தரை பார்த்த கண்களை நிமிர்த்தவே இல்லை. திடீரென்று அவன் அமைதி கலந்த ஆக்ரோசத்தோடு சொன்னான்.

'எனக்கு எச்சில் சோறு கொடுத்தும் பழக்கமில்லை... எடுத்தும் பழக்கமில்லை... நான் எச்சில் சோறும் இல்லை... பெண்ணுக்குத் தனியாச் சோறு போடுங்க... பசிச்சால் சாப்பிடட்டும். எனக்கு இப்போ பசிக்கல... நான் அப்புறமாச் சாப்பிட்டுக்கிறேன்."

செல்லப்பாண்டி, எந்த வேகத்தில் சொன்னானோ, அந்த வேகத்தில் நடந்து பந்தலுக்குச் சற்றுத் தொலைவில் போடப்பட்டிருந்த நாற்காலியில் போய், தலையில் கை வைத்து முதுகை வளைத்து,

முகம் கவிழ உட்கார்ந்தான். என்னமோ ஏதோ என்கிற மாதிரி, உள்ளே ஆண்கள் குரலும், வெளியே பெண்கள் குரலும் அவனுக்குக் கேட்டன. அவன் தந்தை யதார்த்தமாக, 'கோபத்துல சாப்பிடாம இருக்க மாட்டான். அவனுக்குன்னு சில அபிப்பிராயங்கள் வச்சிருக்கறவன். அதை விட்டுக் கொடுக்கவும் மாட்டான். பிறத்தியாரைப் பிடிக்கும்படியும் சொல்ல மாட்டான். இப்போ... என்ன வந்துட்டு மாப்பிள்ள எச்சில் சோறை.... பொண்ணு சாப்பிடறது தப்புத்தான்.... விட்டுத் தள்ளுங்க' என்று அவர் சொல்வதும் கேட்டது.

உண்மைதான்.

ஒரு மாதிரியான, சில தனி அபிப்பிராயங்களைக் கொண்டவன்தான் அவன். கிராமத்தில் மத்திய வர்க்கத்தின் கீழ்த்தட்டில் உதித்து, முப்பது கிலோ மீட்டர் தொலைவுள்ள கல்லூரிக்குத் தினமும் ரயிலில் போய் வந்து, ரயில் பிரயாணத்தால், ஒருவித ஏகாந்த சிந்தனையை வளர்த்துக் கொண்டவன். பேண்ட்-சிலாக் மாணவ பட்டாளத்தில் வேட்டியோடு போனவன். பூட்ஸ் கால்களுக்கு இணையாக செருப்பில்லாமல் நடந்தவன். நிறத்தாலும், உடையாலும் தனித்திருப்பதையே, தனிக் கவர்ச்சியாக நினைத்த ஒரிரு கல்லூரிப் பெண்கள், அவனைக் காதலிக்க முன்வந்ததும் உண்டு. அவர்களைப் பார்த்து இவன் பின்வாங்கியதும் உண்டு. வறுமை, அவனுக்கு ஒரு காம்ப்ளெக்ஸாகாமல், அதற்கான காரணங்களை ஆராயும் வகையில், மதங்களின் போதனைகளையும், பொருளாதார - சமூக நிபுணர்களின் ஆய்வுகளையும் படிக்க வைத்தது. வறுமையால் தாக்கப்படாமல், அதனை, அதன்வேர் போன்ற காரணத்தோடும், வேரடி மண்ணான காரியத்துடனும் தாக்க நினைப்பதையே சிந்தனையாய்க் கொண்ட ஒரு சிந்தனையாளனுக்குரிய இயல்புப்படி, அவன் உருவுக்கு முக்கியத்துவம் கொடுத்ததில்லை.

தந்தை, இந்தப் பெண்ணை நேரில் பார்க்கும்படி, சொன்னபோதுகூட, மானுட ஜீவி அனைத்துமே அழகுதான் என்கிற மாதிரி, பெண்ணைப பார்க்க வேண்டியதில்லை என்று சொல்லி

விட்டான். அதே சமயம், மண மேடையில், பெண்ணில் அழகால் கவரப்பட்டு, அந்த அழகைத் தன்னை அறியாமல் உபாசித்தான். அப்போதுகூட, தனது 'கருப்பு' அவனது வெள்ளை மனத்தை உருத்தவில்லை..

செல்லப்பாண்டி, நாற்காலியிலிருந்து எழுந்தான். கல்யாண வீட்டின் எல்லைப் பரப்புக்குள்ளேய சிறிது நேரம் உலாவினான். கை நனைக்காமல், கை கழுவியவனை, நினைத்தபடியே சூனியத்தைத் துரத்துபவன் போல் உலாவினான். பின்னர் கல்யாணக் கூட்டத்தின் கண் பார்வை எட்டாத குளத்துக்கரைப் பக்கமாக நடந்தான். அவனைப் பின்தொடரப் போனவர்களை சைகையாலேயே வரவேண்டாம் என்று சொல்லிவிட்டு, குளத்துக்கரை மேல் நடந்தான். ஒரு குறிப்பிட்ட இடத்தில் கரைக்குக் கீழே உற்றுப் பார்த்தான். பாழுங் கிணறு... அல்ல... நான்.... நானே..... பெண்ணைப் பொறுத்த அளவில் நான் அதுவே...

சிந்தனை, அவனை பேயாய் அலைக்கழித்தது.

'மாப்பிள்ளை குடிகாரன்... ஸ்திரீ லோலன்' என்று எவனாவது ஒருவன் எழுதிய மொட்டை மனுவைப் படித்துவிட்டு, பொறுப்புள்ள பெண் அழுவாள். அவன், நல்லவன் என்று அறிந்ததுமே அவள் அழுகை ரெட்டிப்பு மகிழ்ச்சியாகும். அல்லது கெட்டவனாக இருந்தால். அவன் தானாய்த் திருந்தியோ, அல்லது அவள் திருத்தியோ, தாம்பத்தியம் எந்த 'பத்தியம்' இல்லாமலும் செழிக்கலாம். காதல் தோல்வி என்றால் கூடக் காலப் போக்கில் சரியாகிவிடும். ஒல்லியாக இருக்கிறான் என்றால், சாப்பிட்டுத் தடியாகலாம்... தடியன் என்றால், உண்டி சுருக்கி, அந்தப் பெண்ணை மகிழ வைக்கலாம். உடம்பில் ஏதாவது சதைத் திரட்சி இருந்தால், அதைக் கூட அறுத்து விடலாம். ஆனால் உடம்பு முழுவதையுமே 'கருப்பு' என்று ஒருத்தி ஒதுக்கும்போது, அந்த உடல் முழுவதையுமே அறுத்தெறிந்தால் அன்றித் தீராத பிரச்சனை இது.

செல்லப்பாண்டி, மனம் போன போக்கில் நடந்தான். பிடிக்காத பெண்ணுடன் எப்படி வாழ்வது? எங்கேயாவது ஓடிப்

போய்விடலாமா?... எப்படி முடியும்... அவளுக்கும் தங்கைகள் இருக்கிறார்கள், தனக்கும் தங்கைகள் இருக்கிறார்கள். இவன் ஓடி, அவர்களுக்கு வரும் கல்யாணமும் ஓடிப்போய் விடக் கூடாதே... அதற்காக.... எப்படிக் குடும்பம் நடத்த முடியும்? கட்டிய தாலியைக் கழற்ற, அவன் தயார். ஊர் உலகம் ஒப்புமா... குடும்பம் நடத்தித்தான் ஆக வேண்டும்... ஆனால்... என்ன ஆனால்? வாழ்க்கையே 'ஆனால்' ஆகிவிட்டதே...

காலநேரம் தெரியாமல் அவன், கால்கள், அவனைப் பல்லக்குச் சுமப்பது போல சுமந்த போது 'செல்லப்பாண்டி... செல்லப்பாண்டி' என்ற குரல் கேட்டுத் திரும்பிப் பார்த்தான். தன் உறவினர்களும், பெண்ணின் உறவினர்களும் படையெடுத்து வருவது போல் வந்தார்கள்.

'செல்லப்பாண்டி.... செல்லப்பாண்டி' என்ற குரல், கரையில் மோதி, குளத்தில் எதிரொலித்தது. செல்லப்பாண்டி.... ஒருவேளை இந்தப் பெயரைக் கூட 'கர்நாடகம்' என்று ஒதுக்கியிருப்பாள். இதைக்கூட 'செல்வா' என்று மாற்றிக் கொள்ளலாம். ஆனால் உடம்பு நிறத்தை மாற்ற முடியுமா?

செல்லப்பாண்டி, அவர்களைப் பார்த்து, திரும்பி நடந்தான். அவன் வேதனையைப் பகிர்ந்து கொள்பவர்கள் போல், அத்தனை பேரும், அவனை மௌனமாகப் பார்த்தார்கள். தந்தை, அவன் கையை எடுத்துத் தன் கைக்குள் பத்திரப்படுத்திக் கொண்டார். மெதுவாக 'நான் ஒருவன் ஒனக்காக இருக்கிறதை மறந்துடாதடா...' என்று தழுதழுத்த குரலில் சொன்னபோது, அவரது கை, தானாக ஆடி, தன் கையையும் ஆட்டுவிப்பதைப் புரிந்து கொண்டான். எப்படியோ, விவகாரம் எல்லோருக்கும் தெரிந்து விட்டதைத் தெரிந்து கொண்டான்.

வீட்டுக்குள் அவன் நுழைந்தபோது, உள் அறையில் ஒரு கட்டிலில், மனைவி குப்புறப் படுத்துக் கிடந்தாள். செல்லப்பாண்டி,

கூனிக் குறுகியவனாய், ஒரு சாய்வு நாற்காலியில் உட்கார்ந்தான். அவள் அம்மாக்காரி, மகளைப் பார்த்து... 'நீ என்ன ரதியாடி...' என்று இவனைப் பார்த்துக் கொண்டே திட்டுவதிலிருந்து, அவள் மருமகனாய் ஆகிப்போனவனின் திருப்திக்காக திட்டுகிறாள் என்பதை புரிந்து கொண்டான். பிறகு மாமினார் அவனருகே வந்து, கைகளிரண்டையும் பிசைந்தபடி "செல்லமாய் வளர்த்த பொண்ணு... மனசுல இருக்கதை மறைக்கத் தெரியாதவள்..." என்று தன்பாட்டுக்குச் சொல்லிக் கொண்டிருந்தாள்.

செல்லப்பாண்டிக்கு, அந்தச் சூழலே கேவலமாகத் தெரிந்தது.

மாமியார்க்காரி, மகளுக்கு மறைக்கத் தெரியாது என்பதற்காகத் தான் வருந்துகிறாளே தவிர அப்படிப்பட்ட ஒரு எண்ணம் வந்ததற்காக அல்ல... செல்லப்பாண்டி எழுந்து வெளியே போகப்போனான். ஒருவர் அவனை வழிமறித்து, உட்கார வைத்தார். அவனுக்கு எல்லாமே அசிங்கமாக தோன்றியது. ஆடு மாடுகள் கூட, விருப்பம் இருந்தால்தான் இணையும். ஆனால், இங்கே விருப்பமில்லாத ஒருத்தியையும், வெறுப்படைந்த ஒருவனையும் இணைக்கப் பார்க்கிறார்கள். இதிலிருந்து தப்ப முடியாதா...'

தப்ப முடியவில்லை.

இரவில் சாப்பிடத் தயங்கினான்.

எல்லோரும் அப்போதே சாகப்போகிறவர்கள் போல 'முகங்காட்டியதால்' அவன், அவர்களின் மகிழ்ச்சிக்காக, துக்கத்தோடு சாப்பிட்டான். துக்கத்தை உண்பது போல் உண்டான்.

அவளோ, இன்னும் குப்புறப் படுத்துக் கிடந்தாள். எல்லோரும் அவனை விழுந்து விழுந்து உபசரிப்பதில் இருந்தார்களே தவிர, விழுந்து கிடப்பது போல் கிடந்த அவளை ஒரு பொருட்டாக நினைக்க வில்லை... செல்லப் பாண்டிக்கே அவளைப் பார்க்கப் பரிதாபமாக இருந்தது.

செல்லப்பாண்டி, யதேச்சையாக மாடிக்குப் போனான். அங்கே கிடந்த மெத்தைக் கட்டிலில் கண்களை மூடியபடி, தூங்காமல் கிடந்தான். எவ்வளவு நேரம் ஆகியதோ தெரியவில்லை. இரண்டு பெண்கள், அவளை அங்கே கொண்டு வந்து, அங்கேயே விட்டு விட்டுக் கதவைச் சாத்தும் சத்தம் கேட்டதும், அவன் கண் விழித்தான். ஓஹோ... முதலிரவோ... கல்லென்றாலும் கணவன் என்று மனத்தைக் கல்லாக்கிக் கொண்டு வந்துவிட்டாளோ...

அவள், கையில் பாலோடு நின்றாள். செல்லப்பாண்டி மெள்ள எழுந்தான். அந்த அறையின் மூலையில் தண்ணீர்ப்பானை மூடி மேலிருந்த ஒரு எவர்சில்வர் டம்ளரை எடுத்துப் பாதிப் பாலை ஊற்றிக் கொண்டான். அவள், தயக்கத்தோடு நின்று கொண்டிருந்தாள். முகம் வீங்கியிருந்தது. பிறகு டம்ளரை ஒரு முக்காலியின் வைத்துவிட்டுத் தயக்கத்தோடு நின்றாள். செல்லப்பாண்டி, அமைதியாகப் பேசினான்.

"என் நண்பர்களோட முதலிரவு விவரங்கள... ஒரு கட்டம் வரைக்கும் அவங்க சொல்லக் கேட்டிருக்கேன். எல்லாப் பயலுங்களும் 'என்னைப் பிடிச்சிருக்கான்னு' கேட்டிருக்காங்க... அதுக்கு அவளுங்க... 'இல்லாமலா கழுத்தைக் கொடுத்தேன்'னு சொல்லி இருக்காளுங்க, ஒருவேளை நானும் அப்படித்தான் கேட்டிருப்பேன்... ஆனால்..."

அவள் கைகளால் முகத்தை மூடிக் கொண்டாள். அவனுக்கு, அவள் அழுகையை மறைக்க பார்க்கிறாளா? அல்லது அவனது முதகத்தை பார்த்த வெறுப்பை மறைக்கப் பார்க்கிறாளா என்பது புரியவில்லை. ஒன்று புரிந்தது.... நிச்சயமாக அது நாணம் இல்லை; அவன் மேலும் பேசினான்.

"ஒனக்கு என்னைப் பிடிக்கலேன்னு தெரியும், கன்னங்கரேர்னு இருக்கிற என்னை..."

மேற்கொண்டு பேசமுடியாமல், அவன் தத்தளித்தபோது, அவள், அவனை நிமிர்ந்து பார்த்தாள். அந்தப் பார்வையில் எந்தவித குற்றவுணர்வும் இருப்பதாக இல்லை. 'அய்யோ, அப்படியெல்லாம் கிடையாதுங்க...' என்று அழுவாள் என்று மனோ தத்துவ ரீதியில் எதிர்பார்த்து, அவன் சிறிது ஏமாற்றமடைந்தான். அதே சமயம், உண்மையை மறைக்க விரும்பாத அல்லது தெரியாத அவளின் நேர்மையில் அவன் நெகிழ்ந்தான். இப்போது புத்தரைப் போலவே பேசினான்.

"ஒன்மேல எனக்குக் கோபம் கிடையாது, வருத்தமும் கிடையாது... சொல்லப் போனால் பரிதாபம்தான்... கல்லூரியில் பாதிவரை படிச்சவள் நீ. பல நாவல்களையும் சினிமாக்களையும் பார்த்து, வரப்போகிறவன் எப்படி இருக்கணுமுன்னு கற்பனை செய்து பார்த்திருப்பே... அருவத்தில் தோன்றிய அந்த உருவம், இந்த உருவத்தில் மோதி சிதைஞ்சு போனதுக்குப் கோப்படவோ... அழவோ ஒனக்கு உரிமை உண்டு. நான் சினிமா வசனம் பேசல... சீரியஸாத்தான் பேசுறேன். ஆமாம்... 'உருவு கண்டு எள்ளாமை வேண்டும்' என்றபடி உருவத்தையே ஒரு பொருட்டாக நினைக்காத நானே, கல்யாணச் சமயத்தில், ஒன் அழகுல மயங்குனது இயற்கைன்னா, நீ என் நிறத்துல, வெறுப்படையறதும் இயற்கை தான். ஒரு பெண் யாரைக் கொடுத்தாலும் ஏற்றுக் கொள்வாள் என்கிற கொள்கைப்படி ஒன்னை - ஒன் விருப்பு வெறுப்பைப் பார்க்காமல், ஒன்னிடம் என்னைக் காட்டாமல், கட்டி வச்சது ஒருவித 'மேல் சாவனிசம்'. ஆண் முதன்மை பெற்ற சமுகக் கோளாறு. ஆனால் ஒன்மேல ஒரே வருத்தம்... தாலி கட்டுறதுக்கு முன்னால மாப்பிள்ளை பிடிக்கலைன்னு சொல்லியிருக்கலாம். நானே முன்னே நின்று அங்கயே இன்னொருவனை உட்கார வச்சிருப்பேன். ஆனால் இப்போ..."

அவள், இமையாது அவனைப் பார்த்தாள். முகம் தானாகச் சுழித்தாலும், காதுகள் நிமிர்ந்தன. கண்கள் விரிந்தன. கருமேகம் விலகி வெண்மதியைப் பார்த்தது போல நெஞ்சில் ஒரு சுமை குறைப்பு ஏற்பட்டது.

செல்லப்பாண்டி தொடர்ந்தான்.

"இதுக்கு நானும் ஒரு காரணமாகிவிட்டதை நினைக்கும்போது தான், நெஞ்சமே வெடிப்பது மாதிரி இருக்கு. என்ன செய்யுறது... கொஞ்சநாளைக்குப் பொறுத்துக்கோ.... அப்புறம் நானே ஒரு நல்ல ஏற்பாட்டைச் செய்யுறேன். அது ஒனக்கும் நல்லது. எனக்கும் நல்லது. சரிம்மா... எனக்கு சிந்தனையோ துக்கமோ அதிகமாகும்போது, நான் உடனே தூங்கிடுவேன்... இது என்னோட பழக்கம். சந்தோஷத்தைத் உடனே பகிர்ந்து கொள்ளணும். துக்கத்தைச் சாவகாசமாய்ப் பகிர்ந்து கொள்ளலாம். சரி. நான் தூங்கட்டுமா... இவ்வளவுக்கும் காலேஜ்ல...எத்தனையோ பெண்கள் என்னை... சரி வேண்டாம். ஏதோ என்னுள்ளயே அறிவுக்கும் உணர்ச்சிக்கும் குத்துச் சண்டை மாதிரி ஒண்ணு நடக்கு... இன்னும் பேசினா, 'நீ தான் இந்தச் சண்டைக்குக் காரணமுன்னு ரெண்டும் சேர்ந்து என்னையே ஒதைக்கலாம். குட் நைட் மேடம்..."

செல்லப்பாண்டி, போர்வையை எடுத்து உச்சி முதல் உள்ளங்கால் வரை மூடிக்கொண்டு குப்புறப் படுத்தான். என்னதான் நடந்ததை, அறிவு ரீதியில் எடுத்துக் கொள்ளப் பார்த்தாலும், உணர்ச்சி அதை விழுங்கி, பிறகு கண்ணீராய்க் கொட்டியது. நிதானமாக மூச்சு விட்டு, விம்மலை அடக்கியபடி, அப்படியே முடங்கினான். பிறகு, சுற்றுப்புறச் சூழல் அற்றுப் போனது போல் துக்கத்தில் அடங்கி, தூக்கத்தில் சங்கமித்தான்.

அவள், நிலைகுலைந்து நின்றாள். தன்னையே வெறுப்பவள் போல், முகத்தைச் சுழித்தாள். பிறகு விக்கித்தபடியே மெள்ள நடந்தாள். செல்லப்பாண்டி தூங்கிக் கொண்டிருந்தான்.

கட்டிலின் விளிம்பில் உட்கார்ந்து அவன் தலை முடியை மெள்ள மெள்ளக் கோதி விட்டாள். ரிஷி கர்ப்பம் மாதிரி, நடக்காத முதலிரவிலேயே பிள்ளை பெற்று, அந்தப் பிள்ளையைப் பார்ப்பது போல், அவனைப் பார்த்தாள். பிறகு அவன் கரங்களை எடுத்துத் தன் கரங்களுக்குள் அடைக்கலமாக்கிக் கொண்டாள்.

அந்தச் சூழலில், அந்தப் பெண்ணுக்கு முதல் தடவையாக, ஒரு ஆண் மகனைத் தொடுகின்ற ஸ்பரிச இன்பம் இல்லைதான். ஆனாலும் -

நிலையற்ற இளமை வேகக் கற்பனைத் தீ, நிலையான தாய்மையின் குளிர்மையில் அடங்கித்தானே ஆக வேண்டும்?

- கல்கி விடுமுறை மலர் - 1982

❖

திருவரசு புத்தக நிலையம்

Printed by : **BALAJI OFFSET PRINTERS**
CHENNAI - 106. Ph : 4759094 , 4751794